# THE SALVATION ARMY

# Tamil e - Song Book

2009 Edition




# இரட்சணிய சேனை

## தமிழ் மின் – பாடல் புத்தகம்

**2009 ஆம் பதிப்பு**

# INDEX
# அட்டவணை


அகமகிழ்ந்தடி பணிவோமே நாம் - 460

அஞ்சலோடு நெஞ்சுருகி - 420

அண்ணல் கிறிஸ்தேசையனே - 134

அதோ! மாட்டுத் தொழு பார்! - 409

அதோ வாறார் மேகத்தின் மேல் - 085

அந்தகார லோகத்தில் - 399

அருணோதயம் ஜெபிக்கிறேன் - 421

அருளின் மா மழை பெய்யும் - 274

அருள் ஏராளமாய் பெய்யும் - 308

அருள் நாதா - என் - குருநாதா - 099

அல்லேலூயா என்று பாடுவோம் - 127

அல்லேலூயா ஸ்தோத்திரம் - 149

அவர் வரும்போது சேனை ஆயத்தம் - 086

அவிசுவாசமாய்த் தொய்ந்து - 048

அழகிற் சிறந்த கோமானை - 459

அளவில்லா ஆழிபோல - 016

அளவில்லா மீட்பே அன்பின் ஆழியே - 001

அற்புதம்! பாவி நான் மீட்கப்பட்டேன் - 040

அற்புத அற்புதமான ஓர் நாள் - 141

அற்புத அன்பின் கதை - 379
அனுசரிக்க தேவா - 403
அன்பரே! நானும்மில் - 267
அன்பிற் சிறந்த கிறிஸ்தையனே - 256
அன்பின் விதைகளை - 442
அன்பு மிகும் இரட்சகனே - 404
அன்புள்ள என்னேசு - 270
அன்புள்ள நேசர் இயேசு - 107
அன்பே! என்னாருயிரே - 307
அன்பே பிரதானம் - 430
ஆ! கல்வாரி மலை - 023
ஆசி தா வேதா! - 501
ஆசீர்வதியும் கர்த்தரே - 485
ஆசையாகினேன், கோவே - 163
ஆட்கள் தெரிந்தனுப்பும் தேவா! - 282
ஆணி முத்தைக் கண்டேனே - 145
ஆத்துமமே நீ விழித்திடுவாய் - 294
ஆத்துமமே என் முழு உள்ளமே - 164
ஆதியாம் மகா ராஜனே - 314
ஆயத்த ஜெபம் செய்ய - 285
ஆயத்தமாயிருங்கள் எதிர்போக - 032
ஆரணா திபா தேவா மூவா - 502
ஆரிடத்தினில் ஏகுவோம் - 423

ஆரிவராரோ? இயேசு ஆரிவராரோ? - 456
ஆர் இவர் ஆராரோ - 454
ஆர்ப்பரித்திடுவோமே - 511
ஆர்ப்பரிப்போடு நாம் முன் செல்லுவோம் - 346
ஆலயம் அமைத்திட அருளீந்த தேவா - 504
ஆவலாய் மீட்பரண்டை வா - 034
ஆவியளித்திடும் ஆதிபரனே - 195
ஆவியில் ஜெபம் செய்ய - 288
ஆவியின் கனியைக் கொடுங்கள் - 066
ஆவியை அருளுமேன் சுவாமி - 249
ஆவியை மழைபோலே ஊற்றும் - 252
ஆழ்ந்த தயவே! சொல்லும் - 097
ஆ-ன-ந்தம்! ஆனந்தம் உண்டெங்கள் - 353
ஆனந்தம் ஆனந்தமே - 358
ஆனந்தப் பாடல்கள் பாடிடுவேன் - 361
ஆனந்தமுண்டெனக்கானந்தமுண்டு - 120
ஆனந்தமே! பரமானந்தமே! - 122
ஆனந்தமே இது ஆனந்தமே - 495
இது நேரம் நீ வா கருணாகரா! - 304
இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் - 490
இந்த நாள் எனக்கு - 419
இந்த வேளை வந்து - 302
இந்நாள் இரட்சிப்புக்கேற்ற நல் நாள் - 045

இந்நேரம் வந்து என்னை - 192
இயேசு அருள் நாதனே - 179
இயேசு எங்கள் மேய்ப்பர் - 396
இயேசு என் மீட்பர் சண்டாளருக்காய் - 116
இயேசு என் அஸ்திபாரம் - 393
இயேசு கற்பித்தார் ஒளி வீசவே - 411
இயேசு சுவாமி அருள் நாதா! - 297
இயேசு தேவனே - 280
இயேசுவே உந்தன் சிந்தனை - 169
இயேசு நம் அடைக்கலம் - 370
இயேசு நல்லவர்! என் இயேசு நல்லவர்! - 429
இயேசு நாதர் - கிறிஸ்தேசு நாதர் - 028
இயேசு நாதா! இயேசு நாதா! - 198
இயேசு நாமம் கொண்டு செல்லு - 144
இயேசு நேச மீட்பா! - 205
இயேசு புகழ்ந்தார் இரண்டுகாசை - 436
இயேசு போது மெனக்கேசு - 131
இயேசு மேய்ப்பா! எந்தன் நேசா! - 100
இயேசு முற்றாய் இரட்சியும் - 203
இயேசு ராஜனே இங்கே வாரும் - 286
இயேசுபரா! உந்தன் தாசர்கள் மீதினில் - 281
இயேசுவண்டை நீ வந்திடுவாய் - 394
இயேசுவின் நற்செய்தி சொல்வீர் - 377

இயேசுவின் மூலமாய் வரும் ஈவுகள் - 036
இயேசுவின் இரத்தம் வெண்மையாக்குதே - 123
இயேசுவுக்காயென்னை முற்றும் - 213
இயேசுவுக்காய் யாவற்றையும் - 221
இயேசுவே உந்தன் ரூபமே - 201
இயேசுவே கிருபாசனப்பதியே - 315
இயேசுவை நம்புவோருக்கு - 228
இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன் - 112
இயேசுவையே பாடி ஏற்றிப் புகழ்வோம் - 156
இயேசுவை ஏன் நேசிக்கிறேன் - 114
இரட்சகரை நேசிப்போரே - 115
இரட்சகரொருவரின் அன்பு - 093
இரட்சகரே ஜெபிக்கிறோம் - 278
இரட்சகா! உம்மை நான் - 217
இரட்சண்ய வீரரே - 513
இரட்சணியக் கூட்டம் ஜெயங் கொள்ளும் - 340
இரட்சண்ய வீரர் நாம் ஜெயித்திடுவோம் - 352
இரட்சணிய சேனை வீரரே - 332
இரட்சணிய வீரரே ஆர்ப்பரிப்போடு - 331
இரட்சணிய சேனை வீரரே நாம் - 441
இரட்சித்தார், இரட்சித்தார் - 101
இரட்சிப்பின் ஆனந்த சந்தோஷங்காண - 047
இரட்சிப்பைக் கொண்டு - 125

இரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம் - 351
இரட்சை இயேசுவின் கையில் - 494
இரத்தஞ் சிந்தி நம்மை அவர் - 135
இரத்தம் நிறைந்த ஊற்றுண்டு - 015
இரத்தம் இரத்தம் இரத்தம் வல்லதே - 039
இராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள் - 449
இருப்பீராயத்தம் இயேசுவைச் சந்திக்க - 063
இருள் போன்ற நேரத்திலே - 004
இன்பக் கானானுக்குள் - 374
இன்ப லோகம் ஒன்று உண்டாம் - 368
இன்பலோக யாத்திரையோர் நாம் - 497
இன்று கிறிஸ்து எழுந்தார் - 470
இன்றைக்கே மனந்திரும்புவாய் - 077
இன்னம் நீ என்ன செய்கிறாய் - 074
உதித்ததே பாராய் - 457
உம் குருசண்டை இயேசுவே - 269
உம் சித்தம் தேவா - 166
உம்மண்டை தேவனே - 376
உம்மாலேயன்றி இரட்சகா! - 189
உம்மை நேசிப்பேன் உரித்தாய் - 211
உம்மையன்றி உம்மையன்றி - 384
உம்முன் நிற்க தேவே! - 181
உலகம் உன் சதமென்று எண்ணியிராதே - 041

உலகில் பாவப் பாரத்தால் சோரும் - 060
உலகையோர் நிலையென்றெண்ணாதே - 065
உள்ளங்கள் ஆராயும் கர்த்தர் முன் - 186
உனக்கெது வேணும்? - 073
உனக்கொத்தாசை வரும் - 240
உன்னதமானவரின் - 432
ஊக்கத்தோடே நற்போர் புரி - 365
ஊதும் தேவா! ஆவி - 258
எங்கள் ஆத்ம நேசரே - 505
எங்கும் நிறை தூயனே - 506
எங்கள் இரட்சணிய மூர்த்தி - 056
எத்தனை திரள் என் பாவம் - 098
எத்தனை நாவால் துதிப்பேன் - 133
எந்த காலத்திலும் எந்த நேரத்திலும் - 162
எந்தன் ஆத்ம நேசரே - 390
எந்தன் ஜீவன் இயேசுவே! - 433
எந்தன் சம்பத்தென்று சொல்லவே - 132
எப்படி மேலாய்ப் பணி செய்வேன் - 212
எப்போதும் இயேசுவே - 300
என் ஆண்டவா, உம் வானம் பூமி ஆழி - 514
என் வாஞ்சை தேவாட்டுக்குட்டி - 220
எந்தன் விசுவாசம் உமை - 235
எந்தன் விசுவாசம் தேவாட்டுக் குட்டியே - 242

| | |
|---|---|
| எந்தையே கெஞ்சுகின்றோம் | - 489 |
| எல்லாம் படைத்த சர்வ | - 509 |
| எல்லாமேசுவே | - 385 |
| எல்லாருக்கும் மா உன்னத | - 146 |
| என் ஆத்தும நேச மேய்ப்பரே! | - 275 |
| என் இயேசு என் பாவம் மன்னித்தார் | - 130 |
| என் தேவனே உம் மா நேசம் | - 415 |
| என் ஜெபவேளை இன்பமாம் | - 311 |
| என் பரம பிதா | - 110 |
| என் பாவம் சாபம் நோவும் யாவுமே | - 118 |
| என் பாவம் யாவும் கழுவி | - 262 |
| என் மீட்பர் உயிரோடிருக்கையிலே | - 233 |
| என் மீட்பர் இரத்தம் சிந்தினார் | - 185 |
| என் மீட்பர் சிந்தின இரத்தத்தினால் | - 191 |
| என் மீட்பர் சென்ற பாதையில் | - 260 |
| என் இரட்சகா! என் தேவனே! | - 105 |
| என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்! | - 128 |
| என்ன என் ஆனந்தம்! என்ன என் பேரின்பம்! | - 360 |
| என்ன காட்சி! என்ன சாட்சி! | - 474 |
| என்ன காணிக்கை படைப்பேன்? | - 438 |
| என்ன சுகம் ஆ! என்ன சுகம் | - 356 |
| என்ன செய்குவேன் | - 009 |
| என்ன செய்குவேன் ஏழையடியேன் | - 136 |

| | |
|---|---|
| என்ன துன்பநாள்! | - 259 |
| என்னாத்துமாவின் தீபமே | - 412 |
| என்னை ஜீவ பலியாய் | - 223 |
| என்னுள்ளத்தை மீட்பர்க்குப் படைத்தேன் | - 261 |
| ஏகப்பரம ஒளி | - 462 |
| ஏதென் பாவம் நீக்கிடும் | - 117 |
| ஏதெனில் ஆதி மணம் | - 483 |
| ஏல ஏலோ ஏல ஏலோ, இயேசையா | - 439 |
| ஏழை ஆத்ம நேசனே | - 387 |
| ஐயா,உமது சித்தம் | - 425 |
| ஐயையோ நான் என்ன செய்வேன் | - 007 |
| ஐயோ! பாவியே நீ என்ன செய்கிறாய்? | - 067 |
| ஒப்பில்லா - திரு இரா | - 469 |
| ஒரே பிராண நாதர்தான் உண்டு | - 075 |
| ஓ! இஸ்ரவேலின் மேய்ப்பரே நீர் | - 309 |
| ஓ! கர்த்தா எமைப் பாரும் | - 508 |
| ஓசன்னா பாடுவோம் | - 476 |
| ஓ! சிறு நகர் பெத்லகேம் | - 465 |
| ஓ இயேசுவே என் பாவஞ் சுமந்தோரே | - 187 |
| ஓ மீட்பா! கேளென் விண்ணப்பம் | - 279 |
| ஓர் ஏழை வீட்டில் நான் சென்றேன்! | - 239 |
| ஓர்போதும் கைவிடார் | - 113 |
| கட்டளை நான் காக்க | - 225 |

| | |
|---|---|
| கண் விழித்து எழுந்து வா மானிடனே | - 033 |
| கதிரவன் எழுகின்ற காலையில் | - 422 |
| கருணாகரா - காருமென்பரா | - 197 |
| கர்த்தாவே என்னை நிரப்பும் | - 251 |
| கர்த்தா! உந்தன் சொந்தம் நானே | - 236 |
| கர்த்தரோடு நாம் நித்தம் நடத்தல் | - 316 |
| கர்த்தா உம் அன்பின் சத்தத்தைக் கேட்டு | - 299 |
| கர்த்தா உம் வாக்குத்தத்தங்கள் | - 246 |
| கர்த்தா பேசும் தாசன் கேட்பேன் | - 319 |
| கர்த்தரில் மகிழ்ந்திடுவீர் | - 362 |
| கர்த்தாவே உன்னடியார் | - 479 |
| கர்த்தாவே அடியார்க் கென்றும் | - 448 |
| கர்த்தர் எக்காளம் கடைசிக் காலத்தில் | - 491 |
| கர்த்தர் என் மேய்ப்பர் | - 389 |
| கர்த்தரோடு நாமும் | - 268 |
| கர்த்தர் எந்தன் மேய்ப்பராக இருக்கிறார் | - 392 |
| கர்த்தா! எந்தனை நீர் | - 190 |
| கல்வாரிக்குப் போகலாம் வாரும் | - 008 |
| கல்வாரி சிலுவையில் | - 003 |
| கல்லறையில் வைத்தார் | - 472 |
| களிப்புடன் சாஸ்திரிகள் | - 464 |
| காது குளிர பாடுங்கள் | - 017 |
| காத்துக் கொள்ளும் சுவாமி | - 426 |

காரிருளில் என் நேச தீபமே - 312
காலமே தேவனைத் தேடு - 418
கானாவூர் விவாகத்திற்கு - 480
காட்டிடும் உம் முகத்தை - 204
கிழக்கத்தி புத்திரர் - 373
கிருபாசனத்தை அண்ட - 287
கிருபை கூர் ஐயா - 306
குணப்பட இதுவே தருணமையா - 070
குணம் இங்கித வடிவாய் - 481
குருசின் மேல் குருசின் மேல் - 119
கெட்டுப்போன மாந்தரை - 020
கெட்டோனை இரட்சியும் - 272
கேட்கும் யாரென்றாலும் சொல் - 013
கேள்! ஜென்மித்த ராயர்க்கே - 452
கேளென் விண்ணப்பத்தை - 292
கொல்கதா மலையில் - 475
ஹா! என் மீட்பர் இரத்தம் சிந்தி - 005
ஹா! என்ன நேசம்! - 199
சத்திய வேத புத்தகமே - 408
சத்ய வேதமே! இது சத்ய வேதமே! - 407
சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார் - 498
சாமீப லோகத்தில் - 395
சரணம் சருவேசா! - 445

சர்வலோகத்தின் தேவரீர்! - 310
சலாம் தோழர் சலாம் - 498
சாந்தமுள்ள இயேசுவே - 488
சாமி! நின் பாத மல்லால் - 388
சித்தம் வைத்துக் காரும் ஐயனே! - 427
சிலுவையிலறையுண்ட மானிடர் - 022
சிலுவையில் சேருவேன் - 182
சீர் இயேசு நாதனுக்கு - 165
சுவாமி உந்தன் ஆவியை ஊற்றாயோ? - 253
செல்லுவோம் பரம நகர் - 336
செல்லுவோம் வாரீர்! - 010
சேர்ந்தோமையா ஒற்றுமையாய் - 440
சேர்வதெப்போது பாவி - 072
சேனையல்லோ ஏலேலோ - 321
சேனையிலே வீரர் நாங்கள் - 350
சேனையில் பாலரே சேர்ந்து ஒன்றாகவே - 406
சோதனைக் கிணங்கேல் - 238
ஜீவ அப்பம் என்றும் - 293
ஜீவ ஒளியில் போகிறேன் - 341
ஜீவ தண்ணீர் குடித்து நிதம் - 354
ஜீவ தண்ணீரண்டை - 138
ஜீவநதியின் ஓரமாய் - 375
ஜீவ யாத்ரை சோர்ந்து போவதேன் - 140

ஜீவிக்கிறோம் இன்னும் - 447
ஜெப ஆவியை எம்மில் ஊற்றிட - 289
ஜெயம் பெறுவோம் - 349
ஞானக் குரு பரனே - 478
ஞான மணவாளனே - 486
தனித்தும் சமூகத்திலே - 318
தத்தளிக்கும் ஏழை என்னை - 232
தந்தானைத் துதிப்போமே - 158
தம் பாலர்களோடு - 487
தம் மக்கள் காக்கிறீர் - 237
தயாபரா! கண்ணோக்குமேன்! - 091
தருணமே, பரம சரீரி - 424
தாசரே இத்தரணியை - 337
தாமதமேன் பாவியின்னும் - 049
தாரும் தேவா உந்தன் - 180
தாரும் மீட்பா! நல் சுயாதீனம் - 263
திரும்பு திரும்பு ஏன் சாக வேண்டும் - 027
தீர்த்தார் பாவம் கூரொடித்து - 208
துலங்கிடவே தூயன் திரு நாமமே - 503
துக்க பாரத்தால் இளைத்து - 018
துதிப்பேன் துதிப்பேன் இயேசு தேவனை - 153
துள்ளித் துள்ளிப் பாலனே - 398
துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக் கழித்தாலும் - 139

| | |
|---|---|
| தூய நெறியில் வாழவே | - 193 |
| தூய தூய தூயரே | - 202 |
| தூயனாய் நீ வாழ | - 178 |
| தேவ ஆவியே வாரும் | - 250 |
| தேவ தாசரே எழுந்து | - 142 |
| தேவத் திருச்சுதன் இயேசு உதித்தார் | - 458 |
| தேவ தேவா! திரியேக தேவா! | - 446 |
| தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ! | - 241 |
| தேவ பெலன்! தேவ பெலன் | - 291 |
| தேவ போர்ச் சேவகரே! | - 325 |
| தேவ மைந்தன் உன்னை இரட்சிக்க | - 061 |
| தேவன் சுதன் தந்தார் | - 104 |
| தேவ அன்பின் பெருக்கைப் பார் | - 025 |
| தேவன் உலகோரை நேசித்த அன்பால் | - 168 |
| தேவன் தங்குமெந்த வீடும் | - 414 |
| தேவன் மனிதனாய் ஆகினார் | - 453 |
| தேவன் வரும் நாளதிலே | - 088 |
| தேவன் தம் வீரரைக் காப்பதால் | - 342 |
| தேவனைத் துதியுங்கள் | - 160 |
| தேவா! இவ்வீட்டில் இப்போ | - 507 |
| தேவா என்னைப் படைக்கிறேன் | - 206 |
| தேவா சுத்தி செய்யும் அக்கினி | - 247 |
| தேவாதி தேவன் மனுவானாரே | - 050 |

தேவாதி தேவா திரியேக தேவா! - 303
தேவே கண்ணோக்குமேன் - 194
தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும் - 381
தொழுவத்தில் இயேசு பிறந்தார் - 006
தொழுகிறோம் எங்கள் பிதாவே - 431
ஸ்தோத்திரிக்கிறேன் நான் ஸ்தோத்திரிக்கிறேன் - 147
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே! - 444
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே - 150
தோழரே! கொடி காணுது! - 363
நகரத்துக்கு புறம்பே - 410
நடத்துவார் ஆ! இன்பெண்ணம்! - 380
நண்பரே நாம் ஒன்று கூடுவோம் - 461
நம் நேசரை அங்கே சந்திப்போம் - 492
நம்ப வேண்டாம், நம்ப வேண்டாம் - 068
நம்பி என் இயேசுவிலே - 234
நம்பிடுவேனெந்நாளும் - 230
நம் வேலைகள் அதிகமாகிடும் போது - 295
நம்பும்! இயேசு நாதன் நிற்கிறாராம் - 177
நம் ஆண்டவரின் மகிமை - 327
நல் சிறு தீபமாயென்னை - 402
நல் மீட்பர் இயேசு நாமமே - 143
நல்ல செய்தி - 019
நன்மை மூலனே - 284

நாடுங்கள் நாடுங்கள் நாடுங்களே - 155
நான் உம்மைப்பற்றி இரட்சகா - 106
நான் கிறிஸ்து பிட்ட அப்பமும் - 222
நான் என் சொந்தமல்ல - 435
நான் பாவிதான் - ஆனாலும் நீர் - 096
நித்திய அன்பின் ஆவியே - 320
நித்ய ஜீவன் எனக்குண்டு - 137
நித்திய மோட்சானந்த - 372
நித்தியானந்தத்தை நாடு - 079
நித்தியானந்த ஜீவ ஊற்றே! - 443
நித்யரே! உம்மைப் பற்றினேன் - 111
நின்றிடும் இயேசுவுக்காய்! - 335
நீ உயிர் பெறவே - 434
நீங்காதிரும் என் நேச கர்த்தரே - 413
நீர் தந்த நாளும் ஓய்ந்ததே - 510
நீரழைக்க நானெழுந்து - 227
நெஞ்சே கேள் - 188
நேச தோழரே! எங்கள் ஊரரரே! - 030
நேச இயேசுக்காக யாவையும் செய்வேன் - 207
நேச இயேசுவே - 200
நேசரே நான் ஜெபிக்கிறேன் - 301
பகலிலும் பிரகாசந்தானே - 369
பகைஞர் மிகச் சீறினும் - 322

பண்டோர் நாளிலே தூதர் பாடின - 468
பரமண்டலங்களிலிருக்கும் பிதாவே - 290
பரமானந்தம் ஆனந்தமாய் - 357
பரலோக தூதர்களே! - 463
பரிசுத்த அக்கினி அனுப்புந் தேவா! - 255
பரிசுத்த ஆவியே! - 257
பரிசுத்த பரனே துதியுமக்கு - 152
பரிசுத்த வாழ்வு அருளுமேன் - 175
பரிசுத்தமாக இயேசண்டை வந்து - 171
பரிசுத்த வேதமே - 401
பாடிட வாரும் தேவனை - 161
பாதகனாய் நானலைந்தேன் - 219
பாதம் ஒன்றே வேணும் - 417
பாதம் படைத்தேனே - 216
பாதை காட்டுமேன் - 378
பாரெங்கும் சேனை ரதம் சுற்றுதே - 367
பார்த்தேனே பரனை - 021
பாலரே! ஓர் நேசர் உண்டு! - 397
பாலன் ஜெனனமானார் - 466
பாலர் கூடி நாம் பாடிப் புகழ்ந்திடுவோம் - 405
பாவ இதயம் மாற்ற இப்போ - 054
பாவக் கறைகள் எல்லாம் நீங்கி - 243
பாவ சஞ்சலத்தை நீக்க - 296

| | |
|---|---|
| பாவ சாபம் நீங்கிடுது | - 265 |
| பாவஞ் செய்யாமலின்றைக்கு | - 416 |
| பாவத்தால் நம் தேசத்தார்கள் | - 328 |
| பாவத்தின் சாபத்தைத் தீர்த்தவர் | - 042 |
| பாவத்தின் பலன் நரகம் | - 090 |
| பாவத்தைச் செய்யலாகுமோ | - 059 |
| பாவத்தை மன்னித்தாரேசு கிறிஸ்து | - 129 |
| பாவ நாசர் பட்ட காயம் | - 382 |
| பாவம் போக்க வகை பாரும் | - 043 |
| பாவம் இரத்தாம்பர மாயினும் | - 172 |
| பாவி உன் மீட்பர் கரிசனையாய் | - 024 |
| பாவிகளே நேசமீட்பர் | - 026 |
| பாவிகளை மீட்க வந்த | - 052 |
| பாவிக்கவர் காட்டின மா நேசத்தால் | - 103 |
| பாவிக்கு நேசராரே! | - 124 |
| பாவி பாவி வந்து | - 053 |
| பாவி! மயக்கங் கொண்டிராதே | - 071 |
| பாவியே கெட்டுப்போகாதே! | - 081 |
| பாவியே சாவுக்குத் தீவிரித்து | - 084 |
| பாவியேதுனக்கிந்தப் பெருமை | - 064 |
| பாவியை சுத்திகரிக்கும் | - 174 |
| பாவி வா! இயேசு பாவமன்னிப்பு ஈவார் | - 037 |
| பாழ் லோகமே போ | - 108 |

| | |
|---|---|
| பிராண நாயகா! | - 273 |
| பிரித்துச் சேர்த்தார் கிறிஸ்து | - 215 |
| பிரித்தெடுக்கப்பட்டேன் | - 224 |
| பிரிய இயேசுவின் சேனை வீரர்கள் | - 359 |
| பிளவுண்ட மலையே | - 298 |
| பின் செல்வேன் என் மீட்பரே | - 218 |
| புகழ்வோம் புகழ்வோம் | - 512 |
| புத்திக் கெட்டாத | - 482 |
| பூரண இரட்சையளிக்க | - 264 |
| பூலோக வாழ்வு முடிந்து | - 493 |
| பேயின் கோட்டைகளை எதிர்த்திடிப்போம் | - 339 |
| பேரழைக்கும் வேளை வான சேனை கூடுமே | - 496 |
| பேரன்பர் இயேசு நிற்கிறார் | - 012 |
| பொல்லாப் பாவ லோகத்தின் மேல் | - 094 |
| போர் செய்வோம்! போர் செய்வோம்! | - 330 |
| போர் புரிவோம்! நாம் போர் புரிவோம்! | - 334 |
| போவோம் பரநகர்க்கு | - 062 |
| போற்றித் துதி புகழ்ந்து துதி | - 159 |
| போற்றித் துதிப்போமே | - 148 |
| மகனே! உன் நெஞ்செனக்குத் தாராயோ | - 058 |
| மங்கள சோபனம் | - 477 |
| மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு | - 484 |
| மரணத்தின் கூர் ஒடித் துயிர்த்தனர் | - 473 |

மரிக்கவா பிறந்தேன்? - 082
மருந்து கண்டேனே - 126
மலை போன்ற துன்பம் - 231
மனந்திரும்பு மானிடனே - 083
மனுவேலனே எங்கள் மகிபா, ஸ்தோத்திரம் - 151
மன்னுயிரை மீட்கப் புவி - 455
மா கெம்பீரப் பாட்டோடும் - 343
மாசற்ற தேவ சுதனே! - 092
மாண்டாரே இரட்சகர் உனக்காக - 044
மாற்றினார் என்னிதயத்தை - 076
மானிடரின் அப்பனாரே! - 277
மீட்படை தாமதம் செய்யாதே - 038
மீட்பரே! உம்மைப் பின் செல்ல - 209
மீட்பரே! நடத்துமேன் - 276
மீட்பர் சேனையில் - 326
மீட்பர் மரித்த குருசண்டை - 102
மீட்பா உம்மில் அன்பு கூர்வேன் - 210
மீட்பா நானும்மைக் கிட்டி - 095
மீட்பின் ஒளி இப்போ நான் பார்க்கிறேன் - 317
மீண்டும் பாடுவோம் மீட்பரன்பை - 266
முத்தே மாமணியே - 157
முன் செல்லு முன் செல்லு வீரா! - 333
மூலைக்கல் நம் கிறிஸ்து - 500

| | |
|---|---|
| மெய்தான் மேல் ஸ்தலம் ஒன்றுண்டு | - 371 |
| மெய் பக்தரே நீர் விழித்தெழும்பும் | - 467 |
| மெய்யல்லோ எங்கள் சேனை | - 345 |
| மேக மீதில் இயேசு ராஜன் | - 089 |
| மேல் வீட்டை நாடித் தேடுவோம் | - 014 |
| யாரவர் பாரேன் | - 055 |
| யுத்தஞ் செய்ய | - 324 |
| யுத்தம் என்றும் செய்வேன் | - 348 |
| யுத்தம் செய்வோம், வாரும் கிறிஸ்து வீரரே | - 344 |
| யுத்தம் மகா கடின மாயினும் | - 323 |
| யுத்த வர்க்க மணிந்து | - 338 |
| யூத ராஜ சிங்கம் | - 471 |
| ராஜன் தாவீதூரிலுள்ள | - 451 |
| வந்தாளுமே எந்நாளுமே | - 428 |
| வந்திடும் எம் கிருபாகரா | - 437 |
| வந்து ஆவியே தங்கும்! | - 271 |
| வரு பாவியை ஒரு போதிலும் | - 046 |
| வல்ல ஆவியே! | - 248 |
| வல்ல தேவன் கூறுவித்து | - 391 |
| வள்ளால் உம்மைத் தேடிதேடி | - 121 |
| வா கல்வாரி மேட்டண்டை | - 173 |
| வாஞ்சையான நெஞ்சத்துடன் | - 002 |
| வா பாவி! கர்த்தரின் அண்டைக்கு வா | - 051 |

வாரீரோ! செல்வோம் - 011
வாருமையா என்னுள்ளத்திலே! - 283
வாருமையா சுவாமி வாருமையா - 254
வாரும் இரட்சண்ய மூர்த்தி - 196
வாரும் கிறிஸ்துவண்டை நேரே - 029
வாரும் சிலுவையடியிலே - 176
வாரும் சுத்த ஆவியே! - 244
வாரும் தேவா! வாரும் - 184
வாரும் நித்திய ஆவியே! - 245
வாரும் மகத்துவ முள்ள அரசே! - 305
வாருமையா போதகரே! - 313
வா வா பாவி! நீ வந்து மனம் மாறு - 035
வாழ்த்திடுவேன் வாழ்த்திடுவேன் - 355
வாழ்த்துவோம் கர்த்தரை - 167
வாழ் நாள் ஜீவன் ஓடுதே - 183
வாழ்வை நம்பாதே - 080
வாரீரோ தேவா - 214
வானத்தே யிருந்து இயேசு உதித்தாரே - 154
வான பிதா தந்த வேதத்திலே - 400
வானம் பூமி யாவற்றிலும் - 109
விசுவாசமே, வேத பிரமாணமே - 515
விசுவாச யுத்தங்கள் - 364
விசுவாசிகளே! - 450

விண்டார் கிறிஸ்தேசு - 031
விண்ணரசர் பாதம் வீழ்ந்து - 226
வீண் பக்தியாய் நடவா ஓ மனுஷா - 069
வீரரும் நாங்களே,ஜெயதீரரும் நாங்களே - 347
வீரா அதோ பார் - 329
வீராதி வீரர் இயேசு சேனை - 366
வேண்டுமே விஸ்வாசம் - 229
வேத நூல் ஓதிடும் - 383
வேறு ஜென்மம் வேணும் - 170
வையகந்தனை நடுத் தீர்க்கவே - 087

---------- x ----------




# பாகம் 1

## பாடல் 1: அளவில்லா மீட்பே அன்பின் ஆழியே

The Founder's Song - ஸ்தாபகரின் பாட்டு - 298

(Tune 340 of ESB)

O! Boundless Salvation!

1. அளவில்லா மீட்பே அன்பின் ஆழியே!
இயேசுவால் வந்த பூரண தயவே!
உலகமெல்லாம் மீட்கும் பாக்கியத்திரள்!
யாவர்க்காயும் பாயும்; நீ என் மேல் புரள்

2. பாவங்கள் ஏராளம், கறை நிறைந்தேன்
மனங்கசந்து நான் கண்ணீர் சொரிந்தேன்
அழுகை வீணாம்! ரத்தாம்பரக்கடல்!
அலை சுத்திசெய்யும்; வா என் மேல் புரள்

3. ஆசைகள் அகோரம், கோபம் கொடூரம்
உள்ளத்தை ஆளுது தீமையின் உரம்;
உன் அலைகளின் கீழ், ஓ! பெருங்கடல்!
மீட்புத்தோன்றுதிதோ; வா, என்மேல் புரள்

4. சோதனைகள் மோத, பயங்கள் சூழ
பாழாச்சுதென் ஜீவன் சுகங்கள் மாள
மெய்யாய் இனிச் சுகம்! சுத்த நீர்க்கடல்!
என்னை சுத்திசெய்வாய்; வா, என் மேல் புரள்

5. தயா சாகரமே! வாஞ்சையாய் நின்றேன்
ஜீவிக்கும் ஆச்சர்ய அலை ஓரம் நான்,
திரும்ப வந்தேன் கறை போக்குங் கடல்!
உன்னை விட்டுப் போகேன்; வா, என்மேல் புரள்

6. புரண்டுவரும் அலைகளைத் தொட்டேன்
மீட்க வல்லோன் என்னும் இரைச்சல் கேட்டேன்
மீட்படைவேன் என்று நம்பி அலையில்
இதோ மூழ்கிறேன் நான்; வா, என்மேல் புரள்

7. அல்லேலூயா! இனி என் ஜீவகாலம்
அவர் துதியிலே மகிழ் கொள்ளுவேன்
அளவில்லா மீட்பாம் அன்பின் ஆழியை
இயேசு திறந்தார் எல்லாருக்காகவும்!

*William Booth*

## பாடல் 2: வாஞ்சையான நெஞ்சத்துடன்

When I Survey – 136

(Tune 43 of ESB)

1. வாஞ்சையான நெஞ்சத்துடன்
தேவசுதன் தொங்கி மாண்ட
சிலுவையைக் கண்டவுடன்
தொய்ந்திடுதே எந்தனுள்ளம்

பல்லவி

இரத்தத்தில் சுத்திகரிப்பு உண்டு
இரத்தத்தில் சுத்திகரிப்பு உண்டு
சுத்திகரிப்பு உண்டு! சுத்திகரிப்பு உண்டு
இரத்தத்தில் சுத்திகரிப்பு உண்டு

2. நான் தான் என்ற ஆங்காரமும்
லௌகீக ஆசாபாசமும்
என் உள்ளத்தில் சங்கரியும்
தேவே! நீரே வாசஞ் செய்யும் - இரத்தத்தில்

3. பார்! நேசர் கை கால் தலையில்
ஓடும் அன்பின் துக்க நதி!
ஆம் பாவி! பாவ வலையில்
தப்பப் பாயும் ஜீவநதி - இரத்தத்தில்

4. லோக மேன்மை கீர்த்தியெல்லாம்
இந்த அன்பிற்கு நிகரோ
ஆத்மா தேகம் சக்தியெல்லாம்
பூசை இதோ நீர் வாரீரோ – இரத்தத்தில்

*Issac Watts*

## பாடல் 3: கல்வாரி சிலுவையில்

On the Cross of Calvary – 128

(Tune 173 of ESB)

1. கல்வாரி சிலுவையில்
தொங்கி ஜீவனை விட்டார்
மானிடரிதயத்தில்
நன்மாறுதல் செய்திட
மாசற்ற ஜீவ நதி
பாவம் போக்கத் திறந்தீர்
எனக்காக மரித்தீர்
கல்வாரி சிலுவையில்

பல்லவி

அக்கல்வாரி! அக்கல்வாரி!
எனக்கேசு மரித்தார்
கல்வாரி சிலுவையில்

2. இவ் வற்புத அன்புதான்
மீட்பருக்கு எந்தனை
முழு தத்தஞ் செய்யத்தான்
ஆவி ஆத்துமா தேகத்தை
சர்வாங்க பலியாக
இயேசுவே படைக்கிறேன்
எனக்காக மரித்தீர்
கல்வாரி சிலுவையில் - அக்கல்வாரி

3. நானுமக்குச் சொந்தமே
என்னை ஏற்றுக்கொள்ளுமேன்
நேச மீட்பர் தயவாய்
என்னில் வாசம் பண்ணுமேன்
பாவம் போக்கி என் நெஞ்சை
சுத்தமாக்கி விடுமேன்
எனக்காக மரித்தீர்
கல்வாரி சிலுவையில் - அக்கல்வாரி

4. கர்த்தர் மாண்ட நாளதில்
பூலோகம் அதிர்ந்தது
இந்த மா பலியால் தான்
கேளும் இரட்சை வந்தது
நம்பும் எந்தப் பாவிக்கும்
என்றும் நல் விடுதலை
வந்திடவே மரித்தார்
கல்வாரி சிலுவையில் - அக்கல்வாரி

*Sarah Jean Graham 1854 - 1889*

## பாடல் 4: இருள் போன்ற நேரத்திலே

Dark was the hour

(Tune: 90 of ESB)

1. இருள் போன்ற நேரத்திலே
ஓர் சத்தம் கேட்குது
தேவ சுதன் தோட்டத்திலே
நொந்து ஜெபிப்பது

பல்லவி

கெத்சமனேயில்
விம்மி அழுது
ஜெபப்போரில் மீட்பர் வேர்வை
இரத்தத்தைப்போல் விழுது

2. நேசமான உம் மகனே
வாதைகுள்ளானாரே
பிதாவே, உன் சித்தந்தானே
ஆகட்டும் என்றாரே

3. எனக்காய் நீர் வேண்டுகிறீர்
நானதைக் கேட்கிறேன்
என் இயேசுவே! பாவி வாறேன்
ஏற்றுகொள்ளு மென்னை

*Samuel Wesley*

## பாடல் 5: ஹா! என் மீட்பர் இரத்தம் சிந்தி

Alas! And did my Saviour bleed – 105

(Tune 63 of ESB)

1. ஹா! என் மீட்பர் இரத்தம் சிந்தி
என் ராஜா மாண்டாரோ?
ஏழைப் புழு எனக்காக
ஈன மடைந்தாரோ?

பல்லவி

என்னை நினைத்திடும் நாதா
என்னை நினைத்திடும்
உம் கஸ்திகளை எண்ணியே
என்னை நினைத்திடும்

2. என் பாவத்தினாலல்லவோ
அவர் கஸ்திப்பட்டார்
அற்புதமாம் அன்பல்லவோ
ஆரிதை மறுப்பார் - என்னை

3. வெயில் மறைந்திருண்டதே
ஒளியும் போனதே
பாவிகளாம் மானிடர்க்காய்
சிருஷ்டிகர் மாண்ட நாள் - என்னை

4. நேசரே இதற்கு ஈடாய்
நீசன் நான் என் செய்வேன்
பாசத்தோடெந்தனையே நான்
படைத்தேனுமக்கு - என்னை

*Issac Watts (Verses)*

*Asa Hull (Chorus)*

## பாடல் 6: தொழுவத்தில் இயேசு பிறந்தார்

When Jesus was born in the manger – 137

(Tune 837 of ESB)

1. தொழுவத்தில் இயேசு பிறந்தார்
அதை மேய்ப்பர்கள் பார்க்க வந்தார்;
தூதர் சொல்லக் கேட்டார்
தேவன் மனிதனானார்
ஏழைப் பாவி என்னை இரட்சிக்க

பல்லவி
பாவியை மீட்க பாவியை மீட்க
ஏழைப் பாவி என்னை இரட்சிக்க
தூதர் சொல்லக் கேட்டார்
தேவன் மனிதனானார்
ஏழைப் பாவி என்னை இரட்சிக்க

2. ஆவியில் நித்தம் வளர்ந்தார்
அவர் எங்கள் துக்கம் சுமந்தார்
காவினில் ஜெபித்தார்
இரத்தம் வேர்வை விட்டார்
ஏழைப் பாவி என்னை இரட்சிக்க - பாவியை

3. பிலாத்தின் நியாய ஸ்தலத்தில்
குருசில் மாளத் தீர்ப்படைந்தார்;
எல்லாம் முடிந்ததென்று
சொல்லி மரித்தார் தொய்ந்து
ஏழைப் பாவி என்னை இரட்சிக்க - பாவியை

*John Lawley*

## பாடல் 7: ஐயையோ நான் என்ன செய்வேன்

இராகம்: சிங்கள ராகம் தாளம்: ஏகம்

மெட்டு: பாதகனாய் நானலைந்தேன்

பல்லவி

ஐயையோ நான் என்ன செய்வேன்
அங்கம் பதைத்தேங்குதையா

அனுபல்லவி

மெய்யாய் எந்தன் பாவத்தாலே
மேசியா வதைக்குள்ளானார்

சரணங்கள்

1. முண்முடி சிரசில் வைத்து
மூங்கில் தடியாலடித்த
சண்டாளர் செய்கையை எண்ண
சகிக்குதில்லை எந்தனுள்ளம் - ஐயையோ

2. பெற்ற தாயார் அலறி வீழ
பிரிய சீஷர் பதறி ஓட
செற்றலர் திரண்டு சூழ
தேவே, இந்தக் கஷ்டம் ஏனோ? - ஐயையோ

3. கால் தளர்ந்து போச்சுதையா
கைகள் சோர்ந்து வீழுதையா
சேல்விழிகள் மங்குதையா
தேவே எந்தன் பாவமல்லோ – ஐயையோ

4. நா வறண்டு நடை தள்ளாட
நண்பர் கண்டு கதறி வாட
ஜீவ இம்சையே மேலாட
தேவே கொல்கதாவில் நீட - ஐயையோ

5. சிலுவை தன்னைப் பாட்டிலிட்டு
தேவே உம்மை மேல் கிடத்தி
வலுவாய் கை கால்களை இழுத்து
மாட்டினாரோ ஆணியிட்டு - ஐயையோ

6. துடிக்குதே உன் அங்கமெல்லாம்
சோர்வடைய உந்தனாவி
வெடிக்குதுந்தன் இடது விலா,
விரனீட்டியாலே குத்த - ஐயையோ

7. இந்தக் கஷ்டம் நீர் சகிக்க
வந்ததெந்தன் பாவமல்லால்
உந்தன் குற்றம் யாதுமில்லை
எந்தையே நீரே என் தஞ்சம் - ஐயையோ

## பாடல் 8: கல்வாரிக்குப் போகலாம் வாரும்

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

கல்வாரிக்குப் போகலாம் வாரும்; எம்
காருண்ய இயேசுவின் காட்சியைப் பார்த்திட

சரணங்கள்

1. பொல்லாப் பகைஞர் கூட்டம்
எல்லாம் திரண்டு அங்கே
நல்லாயன் மீட்பர்தனைக்
கொல்லும் அவஸ்தை காண - கல்வாரிக்கு

2. சிவப்பங்கி தரித்தோராய்
சிரசில் முண்முடி சூண்டு,
தவத்தி லுயர்ந்த நாதன்
தவிக்கும் முகத்தைப் பார்க்க - கல்வாரிக்கு

3. ஐயோ பிதாவே என்னை
ஏன் கைவிட்டீர் என்றழும்
துய்யன் துயர சத்தம்
தொனிக்கிற தங்கே இன்னம் - கல்வாரிக்கு

4. நாவு வறண்டதினால்
தாகங்கொண்டேன் என்றாராம்
பாவிகள் காடிதனைக்
கூடிக் கொடுத்தனராம் – கல்வாரிக்கு

## பாடல் 9: என்ன செய்குவேன்

இராகம்: மலையாமி தாளம்: சாப்பு

பல்லவி

என்ன செய்குவேன்!

அனுபல்லவி

எனக்காய் இயேசு மைந்தன்
ஈனக் குருசில் உயிர் விட்டனர்

சரணங்கள்

1. கண்ணினால் யான் செய்த கன்மந்தனைத் தொலைக்க
முண்முடிதனை அந்த முன்னோன் சிரசில் வைத்து
மூங்கில் தடியைக் கொண்டு ஓங்கியடிக்கும் துயர்
பாங்குடன் நினைக்கையில் ஏங்குதே எனதுள்ளம் - என்ன

2. வாயால் மொழிந்த பாவ வார்த்தைகட்காய் எந்தன்
நாயகன் கன்னந் துடிக்க தீயன் மின்னொளி போல
காயப்பட அடித்த காட்சியை நினைக்கையில்
தீயாய் எரியுது தெய்வமே எனதுள்ளம் - என்ன

3. எந்தனை மீட்க நீர் இப்பாடு பட்டதால்
இதற்கு பதில் செய்ய என்னாலேயாகாது
சிந்தையோடெனை இப்போ செய்கிறேன் முழு தத்தம்
வந்தெனை ஆட்கொள்வாய், மகத்துவ மனுவேலா! - என்ன

## பாடல் 10: செல்லுவோம் வாரீர்!

இராகம்: முகாரி தாளம்: ஆதி

பல்லவி

செல்லுவோம் வாரீர்! சிலுவையடியில்

1. சொல்லரிய நாதன் - சுய சோரி சிந்தி
அல்லற்படுகின்ற - ஆகுலத்தைப் பார்க்க - செல்லுவோம்

2. ஒண்முடி மன்னனார் - முண்முடி தரித்து
கண்மயங்கித் தொங்கும் - காட்சியைப் பார்க்க - செல்லுவோம்

3. மூங்கில் தடியாலே - ஓங்கியே அடிக்க
ஏங்கியே தவித்த - இயேசையனைப் பார்க்க - செல்லுவோம்

4. சத்துருவின் கையில் உற்ற ஆட்டை மீட்க
மெத்தப் பாடுபட்ட - நல்மேய்ப்பனைக் காண - செல்லுவோம்

5. கிருபாசனத்தில் - குருதியோடு சென்ற
அருமைப் பிரதான - ஆசாரியனைப் பார்க்க - செல்லுவோம்

6. பாவ வினைபோக - தேவ தயவாக
ஜீவ பலியான இயேசையனைப் பார்க்க - செல்லுவோம்

7. நித்திய சாவின் கூரை - பக்தி தேகத்தேற்று
வெற்றிபெற்ற இயேசு - மேசியாவைப் பார்க்க - செல்லுவோம்

8. கடனாளிகட்குப் - பிணையாளியாக
உடலுயி ரீந்த - உன்னதனைப் பார்க்க - செல்லுவோம்

9. பிடித்து உதைத்து - இடித்து வதைத்து
அடிக்கப்படும் நல் - ஆட்டுக்குட்டியைப் பார்க்க - செல்லுவோம்

## பாடல் 11: வாரீரோ! செல்வோம்

இராகம்: முகாரி தாளம்: ஆதி

பல்லவி

வாரீரோ! செல்வோம் - வன்குருசடியில்

சரணங்கள்

1. என்னென்று அறியார் - மண்ணோர் செய்த பாவம்
மன்னியப்பா வென்ற - மத்தியஸ்தனைப் பார்க்க - வாரீரோ

2. அன்று கள்ளனோடு - இன்று பரதீசில்
வந்திடுவாய் என்ற - வல்லவனைக் காண - வாரீரோ

3. இவனுன் சேய் என்றும் - அவளுன் தாய் என்றும்
புவிவாழ்வீரென்ற - புண்ணியனைப் பார்க்க - வாரீரோ

4. ஒன்னாரைக் கைவிட - எண்ணமில்லா நாதன்
என்னையேன் கைவிட்டீர் - என்ற உரை கேட்க - வாரீரோ

5. தேவ கோபமூண்டு - ஏகன் நா வறண்டு
தாகமானேன் என்று - சாற்றினதைக் கேட்க - வாரீரோ

6. ஏவை வினை தீர - தேவ நேய மேற
யாவும் முடிந்தது - என்ற வாக்கைக் கேட்க - வாரீரோ

7. அப்பன் வசந்தீறாய் - இப்போதாவி நேராய்
ஒப்புவித்தேன் என்ற - ஓசையுரை கேட்க – வாரீரோ

## பாடல் 12: பேரன்பர் இயேசு நிற்கிறார்

The Great Physician now is near – 67

(Tune 449 of ESB)

1. பேரன்பர் இயேசு நிற்கிறார்
மகா வைத்தியனாக
கடாட்சமாகப் பார்க்கிறார்
நல் நாமம் போற்றுவோமே

பல்லவி
விண்ணில் மேன்மை பெற்றதே
மண்ணோர்க் கின்பமாகவே
பாடிப்போற்றும் நாமமே
இயேசு என்னும் நாமம்

2. உன் பாவம் யாவும் மன்னிப்பேன்
அஞ்சாதே என்கிறாரே;
சந்தேகங் கொண்டு சோர்வதேன்?
மெய்ப் பாக்கியம் ஈகிறாரே - விண்ணில்

3. உயிர்த்த ஆட்டுக்குட்டிக்கே
மேன்மை உண்டாவதாக! நேசிக்கிறேன் இயேசு நாமம்
நம்பிடுவேன் என்றென்றும் - விண்ணில்

4. குற்றம் பயம் நீக்கும் நாமம்
வேறில்லை இயேசுவே தான்!
என் ஆத்மா பூரிப்படையும்
அந்நாமம் கேட்கும்போது - விண்ணில்

*William Hunter*

## பாடல் 13: கேட்கும் யாரென்றாலும் சொல்

Whosoever heareth – 279

(Tune 551 of ESB)

1. கேட்கும் யாரென்றாலும் சொல், சொல் செய்தி
திவ்ய சுவிசேஷம் யார்க்கும் அனுப்பு;
எந்த தேசத்தார்க்கும் அதைப் பரப்பு
யாரென்றாலுஞ் சேரலாம்

பல்லவி

யாவனென்றாலும் யாவனென்றாலும்,
என்றுமிந்தச் செய்தி எங்குங் கூறலாம்
பாவி வா! பிதா அன்பாய் அழைக்கிறார்
யாரென்றாலுஞ் சேரலாம்

2. வாரும் யாரென்றாலும் தாமதிப்பதேன்?
வா! திறந்தார் வாசல் உட்செல்லாததேன்?
ஜீவ பாதை ஒன்றே! இயேசுதான்! வாரீர்;
யாரென்றாலுஞ் சேரலாம் - யாவனென்றாலும்

3. வாக்கை யாரென்றாலும் பெற்றுக்கொள்ளலாம்;
எவர்க்கும் இவ்வாக்கு என்றும் நிற்குமாம்;
யாரென்றாலும் நித்திய ஜீவன் காணலாம்
யாரென்றாலுஞ் சேரலாம் - யாவனென்றாலும்

*Philip P. Bliss*

## பாடல் 14: மேல் வீட்டை நாடித் தேடுவோம்

We're travelling home to Heaven – 275

(Tune 336 of ESB)

1. மேல் வீட்டை நாடித் தேடுவோம்
வாரீரோ?
மீட்பரின் நேசம் பாடுவோம்
வாரீரோ?
ஏராள ஊரார் இவரால்
இரட்சிப்படைந்தார் ஆனதால்
பாவி என்று உணர்வாரே
வாரீரோ?

2. பாவச் சுமை தாங்கிச் சோர்வோர்,
வாரீரோ?
இரட்சை யுண்டோ என்று கேட்போர்
வாரீரோ?
இயேசுதான் ஏற்றுக் கொள்ளுவார்
நீர் நம்பினால் இப்போ அவர்
உம் தொய்ந்த நெஞ்சைத் தேற்றுவார்!
வாரீரோ?

3. சுவர்க்க பாதை நேர்மை செம்மை
வாரீரோ?
செல்வோர் வாழுவார்கள் உண்மை!
வாரீரோ?
நம்பித் தொய்ந்து நீ வந்திடு
இப்போதே காண்பாய் இரட்சிப்பு
என்ற வாக்கை நீர் உணர்ந்து
வாரீரோ?

*Richard Jukes*

## பாடல் 15: இரத்தம் நிறைந்த ஊற்றுண்டு (Tune 54, 95, 562 of ESB)

There is a fountain filled with blood – 132

1. இரத்தம் நிறைந்த ஊற்றுண்டு
இரட்சகரின் இடம்
அவ்வூற்றில் மூழ்கும் பாவிக்கு
தன குற்றம் நீங்கிடும்

பல்லவி
நான் நம்புவேன்
இயேசு எனக்காய் மரித்தார்
பாவம் நீங்கச் சிலுவையில்
உதிரம் சிந்தினார்
Or
மா மகத்துவ ஊற்று (3)
எனக்காய் பாயுது

2. சாகுங் கள்ளன் ஊற்றைப் பார்த்து
மகிழ்ச்சி அடைந்தான்;
அவன் போல் நம்பி இயேசுவால்
சுத்தனானேனே நான் - நான்

3. காயத்தில் ஓடும் இரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்;
விஸ்வாசமாய் மா நேசத்தை
எங்கும் பிரஸ்தாபிப்பேன் - நான்

4. மரணம் என்னைப் பிரிக்கும்
நாள் பரியந்தமும்
இரட்சிக்கும் மா வல்லமையை
மேன்மையாய்ப் பாடுவேன் - நான்

5. தேவ வீரர் யாவருமே
பாவ மற்றொழுக
அருமை மீட்பா! உம் இரத்தம்
வல்லமை தந்திடும் - நான்

*William Cowper (Verses)*

## பாடல் 16: அளவில்லா ஆழிபோல

Boundless as the mighty ocean – 230

(Tune 230 of ESB)

1. அளவில்லா ஆழிபோல
உலகெல்லாம் பொங்குதாம்
அது இயேசுவின் நேசமாம்!
அங்கலாய்க்கும் பாவியை
அருளதாம்
ஆக்குமாம் நல்லோனாக

2. ஆகாயத்தில் பிரகாசிக்கும்
அளவில்லா ஜோதிபோல்
இயேசு நாதர் வாக்குத்தத்தம்
இலங்கி ஜொலிக்குது;
எப்பாவிக்கும்
நம்பினால் மீட்பு உண்டு

3. சுத்தாகாயம் விலையின்றி
நித்தம் நாம் முகரும்போல்
அத்தனேசு அரும் பாடால்
அளித்த இரட்சண்யத்தை
அடைவோமே
அசுத்தம் அகலுமே!

4. பாவக் கறையிலிருந்து
தேவ கிருபை மீட்டிடும்
சாகுமட்டும் அவர் பெலன்
சுத்தமாயென்றும் காக்கும்;
போற்றிடுவோம்
புண்ய நாதன் இயேசுவை

*J.H. Waller*

## பாடல் 17: காது குளிர பாடுங்கள்

Sing them over again to me - 258
(Tune 867 of ESB)

1. காது குளிர பாடுங்கள்
கிருபா சத்தியம்;
புத்தி தெளியக் காட்டுங்கள்
திவ்விய வசனம்;
வெல்க! சத்திய வேதம்
வாழ்க நித்திய வேதம்

பல்லவி
அமிர்தமே! அற்புதமே!
திவ்விய வசனம்
அமிர்தமே! அற்புதமே!
திவ்விய வசனம்

2. நல்ல செய்தியைக் கூறுமே
கிருபா சத்தியம்
பாவ நாசத்தைக் காட்டுமே
திவ்விய வசனம்;
வான வருஷ மாரி
ஞான பொக்கிஷ வாரி - அமிர்தமே

3. வேத நாயகர் பொழியும்
கிருபா சத்தியம்;
ஜீவா மங்கள மொழியும்
திவ்விய வசனம்
இயேசு எந்தனைப் பாரும்
நித்தம் எந்தனைக் காரும் - அமிர்தமே

*Philip P. Bliss*

# பாடல் 18: துக்க பாரத்தால் இளைத்து

Art thou weary, art thou languid? 228

(Tune 461 of ESB)

1. துக்க பாரத்தால் இளைத்து
நொந்து போனாயோ?
இயேசு உன்னைத் தேற்றிகொள்வார்
வாராயோ?

2. அன்பின் ரூபகரமாக
என்ன காண்பித்தார்?
அவர் பாதம் கை விலாவில்
காயம் பார்!

3. அவர் சிரசதின் கிரீடம்
செய்த தெதனால்?
ரத்தினம் பொன்னாலுமல்ல
முள்ளினால்!

4. கண்டு பிடித் தண்டினாலும்
என்ன வருமோ?
கஷ்டம் பாடு கண்ணீருண்டு
காண்பாயே

5. அவரைப் பின் பற்றினோர்க்கு
துன்பம் மாறுமோ?
சாவின் கூறும் மாறிப்போகும்!
போதாதோ?

6. பாவி என்னை ஏற்றுக் கொள்ள
மாட்டேன் என்பாரோ?
விண் மண் ஒழிந்தாலும் என்னைத்
தள்ளாரே!

*Stephen the Sabaite*

## பாடல் 19: நல்ல செய்தி

### Jesus Saves

(Tune 717 of ESB)

1. நல்ல செய்தி! இயேசுவை
நோக்கிப்பார்! இரட்சிப்பார்
நம்பி வந்து அவரை
நோக்கிப்பார்! இரட்சிப்பார்
எந்த பாவியாயினும்
தள்ளமாட்டேன் என்கிறார்
துரோகம் செய்த போதிலும்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்

2. எங்கும் செய்தி சொல்லுவோம்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்
தேசா தேசம் கூறுவோம்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்
எந்த நாடு தீவிலும்
இயேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசன் ஆயினும்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்

3. இன்னும் கேள்! மா நேசமாய்
இயேசுவே காக்கிறார்!
நம்பும் பக்தரை எல்லாம்
காக்கிறார்! காக்கிறார்!
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக் கொள்ளுவார்
கேடு பாடில்லாமலும்
காக்கிறார்! காக்கிறார்!

4. சுவிசேஷம் இதுவே!
காக்கிறார்! காக்கிறார்!
பாவம் நீக்கிப் பின்னுமே
காக்கிறார்! காக்கிறார்!
மோட்சம் சேருமளவும்
தாங்கிக் கொண்டே இருப்பார்
தீமையைச் செய்யாமலும்
காக்கிறார்! காக்கிறார்

## பாடல் 20: கெட்டுப்போன மாந்தரை

Sinners Jesus will receive! 262

(Tune 159 of ESB)

1. கெட்டுப்போன மாந்தரை
இயேசு ஏற்றுக் கொள்ளுவார்
பாவ ஆத்துமாக்களை
குணமாக்கி இரட்சிப்பார்

பல்லவி

நல்ல செய்தி கேளுமேன்
இயேசு ஏற்றுக் கொள்ளுவார்
நம்பி வாரும் வாருமேன்
தள்ளிப் போடவே மாட்டார்

2. இளைப்பாறல் தருவேன்
நம்பி வாரும் என்கிறார்
யாரானாலும் வாருமேன்
பாவப் பாரம் நீக்குவார் - நல்ல

3. மாசில்லாத இரத்தத்தால்
சர்வ சுத்தம் ஆக்குவார்
தூய வல்ல ஆவியால்
தீய சுபாவம் மாற்றுவார் – நல்ல

*Erdmann Neumeister*

## பாடல் 21: பார்த்தேனே பரனை

இராகம்: என்ன பாக்கியம்

பல்லவி

பார்த்தேனே பரனை - அவர் அன்பாய்
ஏற்றாரே நரனை

அனுபல்லவி

உள்ளங்கால் துவங்கி உச்சந்தலை மட்டும்
சொல்லமுடியாத இரணவாதைப்பட்ட நான்

சரணங்கள்

1. கல்வாரிமலையில் - முண்முடியைச்
சூண்டோராய்த் தலையில்
கை கால் விலாவினில் திரு இரத்தம் பாய்ந்தோட
வையகத்தோர்க்காக மாண்ட சுதனை! நான் - பார்த்தேனே

2. சீஷர்கள் கலங்க - நிலைமாறி
பூதலம் குலுங்க
நீசனைப்போல இந்த மாசற்ற நேசனார்
கூசாமல் பாடுகள் பட்டு மரித்தாரே! - பார்த்தேனே

3. வாதைக்குள் ளானோர் - பேயின் தந்திரப்
பாதைக்குள்ளானோர்
பட வேண்டிய பாட்டைச் சடலந்தனி லன்பாய்
பட்டுச் சிலுவையில் வெற்றி யடைந்தோனை! - பார்த்தேனே

4. ஓடுது இன்று - ஜீவ நதி
பாவிகட்கென்று!
பாவத்தை விட்டிப்போ தாவி இவர் பாதம்
பாவி நீ வந்தால் உன் சாபங்கள் தீர்ந்திடும் - பார்த்தேனே

## பாடல் 22: சிலுவையிலறையுண்ட மானிடர்

### Behold the Saviour of mankind

(Tune 85 of ESB)

1. சிலுவையிலறையுண்ட
மானிடர் மீட்பர் பார்!
இரத்தம் சிந்தி உனக்காய் மாண்ட
அன்பின் பெருக்கத்தைப் பார்!

2. கேளேன்! அவர் துயர் குரல்
பூமி நடுங்குதே;
தேவாலய திரைச்சீலை
கிழிந்து போகுதே!

3. என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்
முடிந்த தென்கிறார்
திருச் சிரசது சாய்த்து
மடிகிறாரே பார்!

4. சாவின் சங்கிலி முறித்து
பிரகாசிப்பாரவர்
ஒப்பற்றதல்லோ உம் அன்பு
தேவாட்டுக் குட்டியே!

*Samuel Wesley. Sr*

## பாடல் 23: ஆ! கல்வாரி மலை

On a hill far away - 124

1. ஆ! கல்வாரி மலை நின்றதோர் சிலுவை
மகா நோவு நிந்தைச் சின்னம் பார்!
அதை நேசிக்கிறேன், அங்கென் நேசர் லோகை
மீட்க நீசர்க்காய் தியாகமானார்

பல்லவி

ஓ பாராட்டுவேன் பூர்வக் குருசை
ஜெய சின்னம் படைக்கு மட்டும்!
பற்றிக் கொள்வேன் அவ் விருப்பக் குருசை
மாற்றி விண்கிரீடம் பெறுமட்டும்!

2. ஓ அப்பூர்வக்குருசு லோகத்தார் நிந்தித்தும்
என்னைக் கவர்ந்த தாச்சர்யமே;
தேவ ஆட்டுக்குட்டி விண்ணின் மேன்மை விட்டும்
அதைக் கல்வாரி சுமந்தாரே - ஓ பாராட்டுவேன்

3. அந்தக் கேடாமெனும் அந்தக் குருசின்
அதை பக்தியாய் சகிப்பேன்
அவரோர் நாழிகை அழைப்பார் மாளிகை
அங்கென் மகிமைப் பங்கடைவேன் - ஓ பாராட்டுவேன்

*George Bennard*

## பாடல் 24: பாவி உன் மீட்பர் கரிசனையாய்

Jesus is tenderly calling thee Home - 248

(Tune 700 of ESB)

1. பாவி உன் மீட்பர் கரிசனையாய்
அழைக்கிறார்! அழைக்கிறார்!
அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்?
இயேசுவின் இரட்சிப்பைப் பார்

பல்லவி

அழைக்கிறார்! அழைக்கிறார்!
விரும்பி வருந்தி உந்தனை அழைக்கிறார்!

2. இளைத்தும் தவித்தும் போனவனை
அழைக்கிறார்! அழைக்கிறார்!
நம்பிக்கையோ டவர் பாதம் தனை
சேருவாய் தள்ளமாட்டார் - அழைக்கிறார்

3. தாமதமின்றி இந்நேரத்தினில்
வந்திடுவாய்! வந்திடுவாய்
பாவம் அறவே உம் நெஞ்சத்தினில்
வாழ்வையும் பெற்றிடுவாய் - அழைக்கிறார்

4. விரும்பி வருந்தி அழைக்கிறார்!
ஓடியே வா! ஓடியே வா!
வந்திடுவோரைச் சந்தோஷிப்பிப்பார்!
உடனே உடனே வா! - அழைக்கிறார்

*Fanny Crosby*

## பாடல் 25: தேவ அன்பின் பெருக்கைப் பார்

God loved the World - 46

1. தேவ அன்பின் பெருக்கைப் பார்!
மேல் வீட்டை இயேசு விட்டார்;
மா பாடனுபவித்தார்
பாதகமுள்ள லோகத்தாரை
பாவத்தினின்று மீட்க

பல்லவி

அற்புதமான நேசந்தான்!
அவரன்பு எனக்கு;
தேவ குமாரன் எனக்காய்
உதிரம் சிந்தினார்

2. நிந்தை எனக்காய் சகித்தார்
பாவங்கள் எல்லாம் சுமந்தார்
மன்னிக்கும்படியாக
பாவம் பயம் தேவ கோபம்
யாவற்றையும் நீக்க - அற்புதமான

3. பேயின் வலைகள் கிழிந்திட,
சாவின் கூர் ஒடிந்திட
என் நேசர் மரித்தார்
பரிசுத்தமாய் ஜீவிக்க
இரட்சிப்பைத் திறந்தார் - அற்புதமான

## பாடல் 26: பாவிகளே நேசமீட்பர்

Have you any room for Jesus - 241

(Tune 395 of ESB)

1. பாவிகளே நேசமீட்பர்
பாவப்பாரம் சுமந்தார்
மீட்பர் உன்னை ஏற்றுக்கொள்வார்
அவரண்டை வாராயோ?

பல்லவி

மீட்பர் தனை இப்போ நம்பு
மரித்தோரே உனக்காய்!
அழைப்புக்குக் கீழ்ப்படிந்து
பாவியே நீ வந்திடு

2. மீட்பரண்டை வந்தாலுன்னை
நேசமாக ஏற்பாரே!
நம்பிக்கையாய் தந்தால் உன்னை
சாகுமட்டும் காப்பாரே! - மீட்பர்

3. அழைப்புக்குச் செவிகொடு
கிருபையின் நாளிதே!
ஜீவ நதி பாய்ந்தோடுது
மீட்பர் காயத்திருந்தே - மீட்பர்

*Daniel W.Whittle*

## பாடல் 27: திரும்பு திரும்பு ஏன் சாக வேண்டும்

(சோதனைக் கிணங்கல்)

Oh turn ye, Oh turn ye - 170

(Tune 579 of ESB)

1. திரும்பு திரும்பு ஏன் சாக வேண்டும்?
கர்த்தர் இரக்கத்தால் சமீபிக்கிறார்
வா என்கிறார் இயேசுவும் சுத்தாவியும்
மோட்சத்திற் கழைக்கத் தூதர் நிற்கிறார்

2. உனது இருதயம் சீர் அடையுமா?
நீ காலதாமதஞ் செய்து நிற்பதால்
நிர்ப்பந்தமான பாவியாயினும் வா
இரட்சண்ய ஊற்று இங்கே ஓடுவதால்

3. ஏதுக்குப் பூலோகச் செல்வம் சிற்றின்பம்?
இவை உன் துன்பம், நோயும், நீக்குமோ சொல்
சாகும் வேளையில் போய் விடுமோ பயம்?
மோட்ச வீட்டுக்கு உன்னைச் சேர்க்குமோ சொல்

4. பசியால் வருந்தி நிற்பதெதுக்கு?
இயேசுவின் அன்புதான் உனக்குத் தேவை
நீ இன்னம் சந்தேகிப்பது ஏதுக்கு?
ஆராய்ந்து பார் நீ மட்டற்ற கிருபையை

*Josiah Hopkins*

## பாடல் 28: இயேசு நாதர் - கிறிஸ்தேசு நாதர்

இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: ஏகம்

இயேசு நாதர் - கிறிஸ்தேசு நாதர் - உந்தன்
இரட்சண்ய மூர்த்தி யவரேயாவார்

1. ஆதியிலேதான் வனத்தினின்று - ஏவை
ஆதஞ் செய்த பாவந் தீர்க்க வென்று - தரை
மீது கெத்சமனே வனஞ் சென்று - இரத்த
வேர்வை சிந்தி மிக்க வியாகுலங் கொண்ட - இயேசு

2. ஸ்திரீயின் விழுதலால் ஜெக மக்கள் - உற்ற
ஜென்ம கன்ம பாவங்கள் போக்க - ஒரு
ஸ்திரீயின் வித்தாய் இவ்வுலகில் பிறக்க - திருச்
சித்தங்கொண்ட தேவ குமாரனான - இயேசு

3. விலக்கப்ட்ட மரக்கனி புசித்து - பரன்
வெறுப்பை யடைந்த யிந்தப் பூவுலகத்து - வந்து
சிலுவை மரத்தையும் தன் தோளிலெடுத்து - சுமை
சுமந்து தீர்த்த மத்தியஸ்தனான - இயேசு

4. மண்ணிலிருந்துண்டான முதலாதாம் - செய்த
மா பாவங்கள் நீக்கி இரண்டாமாதாம் - ஆக
விண்ணிலிருந்துண்டாகி மெய்ப்போதஞ் செய்து
மேதினியை மீட்ட சற்குருவாம் - இயேசு

*K.S. Abraham*

## பாடல் 29: வாரும் கிறிஸ்துவண்டை நேரே

இராகம்: குந்தலவராளி தாளம்: ஆதி

பல்லவி

வாரும் கிறிஸ்துவண்டை நேரே - பூரணவிசு
வாசமுண்டால் இரட்சை ஈவாரே

அனுபல்லவி

பாரும் கிறிஸ்து பட்ட
பாட்டின் பலன்கள் கிட்ட

சரணங்கள்

1. பாவப் பாரங்கள் சுமந்தாரே - கெத்சமனேயின்
காவில் தேற்ற பலப்பட்டாரே;
ஆவி மிக வருந்த ஆச்சே வேர்வை இரத்தமாய்! - வாரும்

2. தேவ தூஷணங்களைச் சாற்ற - நிர்மலனும்
தேவ நீதியை நிறைவேற்ற
கோவே முண்முடி சிரங்கொண்டா ரடிகளுரம்! - வாரும்

3. பாரக் குருசு ஏற்றினாரே - கால் கரங்களில்
சேர ஆணி கடாவினாரே;
நேரே விலாவில் குத்துண்டாரே நரர் பிழைக்க! - வாரும்

4. துங்கன் மேனியலைந்து காயம் - பாவிகளுக்கு
அங்கே அடைக்கல சகாயம்;
நொந்து சிலுவையடி பொங்கு முதிரந்தேடி! - வாரும்

5. எல்லாம் முடிந்த தென்று ஆவிவிட்ட மூன்றாம் நாள்
வல்லானுயிர்த்துப் பரமேகி
நல்லான் பரிந்து பேசி நாடித்தேடுறா ரும்மை - வாரும்

## பாடல் 30: நேச தோழரே! எங்கள் ஊராரே!

இராகம்: மோஹனம் தாளம்: திஸ்ரஏகம்

பல்லவி

நேச தோழரே! எங்கள் ஊராரே!
நாச பாதை விட்டு இப்போ வரமாட்டீரோ?

சரணங்கள்

1. பாவ ஜீவியம் நரக பாதையே!
பாவி மனம் உடைந்து வந்தால் மீட்கப்படுவாயே - நேச

2. சுத்த ஜீவியம் மோட்ச பாதையே!
யுத்தஞ் செய்து கிரீடம் பெற உத்தம வழி - நேச

3. சாத்தான் பொங்குகிறான் மாற்றான் துள்ளுகிறான்
சீக்கிரத்தில் புறப்படுங்கள் தப்பிக்கொள்வீரே - நேச

4. குடிகாரரே! சிறைப்பட்டோரே!
தேவ சுதன் சிறை மீட்க வல்ல இராஜனாம் - நேச

5. தூய ஆவியைப் பெற்று உய்யவே!
தூதர் வாழ்த்தும் இயேசு இராஜன் பாதம் சேருங்கள் - நேச

## பாடல் 31: விண்டார் கிறிஸ்தேசு

இராகம்: தெம்மாங்கு தாளம்: திஸ்ரஏகம்
(கெட்ட குமாரன் உவமை)
மெட்டு: நித்திய மோட்சானந்த

கண்ணிகள்

1. விண்டார் கிறிஸ்தேசு - குணப்பட
வென்றே ஒரு உவமை
உண்டு ஒருவனுக்குப் - புதல்வர்
இரண்டவரிலிளைஞன்

2. தந்தையே எந்தனுக்குத் தனத்தினில்
வந்திடும் பங்கதனை
தந்திடுமென்று கேட்டுத் - தவறாமல்
தன் வீதம் வாங்கிக்கொண்டான்

3. சென்றானயல் தேசம் - துன்மார்க்கங்கள்
செய்தான் பல தோஷம்;
தின்றா னெலாம் நாசம் - வறிஞனாய்த்
தீர்ந்தான் வெகு மோசம்

4. பஞ்சத்தினால் மெலிந்து - வயிற்றுப்
பசியினால் வருந்தி
பஞ்சம் பிழைக்கவென்று - ஒருவனைத்
தஞ்சமென்று சார்ந்தான்

5. பன்றிகளை மேய்த்தான் - தவிட்டினால்
பசியாற நினைத்தான்;
பன்றிக்கிடுந்தவிடும் - கிடையாமல்
பட்டினியாய்க் கிடந்தான்

6. புத்தி மிகத் தெளிந்து - புலம்பினான்
மெத்தப் பசி ஐயையோ!
எத்தனை பேர்க்குணவோ - பூர்த்தியாய்
என் பிதா வீட்டிலுண்டு!

7. எழுந்து இப்பொழுதே - ஏகுவேன்
என் பிதாவின் சமுகம்
விழுந்து நான் தொழுதே - குற்றத்தை
விள்ளுவே னென்றுரைத்தான்

8. தந்தையை வந்து கண்டான் - தரை மட்டும்
தாழ்ந்து தொழுதழுதான்
எந்தையே உந்தனுக்கும் - பரத்துக்கும்
ஏற்காத தோஷி என்றான்

9. மைந்தன் மறுகுவதும் - அவன் ரூபம்
மாறி யிருப்பதுவும்
கந்தை யணிந்ததுவும் - கண்டு பிதா
நொந்து மனம் மெலிந்தான்

10. சுத்திகரித்தெடுத்து - உயர்ந்த
சுத்த ஆடை தரித்து
மெத்த விருந்தளித்து - சந்தோஷ
நித்தப்பவுசளித்தான்

11. இந்த இளைஞனைப்போல் - குணப்படா
தெந்தெந்தப் பாவிகளும்
வந்து அறிக்கை செய்தால் - இயேசு பாவம்
மன்னித்தாசி அளிப்பார்

## பாடல் 32: ஆயத்தமாயிருங்கள் எதிர்போக

இராகம்: கௌசிகை தாளம்: ஆதி

பல்லவி

ஆயத்தமாயிருங்கள் எதிர்போக - அறி
யாத நேரம் வருவார் மணவாளன்

சரணங்கள்

1. மாய பாச வினைகள் மாய்த்துவிட்டு - மனம்
மாறி நல் அகச்சுத்தம் மருவிக்கொண்டு - ஆயத்தமாயிருங்கள்

2. இயேசுவை நண்பனாய் ஏற்றுக்கொண்டு - அவர்
ஈயும் மெய்ச் சமாதானம் பெற்றுக்கொண்டு - ஆயத்தமாயிருங்கள்

3. சத்திய வேத போதனையில் - நடந்து
உத்தமராய்த் தேவபக்தராய் - ஆயத்தமாயிருங்கள்

4. ஜீவ கனி புசித்து திருப்தி கொள்ள - நித்ய
ஜீவ தண்ணீர் குடித்து சுகித்திருக்க - ஆயத்தமாயிருங்கள்

5. நித்திய ஆனந்த பாக்கியங்கள் - நல்ல
நேய மணவாளனோடனுபவிக்க - ஆயத்தமாயிருங்கள்

## பாடல் 33: கண் விழித்து எழுந்து வா மானிடனே

இராகம்: இந்துஸ்தான் காப்பி தாளம்: ஆதி

கண் விழித்து எழுந்து வா மானிடனே
கருணை நாதன் இயேசுவிடம்

சரணங்கள்

1. நிர்ப்பந்தமான உன் நிலையுணரந்து
நீச உலகத்தின் நேயம் மறந்து
துர்க்கந்தமான துர்த்தொழில் துறந்து
தூரதுன்மார்க்க ஜீவியம் பிரிந்து - கண் விழித்து

2. மனது போல் நடக்கத் துணியாதே
மாய உலகின் வாழ்வை விரும்பாதே
உனதிஷ்டம்போல் நடக்க உன்னாதே
உல்லாச நடக்கை பொல்லாததே - கண் விழித்து

3. இருதயமுடைந்து நீ எழவேண்டும்
இளைய மகனைப் போல் வரவேண்டும்
பரம தகப்பன் பாதம் விழவேண்டும்
பாவமன்னிப்பை நீ பெற வேண்டும் - கண் விழித்து

4. பேரன்புறும் பரம தந்தையவர்
பிள்ளை உன்னைச் சதாவும் மறவாதவர்
தூரம் பிரிந்திருக்க மனமற்றவர்
சொந்த வீட்டில் வைத்து சூட்சிப்பவர்! - கண் விழித்து

5. அசுத்தமறக் கழுவி அலங்கரிப்பார்
ஆடையாக நீதியுடை தரிப்பார்;
பசிக்குப் பருக ஞானப்பால் தருவார்
பரலோக இன்பப் பதவி சேர்ப்பார் - கண் விழித்து

## பாடல் 34: ஆவலாய் மீட்பரண்டை வா

இராகம்: காப்பி தாளம்: ஆதி

பல்லவி

ஆவலாய் மீட்பரண்டை வா - நீ வா - நீ வா

சரணங்கள்

1. இரட்சகர் தானமதாம் - இரட்சை நீ சொந்தமாக்க
விரைவுடன் இயேசு பாதம் வா - நீ வா - நீ வா! - ஆவலாய்

2. எத்தனை நாளாக நீ எத்தனை இகழுவாய்?
கர்த்தர் அழைக்கும் சத்தம் கேள் - நீ கேள் - நீ கேள் - ஆவலாய்

3. பாவத்தாலழுந்தும் உன் பாவம் நீக்குவேன் என்ற
காவலன் பாதத்தை நீ சேர் - நீ சேர் - நீ சேர் - ஆவலாய்

4. லோகம், ஜடம், பிசாசும் ஆகுலமியற்றினும்
சோகமற நல்லாயனைப் பார் - நீ பார் - நீ பார் - ஆவலாய்

5. உன்னைத் தானே வெறுத்து உன் சிலுவை எடுத்து
உன்னதனருள் நம்பி வா - நீ வா - நீ வா - ஆவலாய்

6. பாவமன்னிப்புச் சமாதானமும் பரிசுத்தமும்
தேவனுறை மோக்ஷமும் நினை - நினை - நினை - ஆவலாய்

7. மனஸ்தாபம் விசுவாசம் தள்ளுதலாம் மூன்றும்
மனுஷர் இரட்சைக்கு வழி காண் - நீ காண் - நீ காண்! - ஆவலாய்

## பாடல் 35: வா வா பாவி! நீ வந்து மனம் மாறு

இராகம்: கமாஸ் தாளம்: அடதாளசாப்பு

பல்லவி

வா வா பாவி! நீ வந்து மனம் மாறு!
வந்து மனம் மாற தேவ மைந்தனையே நாடு!

சரணங்கள்

1. பாவத்தால் ஐயோ பரமனை விட்டாயே!
சாபத்தைக்கொண்டாயே தயங்கி நிற்கின்றாயே - வா

2. நித்தம் நீ செய் பாவங்கள் எத்தனை அகோரம்
அத்தனையும் போக்க கர்த்தன் சுத்த பரிகாரம் - வா

3. பூரண நேசம் பொருந்தும் விசுவாசம்,
ஆரணப் பிரகாசம் அருள்வார் நித்ய வாசம் - வா

## பாடல் 36: இயேசுவின் மூலமாய் வரும் ஈவுகள்

இராகம்: சஹானா தாளம்: மிஸ்ரம்

பல்லவி

இயேசுவின் மூலமாய் வரும் ஈவுகள் பாரும்!

சரணங்கள்

1. இயேசுவினுதிரம் விசுவாசிப்பவர்க்கெல்லாம்
ஏற்ற சுத்தியாக்கும் அருந் தீர்த்தமே இதாம் - இயேசுவின்

2. சித்தம் வைத்து சுத்தஞ் செய்து அத்தன் நித்திய
ஜீவனோடு பேரின்பமும் தாம் அருள்வார் - இயேசுவின்

3. தேவனோடு சேர்த்து உம்மை சோபிதமாக
தேவ சுதனாக்கி அவர் சுதந்திரமீவார் - இயேசுவின்

4. அங்குமக்குக் கிருபை சமாதானமும் மிக
பொங்கும் ஐஸ்வர்ய மிளைப்பாறுதலு முண்டு! - இயேசுவின்

5. ஆத்தும சந்தோஷமதால் அனவரதமும்
ஆர்ப்பரித்து அட்சயனுக் கர்ச்சனை செய்வீர் - இயேசுவின்

6. சுத்த மறைக்குள் இதனைச் சோதனை செய்து
சத்திய கிறிஸ்து பதம் சார்ந்து சுகிப்பீர் - இயேசுவின்

## பாடல் 37: பாவி வா! இயேசு பாவமன்னிப்பு ஈவார்

இராகம்: கமாஸ் தாளம்: அடதாளசாப்பு

பல்லவி

பாவி வா! இயேசு பாவமன்னிப்பு ஈவார்

சரணங்கள்

1. பாவியிற் பெரிய பாவியானாலும் - நீ
பயப்பட வேண்டாம்
பாவம் இரத்தாம்பரச் சிவப்பாயினும் வெண்
பஞ்சதாயாக்கிடுவார்! - பாவி

2. வெள்ளையடித்தோர் கல்லறை போலொத்த
வேஷம் வெகு மோசம்;
உள்ளமுடைந்து உணர்ந்தறிக்கை செய்தால்
உண்டு மன்னிப்புடனே! - பாவி

3. ஐயோ! நானென் செய்வேனென்று திகைத்து
அலைந்து திரியாதே
ஐயமில்லை அதிகமாக்கும் பாவங்களை
ஐயனேசு உதிரம்! - பாவி

4. வருந்திப் பாரம் சுமப்போரே என்னிடம்
வாரும் இளைப்பாறுதல்
தருவேன் என்றுன்னை அழைக்கிறாரிது
தருணம் தவறாமல் - பாவி

## பாடல் 38: மீட்படை தாமதம் செய்யாதே

பல்லவி

மீட்படை தாமதம் செய்யாதே
மீட்படை இன்றே!

சரணங்கள்

1. மீட்பர் உன்னை இன்று ஆவலாய்த் தேடுகிறார்!
மாட்டேனென்று சொல்லிப் போய்விடாதே - மீட்படை

2. பாதகங்கள் மிக்க மிக்கவே செய்த நான்
நாதரேசு பாதம் சென்றேன்; மீட்டார் - மீட்படை

3. பாவி பாவி பாவி என்றுனை எண்ணினால்;
ஆவல் கொண்டு தாவித்தேடு, மீட்பார் - மீட்படை

4. நாளைக் காகட்டென்று எண்ணி நீ தள்ளிடாய்;
நாளை என்பதுந்தன் நாளோ? வா! வா! - மீட்படை

5. வந்தால் மீட்பருன்னை அன்புடன் தாங்குவார்
இந்த நல்ல ஈவைத் தேடு இன்றே - மீட்படை

## பாடல் 39: இரத்தம் இரத்தம் இரத்தம் வல்லதே

பல்லவி

இரத்தம் இரத்தம் இரத்தம் வல்லதே
சுத்தம் சுத்தம் சுத்தம் செய்யுமே
தத்தம் தத்தம் செய்திடுமேன்
முற்றிலும் மாற்றிடுவார்

சரணங்கள்

1. பாவியுன்னிருதயம்தனிலே பார்
தேவனின் கிருபையை எண்ணி இப்போ
பாவத்தை முற்றிலும் எறிந்துவிட்டு
இயேசுவின் பாதமே எழுந்து செல்லு - இரத்தம்

2. உன் நிர்ப்பந்த ஜீவியம் மாறிடுமே,
அவர் அற்புத ஆனந்த மளிப்பாரே;
இப்போ முழுவதும் தாழ்த்துவதே
தெய்வத்துக் குகந்திட்ட பலியாமே - இரத்தம்

3. சூரியன் முன்னே பனி போலும்
காற்றுக்கு முன்னே புகை போலும்
ஆவியின் முன்னே பாவமுமே
காற்றாய்ப் பறந்தது மாய்ந்திடுமே - இரத்தம்

## பாடல் 40: அற்புதம்! பாவி நான் மீட்கப்பட்டேன்

பல்லவி

அற்புதம்! பாவி நான் மீட்கப்பட்டேன்;
மீட்கப்பட்டேன் நான் இரட்சிக்கப்பட்டேன்

அனுபல்லவி

சற்றாகிலும் கிருபை பெற
முற்று மபாத்திரனான போதும்

சரணங்கள்

1. உலகத்தின் சிற்றின்பப் பாசங்களும்
பலவித மாமிச சிந்தைகளும்
பாவி என்னிதயத்தை வதைத்தபோது
பாவ விமோசனார் கிருபை கூர்ந்தார் - அற்புதம்

2. மாய்மால ஜீவியம் செய்துகொண்டு
வாய்ப்பேச்சினால் மட்டும் பூசை செய்தேன்;
நீண்ட ஜெபங்களைச் செய்வதினால்
மீண்டு மோக்ஷம் போகக் காத்திருந்தேன் - அற்புதம்

3. சன்மார்க்க வேஷத்தைத் தரித்துக்கொண்டு
துன்மார்க்கப் பாதையில் தாம் நடந்து
வேதப் புரட்டாய்த் திரிந்தவரின்
ஓதுதல் கேட்டு நான் கெட்டலைந்தேன் - அற்புதம்

4. நான் செய்த தீவினையுணர்ந்து எந்தன்
வான பிதாவண்டை ஓடி வந்து
மெய் மனஸ்தாப அழுகையுடன்
ஐயனே! இரட்சியும் என்றவுடன் - அற்புதம்

5. இந்த மா இரட்சையை நம்பாயோ நீ?
வந்து பார் மீட்பரின் சிலுவையண்டை!
ஓடுகின்ற இந்த சிவந்த நதி
தேடி வருவோர்க்கு உயிரைத் தரும் - அற்புதம்

## பாடல் 41: உலகம் உன் சதமென்று எண்ணியிராதே

இராகம்: இந்துஸ்தானி தாளம்: மிஸ்ர ஏகம்

பல்லவி

உலகம் உன் சதமென்று எண்ணியிராதே!
பலவித பாவத்தின் வலையிற் சிக்காதே

சரணங்கள்

1. மாதா பிதா மற்றும் செல்வமிருந்தாலும்
மரணம் வந்து உந்தன் வாழ்வைக் குலைக்கும் - உலகம்

2. சாவின் கோரக்காட்சி நெருங்கையில்
பாவி நானென் செய்வேனென்று திகைப்பாய் - உலகம்

3. நரகத்தின் புழுக்களும் நெருப்பு மட்டுமல்ல
பரலோகக் கீதங்களுன்னை வதைக்கும் - உலகம்

4. பாவ விமோசனம் இப்போதே பெறுவாய்
தாவியுன் மீட்பரின் பாதத்தைத் தேடு - உலகம்

## பாடல் 42: பாவத்தின் சாபத்தைத் தீர்த்தவர்

பல்லவி

பாவத்தின் சாபத்தைத் தீர்த்தவர் இயேசு!

சரணங்கள்

1. பரலோகத் தூதர்கள் கீதங்கள் வெறுத்து
நர ரூபமானாரே நானிலந்தனிலே - பாவத்தின்

2. பாவியின் கடனை மன்னிக்க மரித்தோன்
தாவி வரும் பாவக் கன்மியின் பதவி - பாவத்தின்

3. முள்முடியை இவர் சூண்டார் தம் சிரசில்
புண்யம் செய் பாதையும் திறந்தோருமிவரே - பாவத்தின்

## பாடல் 43: பாவம் போக்க வகை பாரும்

இராகம்: காவடி சிந்து தாளம்: மிஸ்ரசாப்பு

பல்லவி

பாவம் போக்க வகை பாரும்; ஐயா
தாவி உன் மெய் மீட்பர் யாரென்று தேடும்

சரணங்கள்

1. ஆவி இருக்கின்ற கூடு என்றும்
அழியாதிருக்கும் மேல் வீட்டையே நாடு - பாவம்

2. வாழ்வைச் சதமென்றிராதே, கெட்ட
மாய்மாலக்காரர் வலையில் விழாதே - பாவம்

3. சாக்குபோக்கு நீ சொல்லாதே வீணாய்
வாக்கு வாதங்களால் மனதைத் தேற்றாதே - பாவம்

4. பாவத்தின் நோயை நானுணர்ந்து, தேவ
ஆவியால் இரட்சிப்பைக் கண்டுகொண்டேனே - பாவம்

5. இரட்சிப்பை இப்போதே தேடும் இல்லால்
சிக்ஷிப்பார் இயேசும்மை பேய்க்கணத்தோடு - பாவம்

6. நீயுமிவ்வாதைக்குள்ளானாயோ? ஐயா
தீய நசலிதைத் தீர்ப்பாரே இயேசு - பாவம்

## பாடல் 44: மாண்டாரே இரட்சகர் உனக்காக

இராகம்: இந்துஸ்தானி தாளம்: மிஸ்ர ஏகம்

பல்லவி

மாண்டாரே இரட்சகர் உனக்காகப் பாவி
எத்தனை பாடுகள் பட்டாருனக்காய்

சரணங்கள்

1. லோகத்தின் பாவத்தைத் தேகத்தில் சுமக்கும்
கோலமதைச் சிலுவையிலே பாராய்! - மாண்டாரே

2. மா பாவத்தண்டனை மாய்ப்பதற்காக
மா பாடுபட்டு மரித்ததைப் பாராய்! - மாண்டாரே

3. மன்னிப்புண்டாகவே மத்தியஸ்தராக
வாதைக்குள்ளானாரே தாமே நீ பாராய் - மாண்டாரே

4. பாவியான உன்னைப் பாதுகாப்பாரே
பாவத்தை விட்டிவர் பாதத்தைத் தேடு - மாண்டாரே

## பாடல் 45: இந்நாள் இரட்சிப்புக்கேற்ற நல் நாள்

பல்லவி

இந்நாள் இரட்சிப்புக்கேற்ற நல் நாள்
ஏற்ற நல் நாள், ஏற்ற நல் நாள்

அனுபல்லவி

சொன்னார் கிறிஸ்துனக்குக்
கிருபையைச் சொரிந்து

சரணங்கள்

1. வாடித் திகைத்துப் புலம்பாதே - உந்தன்
மனதில் அவிசுவாசம் வைத்துக் கலங்காதே - இந்நாள்

2. இனிமேலாகட்டு மென்றெண்ணாதே - பாவ
இனிமை மேற்கொண்டுய்ய உன்னால் ஒண்ணாதே - இந்நாள்

3. பாடுபட்ட கிறிஸ்தைப்பாரு - உந்தன்
பாவங்கள் நீங்க அவ ருதிரத்தைச் சேரு - இந்நாள்

4. உலக சிநேகம் வெகுக் கேடு - அதில்
உடந்தைப்படாமல் ஜீவ மார்க்கத்தைத் தேடு - இந்நாள்

5. இதுவே தகுதியான காலம் - இதை
இழந்து விடாமல் பற்றிக் கொண்டாலனுகூலம் - இந்நாள்

## பாடல் 46: வரு பாவியை ஒரு போதிலும்

இராகம்: இந்துஸ்தானி தாளம்: ரூபகதாளம்

1. வரு பாவியை ஒரு போதிலும்
வெறுக்கார் கிறிஸ்தேசு
திருவானவர் அருளால் உந்தன்
கறை நீங்கிட மீட்பார்

2. பாவி உந்தன் மீட்பரண்டை
தாவி ஓடி வருவாய்;
கூவி அவர் பாதம் வந்து
தாவி மீட்பைப் பெறுவாய்

3. நாடி வரும் பாவிகளை
ஓடு என முடுக்கார்
பாடி மகிழ் கொள்ள மன
மாறுதலை அளிப்பார்

4. உந்தன் நீதி யாவும் மெய்யாய்
கந்தை யென்றுணரேன்
எந்தன் இயேசு மீட்பர் பாதம்
வந்து மனம் மாறேன்

## பாடல் 47: இரட்சிப்பின் ஆனந்த சந்தோஷங்காண

பல்லவி

இரட்சிப்பின் ஆனந்த சந்தோஷங்காண ஓடிவா
பக்ஷமுடனே இரட்சகரண்டை ஓடி வா

சரணங்கள்

1. பாவம் போக்கும் நதி அவர் பக்கம் நின்று ஓடுது
ஆவலுடனே இரட்சகரண்டை ஓடி வா - இரட்சிப்பின்

2. உன் பாவ பாரம் நீக்க உதிரம் சிந்த அடிகொண்டார்
அன்புடனே இரட்சகரண்டை ஓடி வா - இரட்சிப்பின்

3. கல்வாரி மேட்டில் ஐந்து காயங்காட்டி நிற்கிறார்
நல் மனதுடன் இரட்சகரண்டை ஓடி வா - இரட்சிப்பின்

4. ஆசீர்வாதத்தைக் கூறி அன்புடனே அழைக்கிறார்
நேசமுடனே இரட்சகரண்டை ஓடி வா - இரட்சிப்பின்

5. பாவி உன்னை ஈடேற்றப் பரலோகம் விட்டாரே;
தாவியே நீ அவர் பாதந்தேடி ஓடி வா - இரட்சிப்பின்

## பாடல் 48: அவிசுவாசமாய்த் தொய்ந்து

Why are you doubting and fearing? - 467

(Tune 413 of ESB)

1. அவிசுவாசமாய்த் தொய்ந்து
பாவத்தில் ஏன் நிற்கிறாய்
நம்பு இப்போ,
இரட்சிப்பார் அப்போ!
மனதைத் தா நம்பிக்கையாய்

பல்லவி
இரட்சிக்க வல்லவர் இயேசு,
மீட்க வல்லோர் காக்க வல்லோர்!
இரட்சிக்க வல்லவர் இயேசு,
பாவியை மீட்க வல்லோர்!

2. ஏழை பலவீனன் ஐயோ
பாவம் வெல்லு தென்கிறாய்;
மெய்தான்! ஆனால்
அவரண்டை வந்தால்
மீட்டு உன்னைப் பாதுகாப்பார் - இரட்சிக்க

3. அவர் என்னை துக்கத்தில் கண்டு
அன்பாக சொஸ்தம் செய்தார்;
என் இருள் நீக்கி
என்னைக் கைத்தூக்கி,
மெய் வெளிச்சத்தையும் தந்தார் - இரட்சிக்க

4. துக்கங்கள் துன்பங்கள் வந்து
சோதனை என்னைச் சூழ்ந்தால்
எப்போதும் இவர்
தற்காத்திடுவார்
எனக்கப்போ பயமில்லை! - இரட்சிக்க

*Herbert H. Booth*

## பாடல் 49: தாமதமேன் பாவியின்னும்

சரணங்கள்

1. தாமதமேன் பாவியின்னும்
சா மதித்துனை விடுமோ?
சற்குருவின் பாதந் தேடி,
துர்க்குணங்கள் மாற்று நாடி

2. ஆவலாய் நிற்கின்றாரே
பாவியுன்னை மீட்கவென்று;
ஜீவமோசம் ஆகின்றாயே,
தாவியவர் மீட்பைத் தேடு

3. இன்று மரித்தெங்கே போவேன்
என்றுணர்ந்து இப்போதே வா;
இன்னும் ஓர் தருணமில்லை
இன்றைக்கே மனந்திரும்புவேன்

4. பாவங்களைக் கொண்டு இப்போ
பாவி வாறேன் என்று சொல்லு
ஜீவனுள்ள தேவன் அவர்
செய்வதையே வந்து பாரேன்

5. முடிவுக்குக் காலமாச்சே
மோசம் போகாதே பாவி;
கடவுள் உனக்களித்த
காலம் போதும், இரட்சையடை

## பாடல் 50: தேவாதி தேவன் மனுவானாரே

பல்லவி

தேவாதி தேவன் மனுவானாரே - உன்னத

சரணங்கள்

1. பரலோகச் செல்வத்தை
பார்த்திபன் வெறுத்து
நரரூபமானாரே
பாவி உன்னை மீட்க! - தேவாதி

2. திருமறை வாக்குகள்
பரன் நிறைவேற்றிட
சிறுமையாய் உதித்த
கிருபைச் சுதனான - தேவாதி

3. மன்னுயிர்க்காகத்
தன்னுயிரைத்தர
தானாக நேசத்தால்
வானாசனம் ஆகிவிட்ட - தேவாதி

4. தேவ துரோகிகள்
வேதனையை நீக்கி
பேதைகள் கோபிகள்
வேதத்தைக் கைக்கொள்ள - தேவாதி

5. மார்க்க வைராக்கியரே
மூர்க்க வெறியரே
பார்த்திபன் நேசத்தை
பார்த்தால் திகைப்பீரே - தேவாதி

6. இந்த நல்வேளையில்
வந்துனை மீட்பர்க்கு
தந்தால் உன்னை இவர்
சொந்தமாய் ஏற்பார் காண் - தேவாதி

## பாடல் 51: வா பாவி! கர்த்தரின் அண்டைக்கு வா

இராகம்: கமாஸ் தாளம்: சாப்பு

பல்லவி

வா பாவி! கர்த்தரின் அண்டைக்கு வா பாவி!

சரணங்கள்

1. பாவி! நீ இன்னும் பயமின்றிப் பாவத்தில்
நிலைத்திருக்காதே; இப்போ
தாவியே இரட்சகருன்னை அழைக்கிறார்;
தாமதஞ் செய்யாதே - வா பாவி

2. பாவநாசர் உனக்கென்று சிந்தின
இரத்தம் அதோ பாராய்! - மனஸ்
தாபத்தோடேசுவின் பாதத்தில் சேர
இக்ஷணமே வாராய் - வா பாவி

3. ஆபத்துக்குந் தேவ கோபத்துக்குந் தப்பத்
தீவிரமா யோடிவா - உன்
பாவத்தின் சாபத்தை நீக்கும் தேவ ஆட்டுக்
குட்டியின் அண்டைக்கு வா - வா பாவி

4. காலத்தை வீணாய்க் கழித்துவிட்டால் இனி
எப்போ குணப்படுவாய் நீ?
ஜாலம் பண்ணி தேவ சாபம் அடையாமல்
இப்போ இரட்சிப்படைவாய்! - வா பாவி

## பாடல் 52: பாவிகளை மீட்க வந்த

இராகம்: சஹானா தாளம்: ஆதி

பல்லவி

பாவிகளை மீட்க வந்த
பரன் இவர்தாமே

சரணங்கள்

1. தேவ அன்பைக் கொஞ்சமென்றும்
தாவித் தேடாமல்
சிற்றின்ப வலைகளிலே
சிக்குண்டலையும் - பாவிகளை

2. நேச பிதா அன்பின் சத்தம்
நீசர் கேட்காமல்
நான் தானென்ற ஆணவத்தால்
துன்பத்துள்ளான - பாவிகளை

3. கல்வி, பணம், லோக மேன்மை,
செல்வமென்றெண்ணி;
மேசியாவின் தாசர்களை
வைது திரியும் - பாவிகளை

## பாடல் 53: பாவி பாவி வந்து

பல்லவி

பாவி பாவி வந்து இப்போ பாவம் போக்காயோ? நீ உன்
சாவின் பயம் நீங்க இப்போ ஓடி வாராயோ?

சரணங்கள்

1. சத்திய வழியிலே நீ சார்ந்து வாராயோ? - நித்தம்
புத்தியாய்ப் பிழைத்துப் பின்பு மோட்சம் போகாயோ? - பாவி

2. சத்துரு எதிர்த்து உன்னைச் சீறினபோதும் - சர்வ
கர்த்தரின் உதவியுனக் கென்றுமே போதும் - பாவி

3. பாவத்தை அறிக்கை செய்து மீட்படைவாயே - அப்போ
சாகுங்காலம் வந்தாலுமே தயார் என்பாயே - பாவி

# பாடல் 54: பாவ இதயம் மாற்ற இப்போ

இராகம்: பைரவி தாளம்: திஸ்ரம்

பல்லவி

பாவ இதயம் மாற்ற இப்போ - தாவும்! இரட்சகர்!
இவர் பாதம் தேடுமேன்

சரணங்கள்

1. எரியும் விளக்கைச் சுற்றியாடும்
சிறிய ஜந்தைப் போல - ஓர்
பெரிய வீம்பனாய் - ஆம்
திரியும் கோபியே! - பாவ

2. உலக டம்பம், உலக ஞானம்
உலகக் கல்வியாம் - இவ்
வலையில் சிக்கியே - ஓ
அலையும் பாவியே! - பாவ

3. அன்பாய் காக்கும் அப்பனாரை
அற்பமா யெண்ணும் - ஓ
சொற்ப ஞானியே - ஐயோ
தப்புவாயோ நீ! - பாவ

4. ஓட்டமாகப் பாய்ந்து வடியும்
ஆற்றின் ஜலத்தைப் போல - பாவி
நாட்கள் ஓடுதே - உன்
மீட்பின் நாளிதே! - பாவ

5. விருத்தன, வாலிபன், பிள்ளை என்று
ஒருக்காலும் பாரான் - என் நாள்
அறுக்க வல்லவன் - உன்
செருக்கைக் குலைப்பானே! - பாவ

6. வீடு, செல்வம், மாதா, பிதா
நாடு நகரமும் - விட்டுக்
காடு சேரவே - உன்
பாடை கூவுதே! - பாவ

## பாடல் 55: யாரவர் பாரேன்

பல்லவி

யாரவர் பாரேன்?
யாரவர் கேளேன்!
பாரேன்! பாவி உன்
ஆத்துமக் கதவைத்
தட்டும் நாயகனை

சரணங்கள்

1. இந்த நல் உணர்வு
வந்ததோ இதன்முன்?
தந்தால் இப்போ உன்
ஆத்துமத்தைச் சுத்தம்
செய்வேன் என்கிறார் கேள் - யாரவர்

2. பாவியே உந்தன்
பாவங்கள் போக்க
விண்ணை விட்டு
நீதி நிறைவேற்றிட
மண்ணில் ஆனவரை! - யாரவர்

3. ஐந்து காயத்தினால்
அருள் நதியாக
பாய்ந்து வடியும்
மா அன்பின் இரத்தத்தால்
தோய்ந்து நிற்கிறார் பார்! - யாரவர்

4. நேசர் கண்ணீரை
பாசமாய் சொரிந்து
பேசுகிறார் இன்னும்
சாந்தமாய் நின்று, உன்
மாசு தீர்க்க வென்றே! - யாரவர்

## பாடல் 56: எங்கள் இரட்சணிய மூர்த்தி

பல்லவி

எங்கள் இரட்சணிய மூர்த்தி
எல்லாருக்கும் இரட்சகர்

சரணங்கள்

1. மாசில்லாத மெய்த் தேவன்
மானிட ரூபமானார்
இரட்சண்ய மூர்த்தி என்ற
இனிய நாமமுடையார்! - எங்கள்

2. வம்பு நிறைந்த இந்த
மானிட ஜாதிகள் மேல்,
அன்பு நிறைந்த பகவான்
அதிக உருக்கமுள்ளார்! - எங்கள்

3. பாவத்தில் கோபம் வைப்பார்
பாவிமேல் கோபம் வையார்
ஆவலாய் நம்பும் பாவிக்
கடைக்கலமாக நிற்பார்! - எங்கள்

4. அந்தர வானத்திலும்,
அகிலாண்ட கோடியிலும்
எந்தெந்த லோகத்திலும்
இவரிவரே இரட்சகர் - எங்கள்

## பாடல் 57: பாவத்தினின்று நீ விடுவிப்பாயா

Tune: Wonder working power

1. பாவத்தினின்று நீ விடுவிப்பாயா?
உண்டு வல்லமை உதிரத்திலே
தீமையின் மேல் நீ ஜெயம் கொள்வாயோ?
இரத்தத்திலுண்டு வல்லமை

பல்லவி

வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
இயேசுவின் இரத்தத்தால்
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

2. கர்வம் இச்சையினின்று விடுவிப்பாயோ?
உண்டு வல்லமை உதிரத்திலே
கல்வாரி அலையில் கழுவ வாராயோ
இரத்தத்திலுண்டு வல்லமை

3. வெண்பனியிலும் ஆம் நீ வெண்மையாவாய்
உண்டு வல்லமை உதிரத்திலே
ஜீவ அலையால் பாவக்கறைபோம்
இரத்தத்திலுண்டு வல்லமை

4. இயேசு இராஜாவை நீ சேவிப்பாயா?
உண்டு வல்லமை உதிரத்திலே
தினம் துதிபாட ஜீவிப்பாயா?
இரத்தத்திலுண்டு வல்லமை

*Translated by: Daniel J. Raj*

## பாடல் 58: மகனே! உன் நெஞ்செனக்குத் தாராயோ

இராகம்: கௌசிகை தாளம்: ஆதி

பல்லவி

மகனே! உன் நெஞ்செனக்குத் தாராயோ? மோட்ச
வாழ்வைத் தருவேன் இது பாராயோ?

சரணங்கள்

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே - பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே - மகனே

2. உந்தன் ஆத்துமத்தை நீ படைப்பாயே - அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே - மகனே

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ? நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ - மகனே

4. உன் பாவம் முற்றும் பரிகரிப்பேனே - அதை
உண்மையாய் அகற்ற நான் மரித்தேனே - மகனே

## பாடல் 59: பாவத்தைச் செய்யலாகுமோ

பல்லவி

பாவத்தைச் செய்யலாகுமோ - பரனைவிட்டு

சரணங்கள்

1. அல்லும் பகலும் பாவஞ்செய்தும் வில்லங்கம் வந்தும்
நல்லுரை கேட்க வேண்டாமோ? யோசித்துப் பாரும் - பாவத்தை

2. பாவியுன் சாவிலே ஆவி பிரிந்திடும்
சாபந்தான் நீங்கிவிடுமோ யோசித்துப் பாரும் - பாவத்தை

3. நினையாத நாளதில் தீவினை யனைத்திற்கும்
கணக்குக் கொடுக்க வேண்டாமோ யோசித்துப் பாரும் - பாவத்தை

4. மடமட வென்றோசை வானத்திலே யொலிக்க
தடதட தடவெனவே இயேசு வருவார் - பாவத்தை

5. நித்தம் கர்த்தரின் சத்தம் உன்னுள்ளத்திலொலித்தும்
முக்தியைத் தேடவேண்டாமோ - யோசித்துப்பாரும் - பாவத்தை

6. துன்பத்தைச் சகித்திட்ட தேவமக்கள் எல்லாரும்
இன்பத்தைக் கண்டு மகிழ்வார் நல் இயேசுவோடு - பாவத்தை

## பாடல் 60: உலகில் பாவப் பாரத்தால் சோரும்

இராகம்: சயிந்தவி தாளம்: ஆதி

(தருணமே பரமசரீரீ என்ற மெட்டு)

பல்லவி

உலகில் பாவப் பாரத்தால் சோரும் - இளைப்
பார்ந்த நரரே வந்து சேரும்

அனுபல்லவி

அலைசடி பட்டவரே வாரும் - எந்தன்
ஆறுதலால் அவற்றை தீரும் - பொல்லா

சரணங்கள்

1. பாவி என்றெண்ணி திகைப்போரும் - எந்தன்
பாவம் தீராதென்றிப்போரும்
ஆவலாய் ஓடிவந்து சேரும் - நான்
ஆகாமியர்க்காக வந்ததோரும் - பொல்லா - உலகில்

2. இளமை என்றே எண்ணி நில்லாதே - சாவும்
இளமை என்று சொல்லிச் செல்லாதே;
வளமாய் வருவதைத் தள்ளாதே - கெட்ட
வழக்கமதையே கைகொள்ளாதே - பொல்லா - உலகில்

3. வாலிபப் பிராயமிதில் நாளும் - இன்ப
வாழ்வு சுகிக்கவென்று மாளும்;
சீலரே, இன்றென்னுரை கேளும், அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும் - பொல்லா - உலகில்

4. காலம் கடந்த கிழவோரே - வீணாய்க்
காலம் கழித்தே உழல்வோரே,
காலமே தேட மறந்தோரே - உங்கள்
கவலையைத் தீர்ப்பேன் அறிவீரே – பொல்லா - உலகில்

## பாடல் 61: தேவ மைந்தன் உன்னை இரட்சிக்க

'தேவ ஜாதன் நின்னே இரட்சிப்பான்' என்ற மெட்டு

1. தேவ மைந்தன் உன்னை இரட்சிக்க
   தேவலோகம் விட்டு தரணியில் வந்தார்!

2. உந்தன் பாவம் பரிகரிக்க
   சொந்த கைகால்களை ஆணிகட்கொப்பித்தார்!

3. கருணேசன் இதோ நிற்கிறார்!
   குருசு சுமந்து உனக்காய் பாவியே!

4. உன்னை மீட்டுக்கொள்வதற்காக
   சிந்தின இரத்தத்தை தெளிவாய் பார்த்திடு

5. தீமையை விட்டகன்றிடு நீ
   இரட்சகர்க்காக நல் ஜீவியம் செய்திடு

6. அவரில் சார்ந்து ஜீவிப்பவர்
   பரத்தில் என்றென்றும் வாழ்ந்து சுகிப்பாரே

7. மோக்ஷ ராஜ்யம் தருவதற்காய்
   பிதாவின் சன்னிதியில் உனக்காய் நிற்கிறார்

## பாடல் 62: போவோம் பரநகர்க்கு

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

1. போவோம் பரநகர்க்கு, ஜல்தி - புறப்படுங்கள்
   போவோம் பரநகர்க்கு, ஜல்தி
   ஜல்தி, ஜல்தி, ஜல்தி, ஜல்தி

2. இங்கே நாலைந்து மெத்தைவீடு - நாளையிறந்தால்
   எங்கே இருக்கு மிந்தக்கூடு? - இதையறிந்து
   இன்றே மனந்திரும்பி நன்றே உளந்திருந்தி - போவோம்

3. என்ன படித்திருந்தாலென்ன? - உன் வீடகத்து
   பொன் குவிந்திருந்தாலுமென்ன - அந்நிய நாளில்
   மண்ணில் கொண்டுன்னை மூட, என்ன வந்திடும் கூட - போவோம்

4. இந்த உலகம் நாடகமே - அல்லால் வேறல்ல
   சொந்த நம் நல்ல நாடேகுவோமே - இதற்கு வேண்டி
   முந்த இயேசையன் காட்டித் தந்த வழியிலோடி - போவோம்

## பாடல் 63: இருப்பீராயத்தம் இயேசுவைச் சந்திக்க

இராகம்: சுருட்டி தாளம்: திரிபுடை

பல்லவி

இருப்பீராயத்தம் இயேசுவைச் சந்திக்க!

அனுபல்லவி

வருவார் நினையாமலே - திண்ணம்
வான்முகில் மீது சீக்கிரம்!

சரணங்கள்

1. மண்ணுறும் சகல மாந்தரங் காணவே
மன்னனேசுதான் விண்ணரோடுமே
மகிமையாகவே தோன்றுவார் - இரு

2. ஊதும் எக்காளம் ஓசையாய்த் தொனிக்கையில்
பூதங்கள் பஸ்பமாகி வானமும்
பூமியும் வெந்தழிந்து போம் - இரு

3. கர்வங்கொண்டதோர் பாவிகள் யாவரும்
கர்த்தனார் வருங்காலத்தினவர்
கவலையுற்றதால் அலறுவார் - இரு

4. புத்தியுள்ள ஐங்கன்னிகள் போல் தேவ
பத்தனாய்ப் பரிசுத்தனாய் முழுத்
தத்தஞ் செய்துமே நித்தமும் - இரு

5. ஜீவ ஓட்டத்தில் திருடனைப் போலவே
சாவுதான் வரும் தப்பொணாது நீர்
தாவி மீட்பரைச் சார்ந்ததுமே - இரு

6. தேவனார் தீர்ப்புச் செய்யு மவ்வேளையில்
பாவியே! வலப்பக்கம் நின்றிட
பாவ மன்னிப்புப் பெற்றிங்கே – இரு

## பாடல் 64: பாவியேதுனக்கிந்தப் பெருமை

இராகம்: சிந்துபைரவி தாளம்: மிஸ்ரசாப்பு

பல்லவி

பாவியே துனக்கிந்தப் பெருமை - நமது
பரம குரு இராஜன் எடுத்தாரே சிறுமை!

சரணங்கள்

1. தேவாதி தேவ குமாரன் - உன்னைத்
தேடிவந்தே அவர் தாழ்மையானாரே! - பாவியே

2. பெரியோர்கள் வீடாசித்தாரோ? இல்லை
சிறியதோர் பசுத்தொழுவிலுதித்தாரே! - பாவியே

3. இராஜாதி இராஜ குமாரன் - பொல்லா
நீசருக்காக அடிமையானாரே! - பாவியே

4. நியாயாசனங்கள் முன்னின்று - வெகு
தாழ்மையாய் மறுமொழியுரைத்து நின்றாரே! - பாவியே

5. நீதிபரனான இயேசு - அநீத
வீதி பெற்றுக் குருசில் மாண்டாரே! - பாவியே

6. நாயகன் இயேசுவை அண்டு - மா
நேயராம் அவரிடம் இரட்சிப்பு உண்டு! - பாவியே

## பாடல் 65: உலகையோர் நிலையென்றெண்ணாதே

இராகம்: சிந்து பைரவி தாளம்: மிஸ்ரசாப்பு

பல்லவி

உலகையோர் நிலையென்றெண்ணாதே க்ஷணம்
ஒழிந்து போம் உன்னோடோரடியும் வராதே!

அனுபல்லவி

பலமாகப் பொக்கிஷம் பரத்திலே தேடு
பத்திரமாயங்கு இருக்குமே நீடு

சரணங்கள்

1. நிலையாது செல்வம் எந்நாளும் - அவை
நீர்க் குமிழ்கள் போல நிமிஷத்தில் நையும்
உலையில் மெழுகுபோல் உருகுமே மெய்யும்
உந்தனின் ஜீவனைப் பிரிக்குமே வீயும் - உலகையோர்

2. தீரம் புகழ் கீர்த்தி நாசம் - மற்றும்
சேயர், மனைவி சிநேகிதர் வேஷம்;
தாரணி முற்றுமே தவிர்த்திடல் மோசம்;
சார்ந்திடில் ஆன்மாவுக்கென்றுமே தோஷம் - உலகையோர்

3. வானத்தின் கீழ் யாவும் பண்டு - சாலமோன்
மாயை என்றுரைத்ததை மறவாதே கண்டு;
இதய வுடைவோடு இயேசுவை அண்டு
இன்பலோக நித்திய பேரின்பம் உண்டு! - உலகையோர்

## பாடல் 66: ஆவியின் கனியைக் கொடுங்கள்

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

ஆவியின் கனியைக் கொடுங்கள் அதையே தேவன்
ஆவலாய்த் தேடுகிறார் பாருங்கள்

சரணங்கள்

1. பாவியே மாய்மால வேஷம் பண்ணுவது வெகுமோசம்
சாவு நினையாமல் வரும், சாபமும் தொடர்ந்துவரும் - ஆவி

2. எட்டியின் கனிகட்கிணை இயற்றுங் கருமங்களைத்
திட்டமுடனே துறந்து, திவ்விய செயல்புரிந்து - ஆவி

3. எத்தனை காலமாயுனில் ஏற்றக் கனி தேடும் வல்ல
கர்த்தனேசுவின் தவணை கடந்தால் வரும் வேதனை - ஆவி

4. வெட்டவே கோடாரி மரம் வேரிலிருந்து ஸ்திரம்
கெட்ட கனி கொடுப்பவர் திட்டமாய் வெட்டப்படுவர் - ஆவி

5. அன்புடன், சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு,
இன்ப நற்குணங்கள், சாந்தம், இச்சையடைக்கம், விஸ்வாசம் - ஆவி

## பாடல்: 67: ஐயோ! பாவியே நீ என்ன செய்கிறாய்?

பல்லவி

ஐயோ! பாவியே நீ என்ன செய்கிறாய்?
கிறிஸ்து வரும்போது நீ என்ன சொல்லுவாய்?

சரணங்கள்

1. பாவ ஜீவியம் நரக பாதையாம்,
தீய ஆசைகள் பேயின் கண்ணியாம்! - ஐயோ

2. உலக செல்வங்கள் அற்பக் குப்பையே
இம்மை இன்பங்கள் மாய்கை மாய்கையே - ஐயோ

3. நீதி செய்யவே உன்னை அழைப்பார்;
பதில் கூறவே நீ என்ன செய்குவாய்? - ஐயோ

## பாடல் 68: நம்ப வேண்டாம், நம்ப வேண்டாம்

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

1. நம்ப வேண்டாம், நம்ப வேண்டாம்
பொய்யுலகை நம்ப வேண்டாம்;
நேசங் காட்டித் துரோகஞ் செய்யும்
பாழுலகை நம்ப வேண்டாம்

2. உன்னை பெற்ற மாதாவெங்கே?
போஷித்த உன் தந்தையெங்கே?
போய்விட்டாரோ போய்விட்டாரோ
உன்னை விட்டுப் போய்விட்டாரோ?

3. திருடனைப் போல சாவு வரும்
திடுக்கிடுவாய் நீயும் அப்போ;
பாம்பின் வாயில் தவளை போலே
பரிதபிப்பாய்! பரிதபிப்பாய்!

4. பிரேதமாகப் பாவி யுன்னை
தூக்கிப் போடுவார் கல்லறைக்கு;
அங்கே உன்னை வைத்திடுவார்
நம்புவாயோ உலகைப் பின்னும்?

5. இயேசு நாதர் பாதந்தேடும்;
மீட்பை இன்றே பெற்றுக்கொள்ளும்
குருசில் தொங்கும் நேசர் பாரும்
குணமாக்குவார் இப்போ வாரும்

## பாடல் 69: வீண் பக்தியாய் நடவா ஓ மனுஷா

இராகம்: மலையாமி தாளம்: ஆதி

பல்லவி

வீண் பக்தியாய் நடவா ஓ மனுஷா
காண்பதெல்லாம் அழியும்!

சரணங்கள்

1. வானஜோதிகள் சத்தியமோ?
வந்த மேசியா அசத்தியமோ?
பித்தலாட்டமோ மனுஷா? - ஓ மனுஷா

2. எத்தனை காலமிருந்தாலும்
இல்லம் விடுவது மெய்யல்லோ?
இன்பமுக்தி தேடவேண்டாமோ? - ஓ மனுஷா

3. பக்தர்களின் சாட்சியை நீ
நித்தம் பங்கமென் றிகழ்வாயோ?
எத்துவாதமோ மனுஷா? - ஓ மனுஷா

4. நாதனைப் போற்றிடும் நாவினால்
நரர் துதிகள் பாடாதே;
லோகத்தின் மேல் ஆசை வையாதே! - ஓ மனுஷா

5. அண்ணல் யேசுவைச் சேர்ந்திட்டால்
அவரருளைப் பெற்றிடுவாய்;
விண்ணில் வாழ்வும் சுகித்திடுவாய்! - ஓ மனுஷா

## பாடல் 70: குணப்பட இதுவே தருணமையா

இராகம்: ஆனந்த பைரவி தாளம்: ஆதி

பல்லவி

குணப்பட இதுவே தருணமையா
கோபாக்கினை நள் கொடிதாமே!

சரணங்கள்

1. க்ஷணத்தில் இவ்வுலகமும்
அதிலுள்ள பொருள்களும்
தகிக்கப்படுமே படுமே படுமே! - குணப்பட

2. இன்றைக் கிருக்கு முயிர்
நாளைக் கிருக்குமோ வென்
றெண்ணியே மனங் கசந்து கசந்து - குணப்பட

3. ஆஸ்தி, கல்வி, உத்தியோகம்
அதிகரித்தால் அகந்தை
ஆகி அழிம்பு செய்யாதே, செய்யாதே - குணப்பட

4. கனி கொடா மரங்களை
விழுத்தும் கோடரி அவர்
கரத்திலிருக்குதையையோ ஐயையோ! - குணப்பட

5. வன்மம் பொறாமையால் வீண்
வாதுக்கிழுத் தயலார்
வாழ்வைக் கெடுத்தல் தர்மமோ, தர்மமோ! - குணப்பட

## பாடல் 71: பாவி! மயக்கங் கொண்டிராதே

இராகம்: காப்பி தாளம்: ஆதி

பல்லவி

பாவி! மயக்கங் கொண்டிராதே
பல மாயையினாலே

சரணங்கள்

1. தினமும் பரனடி மகிழ்ந்து நீ போற்று;
சித்தப்படி யலையும் மனதையே மாற்று;
சினமுள்ள கோபத்தை நெறியுடன் ஆற்று
சேதமில்லாத வழி அறிந்து நீ சொல்லு - பாவி

2. சத்திய வழியினிற் சார்பதாய் நில்லு
சர்ப்பனை இன்னதென்று திடம் பண்ணிக் கொள்ளு
புத்திமதிகளைப் பிறருக்குச் சொல்லு
பேயின் மா தந்திரத்தை அறிந்து நீ வெல்லு - பாவி

3. உலகத்தின் வாழ்வுகள் நெடுநாள் நில்லாதே
உண்மை தவறினவனிடத்தில் செல்லாதே
எவரையும் தந்திரத்தால் மோசம் பண்ணாதே
இரட்சகர் புத்திதனை இகழ்ந்து தள்ளாதே - பாவி

4. மூடனுக்கறிவுதான் உரைத்தால் வெல்லாதே
மூர்க்கன் வெறியனென்று பேரெடுக்காதே
தேடாத் திரவியத்தைத் திருடிக்கொள்ளாதே
தேவனுரை மறந்தால் சிட்சை பொல்லாதே - பாவி

## பாடல் 72: சேர்வதெப்போது பாவி

இராகம்: மோஹனம் தாளம்: ஆதி

பல்லவி

சேர்வதெப்போது பாவி - சொர்க்க இன்பத்தை
சேர்வதெப்போது பாவி - மோட்ச இன்பத்தை
சேர்வதெப்போது பாவி?

சரணங்கள்

1. ஞாலத்தில் வந்த குருநாதனைப் பணியாமல்
காலமிருக்குதென்று கவலையற்றிருந்தால் - சேர்வதெப்போது

2. அக்ஷயன் இயேசுவின் பக்ஷமதை மறந்து
இரக்ஷையைத் தள்ளி துர் இச்சையில் திரிந்தால் - சேர்வதெப்போது

3. பாவப் பாரஞ் சுமந்து பரிதவிக்கும் பாவியைக்
கூவி அழைத்து நிற்கும் காவலனை விட்டால் - சேர்வதெப்போது

4. திருக்கு முறுக்குப் பண்ணும் செருக்குள்ள நெஞ்சத்தைதான்
உருக்கமுள்ள இயேசுவின் திருக்கரம் வையாவிடில் - சேர்வதெப்போது

5. உள்ளத்தைத் திறந்து நீ உண்மையை அறியாமல்
கள்ளத்தனம் பண்ணிக் காலத்தைக் கழித்தால் - சேர்வதெப்போது

6. இரட்சகர் வந்துன்னை இரட்சிக்க நிற்கும்போது
கட்சி பண்ணிக்கொண்டு துஷ்டனாக அலைந்தால் - சேர்வதெப்போது

## பாடல் 73: உனக்கெது வேணும்?

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: மிஸ்ரம்

பல்லவி

உனக்கெது வேணும்? இன்னும் எது வேணும்?
பின்னும் எது வேணும்? சொல் பாவியே
உடல் அழிந்து போகும் முன்னமே!

சரணங்கள்

1. பாவத்தோடெதிர்த்துப் பகவானைச் சேவித்துப்
பாடித்துதிக்க வேணுமா? வேணுமா? இல்லால்
பகவானோ டெதிர்த்து மாய வலையிற்பட்டு
மாண்டு தொடர வேணுமா? - உனக்கெது

2. பாவத்தை விட்டு நீ பக்தனாக ஜீவித்து
பதவி பெற்றிட வேணுமா? வேணுமா? இல்லால்
பாவ வலைக்குட் சிக்கி, மோசம் செய்கின்ற பேயைப்
பற்றித் தொடர வேணுமா? - உனக்கெது

3. என் ஆத்துமத்தைச் சுத்தம் செய்து காக்கின்ற
அப்பனார் அருள் வேணுமா? வேணுமா? பெருந்
தண்டனைக் குட்பட்டுத் தட்டுக் கெட்டலையும்
சாத்தான் உறவு வேணுமா? - உனக்கெது

4. மனம் மாறிப் பிறந்து நீ மாசற்று ஜீவிக்க
மகத்வன் கிருபை வேணுமா? வேணுமா? மிக
பாச வலையை வீசி நேசத்தைக் காட்டிப் பின்
மோசஞ் செய் மதம் வேணுமா? - உனக்கெது

## பாடல் 74: இன்னம் நீ என்ன செய்கிறாய்

இராகம்: இந்துஸ்தான் காப்பி தாளம்: மிஸ்ரம்

பல்லவி

இன்னம் நீ என்ன செய்கிறாய்?
குணப்படாமல், தாமதமென்ன?

சரணங்கள்

1. உன்னதத்திலிருந்த நாதன்
இந்நிலத் தவதரித்து
உன்னை மீட்க வந்தாரல்லவோ - ஓ! பாவி - இன்னம்

2. இரட்சண்ய செய்தி கொண்டு
தேவதாசர் வந்து நின்று
ஓதுகிறார் நீதியைத் தானே - ஓ! பாவி - இன்னம்

3. ஒவ்வொரு நாளும் உன் காதில்
இரட்சிப்பின் தொனி தொனிக்க
இன்னமும் நீ தாமதிப்பதேன்? - ஓ! பாவி - இன்னம்

4. தோழர்கள் தூஷிப்பாரென்று
தூரமாக நீ நில்லாதே
ஆவலோடெழுந்து வாராயோ - இரட்சிப்படைய - இன்னம்

5. பகிரங்கமாக இயேசு
உன் பாவத்தைக் காட்டும் நாளில்
பாவ மன்னிப்புக் கிடையாதே - ஓ! பாவி - இன்னம்

## பாடல் 75: ஒரே பிராண நாதர்தான் உண்டு

இராகம்: ஆனந்த பைரவி தாளம்: ஆதி

பல்லவி

ஒரே பிராண நாதர்தான் உண்டு!
பூலோகத் தாரே

சரணங்கள்

1. இந்தப் பிராணநாதர் நம்பும்
இரட்சண்யத்துக் கிவரே ஸ்தம்பம்!
மற்றும் வேறே நாமங்களால்
சற்றும் சுகப்பட்டீர்களோ? - ஒரே

2. பாவிகள் ஈடேறி மோட்ச
பாக்கியம் பெறுவதற்காய்
ஜீவன் விட்டுயிர்த் தெழுந்து
விண்ணுலகுக் கேறிச் சென்ற! - ஒரே

3. பற்பலர் பலவிதமாய்
கற்பிக்கும் பிரமாணங்களை
கேட்டுக்கேட்டு நெஞ்சு நொந்து
கேடற வகை பார்ப்போரே - ஒரே

4. என்னைப் பாவச் சேற்றினின்று
அன்பதாகக் கரை தூக்கி
துன்பம் தாங்க அருள் தரும்
நண்பனான நாயனிவர்! - ஒரே

5. இத்தனை நாளாக வீணாய்
தத்திக் குத்தித் தடுமாறி
சத்திய நெறியை விட்டு
புத்தியில் மயங்கினோரே! - ஒரே

6. தாமதித்து நீ நில்லாதே
சா மதித்துனை விடுமோ?
பாவத்தை யுணர்ந்து இயேசு
பாதத்தை இப்போதே தேடு! - ஒரே

## பாடல் 76: மாற்றினார் என்னிதயத்தை

இராகம்: தேசிகதோடி முடுகு தாளம்: திரிபுடை

பல்லவி

மாற்றினார் என் னிதயத்தை
இரட்சண்ய மூர்த்தி

அனுபல்லவி

மாற்றினார் ஆத்துமத்தை
நீக்கினார் சஞ்சலத்தை
போக்கினார் பாவச் சுமை
தூக்கினார் பேதை என்னை!

சரணங்கள்

1. கல்லான நெஞ்சனானாலும், துஷ்டனெனை
வல்லான் தன் அன்பாலிளக்கி
பொல்லாத சத்துருவை வெல்லாத என்னிதயம்
சொல்லாத நன்னெறியில் எல்லா வேளையுஞ்செல்ல - மாற்றினார்

2. கொஞ்சம் என்றாலும் இணங்கி குணப்படாத
நெஞ்சைத் தம் அன்பால் கழுவி,
வஞ்சகப் பேயின் தந்திர சஞ்சல வலையினின்று
தஞ்சமாய் ஏற்றென்னுள்ளம் பஞ்சிலும் வெண்மையாக - மாற்றினார்

3. மெய் மனஸ்தாபத்துடனே வந்தால் உன்னை
கைதூக்கி நிற்பார் இரட்சித்து
பொய்யன் பேயின் வழியை மெய்யாய் நீ விட்டுவிட்டு
வையகந்தனில் நல்ல செய்கைகளைச் செய்யும்படி - மாற்றினார்

## பாடல் 77: இன்றைக்கே மனந்திரும்புவாய்

இராகம்: அங்குஸ்தானி தாளம்: ஆதி

பல்லவி

இன்றைக்கே மனந்திரும்புவாய்
இல்லையானாலும் கெடுவாய்

அனுபல்லவி

பின்னைக்கென்று நீ பின்னிடுவது
பிசாசின் தந்திரப் பேச்சென்றே நினை

சரணங்கள்

1. நீதி வெட்டக் கை ஓங்குதே
நீடிய சாந்தமோ தாங்குதே,
மா தயவோடு பிராண நாதர்
வருந்திப் பாவி உன்னை அழைக்கிறார் - இன்றைக்கே

2. நாளைப் பிழைப்பு சாத்தியம்
நரக பாடுன் சம்பாத்தியம்
ஆவியானவர் கூவியழைக்கும்
வேளையிதுவே தட்டாதே - இன்றைக்கே

3. அந்திய காலம் பார்க்கலாம்
அதுவரைத் தனம் சேர்க்கலாம்
பிந்திப் போகாதெனச் சிந்தை கொள்வது
மோசடியாய் முடியும் முடியும் - இன்றைக்கே

## பாடல் 78: எத்தருணத்தில் உயிர் எவ்வழி பிரியுமோ

இராகம்: சஹானா தாளம்: திரிபுடை

பல்லவி

எத்தருணத்தில் உயிர் எவ்வழி பிரியுமோ
இதை உணராய் நெஞ்சமே!

அனுபல்லவி

சுத்தப் பரமன் பதம் இத்தரையில் அடைந்து
சொர்க்கப் பதவிக் கிப்போ பக்குவம் செய்யாவிடில்

சரணங்கள்

1. பால வயதினிலோ பாடும் சமயத்திலோ
கோலமாய் மணக்கோலம் கொள்ளும் தருணத்திலோ
சீலமுடன் பரனைத்தேடும் சமயத்திலோ
காலன் வரவுகண்டு கலங்கும் தருணத்திலோ - எத்தருணத்தில்

2. வாலிபன் நான்! இப்போ வயதும் அதிகமில்லை
காலன் வரவுக் கின்னும் காலம் அதிகமென்று
மேலான எண்ணங்கொண்டு வீணாய்க் கழிக்கும் போதோ
கோலொன்று கையில் தாங்கிக் குறுநடை கொள்ளும் போதோ - எத்தருணத்தில்

3. தாய் தந்தை தமர் தாரம் சகலமிருந்தாலும்
சஞ்சீவி மருந்துகள் கைவசமிருந்தாலும்
தீயன் வலையிற்சிக்கித் திகைக்கும் தருணமதில்
நாயன் உதவியில்லால் நசிவது திண்ணம் திண்ணம் - எத்தருணத்தில்

4. பாவ உழையிற்பட்டு பரிதபிக்கும் பாவியை
தேவ சுதனேயல்லால் தேடி மீட்பாரேயில்லை!
தாவி நீ அவர் தாளில் தவித்து விழுவாயானால்
பாவியுந்தனை அவர் பண்பாய் இரட்சிப்பாருண்மை – எத்தருணத்தில்

## பாடல் 79: நித்தியானந்தத்தை நாடு

இராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

நித்தியானந்தத்தை நாடு - பர
நிர்மல சுகந்தேடு மனமே

அனுபல்லவி

சத்திய மார்க்கந்தனிலே கூடு
சற்சன சங்கத்தினோடுறவாடு

1. இந்திர ஜாலம் உலக வைபோகம்
இன்றைக்கிருப்பதுவோ - சந்தேகம்
அந்தர மின்னல்போல் அழியும் இத்தேகம்
ஐயோ! அதனுடனுனக்கென்ன சிநேகம் - நித்தியானந்தத்தை

2. தன தானிய முதலான சம்பத்து
சாஸ்வதமோ? அதற்காயிரந் தத்து
தினமும் கவலைகள் விளைத்திடும் வித்து
சீச்சீ அதனை விரும்பல் விபத்து - நித்தியானந்தத்தை

3. மெய்யே ஒன்றுக்கு முதவாத பாண்டம்
மிருகாதிகள் சூழ் மாமிசப் பிண்டம்
மெய்யே இதற்கிங்கு நித்திய கண்டம்
புண்ணியன் பாதமுனக் காயிரம் தண்டம் - நித்தியானந்தத்தை

4. காண்பதெல்லாம் நிலை அல்ல அநித்யம்
காய மிறந்திட வேண்டு மகத்தியம்
வீண் பொருள் மீதுனக் கென்ன பைத்தியம்?
வேதாகமமே சொல்வது சத்தியம் - நித்தியானந்தத்தை

## பாடல் 80: வாழ்வை நம்பாதே

பல்லவி

வாழ்வை நம்பாதே - மனமே
வாழ்வை நம்பாதே

அனுபல்லவி

தாழ்வில்லாத நமது சுவாமி
தாழைத் தேடிப் பாவம் விடு

சரணங்கள்

1. எத்தனை பேர் புவி ஆண்டார் - அவர்
எல்லாவரும் முன்னே மாண்டார் - இங்கு
செத்தவரில் எவர் மீண்டார்
தேவசித்தம் ஒருவரும் தாண்டார் புவி - வாழ்வை

2. இன்று பல்லக்கினில் போவார் - நாளை
எடுக்கும் ஆட்களும் ஆவார்  நரர்
என்றவர் யாவரும் சாவார் - மதி
யீனர் நரகத்தில் சேர்வார் - புவி - வாழ்வை

3. எண்ணிக்கை இல்லாமல் இங்கே - முன்னாள்
இருந்த பேரெல்லாம் எங்கே? - நாளை
எண்ணிப் பிழைப்போம் நாம் - இங்கே
இயேசு நாயகனே நம் பங்கே - புவி - வாழ்வை

## பாடல் 81: பாவியே கெட்டுப்போகாதே!

Sinners whither would you wander - 628

(Tune 238 of ESB)

1. பாவியே கெட்டுப்போகாதே!
ஏன் அலைகிறாய்?
இன்னும் கொஞ்சக் காலத்துள்ளே
ஜீவன் அழியும்!

பல்லவி
மரணம் வருது, வருது, வருது
லோக முடிவும்
பாவியோடு துரிதப்படு,
இரட்சிப்படைய

2. சாத்தானும் உன்னை விழுங்கக்
காத்து நிற்கிறான்!
பிராண நாதர் உன்னை மீட்க
அன்பாய் நிற்கிறார்! - மரணம்

3. மீட்பர் உன்னை அழைக்கிறார்
அல்லத் தட்டாதே
நரகத் தீ உன் பங்காகும்
மீட்பிழக்காதே - மரணம்

4. நியாயத் தீர்ப்பின் நாள் கிட்டுது
வாழ்நாள் ஓடுது!
பாவத்தை உணர்ந்து மீட்பர்
பாதம் வா இன்றே - மரணம்

## பாடல் 82: மரிக்கவா பிறந்தேன்?

மெட்டு: கர்த்தர் என் காவலர்

1. மரிக்கவா பிறந்தேன்?
தரியாதோ ஜீவன்?
இகலோகம் விட்டென் ஆவி
வேறு லோகம் போகுமோ?

2. இப்பாரை விட்டபின்
எப்படியாவேனோ
நித்திய இன்பமோ துக்கமோ
சத்யமாய் என் பங்காகும்!

3. முழங்கும் எக்காளம்
எழும்புவேன் கேட்டு
காண்பேன் எரியும் ஆகாயம்
என் ஆண்டவரையுமே!

4. ஜெயத்துடனேயோ,
பயத்துடனேயோ,
எவ்வாறெழும்புவேனோ நான்
இவ்வுடலுடனே?

5. பரிசுத்தரோடோ
பழிகாரரோடோ
எவருடனே சேர்ப்பாரோ?
எவர்தான் அறிவாரோ?

6. கூட்டிக்கொள்வார் அல்லால்
ஓட்டி விடுவாரே!
பரத்திற் கழைப்பார் அல்லால்
நரகம் என் பங்காமே!

## பாடல் 83: மனந்திரும்பு மானிடனே

இராகம்: இந்துஸ்தான் காப்பி தாளம்: ஆதி

பல்லவி

மனந்திரும்பு மானிடனே - உடனே!
தினந்தனை வீணாய்க் கழியாதே!

சரணங்கள்

1. காலம் விலையுள்ளது கடத்தாதே
ஞாலமதில் ஜீவன் நிலையாதே!
காலமும் மரணமும் கடுகிடுது
சீலன் இயேசுவை அண்டி சீர்ப்பட்டிடு - மனந்திரும்பு

2. கிருபையின் காலத்தை இழக்காதே!
திருவசனத்தை அவமதியாதே
தருணமறிந்து உணர்வடைவாயே
மரணம் வருது குணப்படுவாயே! - மனந்திரும்பு

3. காயம் விட்டுயிர் தான் பிரிந்திடுமே
மாய உலகின் மேன்மை மாய்ந்திடுமே!
தீய வழியை விட்டு திரும்பாயோ?
தூயனைத் தேடி இரட்சை அடையாயோ? - மனந்திரும்பு

*K.S. Abraham*

## பாடல் 84: பாவியே சாவுக்குத் தீவிரித்து

'வானபிதா தந்த வேதத்திலே' என்ற மெட்டு

(Tune 473 of ESB)

1. பாவியே சாவுக்குத் தீவிரித்து
தூய இரட்சகரின் வேண்டுதலை
தீய மனதுடன் தள்ளி, நீயும்
தூரம் போகாதே கிருபை விட்டு!

பல்லவி

வந்திடு இயேசு மந்தையில் நீ
தந்திடுவாய் சிந்தைதனை;
இங்கிதம் பாட பாவியே நீ
வந்திடு இயேசுவிடம்

2. அன்பா யழைத்தார் பல தடவை
இன்னும் நின்றாத்துமம் தட்டுகிறார்!
உன்னோடு வாழ இடங்கொடென்ற
முன்னவன் வேண்டுதல் தட்டிடாது - வந்திடு

3. பேரொளி மன்னிப்பின் நாட் செல்லுதே
சேரும் விண் வாசலடைகின்றதே!
தாரணி விட்டுதான் நீங்கிடுவாய்
சார்ந்திடு இயேசுவின் பாதத்தில் நீ! - வந்திடு

## பாடல் 85: அதோ வாறார் மேகத்தின் மேல்

### Lo! He comes with clouds - 99

(Tune: 298 or 304 of ESB)

1. அதோ வாறார் மேகத்தின் மேல்
அறையுண்டு மாண்டவர்
ஆயிர மாயிரம் தூதர்
அவரோடு தோன்றுறார்
அல்லேலூயா!
ஆள வாறார் பூமியை

2. மன்னர் பிரான் கிறிஸ்துவை
மானிடர் கண் கண்டிடும்
முன்னவரை விற்றவரும்
வன் க்ரூசிலேற்றினோரும்
அங்கலாய்த்து
மேசியாவைக் காண்பாரே

3. அன்பா லடைந்த காயங்கள்
அவர் அங்கம் மேல் காணும்
அதுவே அவர் பக்தர்க்கு
அளிக்கும் மா மகிழ்ச்சி!
ஆனந்தமாய்
அவர் தழும்பைக் காண்போம்!

4. ஆம் அனைவரும் தொழட்டும்
அண்ண லேசைப் பணிந்து
அவருக்கே இராஜியமும்
மகிமை வல்லமையும்!
அல்லேலூயா
நித்ய தேவ நீர் வாரும்!

*Charles Wesley*

## பாடல் 86: அவர் வரும்போது சேனை ஆயத்தம்

(Tune - The Army will be ready)

1. அவர் வரும்போது சேனை ஆயத்தம் ஆயத்தம்
ஆம் இரட்சண்ய சேனை ஆயத்தம்

2. அவர் வரும்போது வீரர் ஆயத்தம் ஆயத்தம்
ஆம் இரட்சண்ய வீரர் ஆயத்தம்

3. அவர் வரும் போது பாவி என்செய்வாய்? என்செய்வாய்
ஆம் இரட்சண்ய சேனை ஆயத்தம்

4. அவர் வரும்போது மனஸ்தாபம் வீண் வீண் வீண்!
ஆம் இரட்சண்ய சேனை ஆயத்தம்

5. அவர் வரும் போது பூதம் நடுங்கும் நடுங்கும்!
ஆம் இரட்சண்ய சேனை ஆயத்தம்

6. அவர் வரும் போதோசன்னா பாடுவோம், பாடுவோம்!
ஆம் இரட்சண்ய வீரர் ஆயத்தம்

## பாடல் 87: வையகந்தனை நடுத் தீர்க்கவே

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

வையகந்தனை நடுத் தீர்க்கவே இயேசு
வல்லவர் வருகிறார் திருமறைக் கேற்க!

அனுபல்லவி

பொய்யுலகோர்களின் கண்களும் பார்க்க
பொற்பதி தனில் பரன் சேயரைச் சேர்க்க

சரணங்கள்

1. வானங்கள் மட மடவென் றகன்றிடவே,
மாநிலம் எரிந்து மாய்ந்தழிந்திடவே,
பானுடன் மதியுடு பஸ்பமாகிடவே,
பஞ்ச பூதங்களும் வெந்துருகிடவே - வையகந்தனை

2. முக்கிய தூதனெக்காளமே தொனிக்க
முதல் மரித்தோரெல்லாந் தாமெழுந்திருக்க,
ஆக்ஷண முயிருளோர் மறுவுரு தரிக்க
ஆண்டவர் வருகிறார் பக்தர்கள் களிக்க - வையகந்தனை

3. யாவரின் செய்கையும் வெளிப்படுவதற்கு
பரத்தின் புத்தகங்களுந் திறந்தவரவர்க்கு
பூவுலகில் யாவரும் நடந்து வந்ததற்கு
புண்ணிய னளவுடன் பலனளிப்பதற்கு! - வையகந்தனை

4. அடைக்கலனேசுவை அண்டினோர் நாமம்
அழிந்திடாதவர்களின் வாழ்வது க்ஷேமம்
படைத்திடுவாய் உன்னை இது நல்ல நேரம்
பற்றிடவா இப்போ இயேசுவின் பாதம் - வையகந்தனை

## பாடல் 88: தேவன் வரும் நாளதிலே

இராகம்: தெம்மாங்கு தாளம்: திரிசாப்பு

1. தேவன் வரும் நாளதிலே - என் நண்பா
   பூமியிலுள்ள மனுஷரெல்லாம்
   ஏகமாகக் கூடுவார்கள் - என் நண்பா
   இயேசு முன்னே சேருவார்கள்

2. புத்திகெட்ட மானிடர்கள் - கத்திக் கத்தி அலறுவார்கள்
   சுத்தமுள்ள மானிடர்கள் - என் நண்பா
   கர்த்தனேசைச் சேர்ந்திடுவார்

3. தூஷணங்கள் பேசினோரை - மாசணுகா நாளதிலே
   மோசமுள்ள தீ நரகில் - என் நண்பா
   நாசமாகத் தள்ளிடுவார்!

4. மறுதலித்த பேர்களெல்லாம் - பரிதபிப்பார் தீ நரகில்
   நெறி தவறிப் போகாமலே - என் நண்பா!
   சரிவரவே வேதங் கேளாய்!

5. தீயகுணப் பாதகரும் - மாயகுணப் பேதைகளும்
   பேயினுட தூதர்களும் - என் நண்பா!
   போயழிவார் தீ நரகில்!

6. அண்டபரனை மறந்து கண்டதெல்லாம் தெய்வமென்று
   தெண்டனிட்ட பாவியெல்லாம் - என் நண்பா!
   சென்றழுவார் தீ நரகில்

7. ஓடுவார்க ளங்குமிங்கும் - சாடுவார்கள் தாகத்தாலே
தேடுவார்கள் தண்ணீரையே - என் நண்பா!
வாடுவார்கள் கிட்டாமலே!

8. தள்ளை தந்தை யானவர்கள் - பிள்ளைகளைப் பார்த்தழுவார்
துள்ளித் துள்ளிப் பார்த்தழுவார் - என் நண்பா!
எள்ளளவு மோயமாட்டார்!

9. ஐயையோ, சொல்வதெல்லாம் பொய்யல்லோ வென்றிருந்தோம்
தீயல்லோ பிடித்ததென்பார் - என் நண்பா!
பேயல்லோ கெடுத்ததென்பார்!

## பாடல் 89: மேக மீதில் இயேசு ராஜன்

பல்லவி

மேக மீதில் இயேசு ராஜன் வேகம் வாறாரே!

அனுபல்லவி

ஆயத்தமுள்ளோரை ஆகாயம் சேர்க்க அவரே வாறாரே!

சரணங்கள்1

1. ஆண்டவர்தாமே ஆர்ப்பரிப்போடே அவனியில் வாறாரே!
மீண்டவரோ மேலோகமே செல்ல மேதினியை விடுவார் - மேகமீதில்

2. கிறிஸ்துவுக்குள்ளே மரித்தோரெல்லாம் கிளம்பியே எழும்பிடுவார்
மரிக்காதிருக்கும் பரிசுத்தரெல்லாம் மறைந்தே போவாரே - மேகமீதில்

3. பாடுபட்டோர்க்குப் பலனளிப்பாரே பாடு பட்டவர் தாமே
கூடும் நமக்கோ குறைவில்லா பலனை கூவியே கொடுத்திடுவார் - மேகமீதில்

4. அவருரைத்த அடையாளங்களெல்லாம் தவறாமல் நடக்கின்றதே!
அவர் வரும் வேளையை எவருமே அறியார் ஆண்டவரே அறிவார் - மேகமீதில்

5. ஆயிர வருஷ ஆளுகை செய்வார் ஆண்டவர் இயேசுதாமே!
நீதி சமாதானம் நிறைந்தே இருக்கும் ஜோதியின் ஆளுகையில் - மேகமீதில்

6. அல்லேலூயா கீதம் பாடி அகமகிழ்ந்திடுவோமே
வல்லவர் வரும் வேளையுமிதோ மெல்லவே நெருங்கிடுதே - மேகமீதில்

## பாடல் 90: பாவத்தின் பலன் நரகம்

(Tune 8)

1. பாவத்தின் பலன் நரகம், நரகம்
ஓ! பாவி நடுங்கிடாயோ?
காண்பதெல்லாம் அழியும் அழியும்
காணாததல்லோ நித்யம்

பல்லவி

இயேசு ராஜா வருவார்
இன்னும் கொஞ்சக் காலந்தான்
மோட்ச லோகம் சேர்ந்திடுவோம்

2. உலக இன்பம் நம்பாதே, நம்பாதே - அதன்
இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே, நாளிலே
ஓர் காசும் கூட வராதே - இயேசு

3. உன் காலமெல்லாம் போகுதே, போகுதே
உலக மாய்கையிலே
ஓ! தேவ கோபம் வருமுன், வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ - இயேசு

4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே ஓடுதே
கல்வாரி மலைதனிலே
உன் பாவம் யாவும் நீங்கிப்போம், நீங்கிப்போம்
அதில் ஸ்நானம் செய்வதாலே - இயேசு

5. மா பாவியான என்னையும், என்னையும்,
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ! பாவி நீயும் ஓடிவா ஓடிவா
தேவாசீர்வாதம் பெறவா - இயேசு

## பாடல் 91: தயாபரா! கண்ணோக்குமேன்!

### Jesus, my Lord to Thee I cry - 291

(Tune 478 of ESB)

1. தயாபரா! கண்ணோக்குமேன்!
உம்மாலேயன்றி சாகுவேன்!
என் சீரில்லாமை பாருமேன்!
என் பாவம் நீக்கையா!

பல்லவி
என் பாவம் நீக்கையா!
என் பாவம் நீக்கையா!
உம் இரத்தமே என் கதியே
என் பாவம் நீக்கையா!

2. என் பாவ ஸ்திதி அறிவீர்
மாசற்ற இரத்தம் சிந்தினீர்
அசுத்தம் யாவும் போக்குவீர்
என் பாவம் நீக்கையா! - என்

3. மெய் பக்தி ஒன்றுமில்லையே!
நற்கிரியை வீண் பிரயாசமே!
உம் இரத்தத்தினிமித்தமே
என் பாவம் நீக்கையா! - என்

4. இதோ உம் பாதமண்டினேன்
தள்ளாமற் சேர்த்துக் கொள்ளுமேன்!
என்றைக்கும் பாதுகாருமேன்
என் பாவம் நீக்கையா! - என்

*Eliza Hamilton*

## பாடல் 92: மாசற்ற தேவ சுதனே!

O spotless Lamb, I come to Thee - 450

(Tune: 242, 243 of ESB)

1. மாசற்ற தேவ சுதனே!
உம்மண்டை நானிப்போ வாறேன்;
விலங்கை நீக்கி விடுமேன்!
தேவே! தஞ்சமென்றேன்

பல்லவி
பாவம் போக்கும் மீட்பா
மாசற்ற தேவ சுதனே!
பாவம் போக்கும் மீட்பா!

2. பசியினால் என் ஆத்துமம்
தொய்ந்து வாடி அலையுதே!
உம் அன்பினால் என்னைத் தாங்கும்
பாவியின் நேசரே! - பாவம்

3. உட் பாவத்தால் மெலிகிறேன்
உள் வினையை நீர் நீக்குமேன்
துக்கத்தோடு ஜெபிக்கிறேன்
சமாதானம் தாரும்! - பாவம்

4. மீட்பா உந்தன் ஜீவாற்றினுள்
மெய் விசுவாசத்துடனே
மூழ்குவதால் என் உள்ளத்துள்
மகிழ் கொள்ளுகிறேன் - பாவம்

*Catherine Booth - Clibborn*

## பாடல் 93: இரட்சகரொருவரின் அன்பு

### I have heard of a Saviour's love - 289

(Tune 322 of ESB)

1. இரட்சகரொருவரின் அன்பு
பேரன்பென்று கேள்விப்பட்டேன்!
ஆனால் அவர் மோட்சம் விட்டது
என் மேல் கொண்ட பாசத்தால் தானோ?

பல்லவி
ஆம்! ஆம்! ஆம்!
என்னை நேசித்ததாலே தானே
ஆம்! ஆம்! ஆம்!
என்மேல் கிருபை கூறுகிறார்

2. அவர் பாடும் இரத்தஞ் சிந்தலும்
அதிகமாய்க் கேள்விப்பட்டேன்!
ஆனால் மெய்தானா இவை எல்லாம்?
பாவி எந்தனுக்காகவே தான்! - ஆம்! ஆம்!

3. இந்த இயேசுவினடியார்க்கு
மேல் வீடொன் றிருக்கிறதாம்!
ஆனால் ஏழைப் பாவி எனக்கு
அங்கோர் பங்கு இருக்கிறதா? - ஆம்! ஆம்!

4. தேவே! நீரே என் தஞ்சமல்லால்,
வேறாருமே இல்லையதால்
உமதாவியால் இவையெல்லாம்
என் பங்கென்று காட்டிடுமேன் - ஆம்! ஆம்!

*Philip Philips*

## பாடல் 94: பொல்லாப் பாவ லோகத்தின் மேல்

God loved the world of sinners lost - 46

(Tune 56 or 58 of ESB)

1. பொல்லாப் பாவ லோகத்தின் மேல்
நல்லான் அன்புகூர்ந்தார்!
எல்லார்க்குமிவ ரீடேற்றம்
நல்கினார் தானமாய்

பல்லவி
ஓ! இதென்ன மா நேசம்!
என் மேற்கொண்ட பாசம்!
வன் குருசில் மீட்பர் மாள
வரச் செய்த நேசம்!

2. நம்பிக்கையாலென் நாதனை
சொந்தமாக்கிக் கொள்வேன்;
அவர் சாவால் மீட்படைந்தேன்
ஆம்! சுத்தமானேன் நான் - ஓ! இதென்ன

3. அன்பு மகிமை பூர்த்தியாய்
அளிக்கும் சுத்தர்க்கு,
நம்ப இயேசு கிறிஸ்துவை
நசியும் உள் தீமை - ஓ! இதென்ன

4. நித்திய மோட்ச ஜீவியம்,
இத்தரை ஆரம்பம்!
நித்தமும் நம்பும் ஆத்துமா
பெற்று வாழும் சத்யம்! - ஓ! இதென்ன

*Martha M. Stockton*

## பாடல் 95: மீட்பா நானும்மைக் கிட்டி

### As I am before Thy face - 285

(Tune 181 of ESB)

1. மீட்பா நானும்மைக் கிட்டி
   வேண்டுகிறேன்;
உம் கிருபையால் என்னை
   ஆட்கொள்ளுமேன்;
என்னை ஏற்றுக்கொள்ளீரோ?
   என் நெஞ்சில் வசியீரோ?
உன் அன்பால் என் பாவங்கள்
   நீங்கிடாதோ?

2. என் துக்கங்களோடு நான்
   வருகிறேன்;
முத்தி, என் கண்ணீர் போக்கும்
   பணிகிறேன்
உம் கையே என்னை ஆற்றும்
   உம் கண்ணே வெளியாக்கும்;
நான் உம்மண்டை சேரவே
   ஆசிக்கிறேன்!

3. துக்கத்தால் இளைத்த நான்
   இதோ வாறேன்;
ஜீவனோ, மரணமோ
   கர்த்தா வாறேன்;
என் பயம் தடுக்குது
   முன் தோல்வி மடக்குது;
ஆனால் பிள்ளை போல் நம்பி
   கர்த்தா வாறேன்

*Herbert H. Booth*

## பாடல் 96: நான் பாவிதான் - ஆனாலும் நீர்

Just as I am, without one plea - 293

(Tune 245 of ESB)

1. நான் பாவிதான் - ஆனாலும் நீர்
மாசற்ற இரத்தம் சிந்தினீர்;
வா! என்று என்னைக் கூப்பிட்டீர்
என் மீட்பரே! வாறேன்

2. நான் பாவிதான் - என் நெஞ்சிலே
கறை பிடித்த நீசனே!
என் கறை நீங்க இப்போதே
என் மீட்பரே! வாறேன்

3. நான் பாவிதான் - பயத்தினால்
அலைந்து பாவப் பாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்
என் மீட்பரே! வாறேன்

4. நான் பாவி தான் - விசுவாசத்தால்
சீர், நேர்மை, செல்வம், சொர்க்கமும்
அடைவதற்கு உம்மிடம்
என் மீட்பரே! வாறேன்

5. நான் பாவிதான் - இரங்குவீர்
அணைத்துக் காத்து இரட்சிப்பீர்!
அருளாம் செல்வம் அளிப்பீர்!
என் மீட்பரே! வாறேன்

6. நான் பாவிதான் - அன்பாக நீர்
நீங்காத் தடைகள் நீக்கினீர்;
உமக்குச் சொந்தமாக்கினீர்;
என் மீட்பரே! வாறேன்

*Charlotte Elliott*

## பாடல் 97: ஆழ்ந்த தயவே! சொல்லும்

மெட்டு: ஜீவ நதியின் ஓரமாய்

1. ஆழ்ந்த தயவே! சொல்லும்
உண்டோ எனக்கும் தயை?
பிரதான பாவி நான்!
மன்னித்து மீட்பை ஈவீரோ?

பல்லவி

தேவன் அன்பாய் இருக்கிறார்;
ஜீவித்து இயேசு நேசிக்கிறார்

2. மீட்பை அசட்டை செய்தேன்!
இயேசுவைக் கோபம் மூட்டினேன்!
மீட்பர் சொல்லைக் கேட்டிலேன்!
இயேசுவை நான் துக்கிப்பித்தேன்! - தேவன்

3. மீட்பர் காயம் காட்டுகிறார்!
கரங்களை நீட்டுகிறார்!
தேவன் அன்பாய் இருக்கிறார்!
ஜீவித்து இயேசு நேசிக்கிறார்! - தேவன்

## பாடல் 98: எத்தனை திரள் என் பாவம்

இராகம்: தன்யாசி தாளம்: ஆதி

பல்லவி

எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!
எளியன் மேல் இரங்கையனே!

அனுபல்லவி

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே
நிலைவரம் எனில் இல்லை; நீ என் தாபரமே!

சரணங்கள்

1. பத்தம் உன்மேல் எனக்கில்லை என்பேனோ?
பணிந்திடல் ஒழிவேனோ?
சுத்தமுறுங் கரங் கால்கள் விலாவினில்
தோன்றுது காயங்கள் தூய சிநேகா! - எத்தனை

2. எந்தன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடா திருக்கையிலே!
உந்தன் மிகுங்கிருபை ஓ! மிகவும் பெரிதே
உத்தம மனமுடையோய்! எனை ஆளும் - எத்தனை

3. ஆயங் கொள்வோன் போல் பாவ ஸ்திரீபோல்
அருகிலிருந்த கள்ளன் போல்
நேயமாய் உன் சரண் சரண் என வணங்கினேன்!
நீ எனக்காகவே மரித்தனை பரனே! - எத்தனை

4. கெட்ட மகன்போல துட்டனாய் அலைந்தேன்
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அல நான்
எனை இரட்சித்திடல் எந்தன் நிமித்தமே அப்பனே - எத்தனை

*B.D*

## பாடல் 99: அருள் நாதா - என் - குருநாதா

இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: ஆதி

பல்லவி

அருள் நாதா - என் - குருநாதா - ஏழைக்
கபய மிரங்கு மெந்த னரும் போதா!

சரணங்கள்

1. பஞ்சமா பாவங்கள் பல புரிந்தேன்
கிஞ்சித்தும் உன்னை எண்ணா தலைந்திருந்தேன்
நெஞ்ச முருகி யுன்னை நாடி வந்தேன்
தஞ்சம் நீ தான் எனக்கென் தாதாவே! - அருள்

2. நித்திய ஜீவனுக்கு நீயே வழி
பக்தர்க்குப் பாரிதில் நீ தானே ஒளி
உத்தமா எனக்கும் உன் இரட்சையளி
சத்தியம் படைத்தே னுனக்கென்னைப் பலி - அருள்

3. நீயே எனக்கு வேண்டும் நித்திய கர்த்தா
நீதி தவறா திரு தேவ மைந்தா
மாய உலக மிதின் மயக்கம் வேண்டாம்
நேயா என்னை ஏற்றிட மறுக்கவேண்டாம்! - அருள்

*K.S. Abraham*

## பாடல் 100: இயேசு மேய்ப்பா! எந்தன் நேசா!

இராகம்: பியாகு தாளம்: திஸ்ர ஏகம்

சரணங்கள்

1. இயேசு மேய்ப்பா! எந்தன் நேசா!
என்மேல் தயை கூரும் ஈசா!
பா மா யென்னைக் கைதூக்கி
பாது கா என் பாவம் போக்கி!

2. உம்மையே நானென்றும் நம்பி,
இம்மைப் பற்றி னின்று நீங்கி
நன்மையே என்னாளும் செய்து
நானொழுகச் செய்யும் தேவா!

3. நேற்றும் இன்றும் என்றும் மாறா
இயேசுவே என் ஜீவநாதா!
தேற்று மென்னைத் திருவருளால்
மாற்ற மில்லாதுன் பின்செல்ல

4. துன்ப ஜீவியக்கடலில்
அன்பனே! நீர் என் நங்கூரம்!
உம்மேல் கொண்ட என் விஸ்வாசம்
உறுதிகொள்ளத் தா உம் நேசம்!

*K.S. Abraham*

## பாடல் 101: இரட்சித்தார், இரட்சித்தார்

I am saved - 322

(Tune 595 of ESB)

1. இரட்சித்தார், இரட்சித்தார்
பாவியான என்னை;
நீக்கினார் பாவத்தை
தம் திவ்விய இரத்தத்தால்

பல்லவி
அல்லேலூயா! அல்லேலூயா!
அல்லேலூயா! இரட்சகர்க்கு!
அல்லேலூயா! அல்லேலூயா!
அல்லேலூயா! ஆமென்

2. அன்பினால், அன்பினால்
அவர் அருளின
வாக்குத் தத்தங்களில்
நம்புவேன், நம்புவேன் - அல்லேலூயா

3. சுத்த இதயத்தை
எனக்குள் சிருஷ்டித்தார்
சோதனை பயத்தை
நீக்கினார், நீக்கினார் - அல்லேலூயா

4. பெலன் அற்றிருந்தேன்
அவர் பெலன் தந்தார்
இருள் எல்லாம் மாற்றி,
ஒளியையுந் தந்தார் - அல்லேலூயா

## பாடல் 102: மீட்பர் மரித்த குருசண்டை

Down at the cross where my saviour died - 315

(Tune 654 of ESB)

1. மீட்பர் மரித்த குருசண்டை
நான் ஜெபித்த ஸ்தலத்தண்டை
இரத்தத்தால் மன்னிப்படைந்தேன்
மீட்பருக்கு மகிமை!

பல்லவி
மீட்பருக்கு மகிமை!
மீட்பருக்கு மகிமை
இப்போ என் உள்ளம் மாறிற்று
மீட்பருக்கு மகிமை!

2. ஆச்சரியமாய் உள்ளம் மாறிற்று
இயேசுவின் மாளிகை ஆயிற்று
சிலுவையண்டை உண்டாயிற்று
மீட்பருக்கு மகிமை! - மீட்பருக்கு

3. பாவம் போக்கும் மகத்வ நதி!
என்னை சொஸ்தம் செய்த நதி
இயேசுவாலடைந்தேன் இந்த ஸ்திதி,
மீட்பருக்கு மகிமை! - மீட்பருக்கு

4. இந்த ஜீவ ஊற்றண்டை வா
மீட்பருக்குன் இதயத்தை தா;
மூழ்கி உன் பாவத்தைப் போக்க வா;
மீட்பருக்கு மகிமை! - மீட்பருக்கு

*Elisha A Hoffman (1839-1929)*

## பாடல் 103: பாவிக்கவர் காட்டின மா நேசத்தால்

I heard of a saviour whose love was so great - 331

(Tune 540 of ESB)

1. பாவிக்கவர் காட்டின மா நேசத்தால்
சிலுவையில் தொங்கின இயேசு
திருசிரசிலவர் முண்முடியைச் சூண்டார்
பெரும் பாவி எனை இரட்சிக்க

பல்லவி
பெரும் பாவி என்னை இரட்சிக்க
திருசிரசிலவர் முண்முடியைச் சூண்டார்
பெரும் பாவி என்னை இரட்சிக்க

2. ஓர் காலமவர் கொடும் பாவிகட்காகச்
சொரிந்தாராம் மிகவும் கண்ணீர்!
என் செட்டைக்குள் வருவோரை அரவணைப்பேன்;
உமக்கோ மனமில்லை யென்றார் - பெரும்

3. உமதற்புத மாநேசம் பாவி எந்தன்
கல் இருதயத்தை இளக்க
மனஸ்தாபத்தோடு சுவாமி நான் உந்தன்
திருப்பாதத்தைத் தேடி வந்தேன் - பெரும்

4. எப்பேர்க்கொத்த பாவியையும் இரட்சிக்க
ஆம் வல்லவர் எனது மீட்பர்;
உன் பாவத்தை வெறுத்து வந்தால் உன்னை
இவர் சத்தியமாக மீட்பார் - பெரும்

*Mrs. Read*

## பாடல் 104: தேவன் சுதன் தந்தார்

God gave His son for me - 45

(Tune: 369 or 374 of ESB)

1. தேவன் சுதன் தந்தார்
ஓ! மா அன்பு;
பாவம் நீக்கி மீட்டார்
ஓ! மா அன்பு;
மா பாவியானாலும்
நிர்ப்பந்தனானாலும்
என்னைக் கைதூக்கினார்
ஓ! மா அன்பு

2. தேவ வலப் பக்கம்,
ஓ! மா அன்பு;
காண்கிறேன் மீட்பரை
ஓ! மா அன்பு;
என் குணம் மாற்றுறார்
சன் மார்க்க னாக்குறார்
என்னை ஈடேற்றுறார்
ஓ! மா அன்பு

3. நம்புறேன் நெஞ்சத்தில்
ஓ! மா அன்பு;
பேர் உண்டு சொர்க்கத்தில்
ஓ! மா அன்பு;
என் பயம் நீங்கிற்று
என் பாவம் போயிற்று;
சந்தோஷம் ஆயிற்று
ஓ! மா அன்பு

*Charles Fry*

## பாடல் 105: என் இரட்சகா! என் தேவனே!

O happy day that fixed my choice - 365

(Tune 37 of ESB)

சரணங்கள்

1. என் இரட்சகா! என் தேவனே!
உம்மை சேர்ந்த நாள் இன்பமே
என்னுள்ளத்தின் சந்தோஷத்தை
எங்குமே நான் ப்ரஸ்தாபிப்பேன்

பல்லவி

இன்ப நாள்! இன்ப நாள்!
இயேசு என் பாவந்தீர்த்த நாள்!
காத்து ஜெபிக்கக் கற்பித்தார்
என்றும் சந்தோஷிக்கச் செய்தார்
இன்ப நாள்! இன்ப நாள்!
இயேசு என் பாவந்தீர்த்த நாள்!

2. வாக்குத்தத்தம் செய்திடுவேன்
என் அன்புள்ள நாதருக்கே;
அவரண்டை இருக்கையில்
ஸ்தோத்திரங்கள் ஏறெடுப்பேன் - இன்ப நாள்

3. மா கிரியை நடந்ததால்
கர்த்தரும் நானும் ஒன்றானோம்
பின் சென்றிட அழைத்திட்டார்
கீழ்ப்படிந்தேன் ஆனந்தமாய் - இன்ப நாள்

4. தத்தளிக்கும் என் மனமே
கர்த்தரில் இளைப்பாறுவாய்;
நன்மைகள் ஈந்த நாதரை
ஓர்காலும் விட்டு நீங்கிடாய் - இன்ப நாள்

5. நாடோறும் என் வாக்குத்தத்தம்
கேட்டிடும் உன்னத தேவா;
ஜீவியத்தின் அந்தத்திலும்
நான் பணிந்து போற்றிடுவேன் - இன்ப நாள் (*Philip Doddridge*)

## பாடல் 106: நான் உம்மைப்பற்றி இரட்சகா

At the Cross

1. நான் உம்மைப்பற்றி இரட்சகா!
வீண் வெட்கமடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா!
நான் சாட்சி கூறுவேன்

பல்லவி

சிலுவண்டையில்
நம்பி வந்து நிற்கையில்
பாவப்பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்;
எந்த நேரமும், எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்

2. ஆ! உந்தன் நல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்,
நீர் கைவிடீர்! இவ்வேழையை
காப்பீர் தேவாவியால் - சிலுவை

3. மாவல்ல வாக்கின் உண்மையை
கண்டுணரச் செய்தீர்;
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர் - சிலுவை

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்;
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய் பாக்யம் அடைவேன் - சிலுவை

Isaac Watts (1674-1748, Southampton, Kingdom of England)

## பாடல் 107: அன்புள்ள நேசர் இயேசு

I've found a friend in Jesus - 344

(Tune 819 of ESB)

1. அன்புள்ள நேசர் இயேசு, என்னெல்லாம் அவரே!
பதினாயிரம் பேர்களில் சிறந்தோர்;
தாம் பள்ளத்தாக்கின் லீலி, என்னெல்லாம் அவரே!
எந்தன் ஆத்துமத்தின் பிராண நாயகர்;
துக்கத்தில் என் ஆறுதல் துன்பத்தில் என்னின்பம்!
எந்தன் கவலைகளெல்லாம் தாங்குவார்

பல்லவி
அவர் பள்ளத்தாக்கின் லீலி
அவர் காலை விடி வெள்ளி
பதினாயிரம் பேர்களில் சிறந்தோர்

2. என் சஞ்சலங்கள் நீங்க, என் பாவம் மா அன்பாய்
சுமந்து அவர்தம் ஜீவனை விட்டார்;
நான் யாவையும் வெறுத்தேனே என் நேச மீட்பர்க்காய்
அவர் ஒருபோதும் கைவிடமாட்டார்;
லோகம் என்னை வெறுத்து சாத்தான் சோதித்தாலும்
மீட்பரே எனக்கு ஜெயம் தருவார்! - அவர்

3. கர்த்தாவின் சித்தத்துக்கு கீழ்ப்படிவேனானால்,
எல்லாத் துன்பங்களையும் நான் சகிப்பேன்;
எனக்குப் பயமென்ன? அவர் என் பங்கானால்!
எந்தன் ஆத்துமத்தின் மன்னா இவரே!
ஜீவ நதிகள் பாயும் சொர்க்கத்தைச் சேரையில்
அவர் திரு முகந்தனை நான் காண்பேன்! - அவர்

*Charles Fry*

## பாடல் 108: பாழ் லோகமே போ

Tune: I want dear Lord - 426

1. பாழ் லோகமே போ, அற்பக் குப்பையே
சிறையாக்கி என்னை வஞ்சித்தாயே
உன் கீதம் நான் கேட்டுக் கெட்டேன்
நிர் மூடனாகவே
என் ஆத்மமும் உன்னைச் சேவித்ததே

2. பெருக்கினும் உன் இன்பங்களெல்லாம்
ஓர் ஆன்மத்தைத் தேற்றா அற்பப்புல்லாம்
மெய்யின்பமாம் என் சொந்தமாம்
மோட்சப் பிரயாணி நான்
பாலும் தேனும் கலந்து அங்கென்றும் ஓடுமாம்

3. ஆச்சரியமே இயேசுவின் வேண்டுதல்
ஆம் மெய்யாய் நான் கிருபை பெறுதல்!
மெய் தத்தத்தால் வேண்டுதலால்
என் ஆசை சித்திக்கும்!
அவர் இரத்தம் என்னைப் புதுப்பிக்கும்

4. விழித்திடு துரிதம் உள்ளதே!
அதோ நீ கேள் தேவ எக்காளமே!
வெற்றி பெற மோட்சம் சேர
மெய் யுத்தம் செய்திடு;
மீட்பர் சாட்சி நீ எங்கும் பாடிடு

## பாடல் 109: வானம் பூமி யாவற்றிலும்

### Jesus the name high over all - 60

(Tune 44 or 49 of ESB)

1. வானம் பூமி யாவற்றிலும்
இயேசு மேலானவர்
மனிதர் தூதர் பேய்தானும்
அவர் முன் விழுவார்

பல்லவி

வேறெந்த வாக்குவாதமும்
எங்களுக்கில்லையே!
இரட்சகர் உயிர் விட்டது
எந்தனுக்காகவே

2. பாவியின் பயம் யாவையும்
நீக்கும் நாமம் இது
நரகத்தண்டனையையும்
தொலைத்திடும் இது - வேறெந்த

3. பாவச் சங்கிலி யாவையும்
தறிப்பார் எனக்கேசு
தீய சாத்தான் தலையையும்
நசுக்குவார் இயேசு - வேறெந்த

4. பாவத்தில் மாளும் யாவர்க்கும்
உயிர் அளிப்பாரே;
பெலனற்ற ஆத்மாவுக்கும்
சக்தி கொடுப்பாரே - வேறெந்த

5. என் மரணப்படுக்கையில்
இயேசென்ற நாமத்தை
பிரஸ்தாபிக்கும் சந்தோஷத்தில்
அடைவேன் நித்திரை - வேறெந்த

## பாடல் 110: என் பரம பிதா

My Father is rich in houses and lands - 354

(Tune 351 of ESB)

1. என் பரம பிதா அதிகாஸ்திபன்
பூலோக வஸ்துக்கள் அவர் சொந்தமாம்;
வெள்ளி, பொன், முத்துக்கள் இரத்தினக் கற்களும்
சொல்லொண்ணா செல்வங்கள் எல்லாம் எந்தன் பங்கே!

பல்லவி
நானோர் இராஜ புத்ரன் (புத்ரி)
நேச இயேசுவுடன்
நானோர் இராஜ புத்ரன் (புத்ரி)

2. தேவ சுதன் இயேசு மானிட மீட்பர்
பரதேசியாய்த் திரிந்து மரித்தார்;
இப்போ மோட்சத்தில் பொற் கிரீடாதிபர்
எனக்கும் சாவின் பின் மோட்சம் தந்திடுவார் - நானோர்

3. நான் துஷ்டப் பிள்ளையாய்த் திரிந்தேன் சின்னாள்
பாவத்தில் பிறந்து, பாவி அலைந்தேன்
தேவ மக்களில் இப்போ நான் ஒராள்
பரலோகத்தின் பங்கையும் அடைந்தேன்! - நானோர்

4. வனமோ, குடிலோ? எல்லாம் ஒன்றுதான்,
மேலே எனக்கோர் மாளிகை ஆயத்தம்!
இங்கே பரதேசி! என்றும் பாடுவன்!
அங்கே சத்தியன் நானோர் இராஜ புத்ரன் (புத்ரி) - நானோர்

*Hattie Buell*

## பாடல் 111: நித்யரே! உம்மைப் பற்றினேன்

My heart is fixed - 356 (Tune 231 of ESB)

1. நித்யரே! உம்மைப் பற்றினேன்
   என் தேவே!
   மாறாத செல்வமாய்க் கொண்டேன்
   கிறிஸ்துவே
   என் சற்குருவே இராஜாவே!
   ஏழைக்கு இரட்சை தந்தீரே!
   பாடித்துதிப்பேன் என்றுமே!
   கிறிஸ்துவே!

2. பொன் வெள்ளி மற்றோர் தனமே,
   கிறிஸ்துவே!
   மாறாத செல்வம் எனக்கே
   கிறிஸ்துவே!
   உன் பொன் வெள்ளி அழிந்திடும்
   உன் கீர்த்தியும் ஒழிந்திடும்
   ஆனால் என் செல்வம் ஓங்கிடும்
   கிறிஸ்துவே!

3. சௌக்கியமோ தீரா நோயிலும்
   கிறிஸ்துதான்!
   செல்வமோ தரித்திரத்திலும்
   கிறிஸ்து தான்!
   இப்பூவை விடும் அந்நாளில்
   சாவின் நதி கடக்கையில்
   மோட்ச லோகத்திற் கேகையில்
   கிறிஸ்துதான்!

4. இராப்பகல் எவ்விடத்திலும்
   கிறிஸ்துதான்
   ஜெபம் கீதம் போதிப்பிலும்
   கிறிஸ்துதான்!
   துன்பத்திலென தின்பமும்,
   ஆறுதலும் என் கீதமும்
   ஆதி அந்தம் எந்நேரமும்
   கிறிஸ்துதான்!

*Richard Jukes*

## பாடல் 112: இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்

Blessed Assurance - 310

1. இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவ குமாரன் இரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்

பல்லவி

இதென் கெம்பீரம்! இதென் கீதம்!
மீட்பரைப் பாடிப் போற்றிடுவேன்!
இதென் கெம்பீரம்! இதென் கீதம்
இயேசு என் நேசர் பாடிடுவேன்

2. அன்பு பாராட்டி காப்பவராய்
எந்தனைத் தாங்கிப் பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்றும் நீங்காமல் பாதுகாப்பார் - இதென்

3. மெய் சமாதானம் ரம்மியமும்
தூய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்துவிட்டார்
விண்ணிலும் சேர்ந்து வாழச் செய்வார்! - இதென்

*Fanny Crosby (1720 - 1915)*

## பாடல் 113: ஓர்போதும் கைவிடார்

(Tune: Kind words can neve die)

1. ஓர்போதும் கைவிடார்
இதை நம்பு;
உன்னைத் தாங்கிக் கொள்வார்
ஆண்டவரை!
போர் மும்முரித்தாலும்
மாற்றான் சோதித்தாலும்
பயம் வேண்டாம் நம்பு!
என்றாரவர்

பல்லவி

இயேசென்னைக் கைவிடார்
நான் நம்புவேன்

2. உறுதியாய் நில்லு
மீட்பர் போதும்!
உண்மையாய் முன் செல்லு
அவர் உன் கோன்!
யுத்தம் முடிந்தபின்
தூதர் உன்னைச் சூழ்ந்து
உன்னை மோட்சம் சேர்த்து
பாக்யம் ஈவார்! - இயேசென்னை

## பாடல் 114: இயேசுவை ஏன் நேசிக்கிறேன்

Would you know why I love Jesus - 404

(Tune: This is why)

1. இயேசுவை ஏன் நேசிக்கிறேன்
ஏன் என்னில் அன்பாயிருக்கிறார்?
ஏனெனில் என் நேச மீட்பர்
என் பாவநிவிர்த்தி செய்திட்டார்

பல்லவி
ஆகையால் நான் நேசிக்கிறேன்
அன்பு செலுத்துகிறேன்
என் மீறுதல்கள் மன்னித்தார்
வெண்மையாய்க் கழுவினார்

2. இயேசுவை ஏன் நேசிக்கிறேன்
ஏன் என்னில் அன்பாயிருக்கிறார்?
ஏனெனில் இயேசுவின் இரத்தம்
இரட்சித்து சுத்திகரிக்குது

3. இயேசுவை ஏன் நேசிக்கிறேன்
ஏன் என்னில் அன்பாயிருக்கிறார்?
ஏனெனில் சோதனையினூடே
சக்தியூட்டி ஆதரிக்கிறார்

4. இயேசுவை ஏன் நேசிக்கிறேன்
ஏன் என்னில் அன்பாயிருக்கிறார்?
ஏனெனில் போராட்டத்திலும்
இயேசு ஜெயம் தருகிறார்

5. இயேசுவை ஏன் நேசிக்கிறேன்
ஏன் என்னில் அன்பாயிருக்கிறார்?
ஏனெனில் நண்பர் மீட்பராய்
அவர் என்றென்றுமாயிருப்பார்

*Translated by: Daniel J. Raj*

## பாடல் 115: இரட்சகரை நேசிப்போரே

Come comrades dear – 312 (Tune 464 of ESB)

1. இரட்சகரை நேசிப்போரே!
வாருங்கள் சகோதரரே!
அவரைப் பின் செல்வோம்;
சரீர துக்கம் துன்பமும்
மேல் வீட்டில் மகா இன்பமாம்!
ஆகையால் சகிப்போம்

பல்லவி
ஜீவிக்கிறார் என் மீட்பர்!
என் மீட்பர் ஜீவிக்கிறார்

2. ஜீவாமிர்தம் குடிக்கிறோம்
மா இன்பத்தை ருசிக்கிறோம்
இயேசுவின் நேசமே!
இவ்வின்பம் மா திரட்சியாய்
பாயுதெமக்குப் பூர்த்தியாய்!
பருகி  முன் செல்வோம் - ஜீவிக்கிறார்

3. தேவ புரி சேரும் போது
சிங்காசனம் சூழும்போது
இன்பங் கொண்டாடுவோம்!
இயேசு தன் வீரர்களண்டை,
ஏகி வற்றாத ஊற்றண்டை
நடத்தி ஆள்வாரே! - ஜீவிக்கிறார்

4. ஆமென்! ஆமென்! என்று சொல்வேன்
பரத்தில் உம்மைச் சந்திப்பேன்;
அங்கோர் வீடடைவேன்!
இதோ எனதெல்லாம் தந்தேன்
அதோ மோட்சத்தில் சந்திப்பேன்
அங்கே பிரிந்திடோம் - ஜீவிக்கிறார்

## பாடல் 116: இயேசு என் மீட்பர் சண்டாளருக்காய்

(Seeking for me - for me)

1. இயேசு என் மீட்பர் சண்டாளருக்காய்
பூமியிற் பிறந்தார் பாலகனாய்!
நீச மா பாவியைக் கருணையாய்
தேடிவந்தார் - வந்தார்!

பல்லவி
தேடிவந்தார் - வந்தார்;
தேடிவந்தார் - வந்தார்;
நீச மா பாவியைக் கருணையாய்,
தேடிவந்தார் - வந்தார்

2. பாவ மா பாரத்தை நீக்கிப் போட்டார்;
தீவினை போக்கவும் பாடுபட்டார்,
இயேசுவைப் போல் வல்ல இரட்சகர் யார்?
உயிரைத் தந்தார் - தந்தார் - தேடி

3. சிறியேன் பாவத்தின் மாய்கையினால்
புத்தியில்லாமலே அலையுங்கால்
நீசனை நினைத்து நேசித்ததால்
இரட்சை செய்தார் - செய்தார் - தேடி

4. இயேசு என் மீட்பர் வந்தருளுவார்;
வானத்தினின்றவர் இறங்குவார்!
மாட்சிமையோ டென்னைச் சேர்த்துக்கொள்வார்
வாழச் செய்வார் - செய்வார் - தேடி

*E.E Hasty*

## பாடல் 117: ஏதென் பாவம் நீக்கிடும்

What can wash away my sin - 306

(Tune 328 of ESB)

1. ஏதென் பாவம் நீக்கிடும்
இரட்சகரின் இரத்தந்தானே!
ஏது சுத்தமாக்கிடும்?
இரட்சகரின் இரத்தந்தானே!

பல்லவி
மெய்யாம் ஜீவநதி!
பாவம் போக்கும் நதி!
வேறே நதியில்லை
இரட்சகரின் இரத்தந்தானே!

2. என்னைச் சுத்திகரிக்கும்
இரட்சகரின் இரத்தந்தானே!
மன்னிப்பெனக்களிக்கும்
இரட்சகரின் இரத்தந்தான! - மெய்யாய்

3. ஏதும் பாவம் போக்குமோ?
இரட்சகரின் இரத்தந்தானே!
என் கிரியை செல்லுமோ?
இரட்சகரின் இரத்தந்தானே! - மெய்யாய்

4. அல்லேலூயா பாடுவேன்,
இரட்சகரின் இரத்தந்தானே!
ஆனந்தம் புகழுவேன்,
இரட்சகரின் இரத்தந்தானே! - மெய்யாய்

*Robert Lowry*

## பாடல் 118: என் பாவம் சாபம் நோவும் யாவுமே

I left it all with Jesus long ago - 333

(Tune 675 of ESB)

இராகம்: என்னுள்ளத்தை மீட்பர்க்கு - 261

1. என் பாவம் சாபம் நோவும் யாவுமே
இயேசுவிடம் வைத்தேன் முன்னமே;
சிலுவையில் இயேசுவைக் கண்டேன்!
எனக்காய் அப்பாடென்றுணர்ந்தேன்;
நீங்கிற்றே என் பாவப் பாரமே உடனே!

2. நான் இயேசுவிடம் யாவும் வைக்கிறேன்
மோசம் துன்பம் நேர்ந்தால் நோக்குவேன்;
நெஞ்சின் நோவை மாற்ற அறிவார்;
கண்ணீர் சொரிந்தாலும் துடைப்பார்;
வல்லவரில் சார்ந்தால் ஜெயிப்பேன்! தேற்றுவேன்!

3. எந்நாளும் மீட்பர் பேரில் சாருவேன்
என்ன நேரிட்டாலும் நம்புவேன்
அன்பின் மார்பில் சாய்ந்து இன்பமாய்
சமாதானம் பெற்று பூர்த்தியாய்
மீட்பரோடு தங்கல் இன்பமே! மோட்சமே!

4. உன் இயேசுவிடம் யாவும் வைத்திடு
ஒன்றும் மறைக்காமல் சொல்லிடு;
லோகம் யாவும் தாங்கி நிற்கிறார்!
ஜீவன் சாவு யாவும் ஆள்பவர்!
உன்மேல் வாஞ்சையாக நிற்கிறார்! வந்து பார்

*Elliss H. Willis*

## பாடல் 119: குருசின் மேல் குருசின் மேல்

1. குருசின் மேல் குருசின் மேல் காண்கின்றதாரிவர்?
பிராணநாதர் பிராணநாதர் என்பேர்க்காய் சாகின்றார்!

2. பாவத்தின் காட்சியை ஆத்மமே காணுவாய்!
தேவ குமாரன் மா சாபத்தில் ஆயினார்!

3. இந்த மா நேசத்தை எத்தனை நாள் தள்ளினேன்!
இம்மகா பாவத்தை தேவரீர் மன்னிப்பீர்!

4. பாவத்தை நேசிக்க நானினிச் செல்வேனோ?
தேவனின் பிள்ளையாய் ஜீவிப்பேன் நானிதோ!

5. கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் நேர்ந்தாலும்
குருசதின் காட்சியை தரிசித்துத் தேறுவேன்

6. சத்ருக்கள் தூஷணம் பேசியே நிந்தித்தால்,
நித்தமும் சிலுவையின் நேசத்தை சிந்திப்பேன்

7. பாவத்தின் சோதனை கோரமாய் வந்திடில்
ஆவலாய் சிலுவையின் காட்சியை சிந்திப்பேன்

8. சூறா வளியைப் போல் சூழ்ந்திடும் ஆபத்தில்,
சிலுவையின் சிநேகத்தைச் சாது நான் நோக்குவேன்

9. சத்துரு சேனைகள் சூழ்ந்திடும் வேளையில்
சிலுவையில் காண்கின்ற சிநேகத்தை சிந்திப்பேன்

10. இம்மகா சிநேகத்தை ஆத்மமே சிந்திப்பாய்!
இம்மானுவேலே! நீர் ஏழையை சிநேகித்தார்

## பாடல் 120: ஆனந்தமுண்டெனக்கானந்தமுண்டு

பல்லவி

ஆனந்த முண்டெனக்கானந்தமுண்டு - என்
இயேசு மகாராஜா சந்நிதியில்

சரணங்கள்

1. இந்த புவி ஒரு சொந்தம் அல்ல என்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டுத் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும் - ஆனந்தம்

2. கர்த்தாவே நீர் எந்தன் காருண்ய கோட்டையே!
காரணமின்றி கலங்கேனே யான்
விஸ்வாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே! - ஆனந்த

3. என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்?
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது;
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெயகீதம் பாடி மகிழ்ந்திடலாம்! - ஆனந்த

4. கூடாரவாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும், நாடென்றும் சொல்லலாமோ?
கை வேலையல்லாத வீடொன்றை மேலே நான்
செய்வேன் என்று இயேசு போகலையோ? - ஆனந்த

5. துன்பங்கள், தொல்லை, இடுக்கண், இடர், இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையை
துன்பத்தினூடே அனுப்பிடுவார்! - ஆனந்த

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்!
ஏழை வெகுவாய் கலங்குறேனே;
என் நேசர் தன்முக ஜோதியே யல்லாமல்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை - ஆனந்த

## பாடல் 121: வள்ளால் உம்மைத் தேடிதேடி

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ராகம்

பல்லவி

வள்ளால் உம்மைத் தேடிதேடி வாறேனையனே!

அனுபல்லவி

தள்ளாடும் என் நெஞ்சைத் தேற்றி
தாங்கும் மெய்யனே

சரணங்கள்

1. என்மேல் கொண்ட உமது நேசம் என்ன நேசமோ!
இந்நேசமே என்னை உம்மோடிழுக்கும் நேசமோ! - வள்ளால்

2. ஐயா! உம்மையல்லாதெனக்கு ஆரும் வேண்டாமே
மெய்யா யுமதண்டை நித்திய ஜீவனுண்டாமே! - வள்ளால்

3. அப்பா! உம்மை அடைய எனக்கு ஆசை பொங்குதே
அடைவேனென நம்பி எந்தனாவி தங்குதே! - வள்ளால்

4. தந்தேனெனை உந்தனுக்குச் சொந்தமாகவே;
வந்தே எனதுள்ளந்தனில் வசியுமென் கோவே! - வள்ளால்

## பாடல் 122: ஆனந்தமே! பரமானந்தமே!

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

சரணங்கள்

1. ஆனந்தமே! பரமானந்தமே! - இயேசு
அண்ணலை அண்டினேன் ஆனந்தமே!
ஞான இரட்சகரென் பாவம் மன்னித்ததால்
ஆனேனவருக்குள்ளானந்தமே! - ஆனந்தமே

2. வீணாகக் காலமும் நான் கழித்தேன் - வழி
தோன்றாமல் நின்றுமே நான் விழித்தேன்!
காணாத ஆடெனைக் கண்டு சுமந்த - என்
காதலன் தோள் எனக்கானந்தமே! - ஆனந்தமே

3. நாடியே பாவத்தைத் தேடியே புரிந்து,
நைந்து கரைந்து மனம் மெலிந்து,
வாடியே தவித்த ஏழை என் பாவத்தை
நாடியே மன்னித்தார் நம்பினேனே! - ஆனந்தமே

4. பாவ வலையிலகப்பட்டுழன்ற - என்
பக்கமே வந்து கரந்தூக்கி,
ஜீவ பாதையில் வழி நடத்தி - நிதம்
தேற்றி வருகிறார் ஆனந்தமே - ஆனந்தமே

5. இந்த நன்றியை நான் மறவேன் - எந்தன்
யாவையும் பூசையாய் நான் படைத்தேன்
அந்தம்வரை இயேசு சுவாமிக்குத் தொண்டனாய்
ஆகவே தீர்மானம் ஆனந்தமே! - ஆனந்தமே

## பாடல் 123: இயேசுவின் இரத்தம் வெண்மையாக்குதே

பல்லவி

இயேசுவின் இரத்தம் வெண்மையாக்குதே!
என் நல் நேசர்

சரணங்கள்

1. பாவியை மீட்கப் பரலோகம் விட்ட - இயேசுவின்

2. லோகத்தின் துன்பத்தை பாவிக்காய்ச் சகித்த - இயேசுவின்

3. பாவியின் பாரங்கள் யாவையும் நீக்கும் - இயேசுவின்

4. பாவத்தால் அதிக வாதைப்பட்டோரை - இயேசுவின்

## பாடல் 124: பாவிக்கு நேசராரே!

இராகம்: பியாகு தாளம்: ஆதி

பல்லவி

பாவிக்கு நேசராரே!
இரட்சண்ய மூர்த்தியாரே! - ஆ இவர்!

சரணங்கள்

1. மாசற்ற தேவனார் மனு அவதாரரே!
பாவியின் பிராண நாதரே!
இரட்சண்ய மூர்த்தியாரே! - ஆ இவர் - பாவிக்கு

2. நெரிந்த நாணல் முறியார், பொரிந்த திரி அவியார்,
நிர்ப்பந்தரைத் தள்ளாரே!
இரட்சண்ய மூர்த்தியாரே! - ஆ இவர் - பாவிக்கு

3. பிரயாசத்தோடே பாரஞ்சுமப்பாரே;
வாரும் இரட்சை ஈவாரே!
இரட்சண்ய மூர்த்தியாரே! - ஆ இவர் - பாவிக்கு

## பாடல் 125: இரட்சிப்பைக் கொண்டு

சரணங்கள்

1. இரட்சிப்பைக் கொண்டு
உச்சிதப் பட்டணம்
பட்சமுடன் செல்லுவோம் - அங்கே
பரலோகப் பங்கை பங்கிட்டுக் கொள்வோம்
பரமனுதவியாலே

2. உலகத்தின் வாழ்வை
பொய்யென்று விட்டு
பரமன் பதத்தைத் தொட்டு - என் ஐயா
பாக்கியம் பெற்றேன்; பாவத்தை விட்டேன்
பரிசுத்தன் பலத்தாலே

3. மறையோனை வெறுத்து
பாவத்தைத் தொடுத்து
மாய வலையிலுட்பட்டு - என் ஐயா
மயங்கித் திரிந்தேன், மருள விழுந்தேன்
மன்னித்துக் கொண்டாரே

4. பாவத்தைச் செய்து
காலத்தைக் கழித்தால்
சாபத்துள்ளாவீரே! - என் ஐயா
பாவத்தின் சம்பளம் மரண மென்றறிந்து
பற்றிடும் ஜீவன் இன்று!

5. இயேசுவின் அழைப்பை
காதினாற் கேட்டும்
கடினமானாலுள்ளம் - பாவி
தப்புவாயோ நீ? தண்டனை அடைவாய்!
தற்பரன் கரத்தாலே

## பாடல் 126: மருந்து கண்டேனே

பல்லவி

மருந்து கண்டேனே - நானொரு
மருந்து கண்டேனே

சரணங்கள்

1. வருத்தும் பிணிகளை வாட்டும் மருந்து
வளர் பெத்லகேமில் வந்த மருந்து
திருச் செயல்களைச் செய்த மருந்து,
தீன தயாபரனாகிய மருந்து! - மருந்து

2. ஆவுகள் கொட்டிலில் பிறந்த மருந்து
அன்பாக மேய்ப்பர் ஆராதித்த மருந்து
பாவம் போக்க இரத்தஞ் சிந்தின மருந்து
பரிசுத்தரான மெஞ்ஞான மருந்து! - மருந்து

3. தீர்க்க தரிசிகள் உரைத்த மருந்து,
தீவினை யாவையும் தீர்க்கும் மருந்து
மூர்க்கர் கையிலகப்பட்ட மருந்து,
மூவரி லொருவரான மருந்து! - மருந்து

4. பிசாசின் தலையை நசுக்கும் மருந்து!
பூரண விடுதலை தந்த மருந்து
கூசாமல் அற்புதஞ் செய்த மருந்து
குருவாகப் புவியிலுதித்த மருந்து! - மருந்து

## பாடல் 127: அல்லேலூயா என்று பாடுவோம்

இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: ஆதி

பல்லவி

அல்லேலூயா என்று பாடுவோம் - இரட்சகர் செய்த
நல்ல மாறுதலைக் கூறுவோம்

அனுபல்லவி

அங்கும் இங்கும் எங்குமாக இரட்சிப்பை எவர்க்கும் சொல்லி
உண்மையாய் நாம் போர் புரிந்து ஊக்கத்துடன் வேலை செய்வோம்

சரணங்கள்

1. பாவியாயலைந்து திரிந்தோம் - அதிசயமாய்
இயேசு இரட்சகரையுங் கண்டோம்;
பாவ ஜீவியம் தவிர்த்து, லோக ஆசையும் வெறுத்து
தாவி வருவோரைச் சுத்திசெய்யும் ஊற்றைக் கண்டுகொண்டோம் - அல்லேலூயா

2. தேவ அன்பின் வெள்ளப்பெருக்கம் - எப்படிப்பட்ட
பாவ வலையையும் அறுக்கும்
ஆவலோடு தேடி வந்தால் போருடை உனக்குடுத்தி
தேவ பட்டயமும் தந்து தீரனாக்குவார் அப்போது - அல்லேலூயா

3. மீட்பர் அன்பால் முன்னே செல்லுவோம், மலைகள் போன்ற
துன்பத்திலும் பயப்பட்டோடோம்
இரட்சிப்பின் நற்பாதையிலே பாவிகளைக் கொண்டு வந்து
சிட்சையடையாமலே நாம் மோட்சபாதைக் கொண்டு சேர்ப்போம் - அல்லேலூயா

## பாடல் 128: என்ன என் ஆனந்தம்!

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!
சொல்லக்கூடாதே!
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே!

சரணங்கள்

1. கூடுவோம் யாவரும் பாடுவோம் நன்றாய்,
மகிழ் கொண்டாடுவோம்
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம் - என்ன

2. பாவங்கள், சாபங்கள், கோபங்களெல்லாம்
பரிகரித்தாரே;
தேவாதி தேவன் எம் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே! - என்ன

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்
கருளின தாலே,
நித்திய சுவாமியைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே - என்ன

4. வெண்ணங்கி, பொன்முடி, வாத்தியம், மேல் வீட்டில்
ஜெயக் கொடியுடனே,
மண்ணுலகில் வந்து விண்ணுலகிற் சென்ற
மன்னனை ஸ்தோத்திரிப்போம் - என்ன

## பாடல் 129: பாவத்தை மன்னித்தாரேசு கிறிஸ்து

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

பாவத்தை மன்னித்தாரேசு கிறிஸ்து என்
பாவத்தை மன்னித்தாரே

சரணங்கள்

1. நிர்ப்பந் தங்கள் பறந்தனவே - என்னுள்ளத்தில்
சற்குணங்கள் பிறந்தனவே - பாவத்தை

2. சங்கீதம் பாடலானேன் - மிக மிக
இங்கிதங் கொண்டாடலானேன் - பாவத்தை

3. மோட்ச இன்பங்களைப் பெற்றேன் - பரத்தின்
மாட்சிபெற வழி கற்றேன் - பாவத்தை

4. நேய த்துடன் என்னில் வந்தார் - மீட்பர்
பேயை வெல்லும் பெலன் தந்தார் - பாவத்தை

## பாடல் 130: என் இயேசு என் பாவம் மன்னித்தார்

பல்லவி

என் இயேசு என் பாவம் மன்னித்தார்
உன் பாவம் அவர் மன்னிக்க வல்லோர்!

சரணங்கள்

1. பின் செல்வேன் என் மீட்பரை என்றும்
முன் செல்வேன் என்று வாக்களித்தாரே! - என்

2. தந்தேன் நான் எனக்குள்ள யாவையும்
வந்தேன் நான் நிலை நின்று போர் செய்ய! - என்

3. துன்பங்கள் நேரிட்டாலும் அஞ்சேன்!
அன்பாக அவர் பாதை காட்டுவார் - என்

4. நில்லாதே ஈரெண்ணத்துடனே,
செல்லாதே உன் உள்ளம் செல் பாதை! - என்

5. தள்ளி வா இம்மை குப்பை என்று
உள்ளத்தை உண்மையாய் தந்திடு! - என்

## பாடல் 131: இயேசு போது மெனக்கேசு

1. இயேசு போது மெனக்கேசு போதுமெனக்
கேசு போது மெனக் கெப்போதும்!
என் இயேசு மாத்திரம் போதுமெனக் கெப்போதும்

2. ஏது நேரத்து மென் பீதியகற்றி சந்தோஷத்தோடே
என்னைக் காத்திட சந்தோஷத்தோடே என்னை நிதம் காத்திட - இயேசு

3. கோர சத்துருவோடு போர் புரிவதற்கு
தைரியம் எனக்கு நல்கிட - நல்ல தைரியம் எனக்கு நிதம் நல்கிட - இயேசு

4. பஞ்சகாலம் வந்து துன்புறும் நேரத்தும்
தஞ்சமவரெனக்கெப்போதும் - தஞ்சமவர்தா னெனக்கு எப்போதும் - இயேசு

5. லோகத்தி லெனக்கு யாதொன்று மில்லாது
வியாகுலப்பட நேரிட்டாலும் - வியாகுலப் பட்டிடவே நேரிட்டாலும் - இயேசு

6. இயேசு உள்ளதினால் கிலேசப்பட்டிடவே
ஏதுமிடையில்லை - நிச்சயம் - ஏதுமிடையில்லை அது நிச்சயம் - இயேசு

# பாடல் 132: எந்தன் சம்பத்தென்று சொல்லவே

இராகம்: அல்லேலூயா வென்று (நாதநாமக்கிரியை) தாளம்: திஸ்ரசாப்பு

பல்லவி

எந்தன் சம்பத்தென்று சொல்லவே - வேறொன் றில்லையே
இயேசு மாத்திரம் சம்பத்தாவாரே!

அனுபல்லவி

சாவை வென்று உயிர்த்தெழுந்தார் - வான லோகமதிற் சென்றார்
பாவியாம் எனக்காய் என்றும் தாதையுடன் யாசிக்கின்றார்

சரணங்கள்

1. குருசிலெனக்காய் மரித்தாரே - க்ரூரவதையாய்
சொர்க்க கானான் சேர்க்கவெனையே
பாவம் நீக்கி சாபம் மாற்றி, சாவின் மேலும் ஜெயம் நல்கி
வேகம் வாறே னென்றுருதி வார்த்தை கூறி ஏறிச் சென்றார் - எந்தன்

2. இயேசுவுக்காய் சர்வ சம்பத்தும் யாகமாய் வைத்து
என்றென்றும் அவரில் நேசமாய்,
இயேசுவுக்காய் வேலை செய்து என் சிலுவையை எடுத்து
பிராண நாதர் சேவையில் என்னாயுளெல்லாம் கழிப்பேனே - எந்தன்

3. உத்தம ஊழியன் என்னும் நான் - அத்தன் முன்பாக
எத்தகைய வெட்கமின்றியே;
பக்தியோடென் அன்பர் முன்பில் ஆனந்த புஷ்பஞ் சொரியும்
பாக்யமேறும் மகோற்சவ வாழ்வுகாலம் வந்திட்டதே - எந்தன்

4. ஆட்டுக்குட்டியாமென் நேசரின் - சாலேம் நகரின்
நாட்டமுரும் வாசம் திட்டமாம்!
லோகமென்னைக் கைவிடினும், தேகம் மெலிந்துருகினும்
துக்கம் சிறிதேனும் கொள்ளேன், இயேசுவையே பின்தொடர்வேன் - எந்தன்

5. எந்தன் தேசம் இப்புவியென்று - அன்யனாம் சாது!
சொந்த தேசம் நாடினேன் நன்று;
திகழுறு சாலேமென்னை மகிழ்வுடன் வரவேற்க
மகிமையாம் வாசல்கள் தம் தலைகளை உயர்த்திடும் - எந்தன்

## பாடல் 133: எத்தனை நாவால் துதிப்பேன்

இராகம்: ஹரிகாம்போதி தாளம்: திஸ்ரசாப்பு

பல்லவி

எத்தனை நாவால் துதிப்பேன் - ஏதும்
அற்ற மா பாவி நான் பெற்ற கிருபைக்காய்!

அனுபல்லவி

பித்தனாம் பேயின் அடிமைத்தனத்தில்
பிடிபட்ட பாவியை மீட்டதற்காக

சரணங்கள்

1. பாவத்தில் ஜனிப்பிக்கப்பட்டேன் - பின்னும்
பலவித ஆங்காரங் கொண்டு நடந்தேன்;
ஆபத்தில் பலமுறை அகப்பட்ட பாவியை
அழித்துப்போடாமலே வைத்ததற்காக - எத்தனை

2. குடிவெறி களியாட்டுச் செய்தேன் - வாயால்
கோட் சொல்லிக் கோபங்கள் மூட்டியே விட்டேன்
அடியேனை மீட்பதற்காகவே இயேசு
அற்புத நாதரைக் கொடுத்ததற்காக - எத்தனை

3. பாதகரோடு சஞ்சரித்தேன் - நாவால்
பரியாசம் பண்ணியே நாட்களைக் கெடுத்தேனே;
தீதான பாதகர் கூட்டத்தை விட்டு
தேவதாசர்களோடு சேர்த்ததற்காக - எத்தனை

4. உலகத்தைப் பலகாலஞ் சுமந்தேன் - பின்னும்
உறவின் முறையாரைச் சிலகாலஞ் சுமந்தேன்
அலகைப்பயல் போட்ட வலை யாதென்றுணர
அடியேனுக்காவியின் அருள்வரம் கொடுத்தீர் - எத்தனை

5. பதினோராம் மணி நேரம் மட்டும் - கெட்ட
பாவி நான் பாவத்தில் தூங்கிக்கிடந்தேன்;
எதிரொலி ஓசைபோல் மனந்திரும்பென்ற
எக்காள சத்தத்தைக் கேட்டு எழுந்த நான் - எத்தனை

## பாடல் 134: அண்ணல் கிறிஸ்தேசையனே

பல்லவி

அண்ணல் கிறிஸ்தேசையனே - அரும்பாவிக்கும்
திண்ணமாய் இரட்சை ஈயும் புண்ணிய புனிதனே!

சரணங்கள்

1. இருண்ட பாவ உளையில் புரண்ட பாவி எந்தனை
திரண்ட தயவால் தூக்கி திரும்ப இந்நிர்ப்பந்தனை
திருவழியில் - அவரருளொளியில் - தினம்
தேற்றி நடத்தி ஆளும் - அண்ணல்

2. மனதுக்கோர் வழிகாட்டி மார்க்க நெறியிலோட்டி
தினம் மறை அமுதூட்டி திருவருள் தனைச் சூட்டி
தினம் காப்பாரே; என்னருள் மேய்ப்பரே - எந்தன்
தேசிகரும் அவரே! - அண்ணல்

3. உண்மையாய் மனம் நொந்து உருகி வரும் பாவிக்கு
ஜென்ம பாவத்தோடவன் கன்மபாவமும் போக்கி
புரிவாரோ - இரட்சை - அவர் நேரே - திவ்விய
குருவாயுதித்தவரே - அண்ணல்

4. பாவியே நீயும் இன்று பரமன் இயேசுவை அண்டு
தாவியுன் மனங்கண்டு தர இரட்சை அங்கே யுண்டு
தவறாதே - மனம் - பதறாதே - நல்ல
தருணமிதை விடாதே - அண்ணல்

## பாடல் 135: இரத்தஞ் சிந்தி நம்மை அவர்

பல்லவி

இரத்தஞ் சிந்தி நம்மை அவர்
முத்தி சேர்க்கப் பிறந்தார்

அனுபல்லவி

நித்தம் அவரோடு வாழ சத்ய வழி திறந்தார்
கர்த்தரே தம் பக்தர் பாவம் மறந்தார்

சரணங்கள்

1. மோசத்துக்குள்ளான என்னை
இயேசு சுவாமி பார்த்தார்;
நாசத்திருந்தோடி வந்த,
நீசனையே சேர்த்தார்,
நேச மீட்பர் பாசமாகக் காத்தார் - இரத்தம்

2. கெஞ்சி வந்த பாவிகட்காய்
தஞ்சமாய் நின்றார்;
மிஞ்சி மோசஞ் செய்யும் அந்த
வஞ்சப் பேயைக் கொன்றார்
கொஞ்சமுமே அஞ்சிடாமல் வென்றார்! - இரத்தம்

3. பொன்னுலகத் தின்பங்களை
என்னுள்ளத்தில் தந்தார்;
தன்னுடன் நற்பங்கு பெற
மன்னர் என்மேல் உவந்தார்;
சின்னப்பட இந்நிலத்தில் வந்தார் - இரத்தம்

4. துன்பம் வரும் வேளையினில்
இன்பமே கொண்டாடுவோம்;
தம்பிரானும் எம்மேல் வைத்த
அன்பின் நேசம் பாடுவோம்;
அம்பரத்தில் நண்பருடன் கூடுவோம்! - இரத்தம்

## பாடல் 136: என்ன செய்குவேன் ஏழையடியேன்

இராகம்: மார்க்கீக ஹிந்தோளம் தாளம்: ஆதி

பல்லவி

என்ன செய்குவேன் ஏழையடியேன்

அனுபல்லவி

அண்ணலேசையா - அற்பனானையா
என்னைப்பொருளாய் - எண்ணினதற்கீடாய்

சரணங்கள்

1. அஞ்ஞானத்தில் தானே - அமிழ்ந்திருந்தேனே!
அகக் கண்கெட்டு - அலைந்தேன் முற்றுமே;
மெஞ்ஞான மூட்டி - வெளிச்சமுங் காட்டி
என்னை இரட்சித்தாய்! இதற்கு நான் ஈடாய் - என்ன

2. மாமிச இச்சை - லோகம் பேராசை
மயக்கங் கொண்டு - மாசில் புரண்டு
தீமைபுரியச் சென்றோனை வலியத்
திருப்பி இழுத்த - செயலிதற்கு ஈடு - என்ன

3. செத்த நான் பிழைக்க - ஜீவனை அளிக்க
திவ்ய நாதனே - தேவ சுதனே
மெத்தப் பாடுபட்டு - மீட்க என்னையே
சித்தம் வைத்தாயே - சேயன் இதற்கு ஈடு - என்ன

4. ஆத்மா தேகம் ஆவி - அனைத்தும் இப்பாவி,
மீட்பா இயேசுவே! மேசியா கோவே!
பூர்த்தியாகவே படைத்தேனே தேவே!
ஏற்றுக்கொள்ளையா - ஏழையைக் காரையா! - என்ன

## பாடல் 137: நித்ய ஜீவன் எனக்குண்டு

'பாவத்தின் பலன் நரகம்' என்ற மெட்டு

1. நித்ய ஜீவன் எனக்குண்டு
நியாயத்தீர்ப்பினிலே;
என் பயம் எல்லாம் நீங்கிற்று,
விஸ்வாசித்தபோதே

பல்லவி

துன்பம் எல்லாம் சகிப்போம்
இன்னும் கொஞ்சக் காலந்தான்;
மோட்சம் போவோம் சீக்கிரத்தில்!

2. உலகம் என்னைப் பகைத்தால்
தைரியமாய் போர் செய்வேன்;
சோதனையெல்லாம் வெல்லுவேன்,
தேவ வல்லமையால் - துன்பம்

3. துன்பம் துக்கம் மிகுந்தாலும்
அவரை விட்டிடேனே
என் மீட்பரை நான் சந்திக்க
மோட்சம் நான் ஏகுவேன் - துன்பம்

4. உன் பாவத்தை நீ உணர்ந்து
பரமனண்டை வாராயோ;
உன் பாவம் அவர் போக்குவார்
பரிசுத்தமாக்குவார் - துன்பம்

## பாடல் 138: ஜீவ தண்ணீரண்டை

Once I was far in sin - 374

1. ஜீவ தண்ணீரண்டை - இயேசு கொண்டு சேர்ப்பார்,
பாவத்தில் ஜீவித்த என்னை;
அங்கே பார்வை பெற்றேன்
வெளிச்சம் காண்கிறேன்
ஜீவ தண்ணீர்களண்டையில்

பல்லவி

ஜீவ தண்ணீர்களண்டையில்
ஜீவ விருட்சமும் உண்டாம்
வெளிச்சத்தில் வாழ்ந்து
போராடுவேன் என்றும்
ஜீவ தண்ணீர்களண்டையில்

2. இயேசு தான் என் சொந்தம் வேறாரும் வேண்டாமே
ஜீவ தண்ணீர்களண்டையில்
அவர் என்னைத் தாங்கி இரட்சிப்பார் என்றுமே
ஜீவ தண்ணீர்களண்டையில் - ஜீவ

3. இங்கே யுத்தம் நின்று அங்கிளைப்பாறுவேன்
ஜீவ தண்ணீர்களண்டையில்
சுத்தரோடு நின்று - தூதர்பண் பாடுவேன்
ஜீவ தண்ணீர்களண்டையில் - ஜீவ

*James C. Bateman*

## பாடல் 139: துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக் கழித்தாலும்

When upon life's billow you are tempest - tossed - 396

1. துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக் கழித்தாலும்
இன்பம் இழந்தேன் என்றெண்ணிச் சோர்ந்தாலும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

பல்லவி

எண்ணிப்பார் நீ பெற்ற பாக்யங்கள்
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்,
ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்,
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

2. கவலை, சுமை, நீ சுமக்கும் போது
சிலுவை உனக்குப் பளுவாகும் போது,
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும் - எண்ணிப்பார்

3. அகோரத் துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும்
அதைர்யப்படாதே கர்த்தர் உன் பக்கம்
அநேகமாம் நீ பெற்ற சிலாக்கியங்கள்
தூதர் உன்னைத் தேற்றுவார் பிரயாணத்தில் - எண்ணிப்பார்

*Johnson Oatman*

## பாடல் 140: ஜீவ யாத்ரை சோர்ந்து போவதேன்

Why should life a weary journey seem? - 400

1. ஜீவ யாத்ரை சோர்ந்து போவதேன்?
   இயேசு என் தீபம் கீதம்;
   என் சிலுவை பார மாவதேன்?
   இயேசு என் தீபம் கீதம்;
   பாதை யெல்லாம் அன்பாய் நிறைத்து,
   மகிமையால் நிரப்பிடுவார்;
   கிறிஸ்துவே என் நித்ய தோழனாம்,
   இயேசு என் தீபம் கீதம்;

பல்லவி

இயேசு என் தீபம்,
இயேசு என் கீதம்;
இயேசு என் தீபம் கீதம்;
இயேசு என் தீபம்,
சேவிப்பேன் அவரை,
இயேசு என் தீபம் கீதம்

2. எதிரிகள் என்னை தாக்கினும்,
   இயேசு என் தீபம் கீதம்;
   பாதைக்கு வலைகள் வீசினும்,
   இயேசு என் தீபம் கீதம்;
   கிறிஸ்துவே வழி நடத்துவார்,
   அவர் போரில் முன்னே செல்லுவார்
   என் நம்பிக்கை எல்லாம் அவரே,
   இயேசு என் தீபம் கீதம் - இயேசு

3. திறந்த வாசலை சேரையில்,
   இயேசு என் தீபம் கீதம்;
   ஜீவிய யாத்திரை முடிவில்
   இயேசு என் தீபம் கீதம்;
   காலம் எல்லாம் கீதம் இதுவே
   மீட்டார் அதால் அன்பு கூருவேன்;
   ஜீவன் தந்தார் என்றும் நேசிப்பேன்
   இயேசு என் தீபம் கீதம் - இயேசு

*Emma Johnston*

## பாடல் 141: அற்புத அற்புதமான ஓர் நாள்

O! What a Wonderful wonderful day - 371

1. அற்புத அற்புதமான ஓர் நாள்
நான் மறவாத நல் நாள்
இருளில் நான் அலைந்து போனபின்
இரட்சகரை சந்தித்தேன்;
என்ன மா இரக்கமான நண்பர்.
என் தேவையை சந்தித்தார்;
நிழலை நீக்கி இருளை அகற்றினார்;
இன்பமாய் இதைச் சொல்வேன்!

பல்லவி

மோட்சம் இறங்கி மகிமையால் நிரப்பிற்று
சிலுவையண்டை இயேசு சுகமாக்கினார்
இரவை பகலாக்கினார், என் பாவத்தை கழுவினார்;
மோட்சம் இறங்கி மகிமையால் நிரப்பிற்று!

2. நான் பிறந்தது தேவ ஆவியால்
தெய்வீகக் குடும்பத்தில்
கல்வாரி அன்பால் நீதிமான் ஆனேன்
என்ன மேன்மை என் நிலை!
காரியம் சீக்கிரமாய் நடந்தது,
பாவியாய் வந்த போது;
கிருபையாய்க் கொடுத்தார் நான் அதை எடுத்தேன்
என்னை மீட்டார் தோத்திரம் - மோட்சம்

3. நிலைக்கும் நம்பிக்கை என்னிலுண்டு
காலமும் கடந்த பின்;
மோட்சத்தில் என்றென்றுமே ஜீவிப்பேன்;
வாசஸ்தலம் அங்குண்டு!
அற்புதமான அந்நாள் நிமித்தம்
குருசை விசுவாசித்தேன்;
நித்திய ஐசுவரியம் மேலான பாக்யங்கள்
அவர் கையாலே பெற்றேன் - மோட்சம்

*(தமிழ் மாகாண முதல் மாநாடு சிறப்புக்கீதம்)*

## பாடல் 142: தேவ தாசரே எழுந்து

Saints of God - 381 (Tune 236 or 781 of ESB)

1. தேவ தாசரே எழுந்து
போற்றிடுங்கள்!
வான சேனை மகிழ்ந்திட
போற்றிடுங்கள்!
மோட்சப் பிரயாணத்தில்
ஆர்ப்பரித்துப் போற்றிடுங்கள்!
மெய்யா யுங்களுள்ளத்தில்
போற்றிடுங்கள்!

2. பாவப் பாரம் நீக்கிவிட்டார்
போற்றிடுங்கள்!
அல்லேலூயா நம்மை மீட்டார்
போற்றிடுங்கள்!
கல்வாரியிலே மரித்தார்
எல்லோரும் ஈடேறிடவே
ஆச்சர்யமா யுயிர்த்தெழுந்தார்
போற்றிடுங்கள்!

3. அல்லேலூயா நாம் வெல்கிறோம்
போற்றிடுங்கள்!
மீட்பராலே முன் செல்கிறோம்
போற்றிடுங்கள்!
போர் செய்வோம் நிலைநின்று
நம்பிக்கையால் பேயை வென்று
உற்சாகத்தோடு முன் சென்று
போற்றிடுங்கள்!

## பாடல் 143: நல் மீட்பர் இயேசு நாமமே

How sweet the name of Jesus sounds - 58

(Tune 50, 87, 94 and 571 of ESB)

1. நல் மீட்பர் இயேசு நாமமே
என் காதுக்கின்பமாம்;
புண்பட்ட நெஞ்சை ஆற்றவே
ஊற்றுண்ட தைலமாம்!

பல்லவி

இயேசுவின் நாமம் நேசிக்கிறேன்!
நேசிக்கிறேன் நேசிக்கிறேன் நேசிக்கிறேன்!
இயேசுவின் நாமமே!

2. அந்நாமம் நைந்த ஆவியை
நன்றாகத் தேற்றுமே;
துக்கத்தால் தொய்ந்த உள்ளத்தைத்
திடப்படுத்துமே! - இயேசுவின்

3. பசித்த ஆத்மாவுக்கு
மன்னாவைப் போலாகும்
இளைத்துப் போன ஆவிக்கு
ஆரோக்யம் தந்திடும்! - இயேசுவின்

4. என் இரட்சகா என் கேடகம்!
என் கோட்டையும் நீரே!
நிறைந்த அருள் பொக்கிஷம்
அனைத்தும் நீர் தாமே! - இயேசுவின்

5. என் ஜீவன் போகும் நேரமும்
உன் நாமம் பற்றுவேன்;
எப்போதும் அதைப் பாடவும்
விண் கரை ஏறுவேன்! - இயேசுவின் *John Newton (Verses)*

## பாடல் 144: இயேசு நாமம் கொண்டு செல்லு

Take The Name of Jesus With You - 66

(Tune: Precious Name - 394)

1. இயேசு நாமம் கொண்டு செல்லு
துன்பம் துயரமுள்ளோரே
இன்பம் ஆறுதல் தருமே
எங்கிலும் எடுத்து செல்லு

பல்லவி
இனிய நாமமே
நம் நம்பிக்கை பேரானந்தம்

2. இயேசு நாமம் கொண்டு செல்லு
தற்காக்கும் கேடயம் போல்
சோதனை உன்னை சூழ்ந்திடில்
ஜெபி, சுவாசி அந்நாமம் - இனிய

3. விலையேறப் பெற்ற நாமம்
ஆன்மாவை மகிழ்விக்கும்
கரத்தால் தழுவும் போது
நாவு துதிபாடிடும் - இனிய

4. இயேசு நாமத்திலே அவர்
பாதம் விழுந்து வணங்கும்
பரலோக இராஜனை நாம்
வாழ்த்துவோம் நம் முடிவில் - இனிய

*Lydia Baxter (1809 - 1874)*

*Translated by J. Daniel Raj*

## பாடல் 145: ஆணி முத்தைக் கண்டேனே

I've found the pearl - 346

(Tune 67 or 100 of ESB)

1. ஆணி முத்தைக் கண்டேனே நான்!
மகிழ் கொள் உள்ளமே;
இரட்சகா உம்மைப் போற்றுவேன்,
இரட்சண்ய மூர்த்தியே!

2. சர்வ சக்ராதிபதியே!
இராஜாதி இராஜாவே!
நேர் பாதை காட்டும் தீபமே!
நீதியின் ஜோதியே!

3. தேவ சிங்கார வனத்தின்
ஜீவ விருட்சமே!
பாவத்தை நீக்கும் இரட்சகன்
ஷாரோன் ரோஜாப் பூவே!

4. சுவர்க்கத்தின் ஜோதி நாயகா
என் திவ்யாமிர்தமே
என் ஆதியே என் அந்தமே
என் ஜீவனும் நீரே

*John Mason*

## பாடல் 146: எல்லாருக்கும் மா உன்னத

All hail the power of Jesus' name - 56

(Tune 114 of ESB)

1. எல்லாருக்கும் மா உன்னத
கர்த்தாதி கர்த்தரே
மெய்யான தேவ மனிதன்!
நீர் வாழ்க இயேசுவே!

2. விண்ணில் ப்ரதானியான நீர்
பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்!
நீர் வாழ்க இயேசுவே!

3. பிசாசு, பாவம், உலகம்
இச் சத்துருக்களை
அழிந்து போக மிதியும்
நீர் வாழ்க இயேசுவே!

4. நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்!
நீர் வாழ்க இயேசுவே!

5. விண்ணோர்களோடும் மண்ணுளோர்
என்றைக்கும் வாழ்கவே
பரம வாசல் திறந்தோர்
நீர்! வாழ்க, இயேசுவே

## பாடல் 147: ஸ்தோத்திரிக்கிறேன் நான் ஸ்தோத்திரிக்கிறேன்

1. ஸ்தோத்திரிக்கிறேன் நான்
ஸ்தோத்திரிக்கிறேன் - எங்கள்
சர்வ இயேசு நாயகனை
ஸ்தோத்திரிக்கிறேன்

2. இரட்சிப்பைத் தந்தவனை
ஸ்தோத்திரிக்கிறேன் - திவ்விய
இலட்சணங்களுடையோனை
ஸ்தோத்திரிக்கிறேன்

3. அற்பனை ஆசிப்போனை
ஸ்தோத்திரிக்கிறேன் - நிதம்
அற்புதமாய்க் காப்பவனை
ஸ்தோத்திரிக்கிறேன்

4. பேயை வெல்ல வல்லவனை
ஸ்தோத்திரிக்கிறேன் - நித்திய
பேரின்ப நாயகனை
ஸ்தோத்திரிக்கிறேன்

5. பாவியின் அடைக்கலத்தை
ஸ்தோத்திரிக்கிறேன் - பாவ
சாவின் கூரொடித்தவனை
ஸ்தோத்திரிக்கிறேன்

6. பெத்தலேகம் பாலகனை
ஸ்தோத்திரிக்கிறேன் - எங்கள்
உத்தம இம்மானுவேலை
ஸ்தோத்திரிக்கிறேன்

## பாடல் 148: போற்றித் துதிப்போமே

இராகம்: சங்கராபரணம் தாளம்: திஸ்ரஏகம்

பல்லவி

போற்றித் துதிப்போமே - இரட்சகனை
ஏற்றித் துதிப்போமே

அனுபல்லவி

போற்றித் துதித்துமே ஏற்றித் துதித்துமே
பொற்பரனை எங்கள் தற்பரனை நாம்

சரணங்கள்

1. சுவர்க்கத்தை விட்டவனை, புவியினில் வந்து உதித்தவனை
பாவிகளின் பெரும் பாவந்தனைப் போக்கப்
பாரினில் பாலகனாக வந்தவனை - போற்றி

2. பெத்லேகில் உதித்த பெரும் பாவிகளின் நேயனை
கெத்சமனே தனில் பாவிகளுக்காகக்
கண்ணீர் விட்டு ஜெபம் செய்தவனை நாம் - போற்றி

3. கல்வாரியின் அரசை எங்கள் சபைத்தலையாம் இயேசையனை
ஈனக் குருசிலறையுண்டிருந்த நல்
இயேசையனை, எங்கள் மேசியாவை, நாம் - போற்றி

4. பெந்தெகொஸ் தென்னாளில் ஒன்றாய்க் கூடிப் பிரார்த்தித்த அந்நாளில்
வல்லமையான விதமாக ஆவியை
வருஷித்து ஆசீர்வதித்தவனை நாம் - போற்றி

## பாடல் 149: அல்லேலூயா ஸ்தோத்திரம்

பல்லவி

அல்லேலூயா ஸ்தோத்திரம்
அல்லேலூயா ஸ்தோத்திரம்
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ஸ்தோத்திரம்

சரணங்கள்

1. பாவ விமோசனா சாபத்தண்டனை நாசனா
பாவிகளின் நேசனா தேவக்கிருபாசனா
ஓசன்னா மன்னா மன்னா உன்னத உன்னதனா - அல்லேலூயா

2. மாசறப் பிறந்தாய் மாட்டகத்தெழுந்தாய்
நேசனாய்த் திரிந்தாய் நீசர்க்குயிர் தந்தாய்
வந்தனம், வந்தனம், வந்தனம் வந்தனமே - அல்லேலூயா

3. மனுடவதாரா, மாசற்ற நற்போதா,
மனம் மாற்றிப் பாவம் போக்கும் கிருபைப் பராபரா!
காராய் நற்சீராய், கர்த்தா, ஆவி தாராய் - அல்லேலூயா

4. எந்தன் ஆத்ம நாயகா! சொந்தமாய் ஜெயித்தவா,
உந்தன் பாதம் பணிந்தேன் உயிர் பிராண நாயகா!
மா ஜீவ தேவா! ஓ!  யேகோவாவே - அல்லேலூயா

## பாடல் 150: ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

1. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
இயேசு சுவாமிக்கு ஸ்தோத்திரமே
தோஷி எனை இரட்சித்த
பரிசுத்தர்க்கு ஸ்தோத்திரமே

2. கோடா கோடித் தூதர்கள்
சபை கூடியே ஆர்ப்பரித்து
பாடி உம்மைத் துதிக்க
நாடி நானும் உம்மைத் துதிப்பேன்

3. சின்னஞ் சிறுவர் கூடி,
இயேசு மன்னவனையே தேடி
உன்னித் துதித்திடவே
உம்மை யானும் துதித்திடுவேன்

4. பரிசுத்தவான்கள் சங்கம்
எங்கள் பார்த்திபன் இயேசுவையே
பாடித் துதித்திடவே
பாவி நானும் துதித்திடுவேன்

5. மூப்பர்கள் சுற்றி நின்று
எங்கள் முன்னவன் இயேசுவையே
ஆர்ப்பரித்துத் துதிக்க
அடியேனும் துதித்திடுவேன்

## பாடல் 151: மனுவேலனே எங்கள் மகிபா, ஸ்தோத்திரம்

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

1. மனுவேலனே எங்கள் மகிபா, ஸ்தோத்திரம்
மனுக்குலத்தோரை மீட்க வந்தாய் ஸ்தோத்திரம்
பரமனே ஸ்தோத்திரம் - உன்னடியார்க்கு
வரம் தர வா ஸ்தோத்திரம் - திரியேகா

2. பெந்தெகொஸ்தென்னும் நாளில் வந்தாய் ஸ்தோத்திரம்
பேதைகட்குன் ஞானம் பகர்ந்தாய் ஸ்தோத்திரம்
பெருமானே ஸ்தோத்திரம் - அடியார்க் கருள்
தருங்கோனே ஸ்தோத்திரம் - திரியேகா

3. சேனையின் தளகர்த்த தேவே ஸ்தோத்திரம்
திரியேக தத்துவத்திறையே ஸ்தோத்திரம்
ஜீவபரா ஸ்தோத்திரம் நின் அடியார்க்கு
திடமளிப்பாய் ஸ்தோத்திரம் - திரியேகா

## பாடல் 152: பரிசுத்த பரனே துதியுமக்கு

பல்லவி

பரிசுத்த பரனே துதியுமக்கு
பரலோகம் விட்டவரே துதியுமக்கு

சரணங்கள்

1. நரர் சிறை விடுக்க, சுரர் புகழ் வெறுத்த
திருமறை முடிவே, துதியுமக்கு
திருச்சித்தம் செய்ய நரரூபாய் வந்தவா
கருணையின் கடலே துதியுமக்கு - பரிசுத்த

2. தலைதானும் வைக்க நிலையின்றித் திரிந்தாய்
நிலையே, நிதியே, துதியுமக்கு
கெத்சமனேயிலதி துயர் கொண்டாய்
அதிசய அன்பே துதியுமக்கு - பரிசுத்த

3. அன்னாவின் மனையில் கன்னத்திலறைய
சின்னப்பட்டவரே துதியுமக்கு
முகத்தினில் துப்பி முதுகினிலடித்த
பகைவர்க்கு மன்னித்தாய், துதியுமக்கு - பரிசுத்த

4. நெடுங்குருசேறி கடுந்துயர் கொண்டு
மடிந்த என் சிரசே, துதியுமக்கு
மரணத்தை வென்ற காரணத்தால் இந்த
தருணத்தில் மிகுந்த துதியுமக்கு - பரிசுத்த

# பாடல் 153: துதிப்பேன் துதிப்பேன் இயேசு தேவனை

பல்லவி

துதிப்பேன் துதிப்பேன் இயேசு தேவனை
அல்லேலூயா பாடி
துதிப்பேன் துதிப்பேன் இயேசு தேவனை

அனுபல்லவி

துதிப்பேன் லோகத்தின் பாவத்தை நீக்கிட
தூயவனாய் வந்த தேவகுமாரனை

சரணங்கள்

1. கருணை நிறைந்த கண்ணுள்ளோரவர்
தம் ஜனத்தின் கூக்குரல்
கருணை கூர்ந்து கேட்கும் காதுள்ளோர்
லோகப் பாவச் சுமைதனை
சிரசுகொண்டு சுமந்தழிக்க வென்றே
குருசெடுத்துக் கொல்கதாவில் சென்றோரை - துதிப்பேன்

2. பொற் குத்துவிளக்கு ஏழு மத்தியிலே
எங்கள் இயேசு நாயகர்
பொற்கச்சை மார்பினில் கட்டி நிற்கிறார்
நிலையங்கி தரித்தோராய்
கற்பிக்குங் காரியம் கவனமாய்க் கேட்டு
சொற்படி செய்வோரை தப்பாமல் மீட்போரை - துதிப்பேன்

3. வழியும் சத்தியமும் ஜீவனும் அவரே!
அவரருகில் வருவீர்;
வழியில் ஆறுதல் செய்பவர் அவரே;
லோக பாவத்தைச் சுமந்தார்;
பழைய சுபாவங்கள் ஒழித்து முற்றுமாய்
அழித்து பக்தரை மோட்சத்தில் சேர்ப்போரை - துதிப்பேன்

4. அல்பா, ஒமேகா, ஆதியும் அந்தமுமே
பரிசுத்தர் யேகோவாவை
அல்லேலூயா வென்று போற்றிப் பாடுவோம்
சர்வ வல்ல பராபரன்
வல்லமையாலே நம் அல்லலெல்லாம் வெல்லும்
நல்லவர் இயேசுவை அல்லும் பகலுமாய் – துதிப்பேன்

## பாடல் 154: வானத்தே யிருந்து இயேசு உதித்தாரே

**பல்லவி**

வானத்தே யிருந்து இயேசு உதித்தாரே
கானகத்திலே சுற்றித் திரிந்தாரே
ஞானமா யுலகத்தில் போதித்தாரே
ஈனமாய் மரித்துயிர்த் தெழுந்தாரே

**அனுபல்லவி**

தேவ குமாரன், பாவியின் நேசன்
பாசன், ஈசன், பாவ நாசன்
சுந்தர ராஜன், அந்தர வாசன்
அந்தன், முந்தன், எந்தன் சொந்தன்

**சரணங்கள்**

1. வேதாளங்கள் நடுங்கி ஓடினதே
பாதாளமும் நடுங்கிக் குலுங்கிற்றே
போதகங்கள் எங்கும் கூறப்பட்டதே
நாதன் இயேசுவால் இரட்சிப்பு வந்ததே
பாவம் பிடித்தவர் சாபங்கள் போக்கி
நீக்கிப் போக்கி நல்லோராக்கி
காவலன் அழைப்புக்கு ஆயத்தமாக்கி
ஆவலோடு தன்னைத் தாழ்த்தி - வானத்தே

2. ஆத்துமத்தைச் சுத்தஞ் செய்து மீட்டாரே
காத்துக் கொள்ளும் வரம் அன்பாய் ஈந்தாரே
சாத்தான்மேல் ஜெயங்கொள்ளச் செய்தாரே
நேர்த்தியான மோட்ச பங்கைத் தந்தாரே
பாவி நீ வந்து இயேசுவைக் கேட்டால்
சாபம் நீக்கி ஆவியூற்றி
தேவனின் கோபம் மேவி வராமல்
காவல் வைத்துக் காத்துக் கொள்வார் - வானத்தே

## பாடல் 155: நாடுங்கள் நாடுங்கள் நாடுங்களே

பல்லவி

நாடுங்கள் நாடுங்கள் நாடுங்களே - புகழ்
பாடுங்கள் பாடுங்கள் பாடுங்களே

அனுபல்லவி

பாடுறவே பரலோக மதை விட்டு
பாரினில் மனுவாய் வந்தவரை

சரணங்கள்

1. நேசமாய்க் காசினி நிந்தை யகற்றிட
பாச மனுவேலன் பாதமுற்று
மாசற்றுலகினில் மானிடனாய் வந்த
இயேசு நாயகனின் நாமமேற்று - நாடுங்கள்

2. பூமிக்கு மேலுள்ள வானத்துக்குமுள்ள
தூரமாய் பாவம் தூர்த்து விட்டு
பூதல வாழ்விலே பீடறச் செய்த
புண்ணியவானான இயேசுவையே - நாடுங்கள்

3. வல்லமை திரித்வ வானவனையே
சொல்லருங் கிருபைப் பிரதாபனையே
துல்லிபத்தில் ஞான தீபனையே! பெரும்
நன்மை யருளும் நம் நாதனையே - நாடுங்கள்

*K.S. Abraham*

## பாடல் 156: இயேசுவையே பாடி ஏற்றிப் புகழ்வோம்

பல்லவி

இயேசுவையே பாடி ஏற்றிப் புகழ்வோம்

சரணங்கள்

1. பாவம் நிறைந்த பாரில் சாபந் தொலைக்க வந்த
தேவ குமாரனான திரியேக நாதனிவர் - இயேசுவையே

2. இன்னிலம் புரந்த புத்ரன் இயேசு எம் உத்திரன்
உன்னதர்கள் போற்றும் உயர்வான புவி மித்திரன் - இயேசுவையே

3. பாவமதா லிளைத்தோரைப் பண்பாய் இரட்சிக்குங் கர்த்தன்
தேவ தூதரும் போற்றும் தெய்வ லோகத்தின் சித்தம் - இயேசுவையே

4. நானிலம் புகழ்ந்திட மானிலம் மகிழ்ந்திட
வானிலத்தோர்கள் பாட வானாசனமே விட்ட - இயேசுவையே

5. ஆவலாய்த் தேடுவோர்க்கு ஆனந்தமளிப்பாரே
ஆவியைக் கொடுப்பாரே தாவியே மீட்பாரே - இயேசுவையே

*K.S. Abraham*

## பாடல் 157: முத்தே மாமணியே

இராகம்: நவரோஜ் தாளம்: ரூபகம்

1. முத்தே மாமணியே இயேசுகிறிஸ்துவே நீ தனியே!
   இத்தரை மீட்டனையே கருதிக்கெல்லாம் நீ மணியே!

2. விண்ணோர்கள் நல்மணியே பூவில் மண்ணோர்க்கு மேன்மணியே!
   கண்ணிலார்க் கண்ணொளியே என்றும் அழியா காயமணியே!

3. நித்திய வான் ஜோதி இயேசு நீதி நிறைந்த ஜோதி!
   நிர்மலமான ஜோதி சர்வலோகம் நிறைந்த ஜோதி!

## பாடல் 158: தந்தானைத் துதிப்போமே

இராகம்: பியாகு தாளம்: ஆதி

பல்லவி

தந்தானைத் துதிப்போமே - தேவ
தாசரே கவி பாடிப் பாடி

அனுபல்லவி

விந்தையாய் நமக்கனந் தனந்தமான
விள்ளற் கரியதோர் நன்மை மிக மிக

சரணங்கள்

1. ஒய்யாரத்துச் சீயோனே - நீயும்
மெய்யாகவே களிகூர்ந்து நேர்ந்து
ஐய னேசுக் குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே மகிழ் கொள்ளுவையே - நாமும் - தந்தானை

2. கண்ணாரக் களித்தாயே - நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக் கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனாமாரி போற் பெய்துமே - தந்தானை

3. சுத்தாங்கத்து நற் சபையே - உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சக்தியாக்கத் தமின்
இரத்தத்தைச் சிந்தி எடுத்து உயிர் வரம் - தந்தானை

4. தூரந் திரிந்த சீயோனே - உனைத்
தூக்கி எடுத்துக் கரத்தினி லேந்தி
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து உனை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னே! - தந்தானை

## பாடல் 159: போற்றித் துதி புகழ்ந்து துதி

பல்லவி

போற்றித் துதி புகழ்ந்து துதி - உந்தன்
பரிசுத்த நாயகனை ஏற்றித் துதி

சரணங்கள்

1. தந்தார் இயேசு சுதனை எங்களுக்காய் - இந்தத்
தரணிதனில் போகவிட்டார் மானிடர்க்காய்
கன்ம வினையெல்லாம் தீர்க்க வந்தார் - பொல்லாக்
கருமங்கள் யாவையும் போக்க வந்தார் - போற்றி

2. தீராத விஷமெல்லாம் தீர்க்க வந்தார் - நாம்
தீயி லகப்படாமல் தூக்க வந்தார்;
பாவத்தில் மரித்தோரை உயிர்ப்பிப்பார் - நித்திய
பாதாளத்தில் போவோரைத் தப்புவிப்பார் - போற்றி

3. பொல்லாத உலகத்தின் மாய்கையாலே - சாத்தான்
போதிக்கிறான் உன்னை வாதிக்கிறான்
நில்லாதே பாவி நீ நில்லாதே - அங்கே
நிற்கும் அந்தப் பாதை தான் பொல்லாததே - போற்றி

4. மேலான இரட்சிப்பை கூறுகின்ற - இந்த
மேன்மையுள்ள இரட்சகரைப் பாராயோ,
வாராயோ பாவி நீ கேளாயோ? இப்போ
பராபரனை வந்து சரண் அடையாயோ? - போற்றி

## பாடல் 160: தேவனைத் துதியுங்கள்

(சங்கீதம் 150)

பல்லவி

தேவனைத் துதியுங்கள் - அல்லேலூயா

தேவனைத் துதியுங்கள் - ஆ-ஆ-ஆ-ஆ

சரணங்கள்

1. அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா - தேவனை

2. அவர் வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்
பார்த்துத் துதியுங்கள் - அல்லேலூயா - தேவனை

3. அவர் வல்லமையுள்ள கிரியைகளுக்காக
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா - தேவனை

4. மாட்சிமை பொருந்திய மகத்துவத்திற்காய்
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா - தேவனை

5. எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்
வீணை சுரமண்டலத்தோடே - அல்லேலூயா - தேவனை

6. தம்புரோடும் நடனத்தோடும் துதியுங்கள்
யாழோடும் தீங்குழலோடும் - அல்லேலூயா - தேவனை

7. ஓசையுள்ள கைத்தாளங்களோடும்
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா - தேவனை

8. பேரோசையுள்ள கைத்தாளங்களோடும்
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா - தேவனை

9. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதியுங்கள்
அல்லேலூயா ஆமென் - அல்லேலூயா - தேவனை

*Bhaktha Singh Group*

## பாடல் 161: பாடிட வாரும் தேவனை

Come let us all unite to sing - 43

(Tune 338 of ESB)

1. பாடிட வாரும் தேவனை
   அன்-ப-வர்!
   வானம் புவியும் பாடட்டும்
   அன்-ப-வர்!
   ஆத்மா விழித்தெழும்பட்டும்
   உள்ளங்கனிந்து பாடட்டும்
   இயேசுவுக்காய் பாடிடுவோம்
   அன்-ப-வர்!

2. பூலோகமெங்கும் கூறுவீர்
   அன்-ப-வர்!
   மீட்பை கிறிஸ்துவில் கண்டோம்
   அன்-ப-வர்!
   இரத்தம் நம் பாவம் போக்கிற்றே
   ஆவி நம் இருள் நீக்கிற்றே
   இப்போ நாம் களிகூருவோம்
   அன்-ப-வர்!

3. இங்கே நம் பங்கு ஆனந்தம்
   அன்-ப-வர்!
   தம் வாக்குத்தத்தங்கள் தேற்றும்
   அன்-ப-வர்!
   நம் சூரியன் கேடகமும்
   நம்பிக்கை பெலன் துணையும்
   பாதைக்கு வழிகாட்டியும்
   அன்-ப-வர்!

4. யார் நம்மை கைவிட்டால் என்ன?
அன்-ப-வர்!
கிறிஸ்துவால் வெற்றியடைவோம்
அன்-ப-வர்!
யோர்தான் பெருகினும் அஞ்சோம்
இயேசு நம்மோடங்கேயுண்டு
தாங்கியே தூக்கிச் செல்வாரே
அன்-ப-வர்!

5. கானானில் மீண்டும் பாடுவோம்
அன்-ப-வர்!
பேரொலி இது தானங்கு
அன்-ப-வர்!
காலங்கள் இங்கே சுழலும்
வான சேனையோடு சேர்வோம்
அப்போதும் நம் பாட்டிதுவே
அன்-ப-வர்!

*Howard Kingsbury*

## பாடல் 162: எந்த காலத்திலும் எந்த நேரத்திலும்

பல்லவி

எந்த காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

அனுபல்லவி

1. ஆதியும் நீரே - அந்தமும் நீரே
ஜோதியும் நீரே - என் சொந்தமும் நீரே - எந்த

2. தாய் தந்தையும் நீரே - தாதையும் நீரே
தாபரம் நீரே - என் தாரகம் நீரே - எந்த

3. வாழ்விலும் நீரே - தாழ்விலும் நீரே
வாதையில் நீரே - என் பாதையில் நீரே - எந்த

4. வானிலும் நீரே - பூவிலும் நீரே
ஆழியில் நீரே - என் ஆபத்தில் நீரே - எந்த

5. துன்ப நேரத்தில் - இன்பமும் நீரே
இன்னல் வேளையில் - என் மாறாநேசரே - எந்த

6. ஞான வைத்தியராம் ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் - என் நண்பரும் நீரே - எந்த

7. ஞானமும் நீரே - கானமும் நீரே
தானமும் நீரே - என் நாதனும் நீரே - எந்த

8. ஆறுதல் நீரே - ஆதாரம் நீரே
ஆசையும் நீரே - என் ஆனந்தம் நீரே - எந்த

9. மீட்பரும் நீரே - என் மேய்ப்பரும் நீரே
மேன்மையும் நீரே - என் மகிமையும் நீரே - எந்த

10. தேவனும் நீரே - என் ஜீவனும் நீரே
ராஜ ராஜனும் - என் சர்வமும் நீரே - எந்த

## பாடல் 163: ஆசையாகினேன், கோவே

இராகம்: யமுனா கல்யாணி தாளம்: ரூபகம்

பல்லவி

ஆசையாகினேன், கோவே உமக்
கனந்த ஸ்தோத்திரம், தேவே

அனுபல்லவி

ஏசு கிறிஸ்து மா சத்துவத்து ரட்சகா, ஒரே தட்சகா

சரணங்கள்

1. வேதா, ஞானப்பர்த்தா - என் - தாதா; நீயே கர்த்தா;
மா தாரகம் நீ என்றே, பரமானந்தா, சச்சிதானந்தா - ஆசை

2. கானான் நாட்டுக் கரசே - உயர் - வான் நாட்டார் தொழும் சிரசே!
நானாட்ட முடன் தேடி, தேடி நாடி பதம் பாடி - ஆசை

3. வீணாய்க் காலம் கழித்தேன் - சற்றும் - தோன்றாமல் நின்று விழித்தேன்
காணாதாட்டைத் தேடி சுமந்த கருத்தே என்னைத் திருத்தே - ஆசை

4. வந்தனம், வந்தனம், யோவா! - நீ சந்ததம் சந்ததம் கா, வா;
விந்தையாய் உன்னைப் பணிந்தேன்; சத்ய வேதா, இயேசுநாதா - ஆசை

*வே. சா*

## பாடல் 164: ஆத்துமமே என் முழு உள்ளமே

(சங்கீதம் 103)

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

ஆத்துமமே என் முழு உள்ளமே - உன்
ஆண்டவரைத் தொழுதேத்து இந்நாள் அள
வன்பு வைத் தாதரித்த - உன்
ஆண்டவரைத் தொழு தேத்து

சரணங்கள்

1. போற்றிடும் வானோர் பூதலத் துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள - ஆத்துமமே

2. தலை முறை தலை முறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத - ஆத்துமமே

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொருத்தருளும் மேலான - ஆத்துமமே

4. வாதை நோய் துன்பம் மாற்றி அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த - ஆத்துமமே

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் - ஆத்துமமே

6. துதி மிகுந்தேற ஸ்தோத்திரி தினமே!
இதயமே உள்ளமே என் மனமே - ஆத்துமமே

*தை. றை*

## பாடல் 165: சீர் இயேசு நாதனுக்கு

இராகம்: சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

சீர் இயேசு நாதனுக்கு ஜெயமங்களம் - ஆதி
திரியேக நாதனுக்கு சுப மங்களம்

அனுபல்லவி

பாரேறு நீதனுக்கு பரம பொற் பாதனுக்கு
நேரேறு போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு

சரணங்கள்

1. ஆதி சருவேசனுக்கு ஈசனுக்கு மங்களம்
அகிலப் பிரகாசனுக்கு நேசனுக்கு மங்களம்
நீதி பரன் பாலனுக்கு நித்திய குணாளனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு உயர் மனு வேலனுக்கு - சீர்

2. மானாபி மானனுக்கு வானனுக்கு மங்களம்
வளர் கலைக்கியானனுக்கு ஞானனுக்கு மங்களம்
கானான் நல் நேயனுக்கு கன்னிமேரி சேயனுக்கு
கோனார் சகாயனுக்கு கூறு பெத்தலேயனுக்கு - சீர்

3. பத்து லட்சணத்தனுக்கு சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்
சத்திய விஸ்தாரனுக்கு சருவாதி காரனுக்கு
பக்தர் உபகாரனுக்கு பரம குமாரனுக்கு - சீர்

*வே. சா*

## பாடல் 166: உம் சித்தம் தேவா

Have Thine own way, Lord - 487

1. உம் சித்தம் தேவா உம் சித்தமே
குயவன் நீர் தாமே களிமண் நானே;
உம் சித்தம் போல ஆக்கும் என்னை
ஒப்புவித்தேனே பூரணமாய்

2. உம் சித்தம் தேவா உம் சித்தமே
தேடும் என்னை தம் சித்தம் போல;
கழுவும் என்னை வெண்மையாக
தம் சமூகம் நான் பணிகிறேன்

3. உம் சித்தம் தேவா உம் சித்தமே
நொந்து சோர்பானேன் தாங்கிடுமே
வல்லமை யாவும் தமக் கென்றும்
தொட்டென்னை சொஸ்தமாக்கும் தேவா!

4. உம் சித்தம் தேவா உம் சித்தமே
என்னை முற்றுமாய் ஆட்கொள்ளுமேன்;
ஆவியால் எந்தனை நிரப்பி
என்னில் எப்போதும் வாசம் செய்யும்

*Adelaide A Pollard*

## பாடல் 167: வாழ்த்துவோம் கர்த்தரை

Stand up and bless the Lord - 20

1. வாழ்த்துவோம் கர்த்தரை
தெரிந்தெடுத்தாரே
ஆத்மா தேகம் ஆவியோடும்
எழுந்து வாழ்த்துவோம்

பல்லவி
வாழ்த்துவோம் கர்த்தரை
அல்லேலூயா

2. மகிமை நிறைந்த
உன்னதராயினும்
பரிசுத்த நாமத்தை
எவரும் பயப்படுவர் - வாழ்த்துவோம்

3. உம் பலிபீடத்தின்
ஜுவாலையில் நிரப்பி
உதட்டை சுத்தம் செய்துமே
பரம சிந்தை தாரும் - வாழ்த்துவோம்

4. கர்த்தர் பலன் கீதம்
இரட்சிப்பு மாவாரே
அவரன்பு வெளிப்பட்டதே
வல்லமையாய் கிறிஸ்துவில் - வாழ்த்துவோம்

5. வாழ்த்துவோம் கர்த்தரை
வணங்கி போற்றுவோம்
மகிமை இராஜாவின் நாமத்தை
என்றென்றும் துதிப்போம் - வாழ்த்துவோம்

*James Montgonery*

## பாடல் 168: தேவன் உலகோரை நேசித்த அன்பால்

To God be the glory - 22

1. தேவன் உலகோரை நேசித்த அன்பால்
தம் சுதனைத்தந்தே மகிமைப்பட்டார்;
பாவ நிவிர்த்திக்காய் தம்முயிர் தந்து
யாவர்க்கும் ஜீவ பாதையைத் திறந்தார்

பல்லவி

போற்றுவோம் கர்த்தரை!
பூலோகம் முழங்க!
போற்றுவோம் கர்த்தரை!
மாந்தர் மகிழவே!
வாரும் பிதாவிடம் இயேசுவினூடே
மகிமை தருவீர் வல்லவருக்கே

2. தேவன் தமின் மீட்பும் இரட்சிப்பும் எல்லா
விசுவாசிகட்கும் நல்குவே னென்றார்!
இயேசுவை உண்மையாய் நம்பும் பாவிக்கும்
மன்னிப்பு அட்சணமே கிட்டுது பார் - போற்றுவோம்

3. தேவன் பெரும் போதனை சாதனையும்
செய்தார் அதால் மகிழ்வோம் இயேசுவில் நாம்
ஆனந்தம் ஆச்சரியம் சுத்தம் உயர்வும்
அடைவோம் இயேசுவை நாம் காணும்போது - போற்றுவோம்

*Fanny Crosby*

## பாடல் 169: இயேசுவே உந்தன் சிந்தனை

Jesus the very thought of thee - 61

1. இயேசுவே உந்தன் சிந்தனை
என் நெஞ்சுக்கின்பமாம்
ஆனால் உம் தரிசனமே
அதிலும் இன்பமாம்

2. வார்த்தையால் பாட ஒண்ணாதே
நெஞ்சில் அடங்காதே
உம் இனிய நாமமின்றி
வேறுண்டோ இரட்சகா

3. உடைந்த நெஞ்சின் நம்பிக்கை
எளியோர்க் கின்பமே;
இடறு வோர்க்கு இரங்குவார்
நாடுவோர்க்கு நண்பர்

4. இவற்றைக் கண்டடைந்தோர்க்கு
நாவால் சொல்ல ஒண்ணா;
இயேசுவின் அன்பே என் சொல்வேன்
அன்பரே அறிவார்

5. இயேசுவே நீர் என் சந்தோஷம்
நீரே என் பொக்கிஷம்
இயேசுவே நீர் என் மகிமை
நித்யம் நித்தியமாய்

## பாடல் 170: வேறு ஜென்மம் வேணும்

இராகம்: கரகரப்பிரியை தாளம்: ஆதி

பல்லவி

வேறு ஜென்மம் வேணும் - மன
மாறுதலாகிய உள்ள சுத்தி எனும்

சரணங்கள்

1. கூறு பரிசுத்தர் மாறிலா தேவனின்
தேறுதலான விண் பேறு பெற இங்கே - வேறு

2. பாவ சுபாவமும் ஜீவியமும் மாறி
தேவனின் சாயலை மேவுவதாகிய - வேறு

3. மானிடரின் அபிமானத்தினாலல்ல
வானவரின் கிருபானந்தமாய் வரும் - வேறு

4. ஒன்றான இரட்சகர் வென்றியை நம்பி
மன்றாடுவோருக்கு ஒன்றுவதாகிய - வேறு

5. மைந்தர் கெடாம லுகந்து ஈடேறவே
சொந்த மகன் தனைத் தந்த பிதா அருள் - வேறு

6. மண்ணினில் பத்தராய் நண்ணி நடக்கவும்
விண்ணினில் சுத்தராய் தண்ணொளி கொள்ளவும் - வேறு

## பாடல் 171: பரிசுத்தமாக இயேசண்டை வந்து

Have you been to Jesus - 417

(Tune 608 of ESB)

1. பரிசுத்தமாக இயேசண்டை - வந்து
இரத்தத்தால் கழுவப்பட்டாயா?
நம்புகிறாயா? உன் யாவையுந் தந்து
இரத்தத்தால் கழுவப்பட்டாயா?

பல்லவி

இயேசுவின் இரத்தத்தால்
உன் உள்ளம் கழுவப்பட்டதா?
நீதியின் வெண் வஸ்திரம் பெற்றாயா நீ
பூரண இரட்சிப்படைந்தாயா?

2. தினம் உன் நடை மீட்பரைச் சார்ந்ததா?
இரத்தத்தால் கழுவப்பட்டாயா?
கொந்தளிப்பெல்லாம் இப்போ அமர்ந்ததா?
இரத்தத்தால் கழுவப்பட்டாயா? - இயேசுவின்

3. அவரைச் சந்திக்க வெண் ணங்கியுண்டா?
இரத்தத்தால் கழுவப்பட்டதா?
விண்வீடேக உன் உள்ளம் ஆயத்தமா?
இரத்தத்தால் கழுவப்பட்டதா? - இயேசுவின்

*Elisha A. Hoffman*

## பாடல் 172: பாவம் இரத்தாம்பர மாயினும்

(இராகம்: 28 of ESB)

1. பாவம் இரத்தாம்பர மாயினும்
பஞ்சது போலாகுமே!
கருஞ் சிவப்பு தாயினும்
கர்த்தன் இரட்சை காண்பாயே!

பல்லவி

அல்லேலூயா நம் ஆண்டவர்
அருளுனக் கீவாரே!
வல்லவன் பூர்ண இரட்சையினால்
வெல்லும் வேந்தனாவாயே!

2. நெஞ்சத்தில் மறை துரோகம்
நீக்கி முற்றாய் இரட்சிப்பார்!
இயேசு இரத்தம் சுத்தி செய்யும்
மாசற்ற ஜீவன் தரும்!

3. பாவம் நெஞ்சிற் குடிகொண்டே
பாவி உன்னை ஆழ்த்தவே;
பரமன் வெளிப்படுத்தி
பாவமெல்லாம் போக்குவார்

4. உலகப் பேச்சுக் கஞ்சி நீ,
ஊக்க மற்றுப் போனாயோ?
உன் கூசல் சந்தேகங்களும்
உடன் போக்க வல்லாரே!

*Fanny Crosby*

## பாடல் 173: வா கல்வாரி மேட்டண்டை

### Come, with me visit Calvary - 413

(Tune 192 or 267 of ESB)

1. வா, கல்வாரி மேட்டண்டை
மீட்பர் அங்கே மாண்டார்
ஆழ்ந் தகன்று நிறைந்த
இரத்த ஊற்றுண்டு பார்!
முற்றாய் பாவத்தை விட்டு
நம்மை நீக்கி வைப்பார்!
அவர் பாதம் தங்கிடு;
இரட்சித் தென்றும் காப்பார்!

பல்லவி
முற்றுமாய் இரட்சிக்கின்றார் (2)
இப்போதே நம்பு
பார் அவர் அன்பு
முற்றுமாய் இரட்சிக்கின்றார்!

2. தேவனின் மா இரட்சிப்பு
இப்போதே கிடைக்கும்!
இரத்தத்தாலான மீட்பு
உனக்கும் பலிக்கும்!
விஸ்வாசத்தின் கை நீட்டு
முற்றும் சுத்தம் ஆவாய்!
நம்பிச் சொந்தம் பாராட்டு
அவரால் நிறைவாய் - முற்றுமாய்

3. என்னை நான் பலியிட்டு
செய்வேன் மீட்பர் சித்தம்;
அவர் என்னில் அன்புற்று
ஈவார் ஆத்ம சுத்தம்!
நம்பி நான் இப்போ பெற்றேன்
இந்த ஆசீர்வாதம்!
தேவாவி என்னில் பற்றி
ஜொலிக்கு தென்னுள்ளம் - முற்றுமாய்

*John Lawley*

## பாடல் 174: பாவியை சுத்திகரிக்கும்

Yes, there flows a wondrous River - 471

(Tune 395 of ESB)

1. பாவியை சுத்திகரிக்கும்
ஜீவ நதி பாயுது!
கருஞ் சிவப்ப தாயினும்
கர்த்தன் இரட்சை காண்பாயே!

பல்லவி
அல்லேலூயா நம் ஆண்டவர்
அருளுனக் கீவாரே!
வல்லவன் பூர்ண இரட்சையினால்
வெல்லும் வேந்தனாவாயே!

2. நெஞ்சத்தில் மறை துரோகம்
நீக்கி முற்றாய் இரட்சிப்பார்!
இயேசு இரத்தம் சுத்தி செய்யும்
மாசற்ற ஜீவன் தரும்!

3. பாவம் நெஞ்சிற் குடிகொண்டே
பாவி உன்னை ஆழ்த்தவே;
பரமன் வெளிப்படுத்தி
பாவமெல்லாம் போக்குவார்!

4. உலகப் பேச்சுக் கஞ்சி நீ,
ஊக்க மற்றுப் போனாயோ?
உன் கூசல் சந்தேகங்களும்
உடன் போக்க வல்லாரே!

*Fanny Crosby*

## பாடல் 175: பரிசுத்த வாழ்வு அருளுமேன்

Give me a Holy Life - 416

1. பரிசுத்த வாழ்வு அருளுமேன்
தம் ஜீவ ஊற்றினால் கழுவுவேன்
இருண்ட சிந்தையில்
கிரியை நடத்தும்
சிந்தை உணர்விலும்
அடிமையே

2. தூய சுடரால் நீர் கழுவுமேன்
நீர்சுத்தி செய்தால் நான் நிலைப்பேனே
எண்ணத்தில் திண்ணமாய்
வாஞ்சையால் நிலையாய்
உள்ளத்தில் தூய்மையாய்
வேறூன்றியே

3. திருப்தியில்லையே செய்கை யாவும்
சோம்பலாய் காண்கிறீர் இப்போ தாம்
உள்ளத்தின் ஆழத்தில்
தேடும் தம் சித்தத்தை
நீர் கண்டால் ஆனந்தம்
முதன்மை நீர்

4. என் சித்தம் இப்போ அர்ப்பணிக்கிறேன்
எதுவுமில்லையே களிமண் நான்
கர்த்தா இணங்குமேன்
என்னை வனையுமேன்
தகுதியாக்குமேன்
வாசம் செய்ய

*Leslie Taylor Hunt*

*Translated By J. Daniel J Raj*

## பாடல் 176: வாரும் சிலுவையடியிலே

இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: ஆதி

பல்லவி

வாரும் சிலுவையடியிலே - வந்தண்ணலேசை
பாரும் துயர் நீங்கிடவே

அனுபல்லவி

பூரண இரட்சையடைந்து புண்ணியன் கிருபை பெற்று
தாரணியிலும் மகிழ்ந்து வாழ அவரில் ஜீவித்து

சரணங்கள்

1. இம்மைச்செல்வம் அற்பமென்றெண்ணி - அவர் விலாவில்
விம்மிப்பாயும் இரத்தத்தில் மூழ்கி
செம்மையாய்க் கழுவப்பட்டு சீர்முழு இரட்சையைப் பெற்று
உண்மையா யவருந்தனின் உள்ளத்தில் வாழ்ந்திட வென்று - வாரும்

2. ஜீவ ஊற்றில் வந்து மூழ்கிடும் - அப்போதும் உள்ளம்
பாவ மற்று சுத்தி பெற்றிடும்
தேவசுதன் திரு இரத்தம் மூழ்க முழு இரட்சைவரும்
ஆவலோடு அவரை நீர் தேடி இதோ வந்துவிடும்! - வாரும்

3. சேரும் இரட்சண்யப் படையிலே - தைரிய மடைய
வாரும் யுத்த முன்னணியிலே!
ஜீவித்திடும் வெளிச்சத்தில் சுத்தி நீர் ஆசிப்பீராகில்
கூவியவரைக் கெஞ்சும் பூர்ண இரட்சை வேண்டுமாகில் - வாரும்

4. பரிசுத்தம் வேண்டுமாகில் நீர் - பாரச் சிலுவை
பற்றி அதை விட்டிடாதேயும்
பூலோக ஐசுவரியம் பூவைப்போல் வாடிடுமென்று
மேலவன் பாதத்தைத் தேடும்; மேன்மை சுத்திதனை நாடும்! - வாரும்

## பாடல் 177: நம்பும்! இயேசு நாதன் நிற்கிறாராம்

இராகம்: துதிப்பேன் துதிப்பேன் தாளம்: ஏகம்

பல்லவி

நம்பும்! இயேசு நாதன் நிற்கிறாராம் - உம்மை அன்பாய் தேடி
இன்பமா யழைத்துக் கூறுகிறாராம்

அனுபல்லவி

வந்தா லென் கிருபை முற்றுமே நான் தந்து
சொந்த மாக்குவேன் முழு இரட்சை ஈந்தென்று

சரணங்கள்

1. ஒப்புவித்திடும் உமையவருக் கென்றே அவர் வழியை விட்டு நீர்
தப்பிப்போகாமல் தாங்கிக்கொள்ளுமென்றே!
அப்பா உன் சித்தம் ஆகக்கடவதென்று
செப்பினால் முற்றுஞ் செய்வாரே நன்று! - நம்பும்

2. பாவ மகற்றி மா பெந்தம் அறுத்தாரென்றும் - இயேசு நாதனுமக்கு
ஜீவ ஒளியும் கேடகமுமா மென்றும்
தேவ கிருபையைத் தீயோன் பெற்றேனென்றும்
ஆவலாய் இரட்சண்யத் தூதைக் கூறுவீரே - நம்பும்

*K.S Abraham*

## பாடல் 178: தூயனாய் நீ வாழ

Take Time to be holy - 458

1. தூயனாய் நீ வாழ கர்த்தரிடம் கேள்;
அவருடன் சேர்ந்து வேதத்தைப்படி
சான்றோருடன் ஒன்றாய் ஏழையைத் தாங்கு;
யாவையும் மறந்து தேவ ஆசீர் தேடு

2. தூயனாய் நீ வாழ லோகத்தைத் தள்ளு;
இயேசுவோடிருந்து தனி தியானம் செய்;
இயேசை நோக்கிப்பார்த்தால் அவர்போல் ஆவாய்;
அவர்தம் அழகைக்காண்பார் நண்பர் உன்னில்

3. தூயனாய் நீ வாழ தேவனைத் தேடு;
என்ன நேரிட்டாலும் அவரைப் பின்செல்
துன்ப துக்கமேனும் இன்னும் அவர்பின்செல்;
இயேசுவை நோக்கி அவர் வாக்கை நம்பு

4. தூயனாய் நீ வாழ சாந்தமாயிரு;
எண்ணம் நோக்கமெல்லாம் அவர் ஆளட்டும்;
அன்பின் ஊற்றருகே அவர் நடத்துவார்;
மேலோக சேவைக்காய் ஆக்கிடுவாரே

*William D.Longstaff*

## பாடல் 179: இயேசு அருள் நாதனே

மெட்டு: தேவா! ஜெயவல்லவா

பல்லவி

இயேசு அருள் நாதனே!
தாசன் மேலுன்னாவி யூற்றத் தாள் பணிந்தேனே!

கண்ணிகள்

1. மாசற்ற உம் இரத்தத்தாலென் மனம் சுத்திசெய்யுமேன்!
நேசரே உம் நிஜரூபம் நேரில் காணச் செய்யுமேன்!
நீசன் மனம் மாறினதால் பாசமென்னில் கூருமேன்! - இயேசு

2. உம்மோடு சிலுவையி லொன்றாயறையப்பட்டேனே!
இம்மையிலுமைப் பிரிந்து இருக்கவுமாட்டேனே!
தம்மையல்லாமல் ஒன்று மிந்தத் தாரணியில் வேண்டேனே! - இயேசு

3. தணிந்திடாத் தாகமெனில் தாமெழுப்பி வையீரோ?
பணிந்த என்னுள்ளத்தில் நீர் வந்து பள்ளி கொள்ளீரோ
துணிந்து வந்த என்னோடு தூயா வாசஞ் செய்யீரோ? - இயேசு

4. எனது சித்த மனைத்தும் உமதாயிருக்கட்டும்!
தமது ஒளியில் நானும் வெளிச்சமே காணட்டும்!
தினம் பரிசுத்தனாக உமைத் துதி செய்யட்டும்! - இயேசு

## பாடல் 180: தாரும் தேவா உந்தன்

Jesus, Thy fullness give - 431

(Tune 172 of ESB)

1. தாரும் தேவா உந்தன்
பூரண இரட்சிப்பு
காரும் என் ஆத்மா தேகமும்
மாறாது சுத்தமாய்

பல்லவி
தூய ஆடை நான் தரித்து
நேயரோடுலாவுதற்கு
ஆக்கு தவர் இரத்தம்

2. பூரண இரட்சிப்பின்
தீரம் எனக்கீயும்
தீங் ககற்றி நன்மை செய்ய
தாங்கிடும் வல்லவா! - தூய

3. அன்பு சமாதானம்
உன்னத ஆறுதல்
கல்வாரி ஜீவன் ஆவியும்
என் பங்காகச் செய்யும்! - தூய

4. முற்றாய்ப் பாவம் விட்டு
வற்றா கிருபை கொண்டு
புறம் அகம் யாவும் உம்மைப் போல்
கறை யற்றிருப்பேன்! - தூய

*William Pearson*

## பாடல் 181: உம்முன் நிற்க தேவே!

Before Thy face, dear Lord - 409

(Tune 169 of ESB)

1. உம்முன் நிற்க தேவே!
எந் நிலை காட்டுமேன்!
நான் பாடிடும் எக் கேள்விக்கும்
விடை யளிப்பேனே

பல்லவி
கெஞ்சும் வேளையில் உம் கிருபையால்
நெஞ்சின் குறை யாவையும் நேரில் காட்டும் மீட்பா!

2. முன் போல் நானிப்போதும்
சன்மார்க்க ஜீவியா?
உம் ஆவி நிறைந்தவனாய்
பின்பற்றி வாறேனா? - கெஞ்சும்

3. எண்ணம் செய்கையிலும்
என்னுள்ளம் சுத்தமா?
எந்த நாளும் என் இரட்சிப்பை
நான் காத்துக் கொண்டேனா? - கெஞ்சும்

4. முன்னுள்ள வைராக்கியம்
இந்நாளிலுமுண்டா?
உம் ஊழியத்தில் இன்னும் நான்
இன்பம் காண்கிறேனா? - கெஞ்சும்

5. துன்பமில்லா இடம்
தேடி நான் செல்வேனா?
வன் போர்தனில் நிலையாது
மாறுபவன் நானா? - கெஞ்சும்

*Herbert H Booth*

## பாடல் 182: சிலுவையில் சேருவேன்

I am coming to the Cross

(Tune 159 or 615 of ESB)

1. சிலுவையில் சேருவேன்
ஏழை ஈனன் குருடன்
லோகம் குப்பை என்கிறேன்
பூர்ண மீட்பு பெறுவேன்

பல்லவி
கர்த்தா! உம்மை நம்புவேன்
கல்வாரி பலியே நீர்!
சிலுவை யண்டை தாழ்வேன்
இப்போ இயேசே இரட்சிப்பீர்!

2. நெடும் வாஞ்சை உமக்காய்
ஆயின் ஆண்டது தீமை
இயேசு சொல்வார் இன்பமாய்
தீர்ப்பேன் முற்றாய் பாவத்தை - கர்த்தா

3. முற்றுமாய் படைக்கிறேன்
அன்பர் ஆஸ்தி சமயம்
ஆத்மா தேகம் அனைத்தும்
உமக்கே என்றைக்குமாய் - கர்த்தா

4. வாக்குத்தத்தம் நம்புவேன்
உணர்வேன் திரு இரத்தம்
மண்ணில் தாழ்ந்து விழுவேன்
அறையுண்டேன் கிறிஸ்தோடும் - கர்த்தா

5. சேர்வார் ஆத்மா நிறையும்!
அவரே என் பூரிப்பு
அடைந்தேன் சொஸ்தம் முற்றும்
ஆட்டுக் குட்டிக்கு மாண்பு! கர்த்தா

*William McDonald*

## பாடல் 183: வாழ் நாள் ஜீவன் ஓடுதே

Jesus see me at thy feet - 292

(Tune 329 of ESB)

1. வாழ் நாள் ஜீவன் ஓடுதே
இரத்தத்தால் சுத்தி செய்யுமேன்
அங்க மேனி வாடுதே
இரத்தத்தால் சுத்தி செய்யுமேன்

பல்லவி

ஆம்! ஆம்! தேவ சுதனே!
பாவம் போக்க மாண்டீர்!
பாவம் போக்கும் இரட்சகா
இரத்தத்தால் சுத்தி செய்யுமேன்!

2. வீண் பக்தனாய் அலைந்தேன்
இரத்தத்தால் சுத்தி செய்யுமேன்!
நாவினால் தான் பூசித்தேன்
இரத்தத்தால் சுத்தி செய்யுமேன்! - ஆம்

3. மனம் மாற்ற வல்லவா!
இரத்தத்தால் சுத்தி செய்யுமேன்!
என் உள்ளத்தை வெல்பவா!
இரத்தத்தால் சுத்தி செய்யுமேன்! - ஆம்

## பாடல் 184: வாரும் தேவா! வாரும்

Come in, My Lord, come in - 562

(Tune 182 of ESB)

1. வாரும் தேவா! வாரும்
உள்ளம் உம் வீடாகும்!
என்னாத்தும பாவம் நீக்கும்
என்னுடன் தங்கிடும்
கருணைக் கடலே!
இம்மைச் செல்வம் குப்பை!
ஆனால் நீரே நிலைப்பவர்!
உம்மையே தந்திடும்!

2. வாரும் தேவா வாரும்
உம் பலம் காட்டிடும்!
பாவம் போக்கி சுத்தமாக்கும்!
இப்போ விடுவியும்!
நல் வாக்குத் தந்தீரே!
நம்பினேன் கைதூக்கும்!
வல்ல இம்மானுவேலரே
உம்மிலென் நம்பிக்கை

3. தேவா! எனில் வந்தீர்
உணர்ந்தேன் நான் அதை!
உன் குறை நீக்கினேன் என்ற
உம் சத்தம் கேட்கிறேன்!
உமக்கே மகிமை!
வான் புவி கூறட்டும்!
உயிர்த்தெழுந்த நேசர் நீர்
என்னில் வசிக்கிறீர்!

*Bramwell Booth*

## பாடல் 185: என் மீட்பர் இரத்தம் சிந்தினார்

My hope is built on nothing less

(Tune: Solid rock - 501 of ESB)

1. என் மீட்பர் இரத்தம் சிந்தினார்
மா நீதியும் சம்பாதித்தார்
என் சொந்த நீதி வெறுத்தேன்
இயேசுவின் நாமம் நம்புவேன்
நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான்
வேறஸ்திபாரம் மணல் தான்

2. கார் மேகம் அவர் முகத்தை
மறைக்கும் காலம் அவரை
எப்போதும் போல நம்புவேன்
மாறாதவர் என்றறிவேன்
நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான்
வேறஸ்திபாரம் மணல் தான்

3. மரணம் வெள்ளம் பொங்கினும்
என் மாம்சம் சோர்ந்து போயினும்
உம் வாக்குத் தத்தம் ஆணையும்
என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும்
நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான்
வேறஸ்திபாரம் மணல் தான்

4. நியாயத் தீர்ப்புக் காலத்தில்
எக்காளச் சத்தம் கேட்கையில்
அஞ்சேன் என் மீட்பர் நீதியே
அநீதன் என்னை மூடுமே
நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான்
வேறஸ்திபாரம் மணல் தான்

## பாடல் 186: உள்ளங்கள் ஆராயும் கர்த்தர் முன்

Tell me what to do to be pure - 459 (Tune 858 of ESB)

1. உள்ளங்கள் ஆராயும் கர்த்தர் முன்
சுத்தமாய் ஜீவிப்ப தெப்படி?
உள் வினையைப் போக்கத் தேடும் நான்
விடுதலை பெறல் எப்படி?
தீவினை என்னுள்ளிருப்பதால்
சிற்றின்பம் மதி மயக்குதே
தெய்வமே! உம் வல்லமையால்
அருள் புரியாயோ அப்பனே!

பல்லவி
பாலிலும் வெண்மை! வெண்மையாக்குமேன்
பாலிலும் வெண்மையாக்குமேன்
என் உள்ளம் மீட்பர் இரத்தத்தால்

2. இரட்சகா! கிட்டி சேரீரோ?
அடியேன் குற்றத்தைக் காட்டிட!
ஏழை என் ஜெபம் கேளீரோ?
இப்போதே என் உள்ளத்தை மாற்ற!
ஓர் போதும் மாறாத தேவனே!
என்றும் உந்தன் சக்தி குன்றாதே!
ஏழையின் ஜெபத்தைக் கேட்பீரே
நான் உணர அருள் ஈவீரே! - பாலிலும்

3. உம்மை எனக்கு காட்டுமேன்
ஒருபோதும் நான் கண்டதில்லையே
என்னில் வாசம் செய்றீர் - உம்மில்
ஐக்கியம் கொள்கிறேன் நான்
புன்முறுவல் என்னில் நிச்சயம்
உம் அன்பை அறிந்து கொண்டேனே
உம் முகத்தை காண்கிறேன் இப்போ
உம் வல்லமை என்னில் காணட்டும் - பாலிலும்

*Verses: Samuel H. Hodges*

*Chorus: E.R. Latta*

## பாடல் 187: ஓ இயேசுவே என் பாவஞ் சுமந்தோரே

O Lamb of God - 448 (Tune 613 of ESB)

1. ஓ இயேசுவே என் பாவஞ் சுமந்தோரே!
உம்மைத் தேடி ஆத்மம் தவிக்குதே;
மான் நீரோடை தேடி அலையுமாப்போல்
என் உள்ளமும் உம்மைத் தேடுதே தேவனே!

பல்லவி
பாதம் பணிகிறேன்
யாவையும் தாறேன்
நிலைத்துப் போர் செய்ய
என் நேச மீட்பர்க்காய்

2. தேவாவியே! உம் வல்லமையினாலே
பாவம் சுயம் அகந்தையும் கொல்லும்!
என்னுள்ளத்தின் துர் ஆசைகளை நீக்கும்
உமதாலயமாய் என்னுள்ளம் நீர் ஆளும்! - பாதம்

3. உம்மினின்று என்னைப் பிரித்த பாவம்
துக்கத்துடன் நான் வெறுத்து வாறேன்;
என் உள்ளத்தின் இருளை நீர் சிந்திய
உம் இரத்தத்தால் இப்போ சுத்திகரியுமேன் - பாதம்

4. என் நேசரே! நீர் வானாசனம் விட்டீர்!
என் உள்ளத்தில் என்றும் அரசாளும்!
வாஞ்சையுடன் உம்மைத்தேடி நான் இதோ
என் சஞ்சலம் நீங்கக் காத்து ஜெபிக்கிறேன்! - பாதம்

*Catherine Booth - Clibborn*

## பாடல் 188: நெஞ்சே கேள்

Hark, my soul! It is the Lord - 110 (Tune 282 of ESB)

இராகம்: சாந்தமுள்ள இயேசுவே தாளம்: திரிசடை

1. நெஞ்சே கேள்! உன் ஆண்டவர்
அறையுண்ட இரட்சகர்!
கேட்கிறார் என் மகனே!
அன்புண்டோ என் பேரிலே?

2. நீக்கினேன் உன் குற்றத்தை
கட்டினேன் உன் காயத்தை
தேடிப் பார்த்து இரட்சித்தேன்!
ஒளி வீசப் பண்ணினேன்!

3. தாயின் மிக்கப் பாசமும்
ஆபத்தாலே குன்றினும்
குன்ற மாட்டா தென்றுமே
ஒப்பில்லா என் நேசமே

4. என தன்பின் பெருக்கும்
ஆழம் நீளம் உயரமும்
சொல்லி முடியாதது பார்
என்னைப் போன்ற நேசர் யார்?

5. திவ்ய ரூபம் தரிப்பாய்
என்னோடரசாளுவாய்!
ஆதலால் சொல் மகனே!
அன்புண்டோ என் பேரிலே?

6. இயேசுவே! என் பக்தியும்
அன்பும் சொற்ப மாயினும்
உம்மையே நான் பற்றினேன்!
அன்பின் சுவாலை ஏற்றுமேன்!

*William Cowper*

## பாடல் 189: உம்மாலேயன்றி இரட்சகா!

O Christ, in Thee my soul - 547

(Tune 102/ 101 of ESB)

1. உம்மாலேயன்றி இரட்சகா!
பேர் நன்மை காண்கிலேன்;
மெய்ச் சமாதானம் இன்பமும்
வேறெங்கும் பெற்றிலேன்

பல்லவி
வெறொன்றினாலும் இரட்சகா!
மெய்ப் பாக்யம் அடையேன்
உம்மாலே தான் என் ஆண்டவா!
சந்தோஷமாகிறேன்

2. பேரன்பை உணராமலே
மெய்ப் பாக்யம் நாடினேன்
நான் ஆவலோடு தேடியும்
ஏமாறிப் போயினேன் - வேறொன்றி

3. பூலோகப் பொருள் இன்பத்தை
பின்பற்றி நம்பினேன்
சற்றேனும் அற்ப வாழ்வினால்
நான் திருப்தியாகிலேன் - வேறொன்றி

4. இப்போதே உந்தன் இரட்சிப்பை
கண்டிளைப்பாறினேன்;
ஆனந்தம் பொங்கி இன்பமாய்
நான் போற்றிப் பாடுவேன் - வேறொன்றி

## பாடல் 190: கர்த்தா! எந்தனை நீர்

I hear Thy welcome voice - 423

(Tune 137 of ESB)

இராகம்: உம் முன் நிற்க தேவே - 181

1. கர்த்தா! எந்தனை நீர்
அழைக்கிறீர், கேட்கிறேன்!
கல்வாரியின் உதிரத்தில்
கழுவப்படவே!

பல்லவி

கல்வாரி நாதா
குருசண்டை வாறேன்
தாழ்மையாய் ஜெபிக்கையில்
சுத்திகரியுமேன்!

2. தளர்ந்த பாவிக்கு
தாறீர் உந்தன் சக்தி!
தீமை யாவும் எனில் நீக்கி
தீ தறச் செய்கிறீர்! - கல்வாரி

3. இன்னும் வா! என்கிறீர்
இனி தன்பு பக்தி
மண்ணிலும் விண்ணிலும் பெற்று
மாசற்று வாழவே! - கல்வாரி

4. உண்மை விடுதலை
பெற்ற ஆத்மாவிலே
எல்லாம் நிறைவேறினதாய்
சாற்றுறீர் சாட்சியாய் - கல்வாரி

*Lewis Hartsough*

## பாடல் 191: என் மீட்பர் சிந்தின இரத்தத்தினால்

### Lord, through the Blood of the Lamb - 437 (Tune 512 of ESB)

1. என் மீட்பர் சிந்தின இரத்தத்தினால்
   செய்யும் சுத்தம்!
என் பாவம் நீங்க நான் ஜெபிப்பதால்
   செய்யும் சுத்தம்!
முன் பாவச் சேற்றிலே நான் அமிழ்ந்தேன்
அநேகமாய்த் தப்பிதங்கள் செய்தேன்
நீர் தந்த வாக்கை நான் நம்பி வாறேன்
   செய்யும் சுத்தம்!

2. நான் வெறுக்கும் உள் வினையினின்றும்
   செய்யும் சுத்தம்!
லோக மாம்ச பாசக் கறையினின்றும்
   செய்யும் சுத்தம்!
மீட்பரே! உம் வாக்கை நம்பி வாறேன்
மாய்மாலனாய் உம்மை நோகமாட்டேன்
லோகத்தார் செல்பாதை செல்லமாட்டேன்
   செய்யும் சுத்தம்!

3. வாதிக்கும் பாவத் துக்கத்தினின்று
   செய்யும் சுத்தம்!
நாசத்தைக் காட்டும் பயத்தினின்று
   செய்யும் சுத்தம்!
மீட்பரே! உம்மால் நான் கழுவப்பட
பிள்ளைபோல் நம்பி என் கையை நீட்ட
துணிந்து நீர் என்னை சுத்தி செய்ய
   கெஞ்சுகிறேன்!

4. லோகத்தார் வீம்புக் கஞ்சாதபடி
   செய்யும் சுத்தம்!
பயமின்றி உம்மைப் போற்றும்படி
   செய்யும் சுத்தம்!
உம்மை நான் சேர்ந்தவன் என்றறிய
என்னைப் பலப்படுத்தி நீர் ஆள
சோதனை நாளில் நான் கீதம் பாட
   செய்யும் சுத்தம்!

*Herbert H Booth*

## பாடல் 192: இந்நேரம் வந்து என்னை

பல்லவி

இந்நேரம் வந்து என்னை சுத்தம் செய்யும்!
சுத்தம் செய்யும் - தேவா - சுத்தம் செய்யும்!

சரணங்கள்

1. பாவத் துக்கமெல்லாம் நீங்கிடவே
நீங்கிடவே - சுவாமி - நீங்கிடவே - இந்நேரம்

2. உள்வினை வேர் யாவும் போய்விடவே
போய்விடவே - சுவாமி - போய்விடவே - இந்நேரம்

3. உம் வாக்கை நம்பி நான் இப்போ வாறேன்
இப்போ வாறேன் - சுவாமி - இப்போ வாறேன் - இந்நேரம்

4. கல்வாரி ஜீவாறு ஓடுதிப்போ!
ஓடுதிப்போ - எனக்காய் - ஓடுதிப்போ - இந்நேரம்

5. இயேசுவின் இரத்தத்தால் சுத்தம் செய்யும்
சுத்தம் செய்யும் - தேவா - சுத்தம் செய்யும் - இந்நேரம்

## பாடல் 193: தூய நெறியில் வாழவே

பல்லவி

தூய நெறியில் வாழவே - துணைசெய் தேவே!

சரணங்கள்

1. தீய இருதயத்தால் - தெளிவில்லாத மனத்தால்
தரிசிக்கக்கூடுமோ? - அதால் துணைசெய் தேவே! - தூய

2. பல மிகு மாம்ச - பாவ இச்சாம்ச
சுவையில் சிக்காது நிமிடம் - துணைசெய் தேவே! - தூய

3. கெட்ட விஷயங்கள் - ஒட்டிக்கொள்ளாமல்
துட்டருடன் கலவாமல் - துணைசெய் தேவே! - தூய

4. அநித்திய உலகத்து - ஆசையோடெதிர்த்து
துணிந்து ஜெயம் பெற நித்தம் - துணைசெய் தேவே! - தூய

5. தேவ வசனத்தை - தினந்தினம் வாசித்தே விஸ்வாச
ஜெபத்தில் தரிக்க - துணைசெய் தேவே! - தூய

6. பார்வை பேச்சாலும் - கேள்வியினாலும்
சோரம் போகாமலிருக்க - துணைசெய் தேவே! - தூய

7. பாவிக ளேகும் பாதை செல்லாது
ஜீவிக்கத் தமியேனுக்கு - துணைசெய் தேவே! - தூய

## பாடல் 194: தேவே கண்ணோக்குமேன்

பல்லவி

தேவே கண்ணோக்குமேன் - என்
தீய நெஞ்சை மாற்றுமேன்!

அனுபல்லவி

கோவே! உம்மைப்போல என்னை
கோதற்றவனாக்கும் மாசற்று ஜீவிக்க

சரணங்கள்

1. உள்ளம் நொந்து உம்மண்டை யான்
உருகி வாறேனையனே
தள்ளாடு மென் நெஞ்சைத் தேற்றி
தாங்கிக் காருந் தேவா - பாந்தமா யெந்தனை - தேவே

2. நொந்துடைந்த எந்தன் மனம்
உந்தனுக்கு குகந்ததே
தந்தையே! எனைத் தள்ளாது
சொந்தமா யாக்க நான் கெஞ்சுகிறேன் நாதா! - தேவே

3. ஆத்மா தேகம் ஆவியும் என்
அன்பனே படைக்கிறேன்
பாத்திரமான பலியாய்
ஏற்று நீர் காத்திடும் நேத்திரம் போலென்னை! - தேவே

*K.S. Abraham*

## பாடல் 195: ஆவியளித்திடும் ஆதிபரனே

இராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

ஆவியளித்திடும் ஆதிபரனே - ஏழை
ஆத்துமம் பெலன் பெற!

அனுபல்லவி

பாவி எந்தனைப் பண்பாய்ப் பார்த்திரங்கையா!
மாய வலையிற் பட்டு மயங்காதிருக்க மெய்யாய்

சரணங்கள்

1. ஞான போதனைக் கிரு செவிகளைச் சாய்க்க
ஈன போதனைக் கண்டு வெருண்டுமே விலக்க
வானவா! வரப்பிரசாதமே யளிக்க
ஈசனே உன் சித்தம் ஏழைமேலே சிறக்க - ஆவி

2. சத்திய வேதத்தை நித்தமும் தியானிக்க
சன்மார்க்க பாதையை சார்ந்துமே வசிக்க
பக்தி வழி நோக்கிப் பாரினிலே நடக்க
சித்த மிரங்கி எந்தன் சீர்கேட்டை நீக்கித் தேவா - ஆவி

3. வாயின் தாறுமாறதை பேயின் குண மென்று
நாவு அடங்கா தொரு நாச நெருப்பா மென்று
சாவுக் கேதுவான தோர் சாப விஷமதென்று
காவல் காத்துமே நாளும் கதிபெற்றிடவே நன்று! - ஆவி

4. இருதயத்தைக் காவல் காப்பதுவே சக்தி!
இடறுவ தில்லாது ஒழுகுவதே பக்தி!
உருவாக்கு மிவையுடன் உம்பரா எனில் சுத்தி!
திருமுடனதை யெடுத் தோதிடத் தாரும் புத்தி - ஆவி

## பாடல் 196: வாரும் இரட்சண்ய மூர்த்தி

பல்லவி

வாரும் இரட்சண்ய மூர்த்தி
காரும் என்னை உம் அன்பால்!

சரணங்கள்

1. மலைபோ லெந்தன் முன்னின்று
மலைக்கச் செய் பாவந்தனை
தலைவா நின் இரத்தத்தினால்
தொலைத் தெனை இரட்சித்து ஆள்! - வாரும்

2. கண்ணீரோ டுன் சந்நிதி
புண்ணியா வந்தேன் நம்பி;
நண்ணு மெனக் கிரங்கி
பண்ணு மெந்தனைச் சுத்தி! - வாரும்

3. தருவீருன் ஜீவன் சக்தி
வருவேனா னுந்தாள் பற்றி;
குருவே! உனை விடாதுன்
திருப்பணி செய்வேன் தினம்! - வாரும்

## பாடல் 197: கருணாகரா - காருமென்பரா

இராகம்: கதனகுதூகலம் தாளம்: ஆதி

பல்லவி

கருணாகரா - காருமென்பரா
அருளளிப்பாயே அண்டினேனுன் தாளே

அனுபல்லவி

வருந்தும் பாவி வந் திளைப்பாறி
விருந்துண் பீரென்று விளம்பினீ ரன்று

சரணங்கள்

1. சந்ததமும் நானே சிந்தனை செய்தேனே
வந்தருள் செந்தேனே! மைந்தன் நம்பினேனே
கந்த மலரா தந்தே னென்னைப் பூராய்
எந்தை இயேசு நாதா! ஏற்றிடுவீர் வேதா - கருணாகரா

2. நன்னெறி புகுத்தி நவையதை நீக்கி
இன்னலை யகற்றி இகலதைப் போக்கி
உன் னழகைத் தந்து ஒருங்காய்க் காத்து
உன்னதத் துய்யச் செய் மன்னா இயேசு நாதா! - கருணாகரா

3. கூறும் எங்கள் மறைக் குகந்த நல்லிறை
தேறு மவர் ஜெபத் தியானமே என் துறை;
வேறு ஒன்றுமே வேண்டிலேனே மெய்!
பேறு தந்தனையே பேரொளிப் ப்ரகாசா! - கருணாகரா

*K.S. Abraham*

## பாடல் 198: இயேசு நாதா! இயேசு நாதா!

பல்லவி

இயேசு நாதா! இயேசு நாதா! ஏழை நான் வாறேன்!
நேசமாயென் பாவம் நீக்க நெஞ்சை நான் தாறேன்

1. பாவம் நீங்கப் பல வழியாய்ப் பாடுபட்டேனே
போவதில்லை அவை யொழிந்து புண்யா! வந்தேனே

2. நாதா உம்மால் பிழைப்பே னென்ற நன்னுரை நம்பி
தீதறக் கழுவ என்னைத் தேவா! வேண்டுகிறேன்

3. பூசையாய்ப் படைத்தே னென்னைப் புண்யா! உமக்கு
நாசப் பாவம் நீக்கி நவமா யாக்குவதற்கு

4. நானுமது நீரெனது நல்ல மீட்பரே!
வானுலக மேகிட நான் வழிகாட்டுவீரோ!

*K.S. Abraham*

## பாடல் 199: ஹா! என்ன நேசம்!

இராகம்: தன்யாசி தாளம்: ஆதி

பல்லவி

ஹா! என்ன நேசம்! அவர் கூர்ந்த பாசம்!
அதில் கொண்டேன் விசுவாசம்

அனுபல்லவி

பூமான் இயேசுவின் பொற் பதி வாசம்
புரிந்திடு மெனக் கதுவே மா சந்தோஷம்

1. மாமலைச் சிகரத்தில் மகிழ்ந்து நின்று நான்
தாழ்வரை யாவுங் காண்கிறேன்!
பாலுந்தேனும் பொங்கிப் பாய்ந்திடும் நதியும்
பரதீஸில் பார்க்கிறேன் அதின் கனியும்! - ஹா

2. தேவ அருள் பெற்று செழிக்கு தின்னாடு
ஜீவ கனிகளோடு;
நீதிபரன் தங்கும் நல் மோட்ச வீடு
நீடூழி வாழலாம் ஆறுதலோடு! - ஹா

3. மரணத்தைக் கடப்பேன் மகிமை நாடடைவேன்
மகிழ்ந்தங்கு வாழ்ந்திடுவேன்
தருணத்தைக் கழியேன் தாரணி தரியேன்
பரகதி சேர்ந்து நற்பங்கை நான் பெறுவேன்! - ஹா

4. இயேசு என் தேவே! இரங்கி இப்போதே
தாசனை ஏற்றுக்கொள்ளே!
பாசமாய் என்னுள்ளப் பாவங்கள் போக்கி
பரிசுத்த னாக்கிடும் பண்புடன் தூக்கி - ஹா

## பாடல் 200: நேச இயேசுவே

### My Jesus, I Love thee - 357

(Tune 565 of ESB)

1. நேச இயேசுவே நீரே என் நல் நண்பர்!
ஆதலால் பாவம் யாவும் வெறுக்கிறேன்
பிராண நாதரே நீரே என் நல் மீட்பர்!
முன்னிலும் இப்போ உம்மை நேசிக்கிறேன்

2. என்னை மீட்கக் குருசில் நீர் தொங்கினீர்
அதனாற்றான் உம்மை நான் நேசிக்கிறேன்
நான் கிரீடம் பெற நீர் முண்முடி சூண்டீர்
முன்னிலும் இப்போ உம்மை நேசிக்கிறேன்

3. துன்பமோ இன்பமோ உம்மை நான் விடேன்
ஜீவன் போமட்டும் உம்மையே போற்றுவேன்
மரணம் நெருங்கினாலும் நான் சொல்வேன்!
முன்னிலும் இப்போ உம்மை நேசிக்கிறேன்

4. சதாகால ஆனந்த மோட்சம் சேர்வேன்
அங்கே கீதம்பாடி உம்மைப் போற்றுவேன்
மின்னிடும் கிரீடம் வைத்து நான் பாடுவேன்
முன்னிலும் இப்போ உம்மை நேசிக்கிறேன்

*Ralph Featherstone*

## பாடல் 201: இயேசுவே உந்தன் ரூபமே

இராகம்: இந்துஸ்தானி தாளம்: ரூபகம்

1. இயேசுவே உந்தன் ரூபமே எந்தன்
கண்கட் கெத்துணை அழகாம்
சீஷனாம் நானும் உந்தனைப் போல
முற்றிலும் ஆக அருளும்

2. அன்பு மயமாய் உந்தனைக் கண்டோன்
உம்மில் அன்பற்றிருப்பானோ?
தன்னயம் நீக்கி சுத்தி செய்துமே
அன்பெனில் ஜ்வாலிக்கச் செய்யும்

3. பிதாவின் மகிமை யாவும் துறந்து
நரனாய் பூவில் வந்தவா!
பாதகன் நானும் தாழ்மை தனிலே
பரனைப் போல ஆக்குமேன்

4. பாவப் பரிகாரப் பலியாக
குருசில் தொங்கிய இயேசுவே
கோபிக்காமல் நான் மன்னித்திட
உம் ஆவியை ஈயும் அப்பனே!

5. வேத வாக்கியம் பாலியம் முதல்
நேசித்தாராய்ந்த ஞானியே
பக்தன் நானும் திருவசனத்தை
நித்தம் ஆராய்ந்தொழுகச் செய்

6. பெலவீனராம் சீடர்க்காவியின்
பெலம் ஈந்த தகைமை போல்
உலகெங்கும் சாட்சியாக நானும்
நிலைக்கத் தாரும் சக்தியே

## பாடல் 202: தூய தூய தூயரே

Holy, Holy, Holy, Lord God Almighty - 220

(Tune 748 of ESB)

1. தூய தூய தூயரே! சர்வ வல்ல தேவா!
உமக்கே காலை தோறும் சங்கீதம் ஏறுமே;
தூய தூய தூயரே! காருண்ய வல்லவா!
மூவ ரொன்றான பாக்ய த்ருத்வமே!

2. தூய தூய தூயரே! பரிசுத்தவான்கள்
தேவ ஆசனமுன்னர் தம் க்ரீடம் வைப்பாரே;
கேரூபீம் சேராபீம் தாழ்ந்து போற்றப்பெற்று
இன்றென்றும் வீற்றாள்வீர் அநாதியே!

3. தூய தூய தூயரே! ஜோதிப்ரகாசா!
பாவக் கண்ணால் உந்தன் மாண்பைக் காண யார் வல்லோர்?
நீரே பரிசுத்தர் வேறு யாருமிலர்
தூய்மை வல்லமை அன்பும் நிறைந்தோர்!

4. தூய தூய தூயரே! சர்வ வல்ல தேவா!
வானம் பூமி ஆழி உம்மைத் துதி செய்யுமே
தூய தூய தூயரே! காருண்ய வல்லவா!
மூவ ரொன்றான பாக்ய த்ருத்வமே!

*Reginald Heber*

## பாடல் 203: இயேசு முற்றாய் இரட்சியும்

Jesus, save me through and through - 430

(Tune 272 of ESB)

1. இயேசு முற்றாய் இரட்சியும்
வீண் என் பிரயத்தனங்கள்;
போதா தென் சுயரட்சை
சுத்தி செய்யும் முற்றும்

பல்லவி
முற்றுமாய் முற்றுமாய்
என்னை சுத்தம் செய்யும்;
மகிமை பாதையில் நான்
செல்ல சுத்தி செய்யும்

2. சோதனை பாவம் போக்கி
கர்வம் சுயம் நீக்கி;
முற்றாய் என்னை ரட்சித்து
புதுப்பியும் என்றும் - முற்றுமாய்

3. இன்ப துன்பத்தி னூடே
இயேசுவோடு பேசி;
என் நேசர் கரம் பற்றி
என்றும் நடந்திட - முற்றுமாய்

4. எந்த னுள்ளம் எண்ணமும்
மாமிசம் ஆவியும்;
இரட்சியும் அங்கமெல்லாம்
உம் மா! வல்லமையால் - முற்றுமாய்

*William Pearson*

## பாடல் 204: காட்டிடும் உம் முகத்தை

Christ whose Glory fills the skies - 412

1. காட்டிடும் உம் முகத்தை
உயிர்ப்பியு மென் சக்தி;
வான் நோக்கும் நிலம் போல் என்
ஆன்மா தேடு தும் க்ருபை
வாருமேன்! தாமதமேன்!
வந்திடு மென் ரட்சகா!

2. என்னுடன் நீர் வந்தல்லால்
என் காலை மந்தாரமே
கருணைக் கதிரின்றி
எந்தன் நாள் மா துக்கமே;
உந்தனின் ஒளி வீச
என்னுள்ளம் மகிழ்ந்திடும்

3. சந்திப்பீர் என் ஆன்மாவை,
நீக்குவீர் பாவ துக்கம்
போக்குவீர் அவிஸ்வாசம்
நிறையு மும் ஜோதியால்;
பூர்ணமாய் காட்டும் உமை
துலங்கும் நண் பகல் போல்

*Charles Wesley*

## பாடல் 205: இயேசு நேச மீட்பா!

Jesus precious Saviour - 499

(Tune 199 or ESB)

1. இயேசு நேச மீட்பா!
என்னை ரட்சித்தீர்
மாசு நீக்கி முற்றும்
சுத்தனாக்கினீர்
என்ன நேரிட்டாலும்
உம்மை சேவிப்பேன்
பொன்னகர் மன்னனாய்
கிரீடம் சூட்டுவேன்!

பல்லவி

ஆத்துமத்தைத் தாறேன்
என்ன நேரிட்டாலும்
முழு ஜீவன் தாறேன்
மாள்வோரை மீட்க!

2. சத்திரம் இருந்தே
உம்மைப் பின் செல்வேன்;
இத்தரை துன்பிலும்
நித்தம் பிரியேன்!
சொர்க்கத்தில் கிரீடம்
பெற்று நான் வாழ,
சிலுவைக் கஸ்தியும்
சகித்திடுவேன் - ஆத்துமத்தை

3. கஷ்டமோ நஷ்டமோ
கர்த்தா! விலகேன்
இஷ்டத்தோ டெவையும்
சகித்திடுவேன்;
துஷ்டப் பாவிகளை
துணிந் திழுக்க
தூய தைரியம் நீயே
தா வல்ல கோவே! - ஆத்துமத்தை

4. ஆத்துமாக்கள் நித்தம்
அழிகின்றாரே!
பார்த்துப் பெலன் தாரும்
போர் நான் செய்யவே!
சத்துரு நடுங்கி
சாத்தான் விழுவான்;
இத்தரையிலும்மை
முடி சூட்டுவேன் - ஆத்துமத்தை

*Harry Davis*

## பாடல் 206: தேவா என்னைப் படைக்கிறேன்

1. தேவா என்னைப் படைக்கிறேன்
இதோ என் யாவும் தாறேன்
உந்தன் மா நேசம் எந்தனை
பந்திப்பதினால்
என் நேசம் பாசம் யாவையும்
இதோ அங்கீகரியும்
உம்மால் காக்கப்பட்டென்றும் நான்
நிலைத்திருப்பேன்!

பல்லவி

ஜெயம்! ஜெயம்! அல்லேலூயா!
எனதெல்லாம் படைத்தேன்!
பூரண இரட்சிப்படைந்தேன்
மீட்பர் இரத்தத்தால்

2. என் மனம் சித்தம் யாவுமே
சந்தோஷமாய் நான் தாறேன்;
பூரணமாய் சுத்தஞ் செய்யும்
தீமையை நீக்கும்;
தாறேன் என் முழு ஜீவனை!
கேளும் என் விண்ணப்பத்தை!
உம் சொந்தம் ஆனதால் இப்போ
நான் படைக்கிறேன் - ஜெயம்

3. தேவா நான் உம் ஏவுதலால்
பூசையாய்ப் படைக்கிறேன்
இரத்தத்தால் வாங்கப்பட்டதால்
நம்பி ஜீவிப்பேன்;
நேச சர்வ வல்லவரே
எனக்கும்மைக் காட்டுமேன்
மரித்தும்மைப் பார்க்கும் மட்டும்
பாதை காட்டுமேன் - ஜெயம் *Attr. Lowell L. Mason*

## பாடல் 207: நேச இயேசுக்காக யாவையும் செய்வேன்

Anything For Jesus

(Tune 199 of ESB)

இராகம்: இயேசு நேச மீட்பா - 205

1. நேச இயேசுக்காக யாவையும் செய்வேன்
என்ன நேரிட்டாலும் பின்வாங்க மாட்டேன்
நற் போர் வீரனைப் போல் நிலைத்து நின்று
நேசர் கற்பனைகள் கைக்கொள்ள என்றும்

பல்லவி

இயேசுக் கென்று யாவும்
செய்வேன் நான் பின்வாங்கேன்;
நேச இயேசுக்காக
எங்கும் நான் செல்வேன்

2. யாவையும் வெறுத்தேன் என் இயேசுவுக்காய்
ஆவலாய்ச் சிலுவை எங்கு மவர்க்காய்
சுமந்து பின்செல்ல எந்தன் ஜீவ நாள்
பூசை இதோ தேவே! எப்போதும் நீ ஆள்! - இயேசு

3. எந்தக் காரியமும் உண்மையாய்ச் செய்வேன்
என்ன நேரிட்டாலும் மெய்யாய் சகிப்பேன்
பாவ அடிமைகள் இரட்சிப்படைய
தளரா வைராக்கியம் தந்திடும் என்னில் - இயேசு

## பாடல் 208: தீர்த்தார் பாவம் கூரொடித்து

The Glorious Fountain

(Tune 95 of ESB)

1. தீர்த்தார் பாவம் கூரொடித்து
சிறையை மீட்கிறார்;
இரத்தத்தினால் பாவந் தீர்த்து
இயேசு ஜீவன் தாறார்

பல்லவி

மா மகத்துவ ஊற்று!
எனக்காய்ப் பாயுது!

2. என்னை ஆளும் பாவத்தை நீர்
நிர்மூல மாக்குமேன்
காயத்தினில் பாயும் செந்நீர்
வல்லமை காட்டுமேன்!

3. ஆத்மம் தேகம் மற்றுமெல்லாம்
மெய்யாய்ப் படைக்கிறேன்
இம்மை செல்வம் அற்பப் புல்லாம்
உம்மைப் பெற வந்தேன்

## பாடல் 209: மீட்பரே! உம்மைப் பின் செல்ல

Jesus, I my cross have taken - 498

(Tune 378 of ESB)

1. மீட்பரே! உம்மைப் பின் செல்ல
சிலுவையை எடுத்தேன்;
ஏழை நான் பெரியோனல்ல
நீரே எல்லாம் நான் வந்தேன்

பல்லவி

உம்மைப் பின்செல்வேன் என் சுவாமி
எனக்காக நீர் மரித்தீர்;
எல்லாரும் ஓடினாலும்,
உமதன்பால் நான் நிற்பேன்

2. பெற்றார் உற்றார் ஆஸ்தி கல்வி,
மேன்மை லோகம் அனைத்தும்
அற்பக் குப்பை என்று எண்ணி,
வெறுத்தேனே முற்றிலும் - உம்மை

3. மெய்தான் லோகத்தார் பகைப்பார்;
உம்மை முன் பகைத்தாரே;
லோக ஞானிகள் நகைப்பார்
பயமேன் நீர் விடீரே! - உம்மை

4. சர்வ வல்ல தேவன் அன்பாய்
திடன் செய்வார் முன்செல்வேன்;
தேவ துரோகிகள் மா வம்பாய்
சீறினாலும் நான் வெல்வேன் - உம்மை

*Verses - Henry Francis Lyte*

*Chorus - J Elginbury*

## பாடல் 210: மீட்பா உம்மில் அன்பு கூர்வேன்

Precious Jesus, O to love thee! - 520

(Tune 372 of ESB)

1. மீட்பா உம்மில் அன்பு கூர்வேன்
நீர் என் சொந்த மாதலால்;
எந்தன் உள்ளம் முற்றும் தாறேன்
நான் உம் சொந்த மாதலால்

பல்லவி
நேச மீட்பா! நேச மீட்பா!
இயேசுவே! நீரே எல்லாம்!

2. சித்தம் காயம் எந்தனுள்ளம்
ஆவியால் நிறைந்திட;
கிருபையாய் ஏற்றுக் கொள்ளும்
என்றும் உம் சொந்தமாக! - நேச

3. வஸ்திரத்தின் ஓரம் தொட்டேன்
பயமின்றி என் கையால்
இரத்த ஊற்றினாலே பெற்றேன்
அருள் நேசர் பலத்தால் - நேச

4. நேச மீட்பா! உந்தன் அன்பு
நாவால் சொல்ல வொண்ணாதே!
முற்றும் சுத்தமாகும் என்று
சொன்ன உடன் ஆயிற்றே! - நேச

5. புது சிருஷ்டி யாகிறேன்!
ஜீவனோ டெழுகிறேன்
ஆத்துமா உயிர் பெற்றதால்
கிறிஸ்தும் நானும் சொந்தமே! - நேச

*Anon*

## பாடல் 211: உம்மை நேசிப்பேன் உரித்தாய்

Let me love thee - 503 (Tune 439 of ESB)

1. உம்மை நேசிப்பேன் உரித்தாய்
உள்ளம் அனைத்தும் கேட்டீர்;
தருவேன் உயிரோடெல்லாம்
என் நேசத்தை மூட்டுவீர்!
நீர் மகிழ்ந்திட சுமக்கும்
பாரம் லகுவாயிடும்;
உம் சமூகம் எத்துக்கமும்
இன்பமாக மாற்றிடும்!

பல்லவி
மீட்பா! உம்மை என்றும்
நேசிக்கும் என்னுள்ளம்
உந்தன் தயை ஒன்றே
என் ஆவியைத் தேற்றும்!

2. உம்மை நேசிப்பேன் காட்டும் உம்
மகத்துவ வல்லமை!
கல்வாரிக் காட்சியால் மாற்றும்
என் சந்தேகங்களையே!
பாவத்தால் வந்த வெட்கத்தை
உமதன்பு பார்க்கலை!
எனக்கு மன்னிப்பளிக்க
ஏற்றீர் எத்தனை வாதை! - மீட்பா

3. உம்மை நேசிப்பேன் என் உள்ளம்
களிகூரும் அப்போதான்!
இன்பத்திலும் துன்பத்திலும்
உம்மண்டை ஒதுங்குவேன்!
நேசத்தால் துக்கங் குறையும்!
நேசத்தால் கவலை போம்!
நேசம் திகையாது நம்பும்!
நேசம் துணிந்து வெல்லும் - மீட்பா

*Herbert H. Booth*

## பாடல் 212: எப்படி மேலாய்ப் பணி செய்வேன்

1. எப்படி மேலாய்ப் பணி செய்வேன்?
எனக்கு செய்தது ஏராளமே
என் பிரயாசம் பெலனற்றதே
என் ஜீவியம் உம்மைக் கூறட்டும்

பல்லவி

இந்நேரத்தில் சிலுவையில்
உயிர்ப்பிக்கும் வல்லமையிடத்தில்
உதவியற்று வாறேனே நான்
உம் பணிக்காய்த் தகுதியாக்கும்

2. சத்தம் கேட்க காது மந்தம்
சேவிக்க கரம் தாமதம்
கல்வாரி மேட்டின் பாதை செல்ல
என் கால்களுக்கு பலமில்லை

3. பெலவீனத்தில் பெலன் தாரும்
பார்வை தாரும் கண் மயங்கும் போது
நம்பிக்கை தாரும் சந்தேகத்தில்
உண்மையாய் நான் உம்மை சேவிக்க

*Translated by: Daniel J. Raj*

## பாடல் 213: இயேசுவுக்காயென்னை முற்றும்

1. இயேசுவுக்கா யென்னை முற்றும் தத்தஞ் செய்தேனே!
நேசித் தவரோடு என்றும் சுகித்திருப்பேனே!

2. லோக ஆசா பாசமெல்லாம் நான் வெறுத்தேனே;
ஏகனே! யேசுவே! என்னை ஏற்றுக் கொள் கோனே!

3. என்னை உந்தன் சொந்தமாக ஆக்கிக்கொள்வாயே;
உன்னைச் சேர்ந்தோனென்றுன்னாவி சொல்லச் செய்வாயே!

4. மீட்பா! உனதன்பா லென்னை நிறைத்து வைப்பாயே
தீட்பில்லாதுன் ஆசி என்மேல் தரிக்கச் செய்வாயே!

5. பூரண இரட்சையளித்தீர் போற்றுகின்றேனே;
தாரணியி லுன் சேவையைத் தான் புரிவேனே

*K.S. Abraham*

## பாடல் 214: வாரீரோ தேவா

இராகம்: கல்யாணி தாளம்: ரூபகம்

பல்லவி

வாரீரோ தேவா! என்னண்டை!

அனுபல்லவி

என தாத்மா வாடு தும்மைத் தேடித் தேடி

சரணங்கள்

1. நேசா யுன தருளுக்காக
நீசன் வேண்டுறேன் நீ கேட்க;
தீரா தெந்தன் தீமை போக்க
தீயோனை உன்னைப் போலாக்க - வாரீரோ

2. கள்ளமில்லா மனது கொண்டு
கர்த்தா! உன் சித்தம் நான் கண்டு;
தள்ள இம்மைக் குப்பை என்று
தா வுன்னரு ளெனக் கின்று! - வாரீரோ

3. உன்னருகை நா னடைந்து,
ஒழுகச்செய் யருள் புரிந்து;
அண்ணல் காலடிகள் கண்டு
திண்ணமாய்ப் பின்செல்வேன் நன்று! - வாரீரோ

4. சத்துருவை ஜெயித்த நாதா!
சித்தங் கலங்காத தீரா!
நித்தம் போரை நான் ஜெயிக்க
கர்த்தா! சக்தி தா சிறக்க - வாரீரோ

5. சீயோன் மலை மீதி னின்று
தூதர் உம்மை ராஜாவென்று
நேயமாய்ப் பணிவதென்று
சேயனும் போற்றுவேன் நன்று! - வாரீரோ

*K.S. Abraham*

## பாடல் 215: பிரித்துச் சேர்த்தார் கிறிஸ்து

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

பல்லவி

பிரித்துச் சேர்த்தார் கிறிஸ்து அவரோடு - நான்
தரித்திருக்கும்படிக்குத் தயவோடு

அனுபல்லவி

பரத்தில் நான் ராஜனாய்ப் பயணஞ் செய்திடவும்
பரிசுத்த ஊழியப் பணி புரிந்திடவும்!

சரணங்கள்

1. என்மே லவர் கூர்ந்திட்டார் இனிதன்பு - நான்
பொன்னேசுவில் கொண்டிட்டேன் மெய்யன்பு!
மன்னனார் போக்கினா ரென் பாவத்துன்பு!
மாசற என்னுள்ளம் ஆக்கினார் நம்பு! - பிரித்து

2. கண்டேன் நான் அவர் நன்மை கணக்கில்லை - அதை
விண்டா லதிசயம் இது உண்மை;
கொண்டா ரென் னுள்ளத்தைக் கோமான் தன் பதியாய்
என்றும் நாங்களொன்றாயிருந்திட இசைவாய் - பிரித்து

3. துட்டப் பேயைத் துரத்தித் துணை செய்வார்!
மட்டற்ற விடுதலை பெறச் செய்வார்!
கிட்டிவரும் அம்பையும் தட்டி விடுவார்!
கீழே விழா தென்னைத் தாங்கியும் கொள்வார் - பிரித்து

## பாடல் 216: பாதம் படைத்தேனே

இராகம்: சாமம் தாளம்: ஆதி

பல்லவி

பாதம் படைத்தேனே பலியாக என்னைத்தானே
பாசமாய் ஏற்றுக்கொள் கோனே! - பெருமானே

அனுபல்லவி

ஆதரவானதல்ல - ஆவி தேகமு மெல்லாம்

சரணங்கள்

1. மாதா பிதாவும் முன்னே - மதளைப் பிராயமண்ணல்
பாதம் படைத்து என்னை - பரனுக்கு ஈந்தோமென
செய்த தத்தத்தின் பின்னே - திரும்பவும் ஏழை என்னை - பாதம்

2. அந்தகாரத்தினின்றும் அடிமைத்தனத்தினின்றும்
இன்பங் காட்டியே துன்பம் இயக்கு வஞ்சத்தினின்றும்
சொந்த இரத்தத்தைச் சிந்தி தூக்கி இரட்சித்தா யென்று - பாதம்

3. ஆத்துமா, ஆவி, தேகம், ஐம்புலன், ஆசை, யூகம்
பூர்த்தி, மனம், விவேகம் - பொருள் மனை மக்களகம்,
நேர்த்தி, பெலம், சுகம் - நிகழ் சம்பவங்கள் யாவும் - பாதம்

4. உத்தம சேவை செய்ய - ஊக்கமாய் போர் புரிய
அத்தன் பாதத்தில் பாவ ஆத்துமாக்களைச் சேர்க்க
மத்தியஸ்தனைப் போல மாதிரியாக வாழ - பாதம்

5. அண்ணல் கிறிஸ்தரசே! - அடியேனை மீட்டவரே!
என்ன பாடுபடவும் - என்னை ஒப்புவித்தேனே!
மண்ணில் மயங்காமலே - மறுமைக்குள்ளாகி வைக்க - பாதம்

## பாடல் 217: இரட்சகா! உம்மை நான்

பல்லவி

இரட்சகா! உம்மை நான் பின் செல்லுவேனே,
எத்தனை பாடுகள் பட்டீர் எனக்காய்!

சரணங்கள்

1. சாத்தான் தன் தந்திர வலை வீசினாலும்
உம் பலத்தாலே நான் தப்பிச் செல்வேனே - இரட்சகா

2. உலகம் தன் சிற்றின்ப ஆசை காட்டிடினும்
எல்லாம் அற்பக்குப்பை என்றுதைப்பேனே - இரட்சகா

3. பெற்றார் உற்றார் வந்து உரிமை செய்தாலும்
நீரே போதும் என்று சொல்லி நிற்பேனே - இரட்சகா

4. பகைவர் கூடி என்னைச் சிறையில் வைத்தாலும்
இரட்சகா! அங்கும்மைப் பிரஸ்தாபிப்பேனே - இரட்சகா

5. எனக்காக வேதனைப்பட்ட என் நாதா;
உமக்கென்றுழைத்து மரிக்க அருளேன் - இரட்சகா

6. உமக்காக என்னைக் கல்லெறிந்து கொன்றாலும்
ஸ்தேவான் போல் மரிக்கக் கிருபை கூர் ஐயா - இரட்சகா

7. பாவிகளை உந்தன் பதம் சேர்க்கவே நான்
ஆசையாய் யுத்தத்தில் சாக அருளேன் - இரட்சகா

## பாடல் 218: பின் செல்வேன் என் மீட்பரே

இராகம்: தன்யாசி தாளம்: ஆதி

பல்லவி

பின் செல்வேன் என் மீட்பரே - நானும்மைப்
பின் செல்வேன் என் மீட்பரே

அனுபல்லவி

நான் செய்த பாவங்கள் நின் தயவால் தீர
நாதா ஜீவன் விட்டாய் வன் குருசில் அதால்

சரணங்கள்

1. என் சிலுவையை எடுத்தேன் - எல்லாம் விட்டு
என்றும் நின்னையே அடுத்தேன்
நின் திருப்பாதத் தடங்களை நோக்கி நான்
நித்தமும் சென்று உம் சித்தம் என்றும் செய்து - பின்

2. சிங்கம்போல கெர்ச்சித்தே - எந்தன் நேசரே
சீறி மிக வெதிர்த்தே
கங்குல் பகலும் தீ அம்பு என்மேல் எய்யும்
கடியின்மேல் ஜெயம் பெற்று அடியேன் நின்னருள் பெற்று - பின்

3. நெருக்கஞ் செய்தால் மனுஷர் - அதென்னை உன்
நெஞ்சண்டை யோட்டுவதாம்;
கருக்கான சோதனை கடினமாய் வதைத்தாலும்
உருக்கமுள்ளோனே! உனை ஒருபோதுமே விடேன் - பின்

## பாடல் 219: பாதகனாய் நானலைந்தேன்

1. பாதகனாய் நானலைந்தேன்
பாவியென்றுணரா திருந்தேன்
தத்தளிக்கும் ஏழை வந்தேன்
சத்தியரே யாவும் தந்தேன்

2. மன்னா உந்தன் விண்ணை விட்டு
மண்ணில் வந்து பாடுபட்டு,
மரித்தடக்கம் பண்ணப்பட்டு
உயிர்த் தெழுந்தீர் என்னை யிட்டு

3. உந்தன் பாடு கஸ்தியால் தான்
வந்த தெந்தன் பாக்கிய மெல்லாம்
இம்மைச் செல்வம் அற்பப் புல்லாம்
உம்மைப் பெற விட்டே னெல்லாம்

4. சிரசுக்கு முள்ளால் முடி,
அரசின் கோல் நாணல் தடி!
நீர் குடிக்கக் கேட்டீர்! ஓடி
ஓர் பாதகன் தந்தான் காடி

5. கெத்சமனே தோட்டத்திலே
கஸ்தி பட்ட என் அண்ணலே!
அந்த ஆவி உள்ளத்திலே
வந்தால் வெல்வேன் யுத்தத்திலே

## பாடல் 220: என் வாஞ்சை தேவாட்டுக்குட்டி

I thirst; Thou wounded Lamb of God - 424

(Tune 15, 48 of ESB)

1. என் வாஞ்சை தேவாட்டுக்குட்டி,
உம் இரத்தத்தால் சுத்தி செய்யும்
சிந்திப்பேன் தம் காயத்தையே,
நீங்கும் நோவு மரணமும்

2. எந்தன் ஏழை உள்ளத்தை நீர்
சொந்தமாய் கொள்ளும் உமக்கே!
என்றும் தங்கிடும் என்னுள்ளில்
அன்பால் பந்தம் நிலைக்கவே

3. தம் காயத்தில் தஞ்சம் கொண்டோர்
தம் ஜீவன் பெலனும் காண்பார்
தம்மில் ஜீவித்துப் போர் செய்வோர்,
தம்மை யண்டி பாக்கியராவார்

4. வெற்றி வேந்தராம் இயேசுவே,
தாழ்ந்து பணிகிறோம் உம்மை
தந்தோம் எம் உள்ளம் கரங்கள்
தமக்கென் றுழைத்துச் சாவோம்

*Translated by John Wesley*

## பாடல் 221: இயேசுவுக்காய் யாவற்றையும்

All to Jesus I surrender - 474

(Tune 377 of ESB)

1. இயேசுவுக்காய் யாவற்றையும்
ஒப்புவிக்கிறேன் இப்போ,
நேசித்தவர் சமூகத்தில்
ஜீவிப்பேன் நம்பி என்றும்

பல்லவி

ஒப்புவிக்கிறேன் (2)
இரட்சகரே என் யாவையும்
ஒப்புவிக்கிறேன்

2. இயேசுவுக்காய் யாவற்றையும்
ஒப்புவிக்கிறேன் இப்போ
லோக இன்பங்கள் வெறுத்தேன்
இயேசுவே ஏற்றுக்கொள்ளும் - ஒப்புவிக்கிறேன்

3. இயேசுவுக்காய் யாவற்றையும்
ஒப்புவிக்கிறேன் இப்போ
இரட்சகரே முற்றும் என்னை
உம் சொந்தமாக ஆக்கும் - ஒப்புவிக்கிறேன்

4. இயேசுவுக்காய் யாவற்றையும்
ஒப்புவிக்கிறேன் இப்போ
அன்பினால் முற்றும் நிறைந்து
ஆசீர்வாதம் அருளும் - ஒப்புவிக்கிறேன்

5. இயேசுவுக்காய் யாவற்றையும்
ஒப்புவிக்கிறேன் இப்போ
பூரண இரட்சை அடைகிறேன்
தேவனுக்கே மகிமை - ஒப்புவிக்கிறேன்

*Judson Van de Venter*

## பாடல் 222: நான் கிறிஸ்து பிட்ட அப்பமும்

My Life must be Christ's broken bread - 512

(Tune: Louis Spohr - 135)

1. நான் கிறிஸ்து பிட்ட அப்பமும்
என் அன்பு ரசமாய்
நிறைந்த பாத்திரம் பந்தி
அவர் நாமத்திலே
பிறர் உண்டு புத்துணர்வாய்
வாழ்வில் பங்கு பெற

2. என் எல்லாம் எஜமான் கையில்
ஸ்தோத்தரித்துப் பிட்க
நதிக்கப்பால் அவர் கஸ்தி
அதுவே என் பாதை
அவரின் அன்பிற்காய் எல்லாம்
தர தீர்மானித்தேன்

3. கர்த்தர் தாங்கும் தயவில் நான்
உம்மில் பகிர்ந்திட
பயனுள்ள வேதனையில்
மரித்து ஈவானீர்
உம்மோடு மரித்து மீண்டும்
உயிர்த்து வாழவே

*Translated by Daniel J. Raj*

## பாடல் 223: என்னை ஜீவ பலியாய்

இராகம்: சங்கராபரணம் தாளம்: திரிசுரம்

பல்லவி

என்னை ஜீவ பலியாய் ஒப்புவித்தேன்
ஏற்றுக்கொள்ளும் இயேசுவே

அனுபல்லவி

அன்னை தந்தை யுந்தன் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்த மல்லாது இப்போது

சரணங்கள்

1. அந்தகாரத்தினின்றும் பாவப் பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த இரத்தக் கிரயத்தால் என்னை மீட்ட
எந்தையே உந்தனுக்கிதோ! படைக்கிறேன் - என்னை

2. ஆத்ம சரீரமதை யுமக்கு
ஆதீனமாக்கி வைத்தேன்
பாத்ரமதாயதை பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கிறேன் கருணை செய் தேவா! - என்னை

3. நீதியினாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேனுமக்கு
ஜோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் எந்தன் சரீரத்தை - என்னை

## பாடல் 224: பிரித்தெடுக்கப்பட்டேன்

I'm set apart for Jesus - 495

(Tune 257 of ESB)

1. பிரித்தெடுக்கப்பட்டேன்
இயேசுவுக்காகவே,
ராஜன் ஆசார்யனுமாய்
அவரில் ஜீவிப்பேன்
தீமை யாவையும் விட்டு
சுத்தனாக்கப்பட்டேன்
முற்றிலும் ஒப்புவித்தேன்
என்னை தேவனுக்காய்

\

2. பிரித்தெடுக்கப்பட்டேன்
இயேசுவுக்காகவே,
என் இதய ஆலயம்
தம் பீடமாக்கினார்;
எமதைக்யம் எவரும்
பிரிக்க வொண்ணாதே,
ஜீவிப்பேன் நித்தியமாய்
அவர் வல்லமையால்

3. பிரித்தெடுக்கப்பட்டேன்
இயேசுவுக்காகவே,
அவரோடென்றும் தங்க
ஜெய ஆவி தாறார்;
வல்லமை தந்து காத்து
வழி நடத்துகிறார்
மேற்கொள்வேன் உலகை நான்
அவர் வல்லமையால்

*William Pearson*

## பாடல் 225: கட்டளை நான் காக்க

A charge to keep I have - 472

(Tune 165, 178 of ESB)

1. கட்டளை நான் காக்க
தேவனை துதிக்க
அழியா ஆத்மாவை மீட்டு
ஆக்க நித்தியத்திற்காய்

2. இன்றைச் சேவை செய்ய
விளி நிறைவேற்ற;
என் முழு பெலத்தோடு நான்
தேவ சித்தம் செய்ய

3. காத்துக் கொள்ளும் தேவா
உம்மில் ஜீவிக்கவே
ஆயத்தம் செய்திடும் என்னை
உம் தீர்ப்பில் நிற்கவே

4. காத்து ஜெபித்திட
சார்ந்துமில் ஜீவிக்க;
என் விசுவாசம் நிலைக்க
என்றும் அருள் செய்வீர்

*Charles Wesley*

## பாடல் 226: விண்ணரசர் பாதம் வீழ்ந்து

Praise my soul - 17

(Tune 422 of ESB)

1. விண்ணரசர் பாதம் வீழ்ந்து
என் ஆத்மமே போற்றிடு
மன்னித்து சீராக்கி மீட்ட
கர்த்தர் போல் வேறாருளர்?
போற்றிடுவோம்! போற்றிடுவோம்!
நித்திய ராஜ ராஜனை

2. நம் முன்னோர்கள் மேலே அவர்
கிருபை தயை கூர்ந்தாரே;
நேற்றும் இன்றும் என்றும் மாறார்
சிட்சித் தாசீர் வதிப்பார்,
போற்றிடுவோம்! போற்றிடுவோம்!
மகிமைப் பிரதாபரை

3. தந்தைபோல் இரங்கும் கர்த்தர்
நம் உருவம் அறிவார்
தம் கையால் தாங்கியே மீட்பார்
சத்துரு பயம் நீக்குவார்
போற்றிடுவோம்! போற்றிடுவோம்!
அவர் கிருபை பெரிதாம்

4. வான தூதர் போற்றுகின்றீர்
நீவிர் நேரில் காண்பீரே
சூர்ய சந்திரன் தாள்பணிய
மாந்தர் நீரும் போற்றுமே
போற்றிடுவோம், போற்றிடுவோம்
கிருபை தேவனை என்றும்

*Henry Francis Lyte*

## பாடல் 227: நீரழைக்க நானெழுந்து

Mine to rise when thou dost call me - 510

(Tune 378, 386 of ESB)

1. நீரழைக்க நானெழுந்து
வாணாளெல்லாம் பின் செல்வேன்
பாதை யெல்லாம் நீரறிவீர்
நடத்துவீர் உம்மண்டை;

பல்லவி

உம் சொந்தம் ஓ! கர்த்தா நானும்
அந்தம் வரை பின் செல்வேன்
இரட்சகா நீர் எந்தன் சொந்தம்
நேசர் நண்பர் அன்பர் நீர்

2. பின் செல்வேன் அந்தன் போல நான்
முன் செல்வீர் கிறிஸ்துவே
தடைகள் நான் எண்ணி நிற்க
திறப்பீர் நீர் வாசலை - உம் சொந்தம்

3. தோல்வியில் புன்னகை கொள்ள
துணை செய்து மகிழ்விப்பீர்;
மாராவில் நான் குடிக்கையில்
ருசிகர மாக்குவீர் - உம் சொந்தம்

4. முத்திரிப்பும் வெளிப்பாடும்
உமதே என் ஆண்டவா!
தாறேன் என் ஆன்மா உடலும்
எனதல்ல உமதே - உம் சொந்தம்

*Susie Swift*

## பாடல் 228: இயேசுவை நம்புவோருக்கு

All things are possible - 407

(Tune 505 of ESB)

1. இயேசுவை நம்புவோருக்கு
செய்யவொண்ணா தொன்றில்லையாம்;
பயமின்றி உந்தன் வாக்கு
தேவே ஏற்றுக்கொண்டோமே நாம்;
விசுவாசித்தேன் என் தேவனே;
செய்யவொண்ணா தொன்றில்லையே!

2. மகா வருத்தமானதாம்
நான் பாவமுற்றிருப்பது
நம்பிக்கையா லிதாகுமாம்
இயேசுவின் சத்ய வாக்கிது!
விஸ்வாசித்தேன் என் தேவனே;
பெறவொண்ணா தொன்றில்லையே!

3. விஸ்வாசம் நீர் பூரிப்பதால்
உம் சாயலைப் போலாகுவேன்
செய்கை எண்ணம் வசனத்தில்
இடறலின்றி ஜீவிப்பேன்
துஷ்டரோ பேயோ சீறட்டும்
எனக்கேலாதொன் றில்லையாம்!

4. சர்வ வல்லவர் தேவனே!
மானிடர் பலன் கிறிஸ்துதான்
நான் புதிதான வுடனே
கிறிஸ்துவினால் பிரகாசிப்பேன்
பாவம் வெல்லும் ஆன்மத்திற்கே
வெல்லவொண்ணா தொன்றில்லையே!

*Charles Wesley*

## பாடல் 229: வேண்டுமே விஸ்வாசம்

I want the faith of God - 733

(Tune 180 of ESB)

1. வேண்டுமே விஸ்வாசம்
நீங்கவே பர்வதம்
ஆண்டவரேசு இரத்தத்தில்
அன்பின் பக்தி தேவை

2. இயேசு தம் தாசர்க்கு
ஈந்த நல் விஸ்வாசம்
மோச உலகத்தை விட்டு
மோட்ச வீடு சேர்க்கும்

3. ஆனந்தமா யென்றும்
அரும் பாரந்தாங்கும்;
வான பிதாவின் கண் கண்டு
வாழ்த்தும் பக்தி தேவை

4. அசையா விஸ்வாசம்
ஆக்கும் இரட்சை நிசம்!
அதுவே மோட்ச நங்கூரம்
ஆடாது அந்நேரம்

5. அன லொளி தரும்
அவ் விஸ்வாசம் தாரும்
தினம் எனக்கது தேவை
தீர்க்கமா யுழைக்க

*William Pearson*

## பாடல் 230: நம்பிடுவேனெந்நாளும்

Simply trusting every day - 754

(Tune 299 of ESB)

1. நம்பிடுவே னெந்நாளும்
துன்பம் துயரானாலும்;
எந்தன் இயேசு நாதனை
அந்தம் மட்டும் பற்றுவேன்!

பல்லவி

நேரங்கள் பறந்தாலும்
நாட்கள் தான் கடந்தாலும்
என்ன தான் நேரிட்டாலும்
இயேசுவையே நம்புவேன்

2. ஏழை எந்தன் நெஞ்சிலே
வாழ்கிறார் சுத்தாவிதான்
பாதை காட்டி எந்தனை
பாதுகாத்துக் கொள்கிறார் - நேரங்கள்

3. பாடுவேன் என் பாதையில்
பிரார்த்திப்பேன் என் தொல்லையில்
கேடு வரும் போதும் நான்
கிட்டி இயேசை நம்புவேன் - நேரங்கள்

4. ஜீவிக்கின்ற காலமும்
சாகும் அந்த நேரமும்
சேரும் மோட்ச வீட்டிலும்,
இயேசுவையே நம்புவேன் - நேரங்கள்

*Edgar Page Stites*

## பாடல் 231: மலை போன்ற துன்பம்

### Give me the faith - 720

(Tune 491 or 503 of ESB)

1. மலை போன்ற துன்பம் நீக்கும்
விஸ்வாசத்தை எனக்கீயும்
தேவாளுகை ஓங் காசிக்கும்
நேயா! ஜெப ஆவி ஈயும்
உமதன்பால் எனதுள்ளம்
மூழ்க நேசா! ஊற்றும் வெள்ளம்

2. வீணாய்க் காலம் கழிக்காமல்,
என் மீட்பரை அறியாதோர்
இருளில் மாண்டு போகாமல்
மீட்பைப் பெறக் கிருபை கூர்;
பாவாத் மாக்கள் மனம் மாற
நிர்ப்பந்தர் இயேசுவைச் சேர!

3. நானும் என் எல்லாம் உமக்கு
பூசையாய்த் தாறேன் கர்த்தரே
மீட்பர் அன்பறியாதோர்க்கு
இரட்சிப்பைக் கூற இயேசுவே!
மன்னிக்கும் தெய்வத்தைச் சேர!
பாவிகளின் மனம் மாற

*Charles Wesley*

## பாடல் 232: தத்தளிக்கும் ஏழை என்னை

Blessed Lord, in Thee is refuge - 713

(Tune 410, 417 of ESB)

1. தத்தளிக்கும் ஏழை என்னை
தற்காத்திடும் ஐயனே!
தொய்ந்து ஆடும் என் சிரசை
தாங்கப் பெலன் தாருமேன்!
நம்பி இதோ!
என்னைத் தத்தஞ் செய்கிறேன்

2. புசல் காற்றுச் சீறும் நாளில்
நம்பாமல் நான் திகைத்தேன்;
கண்ணால் காணாக் காட்சிகளில்,
உள்ளம் நிற்க ஜெபித்தேன்
நேச மீட்பா!
உம்மை நம்ப ஏவுமேன்

3. ஜெயம் பெறும் நம்பிக்கையை
என்னில் உயிர்ப்பியுமேன்;
போர் அகோர நாள் என்னண்டை
நீர் நிற்ப துணர்த்துமேன்;
தோல்வி காணா
நம்பிக்கையால் ஜெயிப்பேன்!

*Herbert H. Booth*

## பாடல் 233: என் மீட்பர் உயிரோடிருக்கையிலே

இராகம்: இந்துஸ்தானி தாளம்: ஆதி

பல்லவி

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்ன குறை உண்டு நீ சொல் மனமே!

சரணங்கள்

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்
விண்ணுல குயர்ந்தோர் உன்னதம் சிறந்தோர்
மித்திரனே சுக பத்திரமருளும்! - என்

2. பாவமோ மரணமோ நரகமோ பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்
சாபமே தீர்த்தோர் சற்குரு நாதன்
சஞ்சல மினியேன்? நெஞ்சமே மகிழாய்! - என்

3. ஆசி செய்திடுவார் அருள் மிக அளிப்பார்
அம்பரந்தனில் எனக்காய் ஜெபிப்பார்,
மோசமே மறைப்பார் முன்னமே நடப்பார்
மோட்ச வழி சத்திய வாசல் உயிரெனும்! - என்

4. கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கடைசி மட்டும் கைவிடாதிருப்பார்
பாவ மன்னிப்பளிப்பார் பாக்கியம் கொடுப்பார்
பரம பதவியினுள் எந்தனை எடுப்பார்! - என்

எழுதியவர் ஞா. சாமுவேல்

## பாடல் 234: நம்பி என் இயேசுவிலே

இராகம்: காம்போதி தாளம்: மிஸ்ரசாப்பு

பல்லவி

நம்பி என் இயேசுவிலே - நானென்றென்றும்
தங்கி இருப்பேனே!

அனுபல்லவி

அன்பன் திரு ரத்தமுமவர் நீதியும்
எந்தன் பற்றென்று பிடிப்பேனெந்நாளிலும்

சரணங்கள்

1. அந்தகாரம் வந்தாலும் - அவர் முகம்
கண்டு மகிழ்வேனே!
எந்தப் புசலிலும் எந்தனின் நங்கூரம்
தந்தை என் இயேசுவில் பந்தித்து நின்றிடும் - நம்பி

2. தேவத் திருவாக்கும் உதிரமும்
தினமும் எனைக் காக்கும்
பூவலகழிந்து போய்விட்டதானாலும்
ஆவலோ டேசுவை அண்டுவேன் எந்நாளும் - நம்பி

*K.S. Abraham*

## பாடல் 235: எந்தன் விசுவாசம்

இராகம்: இந்துஸ்தானி தாளம்: ரூபகம்

(வருபாவியை என்ற மெட்டு)

1. எந்தன் விசுவாசம் உமை
நோக்கு தேசு தேவே!
உந்தன் ஆசிதனையே வேண்டி
ஓயுதில்லை கோவே!

2. என் நம்பிக்கை சிறிதாயினும்
உம்மை விட்டு விடுமோ?
பொன்னேசுவே உமை முற்றுமாய்
பெறாதிருந்திடுமோ?

3. தள்ளாடும் என் கையோடும்மைத்
தாவிப் பற்றுறேனே
வள்ள லும தன்பைப் பெற்று
வாழ்வேன் நிதந்தானே!

4. நிச்சயமாய் இயேசு உம்மை
நிதமும் விடமாட்டேன்;
அச்சமில்லை என் நங்கூரம்
அசையாதுமில் தொடுத்தேன்!

*K.S. Abraham*

## பாடல் 236: கர்த்தா! உந்தன் சொந்தம் நானே

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

1. கர்த்தா! உந்தன் சொந்தம் நானே,
நித்த முனில் சுகிப்பேனே;
சுத்திபெற என்னிதயம்
சொரிந்தீர் நீர் உம் உதிரம்!

2. பாவி பெற்றேன் பரம மகிழ்
தேவே! இதுன் அன்பின் திரள்;
கோவே! நான் கொண்டுன்னருள்
குணமடைந்தேன் இதயந்தனில்

3. என்மேல் நீர் கொண்ட நேசம்
யாருங் கூறாததி நேசம்;
உன்னத வீடதின் வாசம்
மன்னா! ஈவீர் சந்தோஷம்

4. இந்த நல்ல பாக்கியங்கள்
எந்தனுக்குத் தந்தீரைய்யா;
சொந்த சுகம் பெலன், தனங்கள்,
சுவாமி உமக்கீந்தேன் மெய்யாய்!

*K.S. Abraham*

## பாடல் 237: தம் மக்கள் காக்கிறீர்

Lord Jesus thou dost keep Thy child - 741

(Tune 467, 468 of ESB)

1. தம் மக்கள் காக்கிறீர், கர்த்தா
பொங்குந் துயர் களிப்பிலும்
நம்புகிறேன் உம்மில்;
தம் மீட்பின் சக்தி அற்புதம்,
தந்தீர் யாவும் கல்வாரியில்
அவ்வன்பு உமதே

2. துதிப்பேன் இரட்சகர் உம்மை
பாடுவேன் என் புதுப் பாட்டை
உரைப்பேன் உம் குணம்,
அளவற்றதும் கிருபை
ஒளி மங்கிடா தும் முகம்
தாறீர் உமதுள்ளம்

3. தம் வாக்கை நம்பி நிற்கிறேன்
தம் வல்லமை தனிலும்
தம் கரம் தேற்றிடும்
தம் வாக்கால் ஜெயம் பெறுவேன்
தாமே எல்லாப் புகழும்
தமதே ஜெயமும்!

4. பூரணமாக்கும் உம் அன்பு
பூர்ண விடுதலை தரும்;
தாங்கும் உம் கிருபை
மங்கா நம்பிக்கை இன்பமும்
தம் பூரண வல்லமையும்
தம்மில் என தேயாம்!

## பாடல் 238: சோதனைக் கிணங்கேல்

Yield not to temptation - 823

(Tune 579 of ESB)

1. சோதனைக் கிணங்கேல் இணங்கல் பாவம்
சோதனை ஜெயித்தால் பின் வரும் ஜெயம்
தைரியமாய் முன்செல் இச்சை அடக்கி
இயேசுவை நோக்கிப்பார் காப்பார் அந்தம் வரை

பல்லவி

இரட்சகரை நீ கேட்டால் ஆவலாய் துணை செய்வார்;
தேற்றி பெலனை ஈவார் காப்பார் அந்தம்வரை

2. முற்றாய்ப் படைத்திடு தேவனுக்குன்னை
முற்றுமாய் இரட்சிப்பார் தம் இரத்தத்தாலே;
விழித்திருந்திடு மெய் ஜெபத்துடன்
இயேசுவை நோக்கிப்பார் காப்பார் அந்தம்வரை - இரட்சகரை

3. ஜெயம் பெற்றோருக்கு ஈவார் கிரீடம்
ஜெயம் நிச்சயமே அதைரியம் வந்தாலும்
ஈவார் புது பெலன் நமது மீட்பர்
இயேசுவை நோக்கிப்பார் காப்பார் அந்தம்வரை - இரட்சகரை

*Horatio R Palmer*

## பாடல் 239: ஓர் ஏழை வீட்டில் நான் சென்றேன்!

Tune: I bring to thee my heart - 489 & 463 of ESB

1. ஓர் ஏழை வீட்டில் நான் சென்றேன்!
அங்கே மா இன்பம் நான் கண்டேன்
தரித்திரர் ஆனாலும்
சொன்னாள் அங்குள்ள விதவை;
என்னின்பத்திற்கு உதவி
இயேசு எனதெல்லாம்

பல்லவி

இயேசுவே எனதெல்லாம்
ஆம்! இயேசுவே எல்லாம்

2. இரட்சிப்பை மற்றோர்க்குச் சொல்ல
துன்பப் பாதையில் தாம் செல்ல
தத்தம் செய்தோர் எல்லாம்
தாகம் பசி சுவை யில்லை
என்றார் எம் இன்பக் கன்மலை
இயேசு எனதெல்லாம் - இயேசுவே

3. மூர்க்கர் வெறியர் மத்தியில்
மீட்பரின் நேசம் சொல்கையில்
பட்ட துன்பம் பார்த்தோம்!
ஆனால் அவர்கள் வதைகள்
மா இன்பமாய்ச் சகித்தார்கள்
அவர்க் கேசு எல்லாம் - இயேசுவே

4. மரண நதி நெருங்கி
நோய்கள் வந்தாலும் நடுங்கி
திகைக்காமல் செல்வோம்!
எங்கள் யுத்தம் முடிந்தது
சஞ்சல நாள் முடிந்தது
ஆமென் இயேசு எல்லாம்! – இயேசுவே

## பாடல் 240: உனக்கொத்தாசை வரும்

இராகம்: பிலஹரி தாளம்: திஸ்ரஏகம்

பல்லவி

உனக்கொத்தாசை வரும் நல் உயர் பருவதம் இதோ!

அனுபல்லவி

தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவானே

சரணங்கள்

1. வானம் புவி திரையும் வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ? - உனக்கொத்தாசை

2. காலைத் தள்ளாட வொட்டார் கரத்தைத் தளர வொட்டார்;
மாலையுறங்க மாட்டார் மறதியாய்ப் போக மாட்டார் - உனக்கொத்தாசை

3. கர்த்தருன்னைக் காப்பவராம் கரமதில் சேர்ப்பவராம்
நித்திய முந்தனுக்கு நிழலாயிருப்பவராம் - உனக்கொத்தாசை

4. பகலில் வெயிலெனிலும் இரவில் நிலவெனிலும்
துயர் தருவதுமில்லை துன்பஞ் செய்வதுமில்லை - உனக்கொத்தாசை

5. தீங்கு தொடராதுன்னை தீமை படராதுன்மேல்
தாங்குவோர் தூதர் கோடி தாளிடறாதபடி - உனக்கொத்தாசை

6. போக்கும் ஆசீர்வாதாமாம் வரத்தும் ஆசீர்வாதமும்;
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பிவிடுமே - உனக்கொத்தாசை

7. துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்
இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே - உனக்கொத்தாசை

## பாடல் 241: தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ!

பல்லவி

தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ!
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே

அனுபல்லவி

ஆவலதாய் எனைப் பைம்புல் மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

1. ஆத்துமந்தன்னைக் குளிரப் பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார் - தேவ

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்;
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும் - தேவ

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்தி
சுகதயிலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார் - தேவ

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்;
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன் - தேவ

எழுதியவர்: த. யோசேப்பு

## பாடல் 242: எந்தன் விசுவாசம்

My faith looks up to Thee - 743

(Tune 215, 216 of ESB)

1. எந்தன் விசுவாசம்
தேவாட்டுக் குட்டியே,
நோக்குதும்மை;
கேளும் என் விண்ணப்பம்
நீக்கும் என் குற்றத்தை
முற்றும் உம் சொந்தம் நான்
இன்று முதல்

2. தாரும் உம் கிருபை
சோர்ந்த என் நெஞ்சுக்கு
பெலன் ஈயும்
ஆ! எனக்காகவே
மரித்தீர் இயேசுவே
என் அன்பின் சுவாலையை
ஓங்கச் செய்யும்

3. திகைத்து நிற்கையில்
துக்கங்கள் சூழ்கையில்
வழி காட்டும்;
அந்தகாரம் நீக்கும்
கண்ணீர் துடைத்திடும்
உம்மில் நிலைத்திட
அருள் தாரும்

4. மரிக்கும் நேரத்தில்
கலக்கம் நேரிடில்
சகாயரே;
அன்புள்ள இரட்சகா
நீக்கும் என் பயத்தை,
சேர்த்திடும் மோட்சத்தில்
என் ஆத்துமாவை

*Ray Palmer*

## பாடல் 243: பாவக் கறைகள் எல்லாம் நீங்கி

All the guilty past is washed away - 188

(Tune 670 of ESB)

1. பாவக் கறைகள் எல்லாம் நீங்கி
தண்டனைக்குத் தப்பினேன்
சுத்த ஆவி உம் வல்லமையால்
பூரண மீட்பிப்போ தாரும்

பல்லவி
சுத்த ஆவியே வாரும்!
சித்தம்போல் செய்ய வாரும்!
உள்ளத்தின் தடைகளை நீக்கி
உமக் கேற்ற வீடாய் ஆக்கும்

2. வாரும் ஆவியே சுத்தஞ் செய்யும்
மெய் சிந்தை மனமெல்லாம்
என்னைக் குருசி லறைந்திடும்
என் இயேசுவைப் போலாக்கிடும் - சுத்த

3. எனக்காய் மாண்ட ஆண்டவர்க்காய்
போரிடப் பலம் தாரும்
கல்வாரி மேட்டின் தயவை நான்
பாவிக்குக் காட்டச் செய்திடும் - சுத்த

4. பூரண ஆனந்த சந்தோஷம்
கிடைத்த தெனக் கும்மால்;
திவ்ய கிருபையால் நிரப்பி
என்னை உம் வீடாய் ஆக்கினீர் - சுத்த

*Richard Slater*

## பாடல் 244: வாரும் சுத்த ஆவியே!

Come, thou burning Spirit, come! - 481

(Tune 277, 278 of ESB)

1. வாரும் சுத்த ஆவியே!
அடியார்கள் உள்ளத்தில்
மூன்றாம் ஆள் திரியேகத்தில்
மகிமையைக் காட்டிடும்

பல்லவி
வாரும் வல்ல ஆவியே,
அடியார் உள்ளத்திலே
வாஞ்சையை நீர் தீர்த்திட
வாரும் சுவாமி வாரும்!
வாரும் சுவாமி! வாரும் என் சுவாமி! வாரும்!

2. ஆத்மா தேகம் யாவையும்
இந்த வேளை அடியேன்
பூசையாய்ப் படைக்கிறேன்;
அன்பாய் நீர் சுத்தி செய்யும் - வாரும்

3. நேசமானம் வஸ்துக்கள்
உற்றார் பெற்றார் யாவரும்
மற்றும் ஆசா பாசங்கள்;
முற்றும் இதோ நீர் வாரும் - வாரும்

4. நம்பிக்கையோடிதோ நான்
பிராண நாதர் பலத்தால்
ஆசீர்வாதம் பெறுவேன்
விசுவாச ஜெபத்தால் - வாரும்

*Charles Fry*

## பாடல் 245: வாரும் நித்திய ஆவியே!

Come Thou everlasting Spirit - 191

(Tune 267 or 268 of ESB)

1. வாரும் நித்திய ஆவியே!
தாரும் தவிப்பவர்க்கு;
பாரில் இயேசு பாடால் வந்த
பலன் யாவும் முற்றுமாய்

பல்லவி
நேசமுள்ள இயேசுவுக்காய்,
தாசன் நானென் யாவையும்
பாசமாய் இதோ படைத்து
பற்றினேன் சிலுவையை

2. அவரடைந்த கஸ்தியும்
அதால் வந்த ரட்சையும்
அறிந்த நித்திய ஆவியே!
எனக் கதைப் போதியும் - நேசமுள்ள

3. அவர் மரணக் காட்சியை
நேரில் கண்ட சாட்சியே
நீரே எனக்கு கிறிஸ்துவின்
நேச ரூபம் காட்டிடும் - நேசமுள்ள

4. நாம் வதைத்திட்ட நாதனை
எண்ணினால் மா வேதனை
தாமீந்திட்ட மீட்பதனை
தந்துதவும் ஆவியே! - நேசமுள்ள

*Charles Wesley*

## பாடல் 246: கர்த்தா உம் வாக்குத்தத்தங்கள்

Lord, we believe to us and ours - 216

(Tune 48, 61 of ESB)

1. கர்த்தா உம் வாக்குத்தத்தங்கள்
சத்தியம் எமக்கல்லவோ?
சுத்த பெந்தெகொஸ்தாவியின்
தத்வம் தரக் கெஞ்சுகிறோம்

2. ஒன்றாய்க் கூடி ஓர் மனமாய்
இன்று காத்து ஜெபிக்கிறோம்
அன்று தம் சவால் இரட்சகர்
கொண்ட சுத்தாவியே வாரும்!

3. கேட்போர் பெற்றுக்கொள்வாரென்ற
கிருபை வாக்கு மெய்யானால்
மீட்பா! உமது ஆவியின்
தீட்சை எமக்கிப்போ தாரும்!

4. ஆவியே எம் ஆத்மம் உம்மை
ஆவலாய் வாஞ்சிக்கின்றது;
தாவி நீர் எங்கள் மேல் வந்து
தங்கிடும் எம் உள்ளங்களில்

*Charles Wesley*

# பாடல் 247: தேவா சுத்தி செய்யும் அக்கினி

## Thou Christ of burning, cleansing flame - 203

(Tune 235, 337 of ESB)

1. தேவா சுத்தி செய்யும் அக்கினி
அனுப்பும் அக்கினி எங்களில்;
திவ்விய இரத்தம் கொண்ட ஈவு
அனுப்பும் அக்கினி எங்களில்;
காத்து நிற்கும் எங்கள் மேலே,
கர்த்தா உந்தனருளாலே
தாரும் பெந்தெகொஸ்தின் ஆவி,
அனுப்பும் அக்கினி எங்களில்!

2. எலியாவின் தேவரீர் கேளும்
அனுப்பும் அக்கினி எங்களில்;
ஜீவன் சாவிலும் நிலை நிற்க
அனுப்பும் அக்கினி எங்களில்;
பாவம் முற்றுமா யழிந்திட,
பரத்தின் ஒளி பெற்றிட,
மார்க்க அதிர்ச்சி வந்திட
அனுப்பும் அக்கினி எங்களில்

3. வேண்டும் அக்கினி தான் எமக்கு
அனுப்பும் அக்கினி எங்களில்
வேண்டும் அனைத்தும் ஈந்திடும்
அனுப்பும் அக்கினி எங்களில்
நீதி செய்துமே எந்நாளும்
நித்தம் போர் வெல்ல அருளும்;
சுத்தராய் வாழ இப்பூவில்
அனுப்பும் அக்கினி எங்களில்!

4. இளைத்த உள்ளம் பெலப்பட
அனுப்பும் அக்கினி எங்களில்;
அழியும் உலகோரை மீட்க,
அனுப்பும் அக்கினி எங்களில்;
பலியாகவே எங்களை
படைத்தோம் உம் பீடத்திலே
பார்த்திதை ஏற்றுக் கொள் தேவே!
அனுப்பும் அக்கினி எங்களில்

*William Booth*

# பாடல் 248: வல்ல ஆவியே!

பல்லவி

வல்ல ஆவியே! சுவாமி எங்கள் மீதிலே,
வந் திறங்கி வரம் தாரும் தேவ ஆவியே!

சரணங்கள்

1. பெந்தெகொஸ்தென்னும் நாளில் வந்த ஆவியே
எங்கள் மேலே வந்திறங்கும் சுத்த ஆவியே - வல்ல

2. பாந்தமுடனே பரிசுத்த ஆவியே
சார்ந்தெங்களை யுத்தத்திற்கு உயிர்ப்பியுமேன் - வல்ல

3. சென்ற காலத்தில் ஜெயம் பெற்றிடச் செய்த
ஜெபத்தின் ஆவியை எங்களகத்திலூற்றும் - வல்ல

4. அன்புடன் தாழ்மை சமாதானம் பொறுமை
இன்பமும் எங்களுக்குள்ளே பெருகிடவே - வல்ல

## பாடல் 249: ஆவியை அருளுமேன் சுவாமி

பல்லவி

ஆவியை அருளுமேன் சுவாமி - எனக்காய்
உயிர் கொடுத்த வானத்தின் அரசே!

சரணங்கள்

1. உலகத்தை விட்டு இரட்சிக்கும் ஆவி,
ஊமையர் வாய்களைத் திறந்திடும் ஆவி,
பரிசுத்தவான்களில் வசித்திடும் ஆவி,
பாவிகளைச் சிறை மீட்டிடும் ஆவி - ஆவியை

2. பாவியை நினைத்து நீர் உருகின ஆவி
பரத்தை விட்டுப் புவியில் வரச் செய்த ஆவி,
ஆவலாய் அடியேனைத் தேடின ஆவி,
ஆனந்தக் களிப்பை அளித்திட்ட ஆவி - ஆவியை

3. பெந்தெகொஸ்தெனும் நாளில் பொழிந்திட்ட ஆவி,
பக்தர்க்குப் புதுப் பெலன் அளித்திட்ட ஆவி,
கல்வாரிப் பாதையில் நடத்திடும் ஆவி,
கர்த்தரே! உம் சித்தம் செய்திடும் ஆவி - ஆவியை

4. பாவத்தை தேவரீர் காண்பதைப் போல,
பரமனே! அடியேனும் தானாகக் காண
தேவ வரமதனை அளித்திடும் ஐயா!
தெளிவுடன் அதை நான் பாவிக்குக் கூற - ஆவியை

5. உலகத்தார் மாண்டு போகிறார் சுவாமி!
உன்னத ஆவி வேண்டுமென் சுவாமி;
மலர்ந்தெங்கள் முகங்களை நோக்குமேன் ஐயா
மழைபோல் ஆவியை வருஷியும் ஐயா! - ஆவியை

## பாடல் 250: தேவ ஆவியே வாரும்

பல்லவி

தேவ ஆவியே வாரும்
ஜீவாவியே!

அனுபல்லவி

பாவியைப் பெருங் கோபியை
தேவ துரோகியை,
வெல்லும் வல்லவா!

சரணங்கள்

1. ஆத்துமாக்களின்
அந்தகாரம் நீக்க
வல்லவா! பாவங் கொல்ல வா! பேயை
வெல்ல வா! எங்கள் நல்லவா! - தேவ

2. கல்வி கற்றோரும்
செல்வர் பெரியோரும்
கர்த்தனே! உந்தன் சத்திய நெறி
சித்தம் யாதென்றுணரவே! - தேவ

3. மானிடர் ஞானம்
மனதையும் மாற்றுமோ?
வானத்தை விட்டு மானிடனாகி
மீட்பின் பாதை திறந்தார்! - தேவ

## பாடல் 251: கர்த்தாவே என்னை நிரப்பும்

Fill Thou my Life, O Lord - 7 (Tune Ellacombe 147 of ESB)

1. கர்த்தாவே என்னை நிரப்பும்
அனைத்தும் துதியால்
உம் வழிகளை முற்றுமாய் அறிவித்திடவும்
உதட்டால் துதிக்க அல்ல
வெறும் உள்ளத்தாலோ அல்ல
எனதெல்லாம் உம் துதியால்
மாறிட வேண்டுகிறேன்

2. தினமும் பேசும் வார்த்தைகளில்
உம் துதி விளங்கும்
ஐக்கியமாக எப்போதும்
என் நேசருடனே
தேவாலயத்தில் தொனிக்கும்
கூட்டத்தில் மட்டுமல்ல
பூமியில் எந்த பாதையிலும்
அமைதியின் போதும்

3. என் அனைத்தும் உம் துதியால்
நிரம்பி போற்றிட
தம் அன்பை அறிவித்திட
எளியேன் ஆயினும்
நான் செலுத்தும் மகிமையை
கர்த்தாவே ஏற்றுக் கொள்ளும்
இப்பூவில் இந்த ஆரம்பம்
எப்போதும் இனிதே

4. எல்லா பாரமும் பயமும்
பாடலாய் மாறட்டும்
கடினமான வழிகளில்
கீதம் எதிரொலிக்கும்
இராப்பகல் எந்த நேரத்திலும்
பரிசுத்தமாக
வாழ்வின் ஒவ்வொரு அடியும்
தம் ஐக்கியமாகட்டும்

*Translated by J. Daniel J. Raj*

## பாடல் 252: ஆவியை மழைபோலே ஊற்றும்

இராகம்: அமிர்த கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

ஆவியை மழைபோலே ஊற்றும் - பல சாதிகளை
இயேசு மந்தையிற் கூட்டும்

அனுபல்லவி

பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்துவே
பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும்

சரணங்கள்

1. வருகையின் நாள் கிட்டிடுதே - துஷ்ட
மாறாட்டக்காரரின் கொடுமை மிக்குதே;
ஐந்து காயத்தில் அடைக்கலத்தைப் பெற
எந்தையே பாவியை ஏவி எழுப்பிட - ஆவி

2. அன்பினால் ஜீவனை விட்டீர் - ஆவி
அருள் மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்;
துன்மார்க்கன் பாவத்தை முற்றாக வெறுத்து
சன்மார்க்கர் பாதையில் சான்றோனாய்ச் செல்ல - ஆவி

3. சாத்தானின் கோஷ்டம் அதிகம் - அவன்
தந்திர குணங்களின் சேஷ்டை அதிகம்;
கர்த்தன் கிறிஸ்துவின் திருக் கரத்தாலே
கலகக் குணங்களை ஒழிந்திடச் செய்யும்! - ஆவி

4. இரட்சண்ய கீதங்கள் பாட - எங்கும்
இரட்சண்ய மூர்த்தியைப் பாவிகள் தேட
பக்தி வைராக்கியத்தால் நிறைந்து போர் செய்ய
பரிசுத்த ஆவியின் அருள்மாரி ஊற்றும்! - ஆவி

## பாடல் 253: சுவாமி உந்தன் ஆவியை ஊற்றாயோ?

பல்லவி

சுவாமி உந்தன் ஆவியை ஊற்றாயோ? எந்தன்
ஆத்துமத்தை இப்போ தேற்றாயோ?

சரணங்கள்

1. நானென்ற ஆங்காரத்தை நொறுக்காயோ? நல்ல
நீதி மெய் மார்க்கத்தில் நிறுத்தாயோ - சுவாமி

2. லௌகீக ஆசாபாசம் மாற்றாயோ? - கெட்ட
பாவிகளை மீட்க அன்பை ஊற்றாயோ? - சுவாமி

3. என்னை மீட்க உயிரைக் கொடுத்தவா! - அற்ப
நீசன் நான் என்னைப் படைத்தேனே! - சுவாமி

4. தேவே! என்னை ஏற்றுக்கொள்ளாயோ? - உந்தன்
அடிமை மூலமாய் ஆத்மா வெல்லாயோ? - சுவாமி

5. யாக்கோபைப் போல நான் போராட - நீசப்
பாவிகளை உந்தன் பதம் சேர்க்க! - சுவாமி

6. வேதாளத்தின் தலையை உடைத்துவிட - மெய்
வெற்றி பெற்றவனாய் நான் ஆகிவிட! - சுவாமி

## பாடல் 254: வாருமையா சுவாமி வாருமையா

பல்லவி

வாருமையா சுவாமி வாருமையா - இப்போ
தேவ ஆவியை ஊற்ற வாருமையா!

சரணங்கள்

1. பெந்தெகொஸ்தென்னும் நாளில் வல்லமையாக வந்தீர்!
சொந்தப் பிள்ளைகள் கூடிக் கெஞ்சும் இவ்வேளைதனில் - வாருமையா

2. மூவாயிரம் பாவிகள் மேலும் நீர் வந்திறங்கி,
தேவா உம் வல்லமையைக் காட்டினாற் போல இப்போ! - வாருமையா

3. முன்னோர்க்கு ஆவியை நீர் அற்புதமாகத் தந்தீர்
நன்மை மூலனே இப்போ தாரும் தவிக்கிறோமே! - வாருமையா

4. நின்று யுத்தம் செய்யவே உண்மையாய் ஏவுமையா!
தன்னயத்தையே கொன்று முன்னே நடத்துமையா! - வாருமையா

## பாடல் 255: பரிசுத்த அக்கினி அனுப்புந் தேவா!

பல்லவி

பரிசுத்த அக்கினி அனுப்புந் தேவா!
பரந்து ஜுவாலிக்கக் கொழுத்தும் தேவா!

சரணங்கள்

1. இரக்கமாய் அக்கினித் தழலைக் கொண்டு
உருக்கமாயுள்ளத்தைத் தொட்டருளும்! - பரிசுத்த

2. தேச மெங்கும் திவ்விய அக்கினியால்
தீவினை யாவையும் சுட்டெரிக்க! - பரிசுத்த

3. கன்னிகை விருத்தர் வாலிபரும்,
உன்னத ஆவியால் நிரம்பிடவும்! - பரிசுத்த

4. பாவிகள் யாவரும் மனந் திரும்ப,
பரலோக அக்கினி நாவருளும் - பரிசுத்த

5. இயேசுவின் பேரன்பை உணர்ந்தெவரும்
நேச விஸ்வாசத்தில் வளர்ந்திடவே! - பரிசுத்த

## பாடல் 256: அன்பிற் சிறந்த கிறிஸ்தையனே

இராகம்: காப்பி தாளம்: ஆதி

பல்லவி

அன்பிற் சிறந்த கிறிஸ் தையனே!
இயேசு மெய்யனே! மா தூயனே - திருச்சுதனே!

சரணங்கள்

1. உன்னாவியின் பலத்தால் என்னை நிரப்புமேன்
துன்மார்க்கன் மனந்தனைத் தூயதா யாக்குமேன்!
சன்மார்க்கத்தோடுன் அன்பை நான்பெறச் செய்யுமேன்,
சத்தியம் நிறைந்த தேவ மைந்தனே, எந்தன் கர்த்தனே
பரிசுத்தனே! என தத்தனே! - அன்பிற்

2. மன்னிப் படைந்தாய் என்ற மா தொனிதானே
என்னகந்தனில் கேட்க இன்பங்கொண்டேனே;
உன் பதிக்கென எந்தன் உள்ளம் தந்தேனே!
வந்தென்னை யாளு மெந்தன் பரனே! தேவ சுதனே!
அரும் போதனே! என தரணே - அன்பிற்

3. தேற்றரவாள னெனில் தினம் வசிப்பாரே?
ஆற்றல் செய் தெந்தனை அணைத்துக்கொள்வாரே!
போற்ற என் னகம் தேவ வீடாக்குவாரே!
புண்ய மிது எனது புகழ்ச்சி! மன மகிழ்ச்சி!
இல்லை இகழ்ச்சி! இதென் சாட்சி! - அன்பிற்

4. தேவ ராஜ்ய மெந்தன் சொந்தமதாமே!
பாவி எனக்கு வந்த மா பங்குதாமே!
ஜீவ நாதனோ டங்கு சுகித்திருப்பேனே!
ஆவலா யங்கு வர நானே! அருள் கோனே!
என் சீமானே! நீ தானே! - அன்பிற்

## பாடல் 257: பரிசுத்த ஆவியே!

சரணங்கள்

1. பரிசுத்த ஆவியே! பார்த்து இவ்வேளையை
தரிசித் தென் னகந்தனில் தங்குவையே!

2. தேவ திருவாக்கே! திவ்விய தீபமே!
ஏவி என்னாவியை எழுப்பிடுமேன்!

3. அன்பே! தேவ அருளே! ஆவியான பொருளே!
இன்பமா யென்னுள்ளத்தில் இறங்கிடுமேன்!

4. உன்னத பாக்கியத்தை ஓயாமல் நான் தேடியே
தன்னயம் ஒழிக்கச் செய் தற்பரனே!

5. ஆனந்த பாக்கியத்தோடருளும் சிலாக்கியமும்
நானும்மைப்பற்றி வாழக் கிருபை தாரும்!

*K.S. Abraham*

## பாடல் 258: ஊதும் தேவா! ஆவி

Breathe on me, Breath of God - 189

(Tune 164, 180 of ESB)

1. ஊதும் தேவா! ஆவி
நவஜீவன் என்மேல்;
நீர் நேசிப்பதை நேசிக்க
நீர் செய்வதைச் செய்ய

2. ஊதும் தேவா! ஆவி
சுத்தனாகு மட்டும்;
உம் சித்தம் போலவே நானும்
செய்து சகித்திட

3. ஊதும் தேவா! ஆவி
முற்றும் சொந்தமாக்கும்;
என் தேகம் உம் அக்கினியால்
ஜொலித்திடும் வரை

4. ஊதும் தேவா! ஆவி
சாகா திருக்க நான்;
பூர்ண ஜீவன் நானும்முடன்
நித்யம் ஜீவித்திட

*Edwin Hatch*

## பாடல் 259: என்ன துன்பநாள்!

இராகம்: கமாஸ் தாளம்: ஆதி

பல்லவி

என்ன துன்பநாள்! இயேசென்னோடில்லா நாள்
இன்பமே தோன்றாத நாளாம் - என் வாழ்வு நாள்

அனுபல்லவி

ஒளிமங்கிப் போனநாள் மகிழொழிந்திட்ட நாள்!
எழில் இயேசென்னோடிருந்தால் எனக்கது இன்பநாள்!

சரணங்கள்

1. அவர் பேர் சுகந்தமே அவர் சத்தம் இன்பமே!
அவர் முன்னென் துயர் போமோ-மா நேர்மையே!
பயமொன்று மில்லையே பரனடி நிற்கவே
தயவுள்ள இயேசு எந்தன் தாபரம் இதுண்மையே - என்ன

2. கண்டு நான் மகிழ்வேன் கர்த்தன் முகம் தனையேன்
கொண்டு வைத்தேனெனதெல்லாம் - என் நாதன் முன்,
ஒன்றுமே இவர்க்கு ஒப்பில்லை - எனக்கு
என்றும் இன்பம் தந்து இயேசு என்னில் வசிப்பதற்கு - என்ன

3. ஆ எந்தன் தேவனே நானுந்தன் தாசனே!
நீரெனது தஞ்சமானால் தயக்கமேன்?
கெஞ்சுறேன் நானே, கிருபை கூர்ந்தையனே!
புன்னகையோடென்னை ஆண்டு பொற்பதி சேர் மெய்யனே! - என்ன

## பாடல் 260: என் மீட்பர் சென்ற பாதையில்

Tune: I am clinging to the cross (Tune 144 of ESB)

1. என் மீட்பர் சென்ற பாதையில்
போக ஆயத்தமா?
கொல்கொதா மலை வாதையில்
பங்கைப் பெறுவாயா?

பல்லவி

சிலுவையை நான் விடேன்
சிலுவையை நான் விடேன்

2. ஊரார் இனத்தார் மத்தியில்,
துன்பம் சகிப்பாயா?
மூர்க்கர் கோபிகள் நடுவில்,
திடனாய் நிற்பாயா? - சிலுவையை

3. தாகத்தாலும் பசியாலும்
தொய்ந்தாலும் நிற்பாயா?
அவமானங்கள் வந்தாலும்
சிலுவை சுமப்பாயா? - சிலுவையை

4. பாவாத் மாக்கள் குணப்பட
நீ தத்தம் செய்வாயா?
கோழை நெஞ்சர் திடப்பட
மெய் யுத்தம் செய்வாயா? - சிலுவையை

5. லோகத்தார் மாண்டு போகிறார்!
மெய் வீரர், இல்லாமல்
பார்! மீட்பர் ஜீவனை விட்டார்
தொங்கி சிலுவையில்! - சிலுவையை

6. வாழ்நாள் எல்லாம் நிலை நின்று
சிலுவை சுமப்பேன்
தேவ அருளினால் வென்று
மேல் வீட்டைச் சேருவேன்! - சிலுவையை

## பாடல் 261: என்னுள்ளத்தை மீட்பர்க்குப் படைத்தேன்

I bring my heart to Jesus- 420 (Tune 675 of ESB)

1. என்னுள்ளத்தை மீட்பர்க்குப் படைத்தேன்
என் சிந்தை அனைத்தும் ஒப்பித்தேன்
அவரால் என் ஆத்மா ஆறிற்று
அவரின் நேசத்தால் தேறிற்று,
மீட்பர்க்கும் எனக்கும் ஐக்கியம்!
நித்தியம்

2. மீட்பர்க் கென் கவலையைச் சொன்னேனே;
அவர் பாதம் ஜீவன் வைத்தேனே;
லோகத்தின் செல்வங்கள் வாடிப் போம்!
அவரின்றி ஜீவன் பாழாய்ப் போம்!
இயேசென் ஜீவனிலும் உத்தமம்!
நித்தியம்

3. பாவத்தோடு மீட்பர் முன் ஜெபித்தேன்
இரத்தத்தால் நான் சுத்தம் தரித்தேன்
அவர் தயவை நான் தேடினேன்;
கண்ணீரோடு வாக்கை நாடினேன்
அறிவேன் என் இயேசு ஜீவிக்கிறார்!
மீட்கிறார்!

4. எனதெல்லாம் இயேசண்டை வைத்திட்டேன்
ஆத்ம சுத்தம் வேண்டிக் கேட்டிட்டேன்
ஒன்றையும் மறந்து வைத்திடேன்;
துன்பமாம் சிலுவை தள்ளிடேன்;
தீ வந்தென் சிறையை நீக்குது!
மீட்குது!

*Herbert H Booth*

## பாடல் 262: என் பாவம் யாவும் கழுவி

It is the Blood that washes white - 113

(Tune 130 of ESB)

1. என் பாவம் யாவும் கழுவி
என்னைச் சுத்தி செய்து
நல் மன சாட்சி உண்டாக்கி
காக்கும் இரத்தம் இது!

பல்லவி

இரத்தந்தான் என் புண்யமே!
உள்ளம் வெண்மை யாக்குதே!
பாவமெல்லாம் நீங்கிற்று!
மீட்பர் சொந்த மாயிற்று!

2. தீய பேயின் வல்லமையை
நீக்கி விடுவித்து
மெய்யாய் சுத்த ஜீவியத்தை
தரும் இரத்தம் இது! - இரத்தந்தான்

3. பூரண இரட்சிப்பு என்னும்
வாசலைத் திறந்து
பாவ மற நாம் ஜீவிக்க
வழி காட்டும் இது! - இரத்தந்தான்

4. பரிசுத்தமாய் ஜீவித்து
மெய் இன்பம் ருசித்து
விஸ்வாசமாய் மரிப்போர்க்கு
மோட்சம் ஈயும் இது! - இரத்தந்தான்

*William Pearson*

## பாடல் 263: தாரும் மீட்பா! நல் சுயாதீனம்

Jesus, give Thy Blood-washed Army - 593

(Tune 415, 409 of ESB)

1. தாரும் மீட்பா! நல் சுயாதீனம்
தம் இரட்சண்ய சேனைக்கு;
போரில் எம்மை முன் நடத்தி
தாரும் பெரும் ஜூபிலி;
அல்லேலூயா! நாம் மா ஜெயம் பெறுவோம்!

2. போர் வீரரை ஒன்றாய் சேர்த்து
பொருத்தினீர் ஆவியால்;
நேர் யுத்தம் நிதம் செய்யவே
நிறுத்தினீர் அணியாய்;
சேனையிலே நித்தம் சேவிப்போம் உம்மை!

3. செங்கோல் கீழ் வைரி வீழ்கிறான்!
உம் பேர் கேட்டோடுகிறான்!
கைதிகள் கட்டறுக்கிறீர்!
கர்த்தா! பாவம் நீக்குறீர்!
நித்தம் உந்தன் மகிமைக்காய்ப் போர்செய்வோம்!

4. தீய குணங்களறுத்து
தூய நிலை வகுத்து
மாய லோக மறந் தீர்த்து
தா! இரட்சண்யம் தாதாவே!
இரத்தம் அக்னி கொண்டு வெல்லுவோமெல்லாம்!

*William Pearson*

## பாடல் 264: பூரண இரட்சையளிக்க

### Full Salvation - 540

(Tune 409, 450 of ESB)

1. பூரண இரட்சை யளிக்க
ஜீவ ஊற்றின் தீர்த்தமே!
வற்றாமல் இன்னும் ஓடுது,
மீட்பர் காயத்திருந்தே!
    என்னுள்ளத்தில்
    ஜீவ நதி பாயுது!

2. அல்லேலூயா என்று பாட
வல்லமையாய் மாற்றுதே!
எல்லாப் பாவம் முற்றும் நீக்கி
பரிசுத்த மாக்குதே!
    மாசு நீக்கி
    துல்யமாக ஆக்குது!

3. தேவாதி தேவனின் அன்பு
என்னில் பெலன் செய்யுதே!
ஆத்தும எண்ணங்களெல்லாம்
சுத்தியாக்கப்பட்டதே!
    சுத்தமானேன்
    கல்வாரியின் இரத்தத்தால்!

4. சந்தேகம் துக்கம் பயமும்
என்னை விட்டு நீங்கிற்று!
நம்பிக்கை அன்பு விஸ்வாசம்
என்னை ஆட்சி செய்யுது!
    இயேசுவினால்
    திருப்தியானேன் எப்போதும்!

*Francis Bottome*

## பாடல் 265: பாவ சாபம் நீங்கிடுது

Sins of years are washed away

(Tune 313, 287 of ESB)

1. பாவ சாபம் நீங்கிடுது
ஆத்மா சுத்தமாகுது
இருள் எல்லாம் மாறிடுது
ஜீவ ஆற்றண்டை வந்தால்

பல்லவி
நம்பிப் பெற்றுக் கொள்ளுகிறேன்
ஜீவ ஆற்றலைகளில்,
நெஞ்சில் மகிழ் கொள்ளுகிறேன்
பாவம் போயிற்றானதால்

2. துன்பம் பயம் நீங்கிடுது
ஜீவ ஆற்றலைகளில்;
துக்கம் துன்பம் ஆகிடுது
ஜீவ ஆற்றைச் சேரையில் - நம்பி

3. சொகுசு செல்வம் குப்பையாம்
லோக இன்பம் வெறுப்பாம்;
மீட்பரே எந்தன் இன்பமாம்
ஜீவ ஆற்றைச் சேரையில் - நம்பி

4. சுய நேசம் கர்வமும்
முழுவதும் மாறிப்போம்;
மீட்பரின் அன்பு செல்வமாம்
ஜீவ ஆற்றைச் சேரையில் - நம்பி

*Herbert H Booth*

## பாடல் 266: மீண்டும் பாடுவோம் மீட்பரன்பை

Let us sing of His love once again - 808

(Tune 508 of ESB)

1. மீண்டும் பாடுவோம் மீட்பரன்பை
என்றும் அவ்வன் பழியாததே!
வெட்டுண்ட தேவாட்டுக்குட்டியின்
இரத்தத்தை வாழ்த்திப் புகழுவோம்

பல்லவி
இயேசுவின் இரத்தத்தால்
சுத்திகரிப்பு நமக்குண்டு!

2. சுத்தமும் சுகமும் உண்டாகும்
அத்தன் இரத்தத்தில் மூழ்குவோர்க்கு
நித்தமும் மா சந்தோஷ முண்டு
இத்தரையில் அவர் இரத்தத்தால்! - இயேசுவின்

3. இங்கவ ரன்பை ருசிக்கவே
பொங்குதே ஆனந்தம் புண்யனால்!
அங்குள்ளோர் பாட்டில் நாம் கூடினால்
ஆர் அம் மகிமையை கூறுவார்! - இயேசுவின்

4. யுத்தம் முடிந்தது என்று நம்
கர்த்தன் சொல்லும்வரை முன் செல்வோம்!
நித்திய மகிமை வீட்டிலே
சத்யன் நம்மை அழைத்துச் செல்வார் - இயேசுவின்

5. அதால் பரிசுத்தம் என்ற நம்
அமர்க் கொடியும் பறக்கட்டும்!
அந்தத்தில் அவர் கையினின்று
அழகான கிரீடம் பெறுவோம்! - இயேசுவின்

*Francis Bottome*

## பாடல் 267: அன்பரே! நானும்மில்

I love Thee every hour

(Tune 479 of ESB)

1. அன்பரே! நானும்மில் அன்பு கூருகிறேன்
துன்பப்பட்டும் என்னில் நீர் அன்பு கூர்ந்தீரே

பல்லவி

நேசிக்கிறேன் நானும்மை
நேசித்து சேவிப்பேன்!
தாசனென் யாவையுமே
தாறேன் மீட்பா!

2. உம் தொனி கேட்க நான் என்றும் வாஞ்சிக்கிறேன்
உம் சித்தமே செய்ய தினம் ஆசிக்கிறேன்!

3. நானும் சொந்தமதால் உம்மை நேசிக்கிறேன்!
நீரென் சொந்தமதால் வேறெதும் ஆசியேன்!

*Bramwell Booth*

## பாடல் 268: கர்த்தரோடு நாமும்

When we walk with the Lord – 397  (Tune 586 of ESB)

1. கர்த்தரோடு நாமும்
நித்தமும் நடந்தால்
எத்தனை மகிமை அருள்வார்;
நம்மில் வசிப்பாரே
அவர் சித்தம் செய்து
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால்

நம்பியே நாம் கீழ்ப்படிந்திடுவோம்
இயேசுவில் மகிழ்ந்திட வேறு வழி இல்லை

2. நிழலோ மேகமோ
திகிலோ பயமோ
அவர் முன்னே அணுகிடாதே
சந்தேகம் நீங்கிடும்
கண்ணீரொழிந்திடும்
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால் - நம்பியே

3. துக்கம் பாரமும் நாம்
சகித்திடும் வேளை
ஈவாரே பலன் நம் வேலைக்கு
கண்ணீர் கவலையும்
திண்ணம் மாற்றிடுவார்
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால் - நம்பியே

4. பலிபீடத்தின் மேல்
படைத்திடும் வரை
அறிந்திடோம் நாம் அவரன்பை
கிருபை மகிழ்ச்சி
கிடைத்திடச் செய்வார்
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால் - நம்பியே

5. அவர் பாதத்திலே,
அமர்ந்திருப்போமே,
அவரோடு வழி நடப்போம்;
சொல்வதையே செய்வோம்,
பயமின்றிச் செல்வோம்
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால் - நம்பியே

*John Henry Sammis*

## பாடல் 269: உம் குருசண்டை இயேசுவே

Jesus, keep me near the Cross - 115

(Tune 272 of ESB)

1. உம் குருசண்டை இயேசுவே
வைத்தென்னைக் காத்திடும்
கல்வாரி ஊற்றினின்று
பாயுது ஜீவாறு

சிலுவை சிலுவை என்றும் என் மகிமை
அக்கரை சேர்ந்தென்னாத்மா இளைப்பாறும் மட்டும்

2. குருசண்டை நின்ற என்னை
கண்டார் இயேசு அன்பால்;
வீசிற்றென்மேல் ஜோதியே
காலை விடிவெள்ளி - சிலுவை

3. தேவ ஆட்டுக்குட்டியே
தாரும் குருசின் காட்சி;
அதன் நிழலிலென்றும்
செல்லத் துணை செய்யும் - சிலுவை

4. காத்திருப்பேன் குருசண்டை
நம்பி நிலைத்தென்றும்
நதிக் கப்பால் பொன்கரை
நான் சேர்ந்திடு மட்டும் - சிலுவை

*Fanny Crosby*

## பாடல் 270: அன்புள்ள என்னேசு

பல்லவி

அன்புள்ள என்னேசு நீரென் அருளுறவாமே!
அருளுறவாமே! என தரும் மகிழாமே!

சரணங்கள்

1. உந்தன் கிருபைதனையே உண்மையாய்ப் பற்றினேனையா!
எந்தநாளும் உமது சேவை யான் செய்வேன் மெய்யே! - அன்பு

2. நம்பிக்கையால் காக்கப்பட்டு நானுன் பெலனையும் பெற்று
தம்பிரானுனில் வாழ்கிறேன் தயக்கமே யற்று! - அன்பு

3. உள்வினையால் உருக்கப்பட்டேன் உன்னருளால் கழுவப்பட்டேன்;
கள்ளப் பேயோடமர் புரிந்து கனஜெயம் பெற்றேன்! - அன்பு

4. வாரும் கிறிஸ்தேசு நாதா வந்தென்னுள்ளில் தங்கும் போதா!
சீரடைந்தேனென்று சாட்சி சொல்லச் செய் நீதா! - அன்பு

*K.S. Abraham*

## பாடல் 271: வந்து ஆவியே தங்கும்!

இராகம்: கதனகுதூகலம் தாளம்: ஆதி

பல்லவி

வந்து ஆவியே தங்கும்! தங்கும் தாவியே,
எந்த னாத்மந்தனில் இறங்கி இந்நாளில்!

சரணங்கள்

1. இயேசுவின் கிருபையால் சொந்தம் நீராகையால்
மைந்தன் நம்பினேனே வந்தருளென் கோனே!
எந்த னுள்ளமே ஏதேன் வனம்போல்
எழிலுறப்பண்ணும் இயேசின் பலி எண்ணும்! - வந்து

2. தாபந்தமாய்த் தானே தவிக்கிறேன் நானே;
பாவம் போக்குவையே பரிசுத்தாவியே!
உந்தன் பதியாய் என்னுள்ளம் மெய்யாய்
இருக்கச் செய் தேவே! இடர் நீக்கிக் கோவே! - வந்து

3. அலகைப் பாவமும் உலகப் பாசமும்
அடியேன் துறக்க அருள்செய் சிறக்க
என்று மெனதே உனதாவதே
இன்றும் என்றும் நாதா எனையாளும் வேதா! - வந்து

4. தேவா! உம்மைப் பார்த்து ஜெபிக்கிறேன் காத்து
தாரும் அருளுடன் ஜீவனும் எனக்கு
நித்ய காலமும் சத்ய தேவனே
பக்தரோடும் வீட்டில் சேரும் வானநாட்டில் - வந்து

*K.S Abraham*

# பாடல் 272: கெட்டோனை இரட்சியும்

Rescue the perishing – 691

(Tune 775 of ESB)

1. கெட்டோனை இரட்சியும் சாவோனைக் காரும்,
பாவமும், சாபமும் நீங்கச் செய்யும்
சோர்வோனைத் தாங்கிடும், வீழ்ந்தோனைத் தூக்கும்
சுப விசேஷத்தை அறிவியும்!

பல்லவி

கெட்டோனை இரட்சியும் சாவோனைக் காரும்
இயேசு தயாபரர் இயேசு வல்லோர்

2. பாவ சண்டாளரைப் பொறுமையோடு
திருத்தி இரட்சிக்கப் பார்க்கிறாரே;
மெய் மனஸ்தாபமாய் நம்பிக்கையோடு
வந்தடைந்தால் அவர் மன்னிப்பாரே - கெட்டோனை

3. கெட்டோனை இரட்சியும் ஆத்திரத்தோடு
ஆவியின் வல்லமை அருளுவார்
இரட்சிப்பைக் கூறவும் உருக்கத்தோடு,
தேவாசீர்தாமும் தந்திடுவார் - கெட்டோனை

*Fanny Crosby*

## பாடல் 273: பிராண நாயகா!

பல்லவி

பிராண நாயகா!
பிராண நாயகா! - பாவ
ஆத்துமாக்கள் மாண்டு போகிறார்
பிராண நாயகா!

சரணங்கள்

1. இன்னிலத்தோர் மாளுகின்றார்
சாபத்தினாலே - இந்தக்
கொடிய சாபம் வந்த காரணம்
பாவத்தினாலே - பிராண

2. பாவ சாபத்தைத் தீர்க்க வந்தவர்
பாதம் தேடாமல் - இவர்
பாவ உணர்ச்சி யற்றிருக்கிறார்
இயேசுவை நாடாமல் - பிராண

3. கல்லான இருதயங்களைக்
கரைக்கும் தெய்வமே - இந்தப்
பொல்லாத பாவிகள் மேல்
இரக்கம் வையுமேன் - பிராண

## பாடல் 274: அருளின் மா மழை பெய்யும்

Tune: "Showers of blessing" - 637

1. அருளின் மா மழை பெய்யும்
என்று வாக்களித்தோரே!
மாரியாய் பெய்திடச் செய்யும்
லோகத்தின் இரட்சகரே!

தேவன்பின் வெள்ளம்!
தேவன்பின் வெள்ளம் தேவை!
கொஞ்சம் ருசித்த என்னுள்ளம்
கெஞ்சுதே இன்னும் தேவை!

2. கற்பாறை போல் பாவி உள்ளம்
கடினப்பட்ட தயே!
பரிசுத்தாவியின் வெள்ளம்
கரைக்க வல்லதயே - தேவன்பின்

3. வெட்டாந்தரை நிலந்தானும்
ஏதேன்போல் மாறும் என்றீர்;
சாபத்துக் குள்ளான முற்பூண்டும்
கேதுரு வாகும் என்றீர் - தேவன்பின்

4. தேசத்தின் இருளைப் பாரும்,
லோகத்தின் மெய் தீபமே!
ஆவியின் அருளைத் தாரும்
மனம் மாற்ற வல்லவரே! - தேவன்பின்

5. ஏழை என் குறைகள் யாவும்
தீர்த்திடும் வல்லவரே!
யுத்தத்தில் முன்செல்ல ஏவும்
சேனை தளகர்த்தரே! - தேவன்பின்

## பாடல் 275: என் ஆத்தும நேச மேய்ப்பரே!

I bring thee dear Jesus - 422

1. என் ஆத்தும நேச மேய்ப்பரே!
என் உள்ளத்தின் ஆனந்தமே!
இன்னும் உம்மைக் கிட்டிச்சேர நான்,
வாஞ்சையோடு சமீபிக்கிறேன்

பல்லவி

பேசும்! பேசும்! ஜெபம் செய்யும்போது
ஆண்டவா! பிரியமானதை
இப்போ காட்டும்; செய்ய ஆயத்தம்!

2. மெய் மீட்பரைக் கீழ்ப்படிவோர்
தம் ஆத்துமத்தைத் தேற்றும் இடம்
அடியேனும் பெற அருள்வீர்!
அப்பனே விண்ணப்பம் கேட்டிடும் - பேசும்

3. பாவிகட்கு உமது அன்பை
என் நடையால் காட்டச் செய்யும்;
கல்வாரி ஆவியால் உள்ளத்தை
போரில் வெல்ல அபிஷேகியும் - பேசும்

4. என் ஜீவிய நாட்களெல்லாம்
நீர் சென்ற பாதையே நான் செல்வேன்;
ஆசித்துத் தாறேன் எனதெல்லாம்
மீட்பரே! வல்லமை தந்திடும் - பேசும்

## பாடல் 276: மீட்பரே! நடத்துமேன்

Saviour, lead me - 627

(Tune 294 of ESB)

1. மீட்பரே! நடத்துமேன்
பாதை நான் தவறாமல்
காப்பீரே நித்தமுமே
கர்த்தா! நானும்மில் சார்ந்தேன்

பல்லவி

மீட்பா! மீட்பா!
மீட்பா! வழிகாட்டுமேன்;
பாதை தப்பிப் போகாமல்,
மீட்பா! வழிகாட்டுமேன்

2. என் ஆத்தும தஞ்சமே!
வன் புசல் அலை என்மேல்
வந்ததுமே புரண்டாலும்
உம்மண்டை ஒதுங்குமேன் - மீட்பா

3. நடத்தும் நடத்துமேன்
நாதா என் முடிவிலும்;
துடைத்துமே என் கண்ணீர்,
தூய ராஜியத்துக்கும்! - மீட்பா

*Frank M. Davis*

## பாடல் 277: மானிடரின் அப்பனாரே!

Tune: "Take Salvation"

1. மானிடரின் அப்பனாரே!
எங்கள் ஜெபம் கேட்டிடும்;
உம்மையே எம் ஐயனாரே!
சேவிக்க அருள் செய்யும்
எங்கள் சேனை
இப்போ ஆசீர்வதியும்

2. சுத்த ஆவியின் வரத்தை,
அடியார்க்கு ஈந்திடும்;
மாளும் எங்கள் தேசத்தாரை,
அன்பாக இரட்சித்திடும்
எங்கள் சேனை
வெல்ல வழி காட்டிடும்

3. பரிசுத்த ஜீவியத்தில்
யாம் தேற கிருபை செய்யும்;
ஓயா விஸ்வாச ஜெபத்தில்
நிலை நிற்க அருளும்
எங்கள் சேனை
மூப்பர் தீட்சை செய்யுமேன்

4. பாவிகளை மீட்க வந்த
பராபர வஸ்துவே!
நீசர்க்காக ஜீவன் தந்த
மானிட அம்பரனே
எங்கள் சேனை
சக்தி பெறச் செய்யுமேன்

## பாடல் 278: இரட்சகரே ஜெபிக்கிறோம்

Saviour and Lord we pray to Thee - 692

(Tune 8 of ESB)

1. இரட்சகரே ஜெபிக்கிறோம்,
எக்காலமும் உம்மை விடோம்;
உமதன்பால் மீட்கப்பட்டோம்,
உமக்கே எமைப் படைத்தோம்

2. போர் செய்ய எமை அழைத்தீர்
சேர்ந் தொன்றா யிதோ நிற்கின்றோம்;
தீ தொழித்துன் திவ்ய ராஜ்யம்
ஸ்திரமாக்குவ தெம் நோக்கம்

3. கீதம் பாடும் இவ் வேளையில்
நாதா! உம்மை வாழ்த்துகிறோம்;
நீரே எம் எல்லாம் ஆதலால்
போரை வெல்வோம் அல்லால் சாவோம்

4. யுத்த பெலன் உம் சக்திதான்
கர்த்தன் தீபம் முன் செல்லுந்தான்
சுத்த ஆவியை இப்போதே
சொரிந்தும் சித்தங் காட்டுமேன்

5. உம் கொடியின் கீழ் நிலைத்து
உம் சித்தமே யாம் புரிந்து;
பொன் முடியாம் பெறும் வரை
திண்ணம் விடோம் போர்தனை யாம்

*Mandell*

## பாடல் 279: ஓ மீட்பா! கேளென் விண்ணப்பம்

O Jesus, Saviour hear my cry - 620

(Tune 499, 50 of ESB)

1. ஓ மீட்பா! கேளென் விண்ணப்பம்
தீர்ப்பாய் நாதா! என் தேவையை,
நவ பெலன் நாடுகின்றேன்;
நான் யுத்தம் ஜெயிக்க வென்றே
எங்கென்றாலு மென் சத்துருவை
எதிர்த்து மடக்கிடவே

2. எந்தன் நெஞ்சத்தை இயேசுவே!
உந்தன் அன்பால் நிரப்புமேன்
சிந்தையோ டுந்தன் சித்தத்தை
சீரழிந்தோர்க்குக் கூறவே;
பின் நான் எங்கேதான் சென்றாலும்,
வன் சத்துருவை ஜெயிப்பேன்

3. ஆக் கென்னை அக்கினி ஜூவாலையாய்,
தீர்த்து எந்தன் பேராவலை;
சேர்த்து நான் ஏழை மாந்தரை;
வாழ்த்துச் செய்ய உம் போதனை,
அப்போ நானெங்கு சென்றாலும்
சத்துருவை நான் ஜெயிப்பேன்

4. அன்பே! என் ஆதி அந்தமும்,
ஆகி யெனில் ஜொலிக்கட்டும்,
வந்திப்போ என் இரட்சகர்த்தா,
தந்திடும் நேசம் எனக்கு;
அதான் நா னெங்கு சென்றாலும்
அன்பே வைரியை ஜெயிக்கும்!

*T.C. Marshall*

## பாடல் 280: இயேசு தேவனே

பல்லவி

இயேசு தேவனே இந்த
கூட்டத்தில் வாருமையா!

சரணங்கள்

1. இரண்டு மூன்று பேர்க ளெங்கே
கூடினாலும் அங்கு வருவேன்
என்று திருவாய் மலர்ந்த
அன்பரே! நீர் இப்போ வாரும்! - இயேசு

2. உம தாவியை நாங்கள் பெற்று
உம்மைப் போல பிரகாசிக்கவும்
உம்மைப் பற்றிப் போதிக்கவும்
ஊக்கமான ஆவி தாரும் - இயேசு

3. பாவத்தை விட்டு விடவும்
பரிசுத்தராய் ஜீவிக்கவும்,
பரதீசின் பங்கைப் பெறவும்
பாக்கியராய் வாழ்ந்திடவும் - இயேசு

## பாடல் 281: இயேசுபரா! உந்தன் தாசர்கள் மீதினில்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

பல்லவி

இயேசுபரா! உந்தன் தாசர்கள் மீதினில்
வருவாய், அருள் தருவாய்

அனுபல்லவி

நேயமுடன் இங்கே ஆவலுடன் வந்து
பாராய் எமைக் காராய்

சரணங்கள்

1. சங்கீதம் பாடியே உம்மை அடியார்கள்
போற்ற மகிழேற்ற
தற்பரனே உந்தன் அற்புத ஆவியைத்
தருவாய் அருள் புரிவாய் - இயேசு

2. அம்பரனே! மனுத் தம்பிரானே! இங்கே
வருவாய் வரம் தருவாய்;
அல்லேலூயாவென்று ஆனந்தப்பாட்டுடன்
பாட உம்மைத் தேட - இயேசு

3. பெந்தெகொஸ்தின் நாளில் அற்புதமாய் வந்த
பரனே! எங்கள் அரணே;
பேதைகளான எம்மீதினில் வந்து நீர்
பேசும் அருள் வீசும் - இயேசு

## பாடல் 282: ஆட்கள் தெரிந்தனுப்பும் தேவா!

பல்லவி

ஆட்கள் தெரிந்தனுப்பும் தேவா! - வேலை
ஆட்கள் தெரிந்தனுப்பும் தேவா!

சரணங்கள்

1. அறுப்பு மிகுதி வேலை
ஆட்களோ கொஞ்சம் அதால் - ஆட்கள்

2. வழி தப்பித் திரிவோரை
வழியாம் இயேசிடம் சேர்க்க - ஆட்கள்

3. நரக பாதையிற் செல்லும்
நரரைத் திருப்புதற்கு - ஆட்கள்

4. சாத்தானின் கோட்டைகளை
சமூலம் நிர்மூலமாக்க - ஆட்கள்

5. தேவா! உம் ராஜியத்தை
சீக்கிரம் பரப்பிட - ஆட்கள்

6. சிலுவைக் கொடியை எங்கும்
ஜெயத்துடனே உயர்த்த - ஆட்கள்

## பாடல் 283: வாருமையா என்னுள்ளத்திலே!

பல்லவி

வாருமையா என்னுள்ளத்திலே! - தேவா
வாருமையா என்னுள்ளத்திலே!

சரணங்கள்

1. வேதனையுண்டாக்கும் வேர்
யாவையும் நீர் பிடுங்க - வாருமையா

2. சாலொமோன் தேவாலயத்தில்
மேகம்போல் வந்தவரே - வாருமையா

3. சோதனை நாட்களிலே
நாதனே உம்மை நம்ப - வாருமையா

4. முச் சத்துராதிகளை
நிச்சயமாய் ஜெயிக்க - வாருமையா

5. போதனை செய்பவற்றை
சாதனை செய்திடவே - வாருமையா

6. பெந்தெகொஸ் தென்னும் நாளில்
வந்த பரிசுத்தரே! - வாருமையா

## பாடல் 284: நன்மை மூலனே

சரணங்கள்

1. நன்மை மூலனே - எம் நேய நாதனே,
மைந்தர் பேரில் இந்த வேளை வந்திறங்குமேன்

2. போர் அதிகமாய் - சுவாமி மும்முரிக்குதே
சோர்வடையா ஆவியை நீர் ஊற்றிக் காத்திடும்

3. ஆத்துமா மிக - சுவாமி தத்தளிக்குதே
காத்து என்னை ஆற்றி இப்போ தேற்றிட வாரும்

4. துன்பம் வந்தாலோ - சுவாமி துயர மின்றியே
இன்பமாய் நிலைத்து நிற்க வந்திறங்குமேன்

5. இருளாய்த் தோன்றுதே - சுவாமி அருளைத் தாருமேன்
பரத்தின் ஜோதி எமக்குள் வீசக் கிருபை கூருமேன்

6. எந்தன் நம்பிக்கை - சுவாமி உம்மில்தான் ஐயா
நம்பி என்னை முற்றுமாகத் தத்தஞ் செய்கிறேன்

## பாடல் 285: ஆயத்த ஜெபம் செய்ய

இராகம்: இந்துஸ்தானி தாளம்: மிஸ்ர சாப்பு

பல்லவி

ஆயத்த ஜெபம் செய்யப் பெலன் தாரும் சுவாமி!
அடைக்கலம் எனக்கு வேறில்லை தேவாவி

சரணங்கள்

1. சாத்தானால் சோதனை மெத்தவுண்டையா
சர்வாயுதம் தந்து காத்திடுமையா - ஆயத்த

2. சுருக்க நாளானதால் குதிக்கிறான் ஐயா!
சுரர் கதி இழந்த பேய்த் தூதன் தான் மெய்யாய் - ஆயத்த

3. கேட்கிற வரமெல்லாம் கிருபையாய்த் தாரும்
கேடான மனம் நன்றாய் மாறிட வாரும் - ஆயத்த

4. கருத்தான மனதுடன் ஒருமித்துப் பாடி
கனிவுடன் மன்றாட அருள் செய்யும் சுவாமி! - ஆயத்த

5. இப்படியாகவே கேட்கும் மன்றாட்டை,
இயேசுவின் மூலமாய் ஏற்றுக்கொள் ஐயா! - ஆயத்த

## பாடல் 286: இயேசு ராஜனே இங்கே வாரும்

### சரணங்கள்

1. இயேசு ராஜனே இங்கே வாரும் - உந்தன்
தாசராம் எங்களைக் கண் பாரும் - இயேசு

2. ஆசீர்வதிக்க வாருமையா - உந்தன்
நேச கரத்தால் காரும் ஐயா - இயேசு

3. போருடைகளை நாங்கள் அணிந்து - வெகு
தீரவான்களாய் யாம் முன் செல்ல - இயேசு

4. யுத்தமோ மகா கடினம் - பொல்லா
சத்துரு சோதனை அதிகம் - இயேசு

5. ஆவியின் பட்டயம் கொண்டு - நாங்கள்
பாவியை மீட்கப் போர் செய்ய - இயேசு

## பாடல் 287: கிருபாசனத்தை அண்ட

What various hindrances we meet - 646

(Tune 8, 58 of ESB)

1. கிருபாசனத்தை அண்ட
பெரு மிடர் தோன்று மன்றோ;
மெய் ஜெபத் தருமை கண்டோர்
மீண்டும் அங் கேகுவாரன்றோ

2. ஜெபமே இருள் நீக்கிடும்,
யாக்கோபின் ஏணி ஏறிடும்;
விசுவாசம் நேசத்தோடு
வேண்டும் ஆசீர் வருஷித் திடும்

3. ஜெபத்தின் மகா மேன்மையை
சீர்தூக்கி வர்ணிப்பது யார்?
தபசி ஜெபிக்கக் கண்டால்
தள்ளாடி ஓடுவான் பேயும்

4. கர்த்தா உம் நன்மை விளங்க,
மெத்த அன்பும் விஸ்வாசமும்
சுத்த ஜெபப் பலனாக
சொரிந்திடும் எங்கள் மீது

*William Cowper*

## பாடல் 288: ஆவியில் ஜெபம் செய்ய

பல்லவி

ஆவியில் ஜெபம் செய்யப் பெலன் தாரும் சுவாமி!
அடைக்கலம் எனக்கு வேறில்லை தேவாவி!

சரணங்கள்

1. தேவாவி அருள்மாரி எம்மேலனுப்ப
   தேவா ஜெயித்திட பெலன் வேண்டும் சுவாமி! - ஆவி

2. முழு உள்ளம் கரைத்து என் இதயத்திலிருந்து
   சுளுவாக வசனங்கள் சுரந்திடச் செய்யும் - ஆவி

3. வஞ்சக வசனத்தால் இருளடையாமல்
   நெஞ்சம் உம்மில் சார்ந்து அருள் பெறச் செய்யும் - ஆவி

4. பெலனற்ற ஏழைக்குப் பெலன் தாரும் சுவாமி,
   நலமாக நாவை நீர் மாற்றிடும் சுவாமி - ஆவி

5. ஜெபம் செய்ய வாயை நீர் தொட்டிடும் சுவாமி,
   ஜெயம் பெற வகை விதம் கற்பியும் சுவாமி - ஆவி

6. இயேசுவின் இரத்தத்தால் இதயத்தைக் கழுவி
   நேசரி னாவியா லொருமிக்கச் செய்யும் - ஆவி

## பாடல் 289: ஜெப ஆவியை எம்மில் ஊற்றிட

பல்லவி

ஜெப ஆவியை எம்மில் ஊற்றிட வாரும்
இயேசுவே! இது நேரமே
இயேசுவே! என் நேசரே
ஆத்தும அனுகூலரே!

சரணங்கள்

1. இருளாம் நேரத்தில் அருளின் அம்பரா!
இளைத்தபோதிலும் இரக்கமாய்
இரத்தம் சிந்தினீர் சத்யமாகவே
பக்தியாய் ஜெபித்தவா! - ஜெப

2. மண்ணோர் மன்றாட்டு விண்ணுக் கேகிட,
விண்ணப்ப ஆவி வேண்டுமே;
வல்லவா! எமை ஆள வா!
பேயை வெல்லத் தா அருள் வல்லவா! - ஜெப

3. சுற்றும் சத்துரை முற்றாய் வென்று நாம்
வெற்றி விருதுடன் உற்றேக;
சொற்படியே நீர் கற்பியும்
அற்பர் வாய்மொழி வென்றிட - ஜெப

4. பாவத்தால் வரும் சாபம் தீர்த்தவா!
தாவியே உந்தன் பாதத்தை;
பாதகர் தேட ஆவி ஊற்றிடும்
கர்த்தனே! எங்கள் சத்யனே! - ஜெப

## பாடல் 290: பரமண்டலங்களிலிருக்கும் பிதாவே

கர்த்தருடைய ஜெபம்

1. பரமண்டலங்களி லிருக்கும் பிதாவே உனின் நாமம்,
பரிசுத்தப்பட உன் ராஜ்யம் பரம்ப அல்லேலூயா!

2. விண்ணில் சித்தம் செய்வது போல் மண்ணில் செய்யப்படுக
உண்ணும் அப்பம் இன்றும் எமக்குதவும் அல்லேலூயா!

3. எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னிப்பதுபோல்
எங்கள் கடன் நீர் மன்னியும் யாவும் அல்லேலூயா!

4. பங்க முறும் சோதனை படாது கொடுந் தீமை
பற்றாது எமக்கு இரட்சை பகரும் அல்லேலூயா!

5. உமக்கே ராஜ்யம் மகிமை உரிமை வல்லமையும்
உண்டாக என்றென்றைக்கும் ஆமென், அல்லேலூயா!

## பாடல் 291: தேவ பெலன்! தேவ பெலன்

சரணங்கள்

1. தேவ பெலன்! தேவ பெலன்
இயேசு வாக்களித்த
தேவ பெலன் தேவை

2. பெந்தெகோஸ்தெனும் நாளில்
அப்போஸ்தலர் மேலே
வந்த பெலன் தேவை

3. கூடி ஜெபித்தபோது
கூடி விஸ்வாசமாய்
அப்போஸ்தலர் ஜெபித்த போது வந்த பெலன் தேவை

4. மூவாயிரம் பேர் ஒன்றாய்
மூவாயிரம் பேர் ஒன்றாய்
ஓர் நாளில் மனமாற்றிய தேவ பெலன் தேவை

## பாடல் 292: கேளென் விண்ணப்பத்தை

பல்லவி

கேளென் விண்ணப்பத்தை
திரியேகா!

அனுபல்லவி

பாவிகளை மீட்கவும்
பேயின் கூரொடிக்கவும்

1. பக்தர்கள் பெருக்கமாய்,
கர்த்தரை உருக்கமாய்
கத்தும் ஆத்ம விண்ணப்பத்தைக்
கேளாயோ? - கேளென்

2. பொய்யன் பேய் சிறைகளாய்
வையகத்தோர் சிக்குண்டு
செய்யும் கர்ம பாதகத்தை
உணர்த்தாயோ? - கேளென்

3. சிற்றின்ப வலைகளில்
சிக்குண்டலைவோர்களை
சற்றே எழுப்பிடீரோ
சருவேசா! - கேளென்

4. இந்த தேசம் சுவாமியின்
சொந்த ஜனமாகவே
வந்து மனமாறல் பெற
இரங்காயோ? - கேளென்

5. ஆவியான ரூபியே!
பாவியைக் கிருபையாய்
சாவின் புண்யத்தாலே
உள்ளம் மாற்றாயோ? – கேளென்

## பாடல் 293: ஜீவ அப்பம் என்றும்

Break Thou the bread of life - 650

(Tune 713 of ESB)

1. ஜீவ அப்பம் என்றும்
   தாரும் தேவா;
   ஆழ்கடல் அருகே
   பகர்ந்தாற் போல்;
   உம் வார்த்தைகளை நான்
   தேடுகிறேன்
   என் ஆத்மா உம்மையே
   வாஞ்சிக்குதே!

2. ஜீவ அப்பம் நீரே,
   என் தேவனே;
   சத்ய வார்த்தையே,
   என்னை இரட்சிக்கும்;
   புசித்து ஜீவிக்க,
   தம்மோடு தான்; (நான்)
   கற்பியும் சத்தியம்
   அன்பின் தேவா!

3. தேவா உம் ஆவியை,
   அனுப்புமேன்;
   கண்களைத் தொட்டு,
   காணச் செய்யுமேன்;
   வாக்கின் ரகசியம்
   காட்டும் தேவா!
   உம் வேதத்தில் நான்
   உம்மை காண்கிறேன்

## பாடல் 294: ஆத்துமமே நீ விழித்திடுவாய்

Awake our souls, away our fears - 559

(Tune 17, 35 of ESB)

1. ஆத்துமமே நீ விழித்திடுவாய்
பயம் திகில் யாவும் நீக்கிடுவாய்
பரலோக பந்தயம் ஓடிடுவாய்
சந்தோஷ தைரியம் அடைவாய்

2. பாதை மிக ஒடுக்கமானதே
மானிட ஆவி சோர்வுள்ளதே
ஆனால் தேவ பக்தர்க்கு
வல்ல தேவன் பெலனளிப்பார்

3. உம் நிகரில்லா வல்லமை
என்றென்றும் நவமானதே
அனாதி காலமாய் நிலைத்து
யாவருக்கும் சக்தி ஈவாய்

4. வற்றாத ஜீவ ஊற்றண்டையில்
என் ஆத்மா என்றும் பானம்பண்ணும்
சுய பலத்தில் சார்ந்திடுவோர்
சேர்ந்து அழிந்து போய்விடுவார்

5. ஆகாயத்தில் செல்லும் கழுகைப்போல்
தேவ சமூகம் நாம் செல்வோம்
அன்பின் செட்டைகளாலே நாம்
சென்றிடுவோம் பரம நகர்

*Isaac Watts*

## பாடல் 295: நம் வேலைகள் அதிகமாகிடும் போது

He giveth more grace - 579

(Tune 591, 592 of ESB)

1. நம் வேலைகள் அதிகமாகிடும் போது
தம் மா கிருபையை அனுப்பிடுவார்
வெந்துயர்கள் சோதனை பெருகிடினும்
கிருபை சமாதானம் தந்திடுவார்

2. நம் பொறுமையை இழந்து சோர்ந்திடினும்
நம் பலம் குன்றி நாட்கள் சென்றிடும் முன்;
நம் ஜீவிய சம்பத்து தீர்ந்திடும் போது
பிதாவின் ஈவு ஆரம்பமாகும் பார்!

3. எல்லையில்லா அன்பு அளவில்லா கிருபை,
அந்தம் இல்லா பலம் மக்கள் காணுவார்;
சம்பன்னர் இயேசு தம் களஞ்சியம் திறந்து,
ஈந்திடுவார் இன்னும் ஈந்திடுவார்!

*Annie Johnson Flint*

## பாடல் 296: பாவ சஞ்சலத்தை நீக்க

What a Friend we have in Jesus - 645

(Tune 451 of ESB)

1. பாவ சஞ்சலத்தை நீக்க
பிராண சிநேகித னுண்டே
பாவப் பாரம் தீர்ந்து போக
மீட்பர் பாதம் தஞ்சமே!
சால துக்க துன்பத்தாலே,
நெஞ்சம் நொந்து சோருங்கால்,
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்!

2. கஷ்ட நஷ்ட முண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்;
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெபத்தால் சமீபிப்போம்;
நோக்குவாரே நெஞ்சின் நோவை,
பெலவீனம் தாங்குவார்;
நீக்குவாரே மனச் சோர்வை,
தீய குணம் மாற்றுவார்

3. பெலவீனமான போதும்
கிருபாசனமுண்டே,
இன ஜனம் சாகும்போதும்
புகலிடம் இதுவே;
ஒப்பில்லாத பிராண நேசா;
உம்மை நம்பி நேசிப்போம்;
அளவற்ற அருள் நாதா!
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்

*Joseph Scriven*

## பாடல் 297: இயேசு சுவாமி அருள் நாதா!

Pass me not O loving Saviour - 301

(Tune 341 of ESB)

1. இயேசு சுவாமி அருள் நாதா!
கெஞ்சிக் கேட்கிறேன்;
பாவி யெனைக் கைவிடாமல்
சேர்த்துக் கொள்ளுமேன்!

பல்லவி

இயேசு சுவாமி!
கெஞ்சிக் கேட்கிறேன்;
பாவி யெனைக் கைவிடாமல்
சேர்த்துக் கொள்ளுமேன்!

2. கெஞ்சினோர் அநேகர் பேரில்
தயை காட்டினீர்
எந்த நீசன் அண்டினாலும்
தள்ளவே மாட்டீர்! - இயேசு

3. தீய குணம் கிரியை யாவும்
முற்றும் வெறுத்தேன்;
நீரே தஞ்சமென்று நம்பி
வந்து நிற்கிறேன் - இயேசு

4. தூய ரத்தத்தாலே என்னை
சுத்தமாக்குவீர்
வல்ல ஆவியால் எந்நாளும்
காத்து ஆளுவீர்! - இயேசு

*Fanny Crosby*

## பாடல் 298: பிளவுண்ட மலையே

### Rock of Ages cleft for me - 227

(Tune 162 or  165 or 166 of ESB)

1. பிளவுண்ட மலையே
புகலிடம் தாருமேன்;
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவ தோஷங்கள் யாவும்
நீங்கும்படி அருளும்

2. கண்ணீர் நித்தம் சொரிந்தும்,
கஷ்டத் தவம் புரிந்தும்,
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே
ஏதுமின்றி ஏழையேன்
உம்மில் தஞ்சம் புகுந்தேன்

3. நிழல் போன்ற வாழ்வினில்,
அங்கம் சாகும் நாளிலே,
இம்மை விடும் நேரத்தில்,
நியாயத்தீர்ப்பின் நாளதில்,
பிளவுண்ட மலையே!
புகலிடம் தாருமேன்!

*Augustus M. Toplady*

## பாடல் 299: கர்த்தா உம் அன்பின் சத்தத்தைக் கேட்டு

I am Thine O Lord - 585

(Tune 637 of ESB)

1. கர்த்தா உம் அன்பின் சத்தத்தைக் கேட்டு
மீட்பைப் பெற்றுக் கொண்ட நான்,
ஆவலாய் இதோ நம்பிக்கையோடு,
கிட்டிச் சேர நான் வாறேன்

பல்லவி

எனதுள்ளம் உள்ளம் உள்ளத்தை இழும்
நீர் மாண்ட குருசண்டை

2. மீட்பா! இரத்தத்தால் என் இருதயம்
வெண்மையாகக் கழுவி
முற்று முடிய உம்மைச் சேவிக்க
மாற்றும் நீர் என் இச்சையை - எனதுள்ளம்

3. உம் சிங்காசனத்தின் முன்பிலே நான்
என் நேரத்தை கழிப்பேன்
முழங்கால் ஜெபம் செய்யும் போது நான்
நண்பனைப்போல் பேசுகிறேன் - என்றென்றும் - எனதுள்ளம்

4. மண்ணில் கண்டிடா பேரின்பத்தை நான்
விண்ணில் பெற்று வாழுவேன்!
அண்ண லன்பின் ஆழமும் நீளமும்
அங்கே கண்டானந்திப்பேன்! - எனதுள்ளம்

*Fanny Crosby*

## பாடல் 300: எப்போதும் இயேசுவே

I need Thee every hour - 606

(Tune 479 of ESB)

1. எப்போதும் இயேசுவே
சகாயராயிரும்;
அன்பான சத்தத்தால்
என் ஏக்கம் நீக்கிடும்!

பல்லவி

எந்நாளும் நீரே வேண்டும்!
இந்த நாளும் வேண்டும்!
நீர் என்னை நோக்கிப் பாரும்!
பேரன்பரே!

2. எப்போதும் இயேசுவே!
இத் தாசனோடிரும்;
தீயோனின் சோதனை
உம்மால்தான் மாய்ந்திடும் - எந்நாளும்

3. எப்போதும் இயேசுவே!
இக்கட்டு வாழ்விலும்,
அன்பாகத் தங்கு மென்
வாஞ்சிக்கும் நெஞ்சிலும் - எந்நாளும்

4. எப்போதும் இயேசுவே!
உம் சித்தம் போதியும்;
உம் வாக்குத் தத்தங்கள்
என்னில் நிறைவேற்றும் - எந்நாளும்

*Anne S. Hawks*

## பாடல் 301: நேசரே நான் ஜெபிக்கிறேன்

Let me hear Thy voice - 502 (Tune 445 of ESB)

1. நேசரே நான் ஜெபிக்கிறேன்
பேசுமேன் கீழ்ப்படிவேன்
குருசண்டை இதோ வாறேன்;
பயம் நீர் நீக்குமேன்
உமது சுடரை வீசி
உட் குறைவை நீர் காட்டி
இப்போ என் ஆத்துமத்தில் பேசி
உம்மண்டை இழுமேன்

பல்லவி
மீட்பா பேசும்
உமது சித்தம் செய்ய;
குருசண்டை அடியேன்
காத்து ஜெபிக்கிறேன்

2. பேசுமேன் நான் அஞ்சமாட்டேன்,
துன்ப பாதை தனிலும்;
உம் அன்பால் விழவே மாட்டேன்
துணை நீர் அப்பனே!
இப்போ என் இதயத்தை நீர்
ஆலயமாய்க் கொள்ளுமேன்;
பாவம் யாவையும்
என்னைச் சொந்த மாக்கும் - மீட்பா

3. மீட்பரின் உதிரத்தாலே
முற்றும் சுத்தமானேன் நான்;
இனி என் பாவத்தினாலே;
உம்மைக் கோபம் மூட்டேன்;
உலகத்தின் இன்பம் வேண்டாம்
சிற்றின்ப மாய்கை வேண்டாம்
உம்மையே என் தஞ்சமாக
பிடித்தேன் முற்றாக! - மீட்பா

*Herbert H. Booth*

## பாடல் 302: இந்த வேளை வந்து

பல்லவி

இந்த வேளை வந்து வரம் தந்தாள் ஐயனே!

1. தேவாதி தேவனே! திரு மனுவேலனே! தேவா!
சிறியேனைக் கண்பாராய் நின் தீன தயை கூராய்!
ஜெயசீலா தேவபாலா மனுவேலா வரம்தா! - இந்த

2. எத்தனையோ தரம் ஏழை நான் செய்த பாவம் - தேவா
அத்தனையும் நீக்கி அடியேனைக் கைதூக்கி - எனை
ஆள கிருபை சூழ நல்லவேளை வந்ததே! - இந்த

3. பாவிகளை ரட்சிக்க பாருல குதித்தவா - ஏழைப்
பாவியெனை யன்பாய் படிதனில் நற்பண்பாய் - உனைப்
பாட நிதந்தேட பாதையோட கிருபைசெய் - இந்த

4. இரட்சண்ய சேனையார் செய் எத்தொழிலானாலும் - நின்
சிகரமே விளங்க! திருமறை துலங்க, ஜெக
தீசா பாவநாசா உனின் தாசர்க் கருள் தா! - இந்த

## பாடல் 303: தேவாதி தேவா திரியேக தேவா!

பல்லவி

தேவாதி தேவா திரியேக தேவா!

சரணங்கள்

1. தம்மைத் தாமே ஏழைகட்காய்
தத்தம் செய்த மேசியாவே!
உம் ஆவியை எங்கள் பேரில்
ஊற்றி உயிர்ப்பியுமேன் - தேவாதி

2. நொடி தோறும் தேவரீர்!
அடியாரைக் காக்கிறீர்;
கூடிப் பணிந்தும்மைத் தேட
நாடும் ஆவி தந்திடுமேன் - தேவாதி

3. நன்றி யுற்ற உள்ளத்தோடே
என்றும் உம்மைப் போற்றிட,
உந்தனது கிருபையாலே
எந்த னாத்மம் நிரப்பிடுமேன் - தேவா

## பாடல் 304: இது நேரம் நீ வா கருணாகரா!

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

இது நேரம் நீ வா கருணாகரா!

1. பாதம் பணிந்தேன் நானே பாவிகள் நேயனே!
இதயம் களிக்க விரைந்தே நீ வா! - இது

2. எங்கிருப்பேர் மூவர் எனைத் துதிப்பார்களோ
அங்கிருப்பேன் என வாக் கீந்தாய் நீ - இது

3. உள்ளக் குறைகள் யாவும் தெள்ளி எமக்குரைக்க
வள்ளலே! அடியாரிடை மகிழ்ந்தே! வா - இது

4. பண்டு அப்போஸ்தலர் பரன் உனைத் தேடவே
அண்டங் குலுங்க எழுந்த விதமாய்! - இது

5. தாசர் இரட்சண்ய வழி சகலர்க்குங் கூறிட
நேச சுத்தாவி தர நிமலா! நீ - இது

6. நம்பிக்கையோ டுந்தன் அன்பின் கரம் நோக்கி
வெம்பி மன்றாடுகின்றோம் விரைந்தே! வா! - இது

## பாடல் 305: வாரும் மகத்துவ முள்ள அரசே!

இராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

வாரும் மகத்துவ முள்ள அரசே!
மனுக்குலத்தை இரட்சிக்கவென்று!

அனுபல்லவி

கேளும் உமதடியார் விண்ணப்பங்களை அன்பாய்!
கேட்டு உமதாவியின் வரங்களைப் பொழிந்திட

1. பாருல குதித்தீரே! பகைஞனை ஜெயித்தீரே!
பாவ விஷ மகற்றப் படுகொலை யடைந்தீரே!
சாவின் கூரொடித்தீரே! தரணியில் உயிர்த்தீரே!
தற்பரனின் வல பாகத்தைத் தெரிந்தீரே! - வாரும்

2. என்னை இரட்சிக்கவென்று உன்னதம் துறந்தவா!
எளியன் மனுவடிவம் ஏற்கவும் மகிழ்ந்தவா!
சென்னி அழுந்திநோக முண்முடி புனைந்தவா!
சிலுவை மரத்தில் இரு கள்வரோடிறந்தவா! - வாரும்

3. கிருபையுடன் என்னிருதயந்தனில் வாரும்!
கேடுபாடுகள் எல்லாவற்றையும் தீரும்!
பொறுமை நம்பிக்கை அன்பு போதவே தாரும்!
பொன்னுலகமதில் என்னையும் சேரும்! - வாரும்

## பாடல் 306: கிருபை கூர் ஐயா

இராகம்: கமாஸ் தாளம்: ரூபகம்

பல்லவி

கிருபை கூர் ஐயா - உந்தன்
அறிவில் தேற்றையா! - என்மீது

அனுபல்லவி

சிறியேன் நானையா - பாவ ஜென்மிதானையா! - நான்
நெறி யேகிட பெலம் நல்கிட - வேண்டுறேனையா!

1. புவனமேல் மா புண்ணியவான் புனிதனேசுவே!
தவனமுறும் ஆன்மாதனை தாங்கி மீட்பீரே! - உம்
பவனமாகவே நான் - என் மனதைப் பற்றுமேன்!
கவனமாக நான் கர்த்தா! உன்னைக் கண்டடையச் செய்யுமேன் - என்மீது

2. தீமை செய்ய நாடு தெந்தன் திருக்கு நெஞ்சமே!
நேர்மை பெற நினை யல்லாது யாரென் தஞ்சமே!
வாய்மை பஞ்சமே! தெய்வ வணக்கம் கொஞ்சமே!
தாழ்மையாய் உந்தன் தாழ்பணிந்தேன் தாராய் உன் தஞ்சமே - என்மீது

3. பரத்தை நோக்க மனமுமற்ற பதடி நான் ஐயோ!
சிரத்தை கொண்டு ஓட உந்தன் ஜீவ பாதையோ,
வருத்தமா மையா உயர் வலிமை தா ஐயா!
கர்த்தனே எந்தன் காட்சி கண்டு நான் களிக்கச் செய் மெய்யாய் - என் மீது

*K.S. Abraham*

## பாடல் 307: அன்பே! என்னாருயிரே

பல்லவி

அன்பே! என்னாருயிரே
இன்பே! எனதரணே!

அனுபல்லவி

துன்பமுறு முலகில் தூயா! நீயே என் கோனே!

சரணங்கள்

1. என்றும் உம்மை நேசிப்பேன்
என் முழு பலத்தாலே,
உந்தன் செயல்களையே
நன்றாகத் தியானிப்பேனே - அன்பே

2. எத்தனை நாளாக நான்
உத்தம வேந்தே! உமை
பக்தியாய்ப் பணியாமல்
கர்த்தா! உமை வஞ்சித்தேன் - அன்பே

3. தூய நல் மனதாலும்
மாய மில்லாதன்பாலும்;
நேய னுமை சேவிக்க
தூய ஆவி தந்தாளும்! - அன்பே

4. அனாதியானவனே!
அற்பன் மேல் அன்புற்றோனே!
தினமு மும்மைப் பின் பற்ற
தேவே எனையாக்குமேன்! - அன்பே

5. முச் சத்துருக்கள் என்னை
அச்சமுறத் தாக்கையில்
அட்சயன் இயேசு நாதா!
பட்சமாய்க் காருமென்னை - அன்பே

6. இந்த நீதிப் பாதையில்
உந்தனடி பின் சென்று
சந்ததமுந் திடனாய்
எந்தாய் நடக்கச் செய்வாய்! - அன்பே

7. பரன் உம்மைத் தேடாமலே
நரகத்திற் கேகுவோரை
விரைவில் நல்வழி சேர்க்க
கரையு மென்னுள்ளம் அன்பால்! – அன்பே

*K.S. Abraham*

## பாடல் 308: அருள் ஏராளமாய் பெய்யும்

There shall be showers of blessing - 637

(Tune 456 of ESB)

1. அருள் ஏராளமாய்ப் பெய்யும்
அன்பின் வாக்குத் தத்தமே
ஆறுதல் தேறுதல் ஈவார்
ஆண்டவர் மேலிருந்து

அருள் ஏராளம்
அருள் அவசியமே;
க்ருபைத் துளிகள் போதாது
மாரியாய்த் தந்தருளும்!

2. அருள் ஏராளமாய் பெய்யும்
மீண்டும் உயிர்ப்பித்திடும்
மேடு பள்ளங்களின் மேலும்
கேள் மாமழையின் சத்தம்! - அருள்

3. அருள் ஏராளமாய் பெய்யும்
எம்மேலனுப்பும் கர்த்தா!
உம் வாக்கை எண்ணி நீர் எம்மை
இப்போ உயிர்ப்பித்திடும் - அருள்

4. அருள் ஏராளமாய் பெய்யும்
இன்றே பெய்திட்டால் நலம்;
பாவ அறிக்கை செய்கிறோம்
இயேசுவின் நாமத்திலே - அருள்

# பாடல் 309: ஓ! இஸ்ரவேலின் மேய்ப்பரே நீர்

### Thou Shepherd of Israel - 639

(Tune 487 of ESB)

1. ஓ! இஸ்ரவேலின் மேய்ப்பரே நீர்,
என் உள்ளத்தின் ஆனந்தமே,
நான் உம்மண்டை வசித்திட
வாஞ்சிக்குது எந்தனுள்ளம்
மேய்ப்பரையே கீழ்ப்படிவோர்
நல்மேய்ச்சலைக் கண்டடைவார்,
நீர் மார்பில் அணைத்திடவே
பகல் வெயில் பட்டிடாதே

2. காட்டும் தேவா உம் ஜனத்தின்
பேரின்பமாம் வாசஸ்தலம்,
நோக்கிடுவார் சுத்தர் அங்கு
சேர்ந்திருப்பார் தேவனோடு;
உம்பாடு மரணமுமே
காட்டும் பாவிக்குமதன்பை
உம்மோடு வெற்றி சிறக்க
கல்வாரிக்கு ஓட்டுதென்னை

3. உம் மந்தை தங்குமிடத்தில்
வாஞ்சிக்கின்றேன் இளைப்பாற,
கன்மலையின் ஒதுக்கிலும்
உம்மார்பிலும் நான் மறைவேன்;
எப்போதும் அங்கு தங்குமேன்
ஓர் போதும் நான் பிரிந்திடேன்;
உம் குத்துண்ட விலாவினில்
அடைக்கலம் தந்தருளும்

*Charles Wesley*

## பாடல் 310: சர்வலோகத்தின் தேவரீர்!

O Thou God of every nation - 622

(Tune 423, 408 of ESB)

1. சர்வலோகத்தின் தேவரீர்!
எம்மை ஆசீர்வதியும்
எம்மைத் தத்தம் செய்திடவே
உன்னத அக்கினி தாரும்
வாழ்க சேனை!
அபிஷேகியும் எம்மை

2. சுத்த ஆவியால் நிரப்பும்
வெண்மையாக்கும் வீரரை
இயேசுவால் ரட்சியும் லோகம்,
சாத்தான் ராஜ்யம் தோற்கவே
வாழ்க சேனை!
அனுப்பும் எமை வேலைக்காய்

3. சுத்த ஜீவியம் செய்திட,
வல்லமையால் நிரப்பும்
இடை விடா ஜெயம் பெற்று,
துதி செய்ய அருளும்
வாழ்க சேனை!
எம் கன்மலை நீர் தாமே

4. வாழ்க ஜெனரல், தளகர்த்தர்,
வாழ்க உத்தியோகஸ்தர்
வாழ்க இரட்சைப்பட்டோர் வீரர்
போரை முன் நடத்திடும்
வாழ்க சேனை!
உம் நன்மையைச் சொல்லுவோம்

*William Pearson*

## பாடல் 311: என் ஜெபவேளை இன்பமாம்

Sweet Hour of Prayer - 633

(Tune 66 of ESB)

1. என் ஜெபவேளை இன்பமாம்
அப்போ தென் துக்கம் மறப்பேன்
பிதாவின் பாதம் பணிவேன்,
என் ஆசை யாவும் சொல்லுவேன்
என் நோவு வேளை தேற்றினார்,
என் ஆத்ம பாரம் நீக்கினார்
ஒத்தாசை பெற்று தேறினேன்
பிசாசை வென்று ஜெயித்தேன்

2. என் ஜெபவேளை இன்பமாம்
மா தாழ்மையோடு பிரார்த்திப்பேன்
மன்றாட்டைக் கேட்போர் வருவார்,
பேர் ஆசீர்வாதம் தருவார்;
என் வாக்கின் மேல் விஸ்வாசமாய்
என் பாதம் பற்று ஊக்கமாய்
என்றோர்க் கென் நோவை சொல்லுவேன்
இவ்வேளை (யை) நான் வாஞ்சிப்பேன்

3. என் ஜெபவேளை இன்பமாம்
ஆனந்தக் களிப்படைவேன்,
பிஸ்கா சிகரம் ஏறுவேன்
பேரின்ப வீட்டை நோக்குவேன்;
இத்தேகம் மாறி ஏகுவேன்
விண் நித்ய வாழ்வைப் பெறுவேன்;
தெய்வீக வீட்டில் வசிப்பேன்
வாடாத கிரீடம் சூடுவேன்

*William Walford*

## பாடல் 312: காரிருளில் என் நேச தீபமே

Lead kindly Light - 606

(Tune 510, 511 of ESB)

1. காரிருளில் என் நேச தீபமே
   நடத்துமேன்
வேறொளியில்லை வீடும் தூரமே,
   நடத்துமேன்,
நீர் தாங்கின் தூரக் காட்சி ஆசியேன்
ஓர் அடி மட்டும் என் முன் காட்டுமேன்

2. என் இஷ்டப்படி நடந்தேன் ஐயோ
   முன்னாளிலே,
ஒத்தாசை தேடவில்லை இப்போதோ
   நடத்துமேன்;
உல்லாசம் நாடினேன் திகிலிலும்,
வீம்பு கொண்டேன் அன்பாக
   மன்னியும்

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்;
   இனிமேலும்
காடாறும் சேறு குன்றில் தேவரீர்
   நடத்திடும்;
உதய நேரம் வர களிப்பேன்;
மறைந்து போன நேசரைக்
   காண்பேன்

*John Henry Newman*

## பாடல் 313: வாருமையா போதகரே!

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

சரணங்கள்

1. வாருமையா போதகரே!
வந்தெம்மிடம் தங்கியிரும்;
சேருமையா பந்தியிலே
சிறியவராம் எங்களிடம்

2. ஒளி மங்கி இருளாச்சே,
உத்தமனே வாருமையா!
களித்திரவு காத்திருப்போம்
காதலரே வாருமையா!

3. ஆதரையில் எம் ஆதரவே
அன்பருக்கு சதா உறவே;
பேதையர்க்கும் பேரறிவே
பாதை மெய் ஜீவ சற்குருவே

4. நாமிருப்போம் நடுவில் என்றீர்
நாயகா உம் நாமம் நமஸ்கரிக்க;
தாமதமேன் தயை புரிய
தற்பரனே நலம் புரிவாய்

5. அமர்ந்திடுவீர் ஆசனத்தில்
எழுந்திடுவீர் எம் நடுவில்;
ஆசீர்வதித் தீந்திடுவீர்
அன்புடனே அருள்மாரியை

## பாடல் 314: ஆதியாம் மகா ராஜனே

பல்லவி

ஆதியாம் மகா ராஜனே - எந்த வேளையும்
அடியனோடிரும் ஈசனே

அனுபல்லவி

தீதில்லா சருவேசா தேசுறும் பிரகாசா
பாதகன் யான் மிகு பலவீனன் ஆனதால் - ஆதியாம்

1. பாவி பெலனால் ஐயனே - நின்றால் என்னைப்
பகைவர் ஜெயிப்பார் மெய்யனே;
தேவா துணை நீர் ஐயனே - சிறியனிடம்
சேர்ந்தே வசியும் துய்யனே
மேவும் தஞ்சம் எனக்கு வேண்டும் காவலன் நீரே;
சாவுவரையும் என்னைத் தாங்கி அரவணையும் - ஆதியாம்

2. இரக்கம் பொழிய வாருமே - கிருபையாக
இறைவா என்னிடம் சேருமே;
உருக்கம் நிறைந்த நீருமே - அனவரதம்
உந்தன் அருளைத் தாருமே;
செருக்காய் எம்மீ திகலோர் சேதம் செய்ய நினைக்கும்
திருக்கை அகற்றி என்னில் தினமும் அருள் புரியும் - ஆதியாம்

3. எந்தன் மரண மட்டுமே - அருகில் நீரே
இருந்தால் மகா இஷ்டமோ;
எந்த அகிதர் கெட்டுமே - இமைப் பொழுதில்
ஏகிப் போவார் திட்டமே;
தந்தை சுதன் நீரல்லால் தஞ்சம் வேறாரும் இல்லை
விந்தை மேவும் கதியில் மேம்னையுடன் வாழ்கவே - ஆதியாம்

## பாடல் 315: இயேசுவே கிருபாசனப்பதியே

இராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

இயேசுவே கிருபாசனப்பதியே கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்,
இயேசுவே கிருபாசனப்பதியே

சரணங்கள்

1. காசினியில் உன்னை அன்றி தாசன் எனக்காதரவு
கண்டிலேன் சருவ வல்ல மண்டலதிபா,
நேசமாய் ஏழைக்கிரங்கி மோசம் அணுகாது காத்து
நித்தனே எனைத்திருத்தி வைத்தருள் புத்தி வருத்தி - இயேசுவே

2. பேயுடைச் சிறையதிலும் காயவினைக் கேடதிலும்
பின்னமாக சிக்குண்ட துர் கன்மி ஆயினேன்
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்று திரம் விட்ட
தேவனே எனைக் கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி - இயேசுவே

3. சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே;
குறை ஏதுனை அண்டினோர்க்கிறைவா எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து முற்று முடியக் கண்பார்த்து - இயேசுவே

4. பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை
புண்ணியனே உன் சரணம் நண்ணி அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து - இயேசுவே

ஜான் பால்மர், மயிலாடி, 1812

## பாடல் 316: கர்த்தரோடு நாம் நித்தம் நடத்தல்

How wonderful it is to walk with God - 583

(Tune 519, 522 of ESB)

1. கர்த்தரோடு நாம் நித்தம் நடத்தல்
எத்தனை அற்புத அனுபவம்;
உந்தனை நான் நடத்துவேன் என்ற
அன்பின் சத்தம் கேட்டென்றும் நடப்போம்

2. கர்த்தரோடு நாம் நித்தம் பேசுதல்
எத்தனை அற்புத அனுபவம்;
துன்பம் நம்மை சூழ்ந்து வந்திடினும்
நம்பிக்கையோடு அவரை பின் செல்வோம்

3. கர்த்தருக்கு துதி செலுத்துதல்
எத்தனை அற்புத அனுபவம்;
வல்லமையுள்ள அவர் நாமத்தை
எல்லா நாட்களிலுமே துதிப்போம்

4. கர்த்தருக்காய் நாம் நித்தம் போர்செய்தல்
எத்தனை அற்புத அனுபவம்;
சத்துரு சேனை முற்றும் துரத்தி
வெற்றியுடனே முன் சென்றிடுவோம்

5. கர்த்தரோடு நாம் நித்தம் ஜீவித்தல்
எத்தனை அற்புத அனுபவம்
நித்ய மகிமை ராஜியத்திலே
சுத்தராய் வாழ்ந்து என்றும் சுகிப்போம்

*Theodore H Kitching*

## பாடல் 317: மீட்பின் ஒளி இப்போ நான் பார்க்கிறேன்

### Saviour of light I look just now to thee - 628

Tune: O Man of Galilee - 754 of ESB

1. மீட்பின் ஒளி இப்போ நான் பார்க்கிறேன்
பாதையை வெளிச்சமாக்கும் பார்க்க
தம் அடிகள் எனக்குப் பாதையாய்
என் ஜீவ ஒளியாய் மெய்யாய் ஆவீர்

ஓ கலிலேயனே, தாங்கும் தங்கி பெலன்
ஆயுள் காலமெல்லாம் வாரும் என்னுடனே

2. தொட்டருளும், இன்னும் என்னைத் தொடும்
தினம் எப்போதும் தம் சித்தம் செய்ய
வேதனை தாங்கும் நல் வைத்தியராம்
தொடு-வல்லமை என்றும் மாறாதே - ஓ கலிலேயேனே

3. மாலுமி நீர், உம்மை நம்புகிறேன்
வழிகாட்டி, இடும் கட்டளைக்கு
அந்தமட்டும் பணிந்து யாத்ரை செய்வேன்
மகிமையில் இன்ப வார்த்தை கேட்பேன் - ஓ கலிலேயேனே

*Translated by: Daniel J. Raj*

## பாடல் 318: தனித்தும் சமூகத்திலே

In the secret of Thy Presence - 591(Tune 449 of ESB)

1. தனித்தும் சமூகத்திலே
கர்த்தர் வாழும் இடத்திலே
சொல் லொண்ணாத வல்லமையும்,
ஊழியத்தின் ஊற்றும் உண்டே;
அன்பின் காணிக்கையுடனே,
என் உள்ளம் துதி செய்யும்;
தம் சித்தத்தை வெளியாக்கி
தாமே காட்சி யளிப்பார்

தனித்தும் சமூகத்திலே
உம் வல்லமை ஒதுக்கிலே
உம்மை நான் நேசித்துழைக்க
அருளேன் ஆயுளெல்லாம்

2. நாவு சொல்வதற்கு மேலாய்
கைகள் செய்வதற்கும் மேலாய்
என் பக்தி மிக ஆழமாய்
என் மீட்பர் ராஜனுக்கே;
வேறொன்றும் உருக்கமாக
உண்மையாய் காத்திடாது,
நறுமணம் வீசச் செய்யாது
நான் செய்யும் சேவை தனில் - தனித்தும்

3. தேவா உம்மை நேரில் பார்த்து,
தரி சித்ததை சொல்வதில்
ஜீவியத்தில் முற்றும் ஆண்டு,
ஒளி வீசிடச் செய்யும்;
என்னை முற்றுமாய் படைத்தேன்
முற்றுமாய் ஒப்பு வித்தேன்
அறிந்தும்மை சேவித்துப் பின்
நேரில் உம்மை காணவே - தனித்தும்

*Albert Osborn*

## பாடல் 319: கர்த்தா பேசும் தாசன் கேட்பேன்

Master speak they Servant Heareth - 614

(Tune 462, 373 of ESB)

1. கர்த்தா பேசும் தாசன் கேட்பேன்
அன்பின் வார்த்தைக்காய் நிற்பேன்
தைரிய மூட்டும் சத்தம் கேட்க
பேசுவீர் இப்போதே தான்!
கர்த்தா வேண்டும் வார்த்தை சொல்வீர்!
கேட்கிறேன் இப்போது நான்

2. கர்த்தா பேசும் பெயர் சொல்லின்
அறிவேன் அதென்னையே!
வேகமாய்ப் பின் சென்றிட என்
கால்களைத் திடனாக்கும்;
மேய்ப்பர் மந்தை ஓட்டிக்குன்றின்
நன் நிழலில் மேய்த்தாற்போல்

3. கர்த்தா பேசும் பேதையேனும்
கேட்டலல்லால் விடாதிரும்.
கர்த்தா பேசும் எந்தன் ஆத்ம
வாஞ்சையை அறிவீரே;
அறிவீர் என் தேவைகளை
தேர்ந்து ஆசீர் அளிப்பீர்

4. கர்த்தா பேசும் தம் வாக்கை நான்
கேட்க ஆயத்தம் செய்வீர்,
கீழ்ப்படிவேன் சந்தோஷமாய்
கைக் கொள்வேன் தம் வார்த்தையை,
கர்த்தா வேண்டும் வார்த்தை சொல்வீர்
கேட்கிறேன் இப்போது நான்

*Frances Ridley Havergal*

## பாடல் 320: நித்திய அன்பின் ஆவியே

Spirit of eternal love - 630 (Tune 642 of ESB)

1. நித்திய அன்பின் ஆவியே
நான் தப்பாமல் நடத்தும்
எந்தன் இருதயத்தை
உம்மண்டை இழும்;
லோக செல்வம் மாயையே
கற்பனை போல் மாறுமே
எப்போதும் தந்திடுமேன்,
உம் மோடைக்கியம்

பல்லவி
உம் மோடைக்கியம் (2)
எப்போதும் தந்திடுமேன்
உம் மோடைக்கியம்

2. ஆவியே வந்தாளுமேன்,
அன்பின் ஜூவாலை புரள;
எந்தன் ஆத்ம வாஞ்சைகள்
உம்மில் தங்கட்டும்;
தீய சிந்தனை நீக்கி
சமாதானம் தாருமேன்,
உம்மில் என்னை மறைத்து
என்னை நடத்தும் - உம்மோடைக்கியம்

3. இப்படி உதவிட நான்
உம்மை நித்தம் அறிய;
நித்ய சந்தோஷம் பெற
உம்மில் ஜீவிப்பேன்;
தீய எண்ணம் பாவமும்,
நீக்கி சுத்தம் செய்யுமேன்
மோட்ச லோகம் இப்போதே
என்னில் உதிக்க - உம்மோடைக்கியம் *Albert Orsborn*

## பாடல் 321: சேனையல்லோ ஏலேலோ

இராகம்: கப்பல் சிந்து தாளம்: திரிபுடை

சேனையல்லோ ஏலேலோ சேனையிது! இயேசையா
இரட்சணிய ஏலேலோ சேனையிது! இயேசையா
ஏழைகட்கும் ஏலேலோ பாவிகட்கும் இயேசையா
இரங்கி நிற்கும் ஏலேலோ சேனையிது! இயேசையா
அன்பினாவி ஏலேலோ நிறைந்து வந்த இயேசையா
அருமையான ஏலேலோ சேனையிது இயேசையா
கோபம் பகை ஏலேலோ வர்மமெல்லாம் இயேசையா
விட்டுவந்த ஏலேலோ சேனையிது இயேசையா
பேயினெல்லா ஏலேலோ வலையினின்றும் இயேசையா
பிடித்திழுக்கும் ஏலேலோ சேனையிது! இயேசையா
துன்பமுள்ள ஏலேலோ மானிடர்க்கு இயேசையா
இன்பம் காட்டும் ஏலேலோ சேனையிது! இயேசையா
கள் சாராயம் ஏலேலோ குடியாத இயேசையா
களங்கமற்ற ஏலேலோ சேனையிது! இயேசையா
தூஷணங்கள் ஏலேலோ பேசாத இயேசையா
தூய்மையான ஏலேலோ சேனையிது இயேசையா
பேதையான ஏலேலோ பெண்களையே இயேசையா
பெலப்படுத்தும் ஏலேலோ சேனையிது! இயேசையா
குடிகளவு ஏலேலோ செய்யாமல் இயேசையா
குணப்படுத்தும் ஏலேலோ சேனையிது! இயேசையா
உயர்வு தாழ்வு ஏலேலோ பாராமல் இயேசையா
ஒருமைப்பட்ட ஏலேலோ சேனையிது! இயேசையா
பிரிந்திருக்கும் ஏலேலோ குடும்பங்களை இயேசையா
கூட்டிச் சேர்க்கும் ஏலேலோ சேனையிது! இயேசையா
சிறியோரை ஏலேலோ கூட்டிச் சேர்த்து இயேசையா
சீராக்கும் ஏலேலோ சேனையிது! இயேசையா

## பாடல் 322: பகைஞர் மிகச் சீறினும்

"Neath our Standard" - 778

(Tune 684 of ESB)

1. பகைஞர் மிகச் சீறினும்
வீசும் கொடியின் கீழ் நிற்போம்
மஞ்சள் சிவப்பு நீலமாம்,
கொடியின் கீழ் வெல்லுவோம்

உண்மையாயிருப்பேன்
மஞ்சள் சிவப்பு நீலக் கொடியிங்கீழ்!
உண்மையாயிருப்பேன்
சேனையில் என் இரட்சகருக்காய்

2. போர்தனில் நான் மகிழுவேன்
பொல்லான் படையை எதிர்ப்பேன்
நல்லானுக்காய் போர் புரிவேன்
முந் நிறக் கொடியின் கீழ் - உண்மை

3. பின் வாங்காமல் முன் செல்லுவேன்
வன் போர் முனையை விட்டோடேன்
திண்ணம் பேயை நான் வெல்லுவேன்
முந் நிறக் கொடியின் கீழ் - உண்மை

*Gustavus Grozinsky*

## பாடல் 323: யுத்தம் மகா கடின மாயினும்

### Though fierce the conflict

(Tune 400 of ESB)

1. யுத்தம் மகா கடின மாயினும்
உயர்த்துவோம் நம் கொடியை
சத்துருக்கள் பலவான்களாயினும்
உயர்த்துவோம் நம் கொடியை;
கிறிஸ்து நம் சேனாபதி, பயமேன்?
அவர் போருடை பெலன் ஐயமேன்?
காத்திடுவார் போரில் நான் அறிவேன்
உயர்த்துவோம் நம் கொடியை

2. பகைவர் சேனை தளர்ந்திடுது
உயர்த்துவோம் நம் கொடியை,
அதி தீர்க்கமாய் நாம் போர் புரிவோம்,
உயர்த்துவோம் நம் கொடியை;
பேரிகைகள் முழங்க முன் செல்வோம்
பாரிலெங்கும் கொடி வீசிடுவோம்;
யாவரும் இரட்சிப்படையும் வரை,
உயர்த்துவோம் நம் கொடியை

3. தேவ துரோகிகளாயினும் சிலர்
உயர்த்துவோம் நம் கொடியை
மற்றோர் செய்கையால் தைரியம் குன்றாது
உயர்த்துவோம் நம் கொடியை,
தேவன் உன் முன் செல்கிறார் அச்சமேன்?
எதிரிகள் உன்னைச் சூழ்ந்திடுவார்;
அப்போ தவர் உன் சகாயத்தால்,
உயர்த்துவோம் நம் கொடியை

## பாடல் 324: யுத்தஞ் செய்ய

Come, join our Army - 681

(Tune 776 of ESB)

1. யுத்தஞ் செய்ய எம் படையிற் சேரு
பிசாசினை வெல்லத் துணையே இயேசு
சத்தியத்தைத் தாங்கப் போருடையணிந்து
இரட்சண்ய சைனியம் போகின்றது!

பல்லவி

போர் புரிய முழு வெற்றி பெற,
இரட்சண்ய சைனியம் போகின்றது;
சேனையில் வீரா திடனாயிரு
இரட்சண்ய சைனியம் போகின்றது!

2. சத்துருவைத் துரத்துவோம் வாரீர்,
இத்தரை தளகர்த்தன் இயேசுவுக்காம்;
வைரிகள் சூழ்ந்தாலும் முன் செல்லுவோம்
இரட்சண்ய சைனியம் போகின்றது! - போர்

3. வா எதிரியை எதிர்த்து நிற்போம்,
உயிர் போமளவும் போராடுவோம்;
இரட்சை பெற்றோம் என்று பாடிடுவோம்,
இரட்சண்ய சைனியம் போகின்றது! - போர்

*William Pearson*

## பாடல் 325: தேவ போர்ச் சேவகரே!

Soldiers of our God, arise - 696 (Tune 802 of ESB)

1. தேவ போர்ச் சேவகரே!
நாள் சமீபமாகுது;
நித்திரை ஏன் வீரரே?
ஒளி யதிகமாகுது;
இயேசுவை யறியாமல்
மாந்தர் மாண்டு போகிறார்;
காலத்தைக் கழிக்காமல்
உடனே போர்செய்யப் போவோம்

பல்லவி
பேயின் கோட்டை, கொத்தளங்கள்
எதிர்த்திடிப்போம்;
சாத்தான் ராஜரீகம்
செய்யுமிட மெங்கும்
பேயின் கோட்டை, கொத்தளங்கள்
எதிர்த்திடிப்போம்
இயேசு இராஜனுக்கு ஸ்தோத்திரம்
அவர் நாமத்திற் கெப்போதும்
மேன்மை, புகழ் துதி கீதம்,
என்றும் உண்டாவதாக!

2. பாதாள சேனையைப் பார்,
தந்திர வலைகளால்,
லட்சக்கணக்கான பேர்
மாண்டு போனாரானதால்
உன்னை இயேசு சுவாமிக்கு
பூசையாகப் படைத்து
மாழும் ஏழைப் பாவிக்கு
உன் மீட்பரன்பைக் காட்டு - பேயின்

3. சர்வ வல்ல இயேசுவின்
இரட்சணிய சேனையார்,
நானா தேசத்தாருக்கும்
இரட்சண்யத்தைக் கூறுவார்
இரட்சணியக் கொடியை
உயர்த்தி முன் செல்லுவோம்
இரத்தத்தாலும், தீயாலும்,
சத்துருவைத் துரத்துவோம் - பேயின்

*Robert Johnson*

## பாடல் 326: மீட்பர் சேனையில்

### In the Army of Jesus – 687

(Tune 686 of ESB)

1. மீட்பர் சேனையில் போர்செய்ய நாம் துணிந்தோம்,
பாவத்தை என்றும் எதிர்ப்போம்;
பேயை ஓட்டி பாவிகளை இரட்சித்து, நாம்
இயேசுவினால் ஜெயம் பெறுவோம்

பல்லவி

நான் முன்செல்வேன் மீட்பரன்பால்
துன்பத்திற்குப் பயப்படேன்
மீட்பர் சென்ற அப்பாதையில்
சென்று என்றும் யுத்தஞ் செய்வேன்

2. பாவிகளை யல்ல பாவத்தையழிக்க
ஏழையோ நீசனோ நேசிப்போம்;
இரட்சிப்போம் பாதையில் எல்லாரும் நடக்க
மீட்பரண்டை கூவி அழைப்போம் - நான்

3. பாவத்தின் வேதனையை நீக்கி விடவே
நேச இயேசு ஜீவன் விட்டார்;
எழுந்தார் திரும்ப இரட்சிப்பு நாம் பெற
மீட்பின் மார்க்கந்தனைத் திறந்தார் - நான்

*Fred W. Fry*

## பாடல் 327: நம் ஆண்டவரின் மகிமை

We'll shout aloud throughout the land - 782

(Tune 106 of ESB)

1. நம் ஆண்டவரின் மகிமை
எங்கெங்கும் பாடுவோம்
அவர் உதிர பெலத்தால்
கொடி கீழ் போர் செய்வோம்

பல்லவி

ஜெயக்கொடியை உயர்த்துவோம்,
அன்பின் இரட்சணியக் கொடியை;
மரண மட்டும் போர் புரிந்து,
பின் மேல் வீட்டைச் சேர்வோம்

2. மனிதரென்ன சொன்னாலும்
இரட்சிப்பைக் கூறுவோம்;
தேவனுக்கென்று போர் புரிந்தால்
திடம் வெற்றி யடைவோம் - ஜெயக்

3. வீரரே நாம் தைரியமாய்
எதிர்த்துப் போர் செய்வோம்;
உலகமெல்லாம் தேவனுக்கே
அடங்கும் மட்டுமே - ஜெயக்

*James C. Rateman*

## பாடல் 328: பாவத்தால் நம் தேசத்தார்கள்

So the front! The cry is ringing - 692 (Tune 384 of ESB)

1. பாவத்தால் நம் தேசத்தார்கள்
அலைகிறார் மூர்க்கத்தால்
போர் புரிய தேவை ஆட்கள்
முன்னணியில் இடமுண்டு;
லோக ஆசை வெறுத்து,
தன்னயத்தை அன்பால் கொன்று
பேய்ச் சிறை விடுவித்து
இயேசுவின் நேசத்தைச் சொல்ல

பல்லவி

நாம் முன் சென்று பேயை வென்று
ஒன்றாய்ப் போர் செய்வோம்;
நம்பிக்கையால் மீட்பை மெய்யாய்
பரப்புவோம்
ஜெயம் எனக்கு
மீட்பரின் திவ்ய ரத்தத்தாலே;
ஜெயம் எனக்கு
மீட்பர் ரத்தத்தால்!

2. முன்செல் யுத்தம் மா மும்முரம்,
மீட்பர் பாதை காட்டுவார்
மெய்யாக செய் உன்னைத் தத்தம்
தேவன்பை ஊற்றுவார்;
சிறைப்பட்டோர் கூக்குரல்
நம்மை எழுப்பி விடுது;
தேவாவியின் ஏவுதல்
சந்தேகம் பயம் நீக்குது

3. முன்செல் நீ தாமதியாதே,
கோழை நெஞ்சர் வீழ்கிறார்
மாயக்காரர் சொல் கேட்காதே,
மெய்யாய் ஊரார் மாள்கிறார்;
சஞ்சலப்பட்டோர்களின்
துக்க நெஞ்சை மீட்பர் தேற்ற
பாவ அடிமைகளின்
உள்ளத்தை ரட்சகர் மாற்ற

*Herbert H Booth*

## பாடல் 329: வீரா அதோ பார்

Sound the battle cry - 698

(Tune 794 of ESB)

1. வீரா அதோ பார்!
சத்ரு படையார்;
கொடி உயர்த்திச் செல்லுவோம்
போருடை அணிந்து
ஸ்வாமியைப் பணிந்து
முன் செல் சத்தியமாய் நாம் வெல்வோம்!

பல்லவி

வெல்வோம் செல்வோம், வெற்றிக் கொடியுடனே
ஜெயம் பயமின்றிப் போர் செய்வோம்!
முன்னும் பின்னும் ஓசன்னாப் பாட்டோடு
மீட்பர் நாமத்திற் கென்றும் ஜெயம்!

2. வைரியை வெல்ல
தைரியமாய் செல்ல,
திடன் நம் நல்ல நோக்கமே!
போருடை மினுங்க,
வேதாளம் நடுங்க
வீரா இதுவே நல் மார்க்கமே! - வெல்வோம்

3. சர்வ வல்லவா,
ஜெபம் கேட்டு வா!
துணை புரிய எமக்கு!
போர் முடிந்த பின்,
வெற்றி பெற்ற பின்,
வந்து உந்தன்
கிரீடம் பெறுவோம்! - வெல்வோம்

*William Frick Starvin*

## பாடல் 330: போர் செய்வோம்! போர் செய்வோம்!

To the War! - 703

(Tune 557 of ESB)

1. போர் செய்வோம்! போர் செய்வோம்! தேவ ஊழியரே!
செல்லுவோம் இயேசு நாதர் நற் பாதையிலே
மிக்க ஞானத்தினால் வழி நடத்துவார்!
வல்ல ஆவியின் பெலனை அருளுவார்!

பல்லவி
போர் செய்வோம் போர் செய்வோம்
போர் செய்வோம் போர் செய்வோம்
இரத்தம் தீயுடன் நாம் யுத்தஞ் செய்வோம்
நம் மீட்பர் வருமளவும்!

2. போர் செய்வோம்! போர் செய்வோம்! சுவிசேஷகரே
காட்டுவோம் தெளிவாய் ஜீவ மார்க்கத்தையே!
பாவ நாச விசேஷத்தைப் பகரவும்
பிராயச்சித்த நற்செய்தி விஸ்தரிக்கவும் - போர்

3. போர் செய்வோம்! போர் செய்வோம்! விசுவாசிகளே
கூறுவோம் கிறிஸ்துவின் ராஜரீகத்தையே
அந்தகாரத்தின் கிரியைகள் நொறுக்குவார்
பரலோக பேரின்பத்தை நாட்டுவிப்பார்! - போர்

4. போர் செய்வோம்! போர் செய்வோம்! தேவதாசர்களாய்
சேருவோம் மோட்ச லோகம் மகத்துவமாய்
அந்த லோகத்தின் ஜோதியில் ஆனந்திப்போம்,
சுக வாழ்வும் சந்தோஷமும் கண்டடைவோம்! - போர்

*M. Stark*

## பாடல் 331: இரட்சணிய வீரரே ஆர்ப்பரிப்போடு

Strike, O, strike

(Tune 380 of ESB)

1. இரட்சணிய வீரரே ஆர்ப்பரிப்போடு,
யுத்தவர்க்கங்களை அணிந்து கொண்டு;
பேயி னெல்லாச் செய்கைகள் ஒழிந்து விட
இரட்சணிய கொடியை உயர்த்துவோம்!

பல்லவி

ஜெய வீரரே போர் புரிவோம்!
ஜெயங் காண போர் புரிவோம்!
விசுவாசத்தோடு போர் புரிவோம்
இரட்சணிய மூர்த்தி ஜெயந்தருவார்

2. லோக தேக சுகம் வெறுத்துவிட்டு,
இரட்சணியத் தலைச்சீரா அணிந்து
ஆவியின் பட்டயக் கருக்கால் வெல்வோம்!
தேவசகாயத்தால் முன் செல்வொம்! - ஜெய

3. இரட்சணிய வீரரே! நாம் ஒருமித்து
இரட்சணிய மூர்த்தி அன்பால் நிறைந்து
மோட்சம் சேருமட்டும் நிலைத்திருந்து
என்ன நேரிட்டாலும் போர் புரிவோம்! - ஜெய

*Mary Ann Kidder*

## பாடல் 332: இரட்சணிய சேனை வீரரே

பல்லவி

இரட்சணிய சேனை வீரரே
யுத்தம் செய்தால் ஜெயங் காணலாம்

அனுபல்லவி

அட்சயன் தந்த சர்வாயுத வர்க்கத்தை
அணிந்து மகிழ்ந்து இலங்கித் துலங்கியே!

சரணங்கள்

1. ஆவியின் கட்கம் வேதமே! அதில்
ஆரோக்கிய சுகபோதமே!
பாவமென்னும் பாணம் பறந்து சிதைந்து விழ
தேவ விஸ்வாசத்தின் கேடகத்தைக் கொண்டு - இரட்சணிய

2. யுத்த முகத்தில் தீர்க்கமாய் நின்று
யுத்தம் செய்யும் ஊக்கமாய்;
சுத்தமாய் இயேசையன் அட்சய நாமத்தை
சந்தோஷமாய்க் கூறி கொண்டாட்டமாய் பாடி - இரட்சணிய

3. என்ன வந்தாலும் அஞ்சிடோம் - துன்பம்
இன்பத்தினால் வெல்லுவோம்!
வெண்ணங்கி சங்கீதம் பொன்முடி மோட்சத்தில்
வேண்டுமாகில் இங்கே சாந்தனை ஊக்கமாய் - இரட்சணிய

## பாடல் 333: முன் செல்லு முன் செல்லு வீரா!

இராகம்: காவடிசிந்து தாளம்: சாப்பு

பல்லவி

முன் செல்லு முன் செல்லு வீரா! - என்றும்
இரட்சண்ய சேனையில் இரத்தம் தீயுடன்!

கண்ணிகள்

1. இருளான பாதையில் வந்தால் - அவர்
அருளினால் உன்னைப் பிடித்திழுப்பாரே!
எதிரிகள் சுற்றி வந்தாலும் - நீ
திகிலடையாமலே எதிர்த்து முன்செல்லு - முன்

2. மேகம்போல் துன்பம் வந்தாலும் - நீ
வேகமாய் இயேசுவைப் பிடித்துக் கொள்ளலாம்;
பாவத்தின் சோதனை வந்தால் - அவர்
பாதத்தைப் பிடித்து ஜெயம் பெறலாமே - முன்

3. அழுகையும் துக்கம் வந்தாலும் - அவர்
இருகரத்தா லுந்தன் கண்ணீரைத் துடைப்பார்;
சிலுவையை இங்கே சுமந்தால் - உந்தன்
சிரசிற்குப் பொன்முடி தரிப்பார் மோட்சத்தில் - முன்

## பாடல் 334: போர் புரிவோம்! நாம் போர் புரிவோம்!

பல்லவி

போர் புரிவோம்! நாம் போர் புரிவோம்! நாம்
வெற்றி பெறுமட்டும் நின்று போர் புரிவோம்

சரணங்கள்

1. என்னென்ன வந்தாலும் பின்னிட்டுப் பாராமல்
தன்னை முற்றுமே கொன்று தாழ்மையோடே,
விண்ணை மறந்திடாமல் முன்னோக்கியே எந்நாளும்
சந்தோஷமாய் யுத்தம் செய்குவோமே! - போர்

2. இரட்சகர் பாதையில் பட்சமாய் நாம் சென்றால்
நிச்சயமாய் என்றும் ஜெயித்திடுவோம்;
அட்சயன் மக்கள் தான் சிட்சை யுறாமலே,
பட்சிக்கும் பேயை நாம் கட்சியிட்டகற்றி! - போர்

3. தேவனுக்காகவே துணிந்து துக்கமில்லாமல்,
ஆவலாய் அவருக்கே தொண்டு செய்து,
ஜீவனைப் பேணாமல் ஜாக்ரதையாகவே
ஆவியைப் பெற்று நாம் ஆனந்தமாக! - போர்

## பாடல் 335: நின்றிடும் இயேசுவுக்காய்!

Stand up, stand up for Jesus - 699 (Tune 264 of ESB)

1. நின்றிடும் இயேசுவுக்காய்!
சிலுவை வீரரே,
உயர்த்தி வீசிடுவீர்,
நஷ்டமின்றி கொடி
ஜெயத்துடன் முன் செல்ல,
அவர் நடத்துவார்,
சத்துரு மாண்டிடவும்,
கிறிஸ்து ஆண்டிடவும்

2. நின்றிடும் இயேசுவுக்காய்!
கேள்! எக்காள சத்தம்;
முன்செல் மகா போர்தனில்,
இம் மகிமை நாளில்
பக்தியாய் எதிர்த்திடும்;
நித்தம் சாத்தான் சேனை
ஆபத்திலும் திடனாய்
தேவ பலத்துடன்

3. நின்றிடும் இயேசுவுக்காய்!
கிறிஸ்துவின் பலத்தால்
வீணாகும் மாம்ச பெலம்,
சார்ந்திடா உம் பெலம்
பேராயுதம் தரித்தும்
சீராக ஜெபித்தும்,
யுத்தமோ மா ஆபத்தோ,
சோராமல் நின்றிடும்

4. நின்றிடும் இயேசுவுக்காய்!
போர் மிக்க நீளாது!
இன்று யுத்தத்தின் சப்தம்
நாளை ஜெயக் கீதம்
ஜெயித்திடும் எவர்க்கும்
ஜீவ கிரீடம் பங்காம்;
மகிமை ராஜனோடு
என்றென்றும் ஆளுவீர்

*George Duffiled*

## பாடல் 336: செல்லுவோம் பரம நகர்

### பல்லவி

செல்லுவோம் பரம நகர்
மெல்லவே நடந்து நாம்
அல்லலொன்றும் இன்றியே - நல்
ஆயருடன் வாழ்ந்திட

### சரணங்கள்

1. சத்துருக்கள் வைத்திடும் கல் முள்ளுகள் ஒதுக்கியே
நித்திய மகிழ்ச்சியுடன் பத்திரமாய் ஏகுவோம் - செல்லுவோம்

2. ஆறும் நூறும் நாட்களாற் நடக்கவைத்த பாதையில்
தேறியே திருப்தியுடன் சோர்ந்திடா முன் செல்லுவோம்! - செல்லுவோம்

## பாடல் 337: தாசரே இத்தரணியை

இராகம்: சங்கராபரணம் ஏகதாளம்: ஆதிதாளம்

பல்லவி

தாசரே இத் தரணியை அன்பாய்
இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்

அனுபல்லவி

நேசமாய் இயேசுவைக் கூறுவோம்
அவரைக் காண்பிப்போம்
மாவிருள் நீக்குவோம் வெளிச்சம் வீசுவோம்

சரணங்கள்

1. வருத்தப்பட்டுப் பாரஞ் சுமந்தோரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்;
உரித்தாய் இயேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே - தாசரே

2. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து,
தமை மறந்து இயேசு கனிந்து திரிந்தனரே - தாசரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்,
நிஷ்டூரத்துக்குள் படுகுழிக்குள் விழுந்தனரே - தாசரே

4. இந்து தேச மாது சிரோமணிகள்
விந்தையொளிக்குள் வரவழைப்போம்;
சுந்தரக் குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்ப்பந்தங்கள் தீர்ந்து சிறந்திலங்கிட - தாசரே *வே.சா*

## பாடல் 338: யுத்த வர்க்க மணிந்து

பல்லவி

1. யுத்த வர்க்க மணிந்து
போர் செய்வோம் துணிந்து!
நான் வெல்லப் போகிறேன்
இயேசுவின் பலத்தால்!

2. பாவத்தைப் பகைத்து
பரிசுத்தம் தரித்து,
போர் செய்யப் போகிறேன்
இயேசுவின் பலத்தால்!

3. சுத்த மன சாட்சியை
காத்து திவ்விய மாட்சியை
காண்பிக்கப் போகிறேன்
இயேசுவின் பலத்தால்!

4. சாகுமட்டும் நிலைத்து
சத்துருவைத் தொலைத்து
நான் ஆளப் போகிறேன்
இயேசுவின் பலத்தால்!

## பாடல் 339: பேயின் கோட்டைகளை எதிர்த்திடிப்போம்

பல்லவி

பேயின் கோட்டைகளை எதிர்த்திடிப்போம்
எதிர்த்திடிப்போம் - நாம் தகர்த்திடுவோம்!

சரணங்கள்

1. பாவ சஞ்சலங்கள் ஒழிந்துவிட
ஒழிந்துவிட சாபமழிந்துவிட! - பேயின்

2. பிராணநாதர் பாதம் பாவி தேடவே,
பாவி தேடவே, அவர் தாவி நாடவே - பேயின்

3. பேதை நெஞ்சர்களைத் திடப்படுத்த
திடப்படுத்த பேயை உதைத்து ஓட்ட! - பேயின்

4. மேலோக பதவி எல்லாரும் பெறவே
எல்லாரும் பெறவே பொல்லாதோ ரறவே! - பேயின்

## பாடல் 340: இரட்சணியக் கூட்டம் ஜெயங் கொள்ளும்

We're a band that shall conquer the foe - 820

(Tune 508 of ESB)

1. இரட்சணியக் கூட்டம் ஜெயங் கொள்ளும்,
இராஜ பலத்தால் போர் புரிந்தால்;
அன்பின் தேவாவியின் பட்டயம்
சேர்க்கும் பாவியை இயேசுவிடம்!

பல்லவி
நம்புவேன் ஜெயிப்போம்!
இராஜ பலத்தால் போர் புரிந்தால்

2. சென்ற காலமெல்லாம் ஜெயமே!
எங்கும் எதிரியின் கூட்டமே
நாம் முடியுமட்டும் போர் செய்வோம்!
ஆவியின் பலத்தால் வெல்லுவோம்! - நம்புவேன்

3. எதிரிகள் பெலங் கொண்டாலும்,
வீம்பர் கூட்டங்கள் மோதினாலும்
இயேசு மன்னவர் மேற்கொள்ளுவார்,
அவர் வழி நடத்துகிறார்! - நம்புவேன்

4. ஜெயக் கொடியை நாம் உயர்த்தி;
தேவ நாமத்தில் போர் புரிவோம்;
லோகம் பேயை முற்றும் ஜெயிப்போம்
மீட்பருக்காய் நாம் போர் புரிவோம்! - நம்புவேன்

5. இரட்சண்ய சேனையில் உண்மையாய்
இரட்சகர் நாமத்தில் போர் செய்வோம்
இரத்தம் அக்கினியால் வெல்லுவோம்
அத்தன் பாதம் சேர்ப்போம் இத்தரை - நம்வுவேன்

*William Hodgson*

## பாடல் 341: ஜீவ ஒளியில் போகிறேன்

Marching on in the light of God - 811

(Tune 598 of ESB)

1. ஜீவ ஒளியில் போகிறேன்;
போகிறேன் நான் போகிறேன்;
மீட்பர் நடந்த பாதையில்
போகிறேன் நான் போகிறேன்

பல்லவி

ஓர் வெண்ணங்கி ஓர் பொன்முடி,
ஓர் வாத்தியம் ஓர் மேல்வீடு,
ஓர் ஜெயக்கொடி ஓயா இன்பம்
எனக்குண்டு சொர்க்கத்தில்!

இயேசு என் இரட்சகர்
பாவந் தீர்த்தார்;
கல்வாரி மலையில் தம் ஜீவன் விட்டார்!
அவரன்பில் நான் மூழ்கி
என்றும் பாடுவேன்;
வாழ்வேன் ஜீவ ஊற்றில் வாழ்வேன்

2. பாவிகள் நடுவில் போகிறேன்
மீட்பர் பின் சென்றால் ஜெயமுண்டு - ஓர்

3. வீண் பக்திக்காரர் நகைத்தாலும்;
பூரண அன்பு பயம் நீக்கும் - ஓர்

4. சிலுவைக் கொடியுடன் போகிறேன்
மீட்பரின் நேசத்தைக் காட்ட நான் - ஓர்

5. பரிசுத்த ஆவியால் நிறைந்து,
ஸ்வர்க்கம் சேருமட்டும் நிலைத்து - ஓர்

*Robert Johnson*

## பாடல் 342: தேவன் தம் வீரரைக் காப்பதால்

God is keeping His soldiers fighting - 800 (Tune 655 of ESB)

1. தேவன் தம் வீரரைக் காப்பதால்
நாம் எப்போதும் முன் செல்வோம்;
பாதாள சேனை எதிர்த்தால்
அவர் பெலத்தால் வெல்வோம்;
தோற்கடிக்க முயன்றாலும்
சேனை பின்வாங்காமற் செல்லும்
இரட்சண்ய ஜெயங் கிடைக்கும்
பின் வாங்கோம், ஒரு போதும்!

பல்லவி

ஒரு போதும் போரில் நாங்கள் பின் வாங்கோம்!
பின் வாங்கோம் பின் வாங்கோம்!
ஒரு போதும் போரில் நாங்கள் பின் வாங்கோம்!
இயேசு ராஜன் பலத்தால் ஜெயங்கொள்ளுவோம்!

2. வெல்லும் மீட்பரைப் பின் செல்லுவோம்
அவர் முன் பேய், பூதங்கள் ஓடும்!
அவர் பட்டயத்தால் நாம் வெல்வோம்!
துன்பமோ, சாவோ பயப்படோம்;
பரிசுத்தம், நம்பிக்கை,
மோட்சம் இம் மூன்றினின்றும்
யார் பிரிக்கக்கூடும் எம்மை?
மீட்பரால் வெல்வோம் என்றும்! - ஒரு போதும்

3. எத்தேசத்தாருக்கும் இரட்சிப்பை
எங்கும் சென்று கூறுவோம்;
பூரண மீட்பின் பலத்தை
நடக்கையால் காட்டுவோம்!
பேயின் அரசை அழிப்போம்!
சிலுவைக் கொடி ஊன்றுவோம்!
எப்போதும் ஜெயசீலராய்
ஒரு போதும் பின்வாங்கோம்! - ஒரு போதும்

*William James Pearson*

## பாடல் 343: மா கெம்பீரப் பாட்டோடும்

We are sweeping through - 819 (Tune 862 of ESB)

1. மா கெம்பீரப் பாட்டோடும்
தேவ பட்டயத்தோடும்
ஜெபஞ் செய்து வெல்லப் போர் துவக்கினோம்;
தேவ அன்பின் பாசத்தை
காட்டிப் பாவச் சிறையை
மெய்யாய் மீட்பர் பாதம் சேர்க்கவே வந்தோம்

பல்லவி

வெல்லும் தேவ சுதனார்
எங்கள் பாவம் மன்னித்தார்;
பயமின்றிப் பாவம் வென்று
ஜெயம் பெறப் போகிறோம்!

2. மெய்யாய் ஜீவ தேவனை
சேவிப்போம் எம் நாயனை
இவ ரன்பால் எழியோரை இரட்சிப்பார்;
இவரன்பின் கரத்தால்
நீ மன்னிப் படைந்தால்
பெரும் பாதகனானாலும் சிட்சியார்! - வெல்லும்

3. ஜெயம் பெறப் போகிறோம்
பாவம் போக்கச் செல்கிறோம்,
மீட்பர் மகிமை உரத்துக் கூறுவோம்!
இங்கே யுத்தம் முடித்து,
கோடா கோடி ஜெயித்து;
ஆயத்தமான மேல் மண்டபஞ் சேருவோம் - வெல்லும்

4. பாவ சாபம் மடிய
பேயின் கூர்மை ஒடிய
தேவ வாக்காய் ஜெயம் பெறப் போகிறோம்!
இரட்சிப்பின் நாள் கிட்டுது,
இத்தேசம் விழிக்குது,
இரட்சண்ய சேனையார் நாம் வெல்கிறோம்! - வெல்லும்

*George Scott Railton*

## பாடல் 344: யுத்தம் செய்வோம், வாரும் கிறிஸ்து வீரரே

Onward Christian Soldiers - 690 (Tune: Onward Christian Soldiers)

1. யுத்தம் செய்வோம், வாரும் கிறிஸ்து வீரரே
இயேசு சேனை கர்த்தர் பின் செல்வோமே
வெற்றி வேந்தராக முன்னே போகிறார்
ஜெயக் கொடியேற்றிப் போர் நடத்துவார்

பல்லவி

யுத்தம் செய்வோம், வாரும் கிறிஸ்து வீரரே
இயேசு சேனை கர்த்தர் பின் செல்வோமே

2. கிறிஸ்து வீரர்கள், நீர் வெல்ல முயலும்
பின்னிடாமல் நின்று ஆரவாரியும்
சாத்தான் கூட்டம் அந்த தொனிக்கதிரும்
நரகாஸ்திவாரம் அஞ்சி அசையும்

3. கிறிஸ்து சபை வல்ல சேனை போன்றதாம்
சுத்தர் சென்ற பாதை செல்கின்றோமே நாம்
கிறிஸ்து தாசர் யாரும் ஓர் சரீரமே
விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஒன்றே

4. கிரீடம் ராஜ மேன்மை யாவும் சிதையும்
கிறிஸ்து சபை தானே என்றும் நிலைக்கும்
நரகத்தின் வாசல் ஜெயம் கொள்ளாதே
என்ற திவ்ய வாக்கு வீணாய்ப் போகாதே

5. பக்தரே ஒன்றாகக் கூட்டம் கூடுமேன்
எங்களோடு சேர்ந்து ஆர்ப்பரியுமேன்
விண்ணோர் மண்ணோர் கூட்டம் இயேசு ராயர்க்கே
கீர்த்தி புகழ் மேன்மை என்றும் பாடுமே

## பாடல் 345: மெய்யல்லோ எங்கள் சேனை

பல்லவி

மெய்யல்லோ எங்கள் சேனை முன்னேறியே செல்லுது!
செவ்வையாய் அணிவகுத்து சிறை மீட்கப் போகுது!

சரணங்கள்

1. பேயல்லோ நம்மைப் பிடித் திழுத்துத் திரிந்தான்
ஜெயமுள்ள நாதனல்லோ சேனையிலே சேர்த்தார் - மெய்யல்லோ

2. தேவாதி தேவன் தான் எழுப்பின சேனையார்
தீயாலும் இரத்தத்தாலும் பகைவரை எதிர்ப்பார் - மெய்யல்லோ

3. கேடகத்தைக் கொண்டு பேயைத் தத்தளிக்கச்
செய்வோம் வாடாமுடி பெற்றிடவே கெம்பீரமாய்ப் பாடுவோம் - மெய்யல்லோ

4. யுத்தங்கள் முடிந்து நல் வெற்றிகளைப் பெற்றபின்
நித்தமுமே நாதருடன் நீடுழியாய் வாழலாம் - மெய்யல்லோ

## பாடல் 346: ஆர்ப்பரிப்போடு நாம் முன் செல்லுவோம்

இராகம்: இந்துஸ்தானி தாளம்: ஆதி

பல்லவி

ஆர்ப்பரிப்போடு நாம் முன் செல்லுவோம் - நம
ததிசய நாதனைப் பின் செல்லுவோம்

சரணங்கள்

1. சத்திய மென்ற நம் பட்டயமே
அகத்தியமாயத் தடை வெட்டிடுமே
ஜீவனும் வழியுமானவரே! - நம்
தேவ சுதனார் ஜெயந் தருவாரே - ஆர்ப்பரிப்போடு

2. ஜெபத்துடன் மெய் விசுவாசத்தால்
ஜெயித்திடுவோம் சோதனை எல்லாம்
தவத்துடன் தேவ அருள் பெற்று தினந்தோறும்
போர் புரிவோம் நிலை நின்று - ஆர்ப்பரிப்போடு

3. முன்னவர் ஆவியைத் தந்தாற்போல்,
பின்னவர் வருஷிப்பேன் என்றாற்போல்
தருவார் அருள் ஒவ்வொரு நாளும் - அவர்
வருவார் கிட்டுது ஜெயநாளும் - ஆர்ப்பரிப்போடு

## பாடல் 347: வீரரும் நாங்களே,ஜெயதீரரும் நாங்களே

பல்லவி

வீரரும் நாங்களே, ஜெயதீரரும் நாங்களே - இயேசு
ராஜனுக்காய் யுத்தஞ் செய்யும் வீரரும் நாங்களே!

சரணங்கள்

1. ஒருமையோடும் நாம் பெருமை காட்டாமல்,
அருமை இயேசுவை நம்பி வந்தால் தருவார் ஜெயமே - வீரரும்

2. துன்பமோ, சாவோ, நாங்கள் ஒன்றுக்குமஞ்சோம்
பின் வாங்காமல் போர் புரிந்து சேனையிலிருப்போம் - வீரரும்

3. பாவத்தை முற்றுமே பகைத்துத் தள்ளுவோம்,
ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று முன் செல்வோம் - வீரரும்

4. நரக பாதையில் விரைந்து செல்வோரை
இரக்கமுள்ள இயேசுவண்டை இழுத்துக் கொள்ளுவோம் - வீரரும்

5. சேனையிலே நாம் நல்ல சேவகம் செய்வோம்
வானத்திற்கு ஏகு மட்டும் சோதனை வெல்வோம் - வீரரும்

## பாடல் 348: யுத்தம் என்றும் செய்வேன்

பல்லவி

யுத்தம் என்றும் செய்வேன் நித்தம் பேயை வெல்வேன்;
சுத்தமாய் என்றும் ஜீவிப்பேன் கர்த்தன் சக்திகொண்டே!

சரணங்கள்

1. எத்தனை சோதனை - பித்தன் பேய் சோதித்தும்
அத்தனையும் நான் ஜெயித்தே பக்தியாய் பாடுவேன் - யுத்தம்

2. முந்தின பக்தரை - சோதித்தாற் போலவே
எந்த வேஷத்தில் வந்தாலும் அஞ்சிடவே மாட்டேன் - யுத்தம்

3. சோதித்தான் ஸ்வாமியை - வாதித்தான் யோபுவை
சாத்தான் போ வென்றே குருசில் காத்திருப்பேனே - யுத்தம்

4. தீர்க்கமாய் முன் சென்று - ஊக்கமாய் படையில்
தூக்கமில்லா உற்சாகமாய் நான் ஊழியம் செய்வேன் - யுத்தம்

5. இயேசுவை நம்பியே - நேசத்தைக் காட்டியே
நாசத்தை விட்டு நீங்கியே தாசராய் ஜீவிப்போம் - யுத்தம்

## பாடல் 349: ஜெயம் பெறுவோம்

பல்லவி

ஜெயம் பெறுவோம் - நாம்
ஜெயம் பெறுவோம்!
நின்று யுத்தம் செய்தால்
ஜெயம் பெறுவோம்

சரணங்கள்

1. யுத்தம் மும்முரம் பொல்லா
சத்துரு வல்லவன்;
தளகர்த்தன் இயேசுவால்
ஜெயம் பெறுவோம் - ஜெயம்

2. இரட்சணியக் கொடியின் கீழ்
இரத்தம் தீயுடன்
இரட்சகரை நம்பி நாம்
ஜெயம் பெறுவோம் - ஜெயம்

3. வீரர் மிகத் தளர்ந்தாலும்
வெற்றி குறைந்தாலும்;
தீரத்துடன் இயேசுவால்
ஜெயம் பெறுவோம் - ஜெயம்

4. பசி தாக மிருந்தாலும்,
பெலன் குறைந்தாலும்
பயமின்றி நிலை நின்று,
ஜெயம் பெறுவோம் - ஜெயம்

5. பசி தாக மிருந்தாலும்
பெலன் குறைந்தாலும்
பயமின்றி நிலை நின்று
ஜெயம் பெறுவோம் - ஜெயம்

## பாடல் 350: சேனையிலே வீரர் நாங்கள்

பல்லவி

சேனையிலே வீரர் நாங்கள் - ஓ! ஓ!
போர் புரிந்தால் ஜெயம் பெறுவோம்

சரணங்கள்

1. சத்துருக்கள் எதிர்த்தாலும் - ஓ! ஓ!
சற்றும் அஞ்சிட மாட்டோம் - சேனை

2. யுத்தம் மும்முரித்தாலும் - ஓ! ஓ!
கர்த்தர் ஜெயம் தருவார் - சேனை

3. துன்பத்தின் மத்தியிலே - ஓ! ஓ!
இன்பமாய்ப் பாடிடுவோம் - சேனை

4. கிறிஸ்துவின் வீரர் நாங்கள் - ஓ! ஓ!
கிறிஸ்துவே எங்கள் ராஜா - சேனை

5. என்ன துன்பம் வந்தாலும் - ஓ! ஓ!
இயேசுவையே விடமாட்டோம் - சேனை

## பாடல் 351: இரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம்

Shout aloud salvation - 806 (Tune 474 of ESB)

1. இரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம்
லோகம் நடுங்க
நரகாக்கினையைச் சொல்வோம்
பாவமடங்க
பூர்வகால தேவ தாசர்
விஸ்தரித்தாற் போல்
மோட்சலோகம் போகு முன்னே

பல்லவி
செல்வோம் செல்வோம்
ஆர்ப்பரிப்புடனே;
செய்வோம் செய்வோம்
போர் பலத்துடனே
நானா ஜாதி பாஷைக்காரர்
இரட்சிப்படைய
மோட்சலோகம் போகுமுன்னே

2. சேனையாரின் யுத்த சத்தம்
பூமியெங்கும் கேள்!
மீட்படைந்த பேதைகளின்
சாட்சிகளுங் கேள்!
முழு லோகத்தையும் வெல்ல
இன்னும் கொஞ்சநாள்;
மோட்ச லோகம் போகுமுன்னே - செல்வோம்

3. தீதாய்ச் சத்துருக்களென்ன
சொன்ன போதிலும்
சுத்த ஆவியின் பலத்தை
பெற்று யாவிலும்;
உண்மையாகப் போர் புரிந்தால்
வெல்வோம் சாவிலும்
மோட்சலோகம் போகு முன்னே - செல்வோம்

*George Scott Railton*

## பாடல் 352: இரட்சண்ய வீரர் நாம் ஜெயித்திடுவோம்

'அற்புதம் பாவி' என்ற மெட்டு தாளம்: ஆதி

பல்லவி

இரட்சண்ய வீரர் நாம் ஜெயித்திடுவோம்
ஜெயித்திடுவோம் நாம் ஜெயித்திடுவோம்

அனுபல்லவி

எத்தனை துன்பங்கள் வந்த போதும்
அத்தனையும் அன்பாய் பொறுத்துச் செல்வோம்

சரணங்கள்

1. அந்நியரும் பரதேசியுமாய்
உன்னத பதவிக் கபாத்திரராய்,
மாசுகள் நிறைந்து கெட்டலைந்தும்
இயேசுவின் உதிரத்தால் மீட்பைப் பெற்ற - இரட்சண்ய

2. அக்கிரமங்களில் அழுகி மாண்டு,
உக்கிரப் பாவங்கள் செய்திருந்தும்;
தேவ வல்லமையால் எழுப்பப்பட்டு,
தேவ ஈவென்னும் இரட்சை பெற்ற - இரட்சண்ய

3. பந்து ஜனங்களை நேசித்தாலும்,
பகவான் மீது மா நேசம் கொண்டு;
உலகத்தை முற்றிலும் வெறுத்துத் தள்ளி,
உன்னத பாதையில் விரைந்து செல்லும் - இரட்சண்ய

4. எமது நடைகளே பிரசங்கமாய்
பிறரது பாவத்தை எடுத்துரைத்து;
சத்துருவின் துர்க் கோட்டைகளை
சுற்றி எக்காளத்தை ஊதுவதால் - இரட்சண்ய

## பாடல் 353: ஆ-ன-ந்தம்! ஆனந்தம் உண்டெங்கள்

Joy! Joy! Joy! There is joy - 807

(Tune 706 of ESB)

1. ஆ-ன-ந்தம்! ஆனந்தம் உண்டெங்கள் சேனை தனில்
ஆ-ன-ந்தம்! கர்த்தன் சேனை யிலுண்டு
பா-டு-ங்கள் பா-டு-ங்கள் துதிஸ்தோத்திரக் கீதங்கள்
கொட்டுங்கள் மேளங்கள் - வாத்தியம் முழங்கையில்
வாத்தியம் கொட்டி, கீதம் பாடுங்கள்
ஓசன்னாவென் றார்ப்பரியுங்கள்;
உன்னத தேசம் போகுவோம்
மா சந்தோஷம் கொள்வோம்

2. ஆ-ன-ந்தம்! ஆனந்தம் உண்டெங்கள்  சேனை தனில்
ஆ-ன-ந்தம்! கர்த்தன் சேனை யிலுண்டு
இரத்தமும் நெருப்பும் எம் சேனையின் தத்துவம்
இரத்தமும் நெருப்புமெம் யுத்தத்தின் சத்தம்;
இரத்தமும் நெருப்பும் எங்கள் யுத்த ஜெயம்
இரத்தமும் நெருப்பும் சாத்தானை ஓட்டும்
இரத்தமும் நெருப்பும் எம்மானந்தம்
எப்போதும் நல் ஜெயம்!

3. ஆ-ன-ந்தம்! ஆனந்தம் உண்டெங்கள் சேனை தனில்
ஆ-ன-ந்தம்! கர்த்தன் சேனை யிலுண்டு
பாடுவோம் பாடுவோம் லோகம்  மகிழும்வரை
ஆர்ப்பரித்திடுவோம் வானத்திலெட்டுமட்டும்
வாத்தியங்கள் மேளங்கள் ஆயிரமாய்,
துத்தியம் பாடித் துதிப்போம் கர்த்தனை;
அத்தன் வருமட்டும் ஆர்ப்பரித்து
எப்போதும் போற்றுவோம்

*William Pearson*

## பாடல் 354: ஜீவ தண்ணீர் குடித்து நிதம்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

ஜீவ தண்ணீர் குடித்து நிதம்
சோபிதமாய் வாழ்வோம்
சுத்தமான பக்தியுடன் - கர்த்தரில்
களிகூர்வோம்

1. இயேசு அன்பைப் பாடி நிதம்
போர் முனையில் செல்வோம்
இயேசு பலத்தாலே பொல்லாப்
பேயை முற்றும் வெல்வோம் - ஜீவ

2. தேவ சுதன் மாண்ட திரு
சிலுவை தனைப் பார்ப்போம்;
துன்பமின்றி இன்பமில்லை
துயரமின்றி நடப்போம் - ஜீவ

3. தேவன் தரும் சிலுவைதனை
நாள் தோறும் சுமப்போம்;
துஷ்டப் பேயின் கட்டிலகப்
பட்டவரை மீட்போம் - ஜீவ

## பாடல் 355: வாழ்த்திடுவேன் வாழ்த்திடுவேன்

1. வாழ்த்திடுவேன் வாழ்த்திடுவேன் வாழ்த்திடுவேன் நான் - என்
இரட்சகரை நன்றியோடே வாழ்த்திடுவேன் நான்

2. மாட்டுத்தொழுவில் பிறந்த மகிமை சுதனே!
ஈனவேஷம் எடுத்த உம்மை வாழ்த்திடுவேன் நான் - வாழ்த்திடுவேன்

3. பாதகர்க்காய் நீதிவழி ஓதித் தந்தவரே!
பாரிலும்மை நினைத்து என்றும் வாழ்த்திடுவேன் நான் - வாழ்த்திடுவேன்

4. குருசெடுத்து கொல்கொதாவிலேறிச் சென்றவரே! திருப்
பாதம் ரெண்டும் முத்தஞ்செய்து வாழ்த்திடுவேன் நான் - வாழ்த்திடுவேன்

5. குருசிலேறி மரித்துயிர்த்து சொர்க்கம் போனவரே!
நித்தமும் நீர் ஜீவிப்பதால் வாழ்த்திடுவேன் நான் - வாழ்த்திடுவேன்

6. தூதரோடு மேகமீது வாறேனென்றாரே
நானும்மைக் காண்பதற்காய்க் காத்திருப்பேனே! - வாழ்த்திடுவேன்

7. உன் வரவில் முன்னணியில் நின்றிடவே நான்
என்னை ப்ராப்தியாக்கிடுமேன் உம் கிருபையால் - வாழ்த்திடுவேன்

*K.S. Abraham*

## பாடல் 356: என்ன சுகம் ஆ! என்ன சுகம்

பல்லவி

என்ன சுகம் ஆ! என்ன சுகம் என் இரட்சகரின் சமூகம்
பேரானந்தம் பரமானந்த மோட்ச சுகானந்தம்
அதைப் பெற்று அனுபவித்தால் என்ன சுகம்!

சரணங்கள்

1. தங்கக் கிரீடம் தலையில் தரிக்கலாம்
சிங்காசனத்தில் சொகுசாயிருக்கலாம் - என்ன

2. பொன்னகர் வீதியில் எந்நேரம் வாழலாம்
கின்னரம் தம்பூரினின்னோசை கேட்கலாம் - என்ன

3. ஜீவ நதியில் குளித்துக் களிக்கலாம்
ஜீவ கனியும் புசித்துச் செழிக்கலாம் - என்ன

4. நீதியின் சூரியன் நித்தியம் பார்க்கலாம்
ஜோதிமயத் தூதர் துத்தியம் கேட்கலாம் - என்ன

5. பாவலர் பாடல் பலவிதம் கேட்கலாம்
தேவ சமூகம் தரிசித்திருக்கலாம் - என்ன

6. மூப்பர்கள் ஆர்ப்பரிப்பெப்போதும் கேட்கலாம்
மேய்ப்பரை ஆர்ப்பரிப்பெப்போதும் போற்றலாம் - என்ன

7. இயேசுவின் தாசராய் எந்நேரம் வாழலாம்
தோஷமில்லாமல் சுகமாயிருக்கலாம் - என்ன

## பாடல் 357: பரமானந்தம் ஆனந்தமாய்

பல்லவி

பரமானந்தம் ஆனந்தமாய்ப் போர்க்கீதம் பாடுவோம் நாம்
கீதம் பாடுவோம் ஜீவ பாதையோடுவோம்

அனுபல்லவி

திருத்தேவ சுதனா மேசு நாதன் நமக்காருயிரான அரும் போதன்
அவர் திருவருள் தனையனுதினமும் நாம் பெற்றென்னாளும் வாழுவோம்
என்னாளும் வாழுவோம் அவர் தாழைத் தொழுவோம்

சரணங்கள்

1. மன நம்பிக்கை கொண்டே நாம் போரை வென்று விடுவோம்
நாம் வென்று விடுவோம் நித்திய பங்கையடைவோம் - பர

2. மா வெற்றிபெற்ற இயேசுவே எம் யுத்தத் தலைவர்
எம் யுத்தத் தலைவர் வேண்டும் சக்தி தருவார் - பர

3. நம் சிவப்பு மஞ்சள் நீலக்கொடியை நாட்டுவோம்
கொடியை நாட்டுவோம் பேய்தனை ஓட்டுவோம் - பர

4. நாம் சத்துரு சேனையோடே மா யுத்தம் புரிவோம்
நாம் யுத்தம் புரிவோம் நின்று நித்தம் முன் செல்வோம் - பர

## பாடல் 358: ஆனந்தம் ஆனந்தமே

பல்லவி

ஆனந்தம் ஆனந்தமே - மா ஆனந்தம் ஆனந்தமே - பே
ரானந்தம் ஆனந்தமே - மோட்சானந்தம் ஆனந்தமே

அனுபல்லவி

மணியாரமலன் அணியாரருளால்
மனமகிழ் தினமிதிலே

சரணங்கள்

1. அனுதின ஆகாரமும்
எனக்கினிய நற் சீருடையும் - தினம்
ஆத்ம உடல் சுகமும்
நான் அடைந்திட திரள் தந்ததால் - ஆனந்தம்

2. காசினியில் நான் வாழ்
என் ஆயுசு காலமெல்லாம் - வன்
தோஷி மா பாவி எனின்
பல மாசுகள் அகற்றியதால் - ஆனந்தம்

3. நித்திய ஜீவனுடன்
ஓர் பொற்றள ராஜியமும் - நம்
கர்த்தரின் கிருபையினால்
தர சத்திய வாக்களித்தார் - ஆனந்தம்

## பாடல் 359: பிரிய இயேசுவின் சேனை வீரர்கள்

பல்லவி

பிரிய இயேசுவின் சேனை வீரர்கள் நாம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்;
சிலுவை தோளில் சுமந்து போகலாம்,
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்

சரணங்கள்

1. நம் தேவன் சமாதானப் பிரபுவே
நம் சர்வாயுதவர்க்கம் தாழ்மை தானே;
நம் ஆத்ம சகாயர் அவரே!
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் - பிரிய

2. எப்போதுமே இயேசுவை தியானிப்போம்;
எல்லோரும் ஜீவியத்தைத் தியாகஞ் செய்வோம்;
இயேசுவின் மகா அன்புக்காய்த் தத்தஞ் செய்வோம்,
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் - பிரிய

3. இயேசு கிறிஸ்துவின் அன்புக்காய் இறந்திடுவோம்!
புல் பூண்டுமேயானாலும் புசித்திடுவோம்;
முன் வைத்த காலை பின் வைக்கமாட்டோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் - பிரிய

4. உலக நேசத்தின் ஊற்றை உடைத்து விட்டோம்;
உள்ள மாயைகளெல்லாமே ஒழித்து விட்டோம்;
உள்ளத்தையெல்லாம் உடையவர்க் கொதுக்கி விட்டோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் - பிரிய

5. இதொன்றே இரட்சண்ய வழியென்றுணர்ந்தோம்
இதை இருதயத்திலிறுக இணைத்துவிட்டோம்
ஒன்றாயுயிர் வாழ்வோம் இன்றேல் உயிர்விடுவோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் - பிரிய

6. சாத்தான் கோட்டைகளையெல்லாம் தகர்த்திடுவோம்
தக்க சமயத்தில் சத்தியத்தைச் சாற்றிடுவோம்
சற்றும் தயங்காமல் சாட்சியைத் தந்திடுவோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் - பிரிய

7. அல்லேலூயா ஜெயத்தை அறிவித்திடுவோம்;
அவர் வருகையைப் பற்றி யுரைத்திடுவோம்;
அந்தகார ஆதிக்கங்களை அவமாக்குவோம்;
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் - பிரிய

## பாடல் 360: என்ன என் ஆனந்தம்!

1. என்ன என் ஆனந்தம்! என்ன என் பேரின்பம்!
தூதரோடு நின்று நானும் அன்பரைப் பாடிடுவேன்

2. இத்தரை யாத்திரையில் முற்றிலும் போராட்டமே
மண்ணில் வெற்றி சிறந்தோர்க்கெல்லாம் நித்திய மகிமையே - என்ன

3. மண்ணான இந்த உடல் மண்ணாகப் போனாலுமே
எக்காளம் தொனிக்கும் போது தன்னுருவாயெழும்பும் - என்ன

4. லோக ஜீவனே இது புல்லுக்கொப்பானதே
வாடிப்போகும் பூவைப்போல மாய்ந்துபோகுமே! - என்ன

5. இப்பாழுலகினில் எனக்காசை ஒன்றுண்டோ? வெறும்
பஞ்சைப் போல் பறந்து போகும் பாழுலகமே - என்ன

6. என் நேசர் மார்பினில் நான் சாயும் நேரமே
என்ன இன்பம்! என்ன மதுரம்! சொல்லலரியதே - என்ன

7. பொன் தளமாம் வீதி இங்கித சாலேமிலே
பொன் நேசரோடு நின்று நானும் ஓடி யுலாவிடுவேன் - என்ன

## பாடல் 361: ஆனந்தப் பாடல்கள் பாடிடுவேன்

பல்லவி

ஆனந்தப் பாடல்கள் பாடிடுவேன் - எந்தன்
ஆத்தும நேசரைப் புகழ்ந்திடுவேன்

அனுபல்லவி

அலைச்சல்கள் யாவையும் அகல்ச் செய்தார் - நல்ல
மேய்ச்சலில் எந்தனை மகிழச் செய்தார்

சரணங்கள்

1. மேலோக நாடெந்தன் சொந்தமதே - இந்த
பூலோக நாட்டமும் குறைகின்றதே;
மாயையில் மனம் இனி வைத்திடாமல் - நேசர்
காயமதை எண்ணி வாழ்ந்திடுவேன்

2. நம்பிக்கை அற்றோனாய் அலைந்த வேளை - இயேசு
நாதன் என் பக்கமாய் வந்தனரே;
பாவங்கள் பாரங்கள் பறக்கச் செய்தார் - இந்த
பாரதில் எனை வெற்றி சிறக்க செய்தார்

3. அற்புதமாம் அவர் நேசமது - எந்தன்
பொற்பரன் சேவை என் தாகமது
பற்பல கிருபைகள் பகருகின்றார் - ஏழை
கற்புடன் அவர் பணி செய்திடவே

4. கானானின் கரை இதோ காண்கின்றதே - எந்தன்
காதலன் தொனி காதில் கேட்கின்றதே;
காலம் இனி இல்லை உணர்ந்திடுவோம் - விரை
வாக நம் ஓட்டத்தை முடித்திடுவோம்

5. அழைத்தவரே அவர் உண்மையுள்ளோர் - தாம்
அழைப்பதில் விழிப்புடன் நிறுத்த வல்லோர்;
உழைத்திடுவோம் மிக ஊக்கமுடன் - அங்கு
பிழைத்திடவே அன்பர் சமூகமதில்

## பாடல் 362: கர்த்தரில் மகிழ்ந்திடுவீர்

Be glad in the Lord - 537

1. கர்த்தரில் மகிழ்ந்திடுவீர்
சுத்த இதயமுள்ளோரே;
நீக்கிடுவீர் திகிலை
கர்த்தரில் என்றும் மகிழ்வீர்!

பல்லவி
மகிழ்வீர் மகிழ்வீர்
கர்த்தரில் என்றும் மகிழ்வீர்

2. நீதிக்காய் போராடும் போரிலே
பாதகன் சாத்தான் எதிர்த்தாலும்;
தேவனின் சேனை வென்றிடும்,
ஆதலால் திடனாய் நின்றிடும்

3. பகலில் இருள் சூழ்ந்திடினும்,
அவர் வெளிச்சம் வீசிடுவார்;
ஆவியில் கலங்கிட வேண்டாம்
தேவனை முற்றிலும் நம்பிடும்

4. கர்த்தரில் மகிழ்ந்திடுவீர்
கீதம் பாடியே போற்றிடுவீர்;
எக்காள சத்தத்துடனே
அல்லேலூயா பாடிடுமேன்

*Mary Elizabeth Servoss*

## பாடல் 363: தோழரே! கொடி காணுது!

Ho, my comrades, see the signal - 804

(Tune 344 of ESB)

1. தோழரே! கொடி காணுது!
பார்த்திடும் மேலே;
புதிய சேனை வருது!
ஜெயங் கிட்டுது!

பல்லவி
திடனாய் நில்லுங்கள், வாறேன்
என்கிறார் இயேசு;
விடமாட்டோம் உம் க்ருபையால்
என்போமே பதில்!

2. பெருஞ் சேனை நெருங்குது,
சாத்தான் முன் வாறான்;
அரும் படையோர் மாள்கிறார்
அஞ்சுதே நெஞ்சம் - திடனாய்

3. மகிமைக்கொடி வீசுது
தாரை கேட்குது;
தலைவர் நாமத்தால் ஜெயம்
தவறாதது! - திடனாய்

4. யுத்தமோ மும்முரிக்குது
சத்வம் ஏறுது;
தளகர்த்தர் அதோ வாறார்!
தைரியம் தோழரே - திடனாய்

*Philip B. Bliss*

## பாடல் 364: விசுவாச யுத்தங்கள்

### I have read of men of faith - 686

(Tune 651 of ESB)

1. விசுவாச யுத்தங்கள்
செய்து ஜெயம் பெற்றோர்கள்,
பொற் கிரீடம் பெற்றிருக்கிறாராம்!
இதைக் கேட்கும் போது நான்
ஓர் வீரனாக ஏன்
கூடாதென்று நினைத்த உடனே!

பல்லவி

யுத்தவர்க்கங்கள் நான்
தரித்துக் கொண்டு
போர்புரியப் போறேன்
பின்வாங்க மாட்டேன்
ஓ! என் எதிரி நன்றாய் நீ அறிந்திடவே
நானிந்த சேனையிலோர் வீரன்

2. நானுமவரைக் கண்டு;
தேவ பட்டயங்கொண்டு
பாதாளச் சேனையை எதிர்ப்பேன்
ஜெயக்கிரீடம் தருவார்;
சிங்காசனம் பகர்வார்;
மகிமையில் பரலோக தேவன் - யுத்த

3. இதோ! ஒரே எண்ணமாய்
நானுமிந்த வண்ணமாய்
தேவ பலத்தால் வீரனாவேன்;
காலத்தைப் போக்காமல்
பயப்பட் டோடாமல்
நரகத்தின் சேனைகளை வெல்வேன் - யுத்த

4. நல்ல சேவகனாக
நீயும் யுத்தம் செய்ய வா!
காலத்தை வீணாய்க் கழிக்காமல்
சத்துருக்கள் நடுங்க,
பாதாளங்கள் கிடுங்க,
இயேசு சேனாதிபதியாய்ச் செல்வார்! - யுத்த

*Mark Sandors*

## பாடல் 365: ஊக்கத்தோடே நற்போர் புரி

Fight the good fight - 718

(Tune 17, 40 of ESB)

1. ஊக்கத்தோடே நற்போர் புரி
உந்தன் மெய்ப் பெலன் கிறிஸ்துதான்!
பிடித்திடவர் ஜீவனும்
நித்தியானந்தக் கிரீடமுமாம்

2. கர்த்தன் கிருபையிலோடி
நித்தமவர் முகந்தேடு;
கிறிஸ்துன் பேறும் ஜீவனுமாம்!
ஜீவ பாதையும் முன்னுண்டு

3. எல்லையில்லாக் கிருபை ஈவார்
தொல்லை விட்டவரில் சார்வாய்;
கிறிஸ்ததன் ஜீவன் அன்பென்று
விஸ்வாச இதயம் காட்டும்

4. சோர்வுற்றுனக்குப் பயமேன்?
மாறாதவர் கை உன் பக்கம்;
கிறிஸ்துனக்கு சர்வமுமாய்
விஸ்வாசத்தாலே காண்பாய் நீ

*John S.B. Monsell*

## பாடல் 366: வீராதி வீரர் இயேசு சேனை

1. வீராதி வீரர் இயேசு சேனை நாங்கள்;
சேனை நாங்கள் இயேசுவின் சேனை நாங்கள்

2. திருவசனத்தை யெங்கும் திரிந்து சொல்வோம்
திரிந்து சொல்வோம் அதை அறிந்து சொல்வோம் - வீராதி

3. அறிவீனம் முற்றுமாக அதமாக்குவோம்;
அதமாக்குவோம் ஞானமதை ஊட்டுவோம் - வீராதி

4. சிலுவைக் கொடியைச் சேரத் தேடிப்பிடிப்போம்
தேடிப் பிடிப்போம் அன்பு கூறிப் பிடிப்போம் - வீராதி

5. இரட்சணியச் சீராவுடன் நீதிக் கவசம்
நீதிக் கவசம் கையாடுவோம் நிசம் - வீராதி

6. விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்;
மேலுயர்த்துவோம் அதை மேலுயர்த்துவோம் - வீராதி

7. பாவம் பாசம் சோதனைகள் யாவும் ஜெயிப்போம்
யாவும் ஜெயிப்போம் ஆபாசம் போக்குவோம் - வீராதி

## பாடல் 367: பாரெங்கும் சேனை ரதம் சுற்றுதே

All round the world the Army Chariot rolls - 775

(Tune 769 of ESB)

1. பாரெங்கும் சேனை ரதம் சுற்றுதே
பாரெங்கும் இயேசு இரட்சிக்கிறாரே;
பாரெங்கும் சேனை வீரர் தீரராய்
கொடியைச் சுற்றிக் கூடிநின்று வீசிடுவோம்

பல்லவி

வீசுங்கள் வீசுங்கள்
கொடி பறக்கவே
ஜெயம் நமக்கே பாரெங்குமே வீசிடுங்கள்

2. பாரெங்குமே நாம் கீதம் பாடியே
பாரெங்குமே நாம் முன்செல்லுவோமே;
பாரெங்குமே பாவியை மீட்டிட - நாம்
இயேசுவுக்காய் சேனைக் கொடி வீசிடுவோம் - வீசுங்கள்

3. பாரெங்குமே க்ருபை நதி ஓட
பாரெங்குமே போர் செய்யப் போவோமே;
பாரெங்குமே மாந்தரை இரட்சிக்க
இரத்தம் அக்கினி விஸ்வாசத்தால் வீசிடுவோம் - வீசுங்கள்

*William James Pearson*

## பாடல் 368: இன்ப லோகம் ஒன்று உண்டாம்

There is a better world - 368

(Tune 331, 338 of ESB)

1. இன்ப லோகம் ஒன்று உண்டாம்
ஆ, இன்பம்!
பாவம் தொல்லை அங்கில்லையாம்
ஆ, இன்பம்!
பொன் வீணை! சுந்தர வீடு
ஜோதிமயத் தூதர் பாடும்
சங்கீத ஓசை அங்குண்டு
ஆ, இன்பம்!

2. பொல்லாக் காட்டு மிருகங்கள்
அங்கில்லை!
சாவு குழி அழிவுகள்
அங்கில்லை!
எல்லாம் சுத்தம் எல்லாம் நன்மை
மீட்பர் இரத்தம் பட்டு உண்மையாய்ச்
சீர்ப்படா பாவத் தன்மை
அங்கில்லை!

3. பாவிகட்காக மாண்டாரே
நம் இயேசு!
சாந்தமற்ற நமக்காக
மாண்டாரே!
பாவமெல்லாம் பறந்திடும்
மெய்ப் பாக்கியம் பிறந்திடும்
பரத்தில் மேன்மை வந்திடும்
மீட்பரால்!

*John Lyth*

## பாடல் 369: பகலிலும் பிரகாசந்தானே

There's a land that is fairer than day - 900

(Tune 508 of ESB)

1. பகலிலும் பிரகாசந்தானே,
விசுவாசம் அதைக் காட்டுது;
வழியை நம் பிதா காட்டுகிறார்
இடம் ஆயத்தம் ஆக்குகிறார்

பல்லவி

நிச்சயம் ஒரு நாள்
இன்பக் கரையில் சேர்ந்திடுவோம்

2. அவ்வின்பக் கரையில் பாடுவோம்
இரட்சிப்பேன் மகத்வ கீதமே
துன்பத்தை கனவிலும் காணோம்
பெருமூச்சு அங்கு இராதே - நிச்சயம்

3. கிருபைப் பிதாவை எப்போதும்
துதிகளாலே நாம் போற்றுவோம்;
மாட்சிமையான அன்பை என்றும்
கீதங்களாலே நாம் போற்றுவோம் - நிச்சயம்

*S. Fillimore Bennett*

## பாடல் 370: இயேசு நம் அடைக்கலம்

1. இயேசு நம் அடைக்கலம்
அவர் நம்மை இரட்சிப்பார்;
இன்றும் என்றென்றுமே!
அது என்ன பாக்கியம்!
பாக்கியம் - பாக்கியம் - பாக்கியம்
அது என்ன பாக்கியம்!
இயேசு நம்மடைக்கலம்

2. இயேசு கிறிஸ்து பிறந்தார்
கஷ்டப்பட்டு மரித்தார்
எல்லாவருக்குமாய்;
அவரே எம் பாக்கியம்
பாக்கியம் - பாக்கியம் - பாக்கியம்
அவரே எம் பாக்கியம்
இயேசு திவ் யடைக்கலம்

3. இயேசு இப்போ மோட்சத்தில்
நாமும் கூட வேகத்தில்
அங்கு சேர்ந்திட்டால்;
அது என்ன பாக்கியம்!
பாக்கியம் - பாக்கியம் - பாக்கியம்
அது என்ன பாக்கியம்
மோட்சத்தில் நாம் சேர்ந்திட்டால்

4. பாவம், பயம், வேதனை
துக்கம், துன்பம், மரணம்
அவ்விடம் இல்லையே
அது என்ன பாக்கியம்!
பாக்கியம் - பாக்கியம் - பாக்கியம்
அது என்ன பாக்கியம்
மோட்சத்தில் நாம் சேர்ந்திட்டால்

5. இயேசு நம் அடைக்கலம்
சொர்க்கம், நித்திய பவனம்;
நாமெல்லாம் யாத்ரையோர்
பின்னே பூர்ண பாக்கியம்!
பாக்கியம் - பாக்கியம் - பாக்கியம்
பின்னே பூர்ண பாக்கியம்!
இயேசுவை நாம் காண்கையில்

## பாடல் 371: மெய்தான் மேல் ஸ்தலம் ஒன்றுண்டு

It's true there's a beautiful city

(Tune 514 of ESB)

1. மெய்தான் மேல் ஸ்தலம் ஒன்றுண்டு
அதன் வீதிகள் பொன்னாம்!
அம் மாட்சிமைகள் அதிகம்
நம் நாவால் சொல்லக் கூடாதாம்
மெய்யாய் மெய்யாய்
எனக்கோர் பங்கு உண்டு

2. மரித்த உன் பெந்துக்கள்
அவ்விடம் இருப்பார்;
உன் மீட்பர் பாதத்தைத் தேடு
அப்போ அவரைப் பார்ப்பாய்
சொல்வேன் சொல்வேன்
நீ அவரைச் சந்திப்பாய்

3. அங்கே பரிசுத்தர் தான்
உட் செல்லக் கூடுமாம்!
பாவிகளாய் ஜீவிப்போர்கள்
ஓர் போதும் போகக் கூடாதாம்;
ஆனால் ஆனால்
இப்போ சுத்தன் ஆவாய் நீ!

4. உன் பாவங்களை மன்னிக்க,
பரன் மானிடன் ஆனார்;
உன் மீறுதல்களை நீக்க
உதிரம் சிந்தினார்;
இப்போ இப்போ
உன் மீட்பர் அண்டை வா

## பாடல் 372: நித்திய மோட்சானந்த

**சரணங்கள்**

1. நித்திய மோட்சானந்த - மகிமை
நினைத்தால் முடியாது - ஆனால்
மெத்தச் சுருக்கமதாய் - வேதத்தோ
டொத்துப் பார்த்தால் தெரியும்

2. மங்கள நகரத்திற்கு - மதில் வச்சிரக்
கல்லாலே போட்டிருக்கும் - மிகு
தங்கத்தைப் போல் பளிங்காய்த் துலங்கிடும்
சாயுச்சியப் பட்டணமே

3. சூரிய சந்திரனின் ஒளியங்கு
தோன்றிடக் கூடாது - இயேசு
நீதியின் சூரியனாய்ப் பிரகாசிப்பார்
நிச்சயம் நிச்சயமே

4. துன்பத்தின் பாதை சென்ற - பரிசுத்த
சுவாமியின் மக்களெல்லாம் - பே
ரின்பத்தால் சூழப்பட்டு இராக்காலம்
இல்லாமல் வாழ்ந்திடுவார்

5. கண்ணீரும் அறியார்கள் - மனக்
கவலையுமறியார்கள் - ஜீவ
தண்ணீரால் தாகம் நீங்கி, சதா காலம்
சந்தோஷம் கொண்டாடுவார்

6. நோய் பிணி யணுகாது - கெட்ட
பேய்களுமணுகாது - அங்கே
ஓசன்னாப் பாட்டுடனே தெய்வத்தை
ஓயாமல் போற்றிடுவார்

7. ஆசனம் இயேசுவுடன் - ஜெயம் பெற்ற
அன்பர்க்குப் போட்டிருக்கும் - அங்கே
ஓசன்னாப் பாட்டுடனே தெய்வத்தை
ஓயாமல் போற்றிடுவார்

8. பாவமில்லா உலகம் - இந்தப் புவி
பாவஞ்செய்யும் உலகம் - அங்கே
சாபமில்லா மகிமை இந்தப் புவி
சாபத்தால் கெட்டதுவே

9. பாடு வருத்தமில்லை - இங்கே பல
பாடுங் கொடுமையுமே - அங்கே
வாடும் மனுஷரில்லை இங்கே யெல்லாம்
வாடிப்போகும் பொருளே

## பாடல் 373: கிழக்கத்தி புத்திரர்

They shall come from the east - 170

1. கிழக்கத்தி புத்திரர் மேல்நாட்டவரும்
தேவ பந்தியில் அமருவார்கள்
ஏழை பணக்காரன், கஷ்டம் துயரமுள்ளோர்
வந்து பந்தியில் அமருவார்கள்
அவர்கள் அங்கி தூய்மையெனில்
எவரும் யாரெனக் கேட்கமாட்டார்
கிழக்கத்தி புத்திரர் மேல்நாட்டவரும்
தேவ பந்தியில் அமருவார்கள்

2. கிழக்கத்தி புத்திரர் மேல்நாட்டவரும்
தேவ பந்தியில் அமருவார்கள்
பிதா கண்டு ஏற்றுக் கொண்டு ஆசிதர
தேவ பந்தியில் அமருவார்கள்
கருப்பு, வெளுப்பு, கருமை, அழகு
நிற வேற்றுமை அங்கு இல்லை
கிழக்கத்தி புத்திரர் மேல்நாட்டவரும்
தேவ பந்தியில் அமருவார்கள்

3. கிழக்கத்தி புத்திரர் மேல்நாட்டவரும்
தேவ பந்தியில் அமருவார்கள்
மகா உபத்திரவத்தில் ஜெயத்தினைப் பாடுவோர்
தேவ பந்தியில் அமருவார்கள்
எல்லா கோத்திரமும், ஜாதியும்
மனிதர் யாவரும் சகோதரராம்
கிழக்கத்தி புத்திரர் மேல்நாட்டவரும்
தேவ பந்தியில் அமருவார்கள்

*John Gowans*

*STranslated by: Daniel J. Raj*

## பாடல் 374: இன்பக் கானானுக்குள்

1. இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்

2. பரம சுகங்களின் இனிய ரசம்
பரம ராஜனோடு பானம் செய்வேன்

3. பரம பிதா எந்தன் கண்ணின்று
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்

4. சத்துரு சேனைகள் அங்கேயில்லை
இயேசுவின் புத்திரர் மாத்திரமே

5. தேவாட்டுக் குட்டியின் திரு மனைவி
சிறப்புடனிலங்கிடும் தேசமது

6. கேரூபீன் சேராபீன்கள் பாடிடவே
மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே!

7. சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாதே
சொர்க்கலோக நாட்டுக்கோர் இணையில்லையே

8. பரிசுத்த ஆவியின் பளிங்கு நதி
பள பளென் றொழுகிடும் தேசமது

9. ஜீவ விருட்ச மங் காற்றருகில்
மாதந்தோறும் புதுக் கனி தருமே

10. நவரத்ன நிர்மிதப் பட்டணத்தில்
இராப் பகல் சூரியன் இயேசுதாமே

## பாடல் 375: ஜீவநதியின் ஓரமாய்

1. ஜீவநதியின் ஓரமாய் சீயோன் பட்டணம் காணுது
மரண ஆற்றின் கரைதனில் என் கடினப் பயணம் முடியுது

பல்லவி

நித்தியம் நித்தியம் நித்தியமாய்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே

2. பாவம் நிறைந்த உலகமே - உன்
பாக்யம் எனக்கு வேண்டாமே - நித்தியம்

3. கண்ணீர் நிறைந்த உலகமே - உன்
கஸ்தி எனக்கு வேண்டாமே - நித்தியம்

4. சிலுவை சுமந்த சீடரை
சிங்காசனத்தில் காணுவேன் - நித்தியம்

5. நீதி சூரியன் இயேசுவே
நித்தமும் பிரகாசிப்பார் - நித்தியம்

## பாடல் 376: உம்மண்டை தேவனே

Nearer, my God, to Thee - 617

(Tune 190 of ESB)

1. உம்மண்டை தேவனே நான் சேரட்டும்
சிலுவை சுமந்து நடப்பினும்;
என் ஆவல் என்றுமே
உம்மண்டை தேவனே நான் சேர்வதே

2. தாசன் யாக்கோபைப் போல் ராக்காலத்தில்
திக்கற்றுக் கல்லின் மேல் நான் துயில்கையில்,
எந்தன் கனாவிலே
உம்மண்டை தேவனே இருப்பேனே

3. நீர் என்னை நடத்தும் பாதை எல்லாம்,
விண் எட்டும் ஏணிபோல் விளங்குமாம்;
தூதர் அழைப்பாரே,
உம்மண்டை தேவனே நான் சேரவே

4. விழித்தும் உம்மையே நான் துதிப்பேன்
என் துயர்க் கல்லை உம் வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே,
உம்மண்டை தேவனே நான் சேர்வேனே

5. சந்தோஷ சிறகால் வான்கடந்து
கோளங்கள் மேலாக நான் பறந்து
என் பாடல் இதுவே
உம்மண்டை தேவனே நான் சேர்வேனே

*Sarah Adams*

## பாடல் 377: இயேசுவின் நற்செய்தி சொல்வீர்

Tell me the story of Jesus - 99 (Tune 458 Of ESB)

1. இயேசுவின் நற்செய்தி சொல்வீர்,
என் நெஞ்சில் பதியவே;
உள்ளன்பு பொங்கக் கூறுவீர்
சந்தோஷ செய்தி அதே!
பாலனை வாழ்த்த விண்தூதர்
கூடியே ஆர்ப்பரித்தார்
விண்ணில் பிதாவுக்கே மேன்மை
பூமியில் சினேகம் என்றார்

பல்லவி

இயேசுவின் நற்செய்தி சொல்வீர்
என் நெஞ்சில் பதியவே;
உள்ளன்பு பொங்கக் கூறுவீர்
சந்தோஷ செய்தி அதே!

2. நாற்பது நாள் தீய காட்டில்
சோதனையால் தவித்தார்;
படாத பாடுகள் பட்டார்,
சாத்தானையோ ஜெயித்தார்;
யாருக்கும் நன்மைகள் செய்து
சுற்றியே திரிந்தனர்,
பாவிகளால் தள்ளப்பட்டு
கஸ்திகள் அடைந்தனர் - இயேசுவின்

3. மீட்பர் தம் சிலுவை மீதில்
தொங்கியே ஜீவன் விட்டார்;
உயிர்தெழுந்தே மோட்ச வீட்டில்
என்றும் வீற்றாளுகிறார்;
ஆ! இந்த அன்பே பேரன்பு
எந்தனை மீட்டுக் கொண்டார்
ராஜாதி ராஜாவைப் போற்றும்!
அன்பின் சொரூபியானார் - இயேசுவின்

*Fanny Crosby*

## பாடல் 378: பாதை காட்டும் மா யெகோவா

Guide me, O Thou great Jehovah - 578

(Tune 411, 431 of ESB)

1. பாதை காட்டும் மா யெகோவா
பரதேசியான நான்
பலவீனன், அறிவீனன்,
இவ்வுலகம் காடுதான்,
வானாகாரம்,
தந்து என்னைப் போஷியும்

2. ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றை,
நீர் திறந்து தாருமேன்;
தீப மேக ஸ்தம்பம் காட்டும்,
வழியில் நடத்துமேன்;
வல்ல மீட்பா!
என்னைத் தாங்கும் இயேசுவே

3. சாவின் அந்தகாரம் வந்து,
என்னை மூடும் நேரத்தில்
சாவின் மேலும் வெற்றி தந்து
என்னைச்சேரும் மோட்சத்தில்
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்

*William Williams*

## பாடல் 379: அற்புத அன்பின் கதை

### Wonderful Story of Love - 139

(Tune Precious Name - 394 of ESB)

1. அற்புத அன்பின் கதை
மீண்டும் சொல்லு இதை
ஆச்சரியமான அன்பு
நித்யமாய் உணர்த்துது
தூதர்கள் களிப்பாய் உரைத்தனர்
மேய்ப்பர்கள் வியப்பாய் பெற்றனர்
பாவியே இதை நீ நம்பாயோ?
அற்புத அன்பின் கதை

பல்லவி
அற்புதம்! அற்புதம்!
ஆச்சரியமான அற்புத அன்பின் கதை

2. அற்புத அன்பின் கதை
அப்பால் நீ இருப்பினும்
ஆச்சரியமான அன்பு
இன்றும் அழைக்கிறது
கல்வாரி மேட்டிலிருந்து
கீழே தூயநதி மட்டும்
லோகம் உருவாகும் போதும்
இவ்வன்பின் அழைப்பு உண்டு

3. அற்புத அன்பின் கதை
அமைதி அளிக்கிறார்
ஆச்சரியமான அன்பு
எல்லா புனிதர்க்கும்
மேல் மாளிகை இளைப்பாறுதல்
நமக்கு முன்பே சேர்ந்தோருடன்
மகிழ்ச்சி கீதம் பாடிடுவோம்
அற்புத அன்பின் கதை

*John Merritte Driver 1858 - 1934*

*Translated by J. Daniel J. Raj*

## பாடல் 380: நடத்துவார் ஆ! இன்பெண்ணம்!

He leadeth me! - 725

(Tune 21 Of ESB)

1. நடத்துவார் ஆ! இன்பெண்ணம்!
மா ஆறுதல் சாரும் வண்ணம்,
நான் எவ்விடத்திருக்கினும்,
தேவனின் கையே நடத்தும்

பல்லவி

நடத்துவார்! நடத்துவார்!
தம் கையாலே நடத்துவார்!
அவரை நேராய் பின்செல்வேன்;
தம் கையாலே நடத்துவார்!

2. ஓர் வேளை இருள் பாதையில்,
ஓர் வேளை ஏதேன் பூங்காவில்,
அலை கடல் அமைவிலும்
அவர் நேச கை நடத்தும்! - நடத்துவார்

3. கர்த்தா! நான் உம் கை பிடிப்பேன்,
திருப்தியால் குறை பேசேன்!
எந்த நிலையும் பூரணம்;
நீரே எனக்குத் தாரணம்! - நடத்துவார்

4. இங்கென் வேலை முடிந்தபின்,
துங்கனால் வெற்றி பெற்ற பின்
பங்கம் சாவிலு மஞ்சிடேன்,
பொங்கு யோர்தான் தாண்டச் செய்வார்! - நடத்துவார்

*Joseph Henry Gilmore*

## பாடல் 381: தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்

Sometimes I'm tired with toil and care

(Tune 113 of ESB)

1. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்,
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேரிடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்;
சோதனை வரும் வேளையில்
சொல் கேட்கும் செவியிலே
பட்டயத்தால் ஜெயம் வரும்
பரன் உன்னைக் காக்க வல்லோர்!

பல்லவி
காக்கும் வல்ல மீட்பர் எனக்குண்டு!
எனக்குண்டு எனக்குண்டு!
காக்கும் வல்ல மீட்பர் எனக்குண்டு;
காத்திடுவார் என்றுமே!

2. ஐயமிருந்தோர் காலத்தில்
ஆவி குறைவால் தான்;
மீட்பர் உதிர பலத்தால்
சத்துருவையே வென்றேன்;
என் பயம் யாவும் நீங்கிற்று
இயேசு கை தூக்கினார்,
முற்றாய் என்னுள்ளம் மாறிற்று
இயேசென்னைக் காக்க வல்லோர் - காக்கும்

3. என்ன வந்தாலும் நம்புவேன்,
என் நேச மீட்பரை;
யார் கைவிட்டாலும் பின் செல்வேன்,
எனது நல் இயேசுவை;
அகலம் ஆழம் உயரமாய்
எவ்வளவன்பு கூர்ந்தீர்;
என்ன துன்பங்கள் வந்தாலும்
இயேசென்னைக் கைவிட மாட்டார்! - காக்கும்

*Herbert H. Booth*

## பாடல் 382: பாவ நாசர் பட்ட காயம்

Sweet the moments - 634

(Tune 397 of ESB)

1. பாவ நாசர் பட்ட காயம்
பார்த்துணர்ந்து கொள்வது;
சுத்தம் செல்வம், நற்சகாயம்,
சமாதானம் உள்ளது!

பல்லவி

நேசிக்கிறேன், அல்லேலூயா
நேசிக்கிறேன் இயேசுவை;
அவர் என் இரட்சகரதால்
என்னையும் நேசிக்கிறார்

2. இரத்தம் வெள்ளம் பாய்ந்ததாலே
அன்பின் வெள்ளம் ஆயிற்று
தேவ நேசம் அதினாலே,
மானிடர்க்குத் தோன்றிற்று - நேசிக்கிறேன்

3. ஆணி பாய்ந்த மீட்பர் பாதம்
தஞ்சம் என்று பற்றினேன்
அவர் திவ்ய நேச முகம்
அருள் வீசக் காண்கிறேன் - நேசிக்கிறேன்

4. பாசத்தால் என் நெஞ்சம் பொங்கி
துக்கத்தால் கலங்குவேன்;
அவர் சாவால் துக்கம் மாறி
சாகா ஜீவன் அடைவேன் - நேசிக்கிறேன்

5. நாதா நானும் மோட்சம் சென்று
உம்மைக் காணுமளவும்
நன்றியுள்ள நெஞ்சத்தோடு
உம்மைப் பற்ற அருளும் - நேசிக்கிறேன்

*Walter W. Shirley*

## பாடல் 383: வேத நூல் ஓதிடும்

1. வேத நூல் ஓதிடும் நல்ல மேய்ப்பா!
பாதையும் சத்தியமும் ஜீவன் நீரே!
பேதையாம் ஏழையேன் பாதை செல்ல
நீர் அல்லால் யாருமில்லை!

பல்லவி
இயேசு நாதா! ஏழைக்கு நீர் அல்லால் யாருமில்லை
இயேசு நாதா! நீர் அல்லால் யாருமில்லை!

2. சத்ய விஸ்வாசத்தைக் காத்திடவே
நித்தம் நின் கீர்த்தியைப் பாடிடவே
சத்துரு சேனையில் வெற்றி தர
நீர் அல்லால் யாருமில்லை! - இயேசு

3. ஒரே பிதாவை அறிந்திடவே
பரிசுத்தாவியைப் பெற்றிடவே
வேறேது போக்கும் வழியுமில்லை
நீர் அல்லால் யாருமில்லை! - இயேசு

4. சாத்தான் தலையைச் சிதைப்பதற்கும்
அவனை வெற்றி சிறப்பதற்கும்
சமாதான தேவன் கிருபை செய்ய
நீர் அல்லால் யாருமில்லை! - இயேசு

5. நன்மை ஏதும் செய்யத் தெரிகிலேன்
தின்மையே யான் செய்யத் திறனுளேன்;
நற்செய்கை யாகும் உம் சித்தம் செய்ய,
நீர் அல்லால் யாருமுல்லை! - இயேசு

6. நினைவுக்குள் பாவம் வருகுதையா,
கனவுக்குள் என்னை இழுக்குதையா
ஆவி உடல் உயிர் மீட்பதற்கே
நீர் அல்லால் யாருமில்லை! - இயேசு

7. தேவன் மகத்துவத்தில் வரவே
ஜீவ கிரீடத்தைத் தான் தரவே;
அப்போதும் நாங்கள் பாடிடுவோமே;
நீர் அல்லால் யாருமில்லை! – இயேசு

## பாடல் 384: உம்மையன்றி உம்மையன்றி யாருமில்லையே

பல்லவி

உம்மையன்றி உம்மையன்றி யாருமில்லையே

அனுபல்லவி

அன்பின் மயமே மா சுத்தி நீதி நிறைவே

சரணங்கள்

1. நீரென் ரக்ஷை நீரென் பெந்து நீரென தாசை,
   நீரென் சொந்த மீட்பரான தென்ன பாக்கியமே - உம்

2. என்றும் எங்கும் இயேசுவே! என்னோடுகூட
   அன்றிருந்த சக்தி க்ருபையோடு வாழ்வீரே - உம்

3. ஜீவனிலும் நீர் பெரியோர்! மா சந்தோஷமே!
   பூவில் உமக்கு நிகர் யார்! சாற்றுவாருண்டோ? - உம்

4. மங்களமே என் தனமே! மகிமை தாதாவே!
   தங்கமே! என்றும் மாறாத தர்ம நாதனே! - உம்

*K.S Abraham*

## பாடல் 385: எல்லாமேசுவே

இராகம்: நாட்டை தாளம்: அடதாளம்

பல்லவி

எல்லாமேசுவே - எனக் கெல்லாமேசுவே

அனுபல்லவி

தொல்லை மிகு மிவ்வுலகில் - சுகமில்லையே

சரணங்கள்

1. ஆயனும் சகாயனும் நேயனு முபாயனும்
நாயனு மெனக்கன்பான ஞான மணவாளனும் - எல்

2. தந்தை தாய் இனம் ஜனம் பந்துள்ளோர் சிநேகிதர்
சந்தோட சகல யோக சம்பூரண பாக்கியமும் - எல்

3. கவலையிலாறுதலும் கங்குலிலென் ஜோதியும்
கஷ்ட நோய்ப்படுக்கையிலே கைகண்ட ஔஷதமும் - எல்

4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும் - எல்

5. அணியுமாபரணமும் ஆஸ்தியும் சம்பாத்தியமும்
பிணையாளியும் மீட்பருமென் - பிரிய மத்தியஸ்தனும் - எல்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்
ஞான கீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும் - எல்

## பாடல் 386: எந்தன் இயேசு உன்னதத்தில்

சரணங்கள்

1. எந்தன் இயேசு உன்னதத்தில் அன்புள்ளோனாய் வாழும் போது
   ஏழையேன் கலங்குகிறேன் இப்பூமியில் அதால்
   என்று மவர் கிருபை மட்டும் போதுமே
2. இன்னல்களாம் குன்றுதனில் பின்னிடாமல் ஏறுதற்கு
   இயேசு என் கால் தனை மான் கால்போலாக்கி என்னை
   இன்பமா யென் பாதையோடச் செய்குவார்!
3. ஆரும் துணை இல்லை என்றோ ஏகனாய் நான் ஆனேன் என்றோ
   என் மனதில் எண்ணிடேன் ஓர் நாளுமே - இயேசு
   என்னுடனில்லாமல் எங்கு போயினர்?
4. என்னருமைத் தோழரன்றோ தெய்வதூத சங்கமெல்லாம்;
   இப்போதவர் என் பிதா முன் நிற்கிறார் - பின்னால்
   என்னையும் தம் ஊழியத்தால் தேற்றுவார்
5. வியாகுலம் என் வீட்டை விட்டு காட்டிலோடப் பண்ணிடினும்
   அங்கேயொரு தூதன் என்னைச் சந்தித்து, சூடாம்
   அப்பமும் ஜலமும் தந்து தேற்றுவார்!
6. வரும் நாளுக்காக வீணாய் என் மனம் நொந்தென்ன புண்ணியம்?
   என்னைத் தினம் போஷிப்பவர் இல்லையோ? - இன்றும்
   ஏழையான் அவரை மட்டும் நம்புவேன்
7. கவனிப்பாய் காகத்தை நீ! விதைப்பில்லை! அறுப்பில்லை!
   விலையின்றிப் போற்ற வில்லையோ நாதன் - லீலி
   புஷ்பங்களில் வண்மையதை வைத்திட்டார்!
8. பத்மூ தீவில் ஏகனாய் நான் தங்கிடினும் பயப்படேன்
   வானம் திறந்தேசு நாதர் ஜோதியாய் - என்னை
   பரதீசில் ஆவிக்குள் எடுப்பாரே!
9. ஹா! மகேசா! கருணேசா பொன்னு நாதா! நீரெனக்காய்
   வேண்டியதெல்லாம் தயவாய்த் தந்தால் - நானென்
   வாணாளெல்லாம் உம்மைப் போற்றிப் பாடுவேன்

## பாடல் 387: ஏழை ஆத்ம நேசனே

**சரணங்கள்**

1. ஏழை ஆத்ம நேசனே!
கொந்தளிப் பதிகமே;
புகலிடம் ஐயனே!
வெள்ளங்கள் பெருகுதே

2. நம்பிக்கை யோடிதோ நான்
நீர் இரங்கக் கெஞ்சுகிறேன்;
உம்மைத் தஞ்ச மாகத்தான்
நான் பிடித்திருக்கிறேன்

3. தலை சாய்க்க ஏழை நான்
உம்மைவிட் டெங்கேகுவேன்?
நீரே கதி யாகத்தான்
தெண்டனிட்டேன் கேளுமேன்!

4. எந்தன் முழு நம்பிக்கை
உம்மில் தான் என் ஐயனே!
தஞ்சமென்ற ஏழையை
தாபரியென் சுவாமியே!

5. என்னை என்றும் சுத்தனாய்
உம்மால் வைக்கக் கூடுமே;
இப்போ என்னை முற்றுமாய்
ஆவியால் ஆராயுமேன்

6. வாழ்நாள் ஜீவன் ஆவியும்
இந்த வேளை அடியேன்
மற்றும் எந்தன் யாவையும்
பூசையாய்ப் படைக்கிறேன்

## பாடல் 388: சாமி! நின் பாத மல்லால்

பல்லவி

சாமி! நின் பாத மல்லால்
தாரகம் வேறில்லையே

கண்ணிகள்

1. கஷ்ட உலகமதில்
காணேன் ஒரு சுகத்தை - சாமி

2. ஜீவன் கொடுத்தனையே
தீயோன் விழைப்பதற்காய் - சாமி

3. பூமியின் வாழ்வகன்று
போம் பொழுது உயிர்ப்போம் - சாமி

4. இயேசு கிறிஸ்தரசே
என் அருமை இரட்சகரே - சாமி

## பாடல் 389: கர்த்தர் என் மேய்ப்பர்

இராகம்: கௌசிகை தாளம்: ஆதி

1. கர்த்தர் என் மேய்ப்பர் அதினாலே ஒருக்
காலும் தாழ்ச்சி யடையேன் இனிமேலே

2. புல்லுள்ள இடங்களிலவர் மேய்ப்பார் - நல்ல
புனல் தடங்களில் என்னைக் கொண்டு சேர்ப்பார்

3. ஆத்துமத் தேறுதல் அளித்தவர் பேர்ப்
பொருட்டாக நீதியிலென்னை நடத்துகிறார்

4. மரண இருள் பள்ளத்தில் நடந்தாலும் - அஞ்ச
மாட்டேன் நானுமதினால் ஒருக்காலும்

5. தேவரீர் என்னோடே நீர் இருப்பதாலும் - என்னைத்
தேற்றும் உமது தடியும் கோலும்

6. சத்துருக்களுக்கு முன் ஒரு பந்தி - நீர்
தக்கபடி எனக்குச் சரிப்படுத்தி

7. சிரசினில் எனக்கெண்ணெய் எடுத்து ஊற்றி - அபி
ஷேகம் செய்கிறீர் சகலமும் பூர்த்தி

8. ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையுடன் - கிருபை
சேர்ந்து தொடரும் என்னை செம்மையுடன்

9. நேச கர்த்தருடைய வீட்டிலே நான் - மேவி
நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்

## பாடல் 390: எந்தன் ஆத்ம நேசரே

### Jesus, lover of my soul 737

(Tune 312, 320, 323 of ESB)

1. எந்தன் ஆத்ம நேசரே
சார்வேன் நான் உன் மார்பிலே
கொந்தளிக்கும் அலைகள்,
பொங்கிவரும் வேளையில்
மறைப்பீர் உம் ஒதுக்கில்,
ஜீவியக் கொடும் புயல்,
சீறி அழிக்காமலே,
சேரும் ஆத்மா உம்மிலே

2. அடைக்கலம் வேறில்லை
அடைந்தேன் நீர் தான் தஞ்சம்,
விடாதீர் தனியாக
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்
நீரே எந்தன் நம்பிக்கை,
நீர் சகாயம் செய்குவீர்
வாடும் எந்தன் சிரசை
மூடுவீர் உம் செட்டையால்

3. வற்றாக் கிருபைக் கடலை,
முற்றாய் என்னைக் கழுவும்,
ஜீவநதி பாய்ந் தென்னில்,
சுத்தம் செய்து காக்கட்டும்
ஜீவ ஊற்றின் நாயகா
எந்தன் தாகம் தீருமேன்
நித்திய காலமாய் என்னில்,
உந்தன் அருள் பொங்கட்டும்

*Charles Wesley*

## பாடல் 391: வல்ல தேவன் கூறுவித்து

### Precious promise - 753

(Tune 379, 429 of ESB)

1. வல்ல தேவன் கூறுவித்து
சொல்லும் வாக்கைக் கேளுமேன்
உந்தன் மேல் என் கண்ணை வைத்து
என்றும் பாதை காட்டுவேன்

பல்லவி

உந்தன் மேல் என் கண்ணை வைத்து
என்றும் பாதை காட்டுவேன்
இன்ப மோட்சம் சேருமட்டும்
என்றும் பாதை காட்டுவேன்!

2. சாத்தான் மாம்சம் லோகத்தாலும்
ஆத்மா சோர்ந்து போவதேன்?
எந்தன் ஆவி வாக்கினாலும்
என்றும் பாதை காட்டுவேன் - உந்தன்

3. துன்பம் துக்கம் நேரிட்டாலும்
இன்பமாக மாற்றுவேன்
என்ன சோதனை வந்தாலும்
என்றும் பாதை காட்டுவேன் - உந்தன்

*Nathaniel Niles*

## பாடல் 392: கர்த்தர் எந்தன் மேய்ப்பராக இருக்கிறார்

பல்லவி

கர்த்தர் எந்தன் மேய்ப்ப ராக இருக்கிறார்
நானோ தாழ்ச்சியடையேனே - என்றுமே

சரணங்கள்

1. அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீர் களண்டை என்னை விடுகிறார் - கர்த்தர்

2. அவர் என் ஆத்துமாவைத் தேற்றி தம் நாமத்தினிமித்தம்
என்னை நீதியின் பாதையில் நடத்துகிறார் - கர்த்தர்

3. நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும்
பொல்லாப்புக்குப் பயப்படேன் என்றுமே - கர்த்தர்

4. தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்;
உமது கோலும் தடியும் என்னைத் தேற்றும் - கர்த்தர்

5. என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு
ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தினீர் - கர்த்தர்

6. என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்
என் பாத்திரம் நிரம்பியே வழிகிறது - கர்த்தர்

7. ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மை கிருபை தொடரும்
கர்த்தர் வீட்டில் நீண்ட நாட்களாய் நிலைத்திருப்பேன் - கர்த்தர்

## பாடல் 393: இயேசு என் அஸ்திபாரம்

இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: சாப்பு

சரணங்கள்

1. இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே
நேச முசிப்பாறுதல் இயேசுவில் கண்டேன் யானும்!

2. பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்,
அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் இயேசு இருக்கையில்!

3. என்ன மதுரம் அவர் நன்னய நாமச்சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே

4. லோகம் என்னை எதிர்த்து போ' வென்று சொல்லிடினும்
சோகம் அடைவேனோ  என் ஏகன் எனக்கிருக்க?

5. என்னென்ன மாய லோகக் கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும்பின்னுமாய் இயேசு என்னை நடத்திடுவார்

6. வியாதியால் எந்தனது காயம் கெட்டுப் போயினும்
மாயத்தோற்றத்தை இயேசு நாயகன் மாற்றிடுவார்

## பாடல் 394: இயேசுவண்டை நீ வந்திடுவாய்

Come to the saviour, make no delay - 235

(Tune 730 Of ESB)

1. இயேசுவண்டை நீ வந்திடுவாய்
தாமதமின்றி தீவிரமாய்;
அன்போடு நின்று மா ஊக்கமாய்
வா, என்றழைக்கிறார்

பல்லவி

பாவமின்றி சுகித்திருப்போம்
மா சந்தோஷமாகச் சந்திப்போம்
நல் மீட்பரண்டை சேர்ந்திருப்போம்
பேரின்ப தேசத்தில்!

2. பாலரே வாரும் தாராளமாய்
என்றுரைத்தாரே மா தயவாய்;
நேசரை நம்பி மகிழ்ச்சியாய்
தாமதமின்றி வா! - பாவமின்றி

3. நேசரின் சத்தம் கேட்டறிவோம்
நம்பிக்கையோடு வந்தடைவோம்
மீட்பரின் அன்பைக் கண்டிடுவோம்
இன்னும் அழைக்கிறார்! - பாவமின்றி

*George F Root*

## பாடல் 395: சாமீப லோகத்தில்

There is a happy Land - 65, 897

(Tune 181 of ESB)

1. சாமீப லோகத்தில்
ஆனந்தமாய்
மாசற்ற சுத்தத்தில்
மின் ஜோதியாய்;
நின்றென்றும் பாடுவார்
இயேசுவையே போற்றுவார்
கெம்பீரங் கொள்ளுவார்
வானோர்களே!

2. மா இன்ப தேசத்தை
நாடுங்களேன்,
ஆ! அதில் சேரவே
தாமதம் ஏன்?
நாம் களிகூருவோம்,
பாவம் துக்கம் நீக்குவோம்,
கிறிஸ்து வண்டை தங்குவோம்
என்றென்றுமே!

3. அங்குள்ள யாவரும்
சந்தோஷிப்பார்,
சாதுள்ள பலரும்
சேர்ந்திருப்பார்,
கீர்த்தி பிரதாபராய்,
தூதர்கள் தோழராய்
வாழ்ந்திருப்பார்!

*Andrew Young*

## பாடல் 396: இயேசு எங்கள் மேய்ப்பர்

Jesus is our shepherd

(Tune 378 or 379 of ESB)

1. இயேசு எங்கள் மேய்ப்பர்
கண்ணீர் துடைப்பார்
மார்பில் சேர்த்தணைத்து
பயம் நீக்குவார்;
துன்பம் நேரிட்டாலும்
இன்பம் ஆயினும்,
இயேசுவின் பின் செல்வோம்
பாலர் யாவரும்

2. நல்ல மேய்ப்பர் சத்தம்
நன்றாய் அறிவோம்
காதுக் கின்பமாக
கேட்டுக் களிப்போம்;
கண்டித்தாலும், நேசர்
அற்றித் தேற்றுவார்!
நாங்கள் பின்னே செல்ல
வழிகாட்டுவார்

3. ஆட்டுக்காக மேய்ப்பர்
இரத்தம் சிந்தினார்
அதில் மூழ்கினோரை
சுத்தர் ஆக்குவார்;
பாவக் குணம் நீக்கி,
முற்றும் ரட்சிப்பார்!
திவ்ய தூய சாயல்
ஆக மாற்றுவார்!

## பாடல் 397: பாலரே! ஓர் நேசர் உண்டு!

There's a Friend for little children

1. பாலரே! ஓர் நேசர் உண்டு!
விண் மோட்ச வீட்டிலே,
நீங்கா இந்நேசர் அன்பு
ஓர் நாளும் குன்றாதே!
உற்றாரின் நேசம் யாவும்
நாட்செல்ல மாறினும்
இவ்வன்பர் திவ்விய நேசம்
மாறாமல் நிலைக்கும்!

2. பாலரே! ஓர் வீடு உண்டு!
விண் மோட்ச வீட்டிலே
பேர் வாழ்வுண்டாக இயேசு
அங்கரசாள்வாரே;
ஒப்பற்ற அந்த வீட்டை
நாம் நாடவேண்டாமோ?
அங்குள்ளோர் இன்ப வாழ்வில்
ஓர் தாழ்ச்சிதானுண்டோ?

3. பாலரே! ஓர் கிரீடம் உண்டு!
விண்மோட்ச வீட்டில் நீர்
நல்மீட்பரின் பேரன்பால்
பொற் கிரீடம் அணிவீர்!
இப்போது மீட்பைப் பெற்று
மா நேசர் பின் சென்றால்
இவ்வாடா ஜீவ கிரீடம்
அப்போது சூடுவார்

4. பாலரே! ஓர் கீதம் உண்டு!
விண்மோட்ச வீட்டிலே
மா ஜெய கீதம் பாட
ஓர் வீணையும் உண்டே!
அந்நாட்டின் இன்பம் எல்லாம்
நம் மீட்பர்க்குரிமை
நீர் அவரிடம் வாரும்,
ஈவார் அவ் வின்பத்தை!

*Albert Midlane*

## பாடல் 398: துள்ளித் துள்ளிப் பாலனே

Children's Joy (Tune 147 or 152 of ESB)

1. துள்ளித் துள்ளிப் பாலனே
கீதம் பாடிப் பாடியே
இயேசுவண்டை ஓடி வா
நேசர் அவர் அல்லவா

2. பெத்லகேமில் பிறந்தார்
பெற்றோருக்கு அமைந்தார்
தீயதான குணங்கள்
உண்டோ? இல்லை அவரில்

3. சிறுபிள்ளை நீயும் வா
நெஞ்சை இயேசுவுக்குத் தா
அவர் கையில் ஏந்துவார்
ஆசீர்வாதம் தருவார்

4. வாரும் சிறு பாலரே
அஞ்ச வேண்டாம் நேசரே
துன்பம் துக்கம் நீக்குவார்
கண்ணீர் யாவும் துடைப்பார்

5. பொற்கிரீடம் அவரே
சூட்டுவார் என் தோழரே
தேவ தூதரோடு நீர்
கீதம் பாடிப் போற்றுவீர்

## பாடல் 399: அந்தகார லோகத்தில்

### Standing by a purpose true - 847

(Tune 635 of ESB)

1. அந்தகார லோகத்தில்
யுத்தஞ் செய்கிறோம்
இயேசு நாதர் பட்சத்தில்
அஞ்சாமல் நிற்கிறோம்

பல்லவி

தானியேலைப் போல
தைரியம் காட்டுவோம்
பயமின்றி ஊக்கமாய்
உண்மை பிடிப்போம்

2. பாவச் செய்கை யாவையும்
நேரே எதிர்ப்போம்
துன்பமே உண்டாகிலும்
பின் வாங்கவே மாட்டோம் - தானியேலை

3. மற்றோர் நிந்தை செய்யினும்
அஞ்சித் தளரோம்
பொல்லார் நயம் காட்டினும்
சற்றேனும் இணங்கோம் - தானியேலை

4. வல்ல தேவ ஆவியால்
வெற்றி சிறப்போம்
லோகம் பாவம் அவரால்
மேற் கொண்டு ஜெயிப்போம் - தானியேலை

*Philip P. Bliss*

## பாடல் 400: வான பிதா தந்த வேதத்திலே

I am so glad that our Father in Heaven - 323

(Tune 527 of ESB)

1. வான பிதா தந்த வேதத்திலே
நானவ ரன்பைக் கண்டு மகிழ்வேன்
விவ்வித ஆச்சர்யம் யாவினுள்ளே
ஆச்சர்யம் இயேசென்னை நேசிக்கிறார்

பல்லவி

ஆனந்தம் இயேசு நேசிக்கிறார்
நேசிக்கிறார் நேசிக்கிறார்
ஆனந்தம் இயேசு நேசிக்கிறார்
நேசிக்கிறா ரென்னையும்

2. நேசிக்கிறார் நானும் நேசிக்கிறேன்
மீட்டாரென்னை யதால் நேசிக்கிறேன்
சாவு மரத்திலந் நேசங் கண்டேன்
நிச்சயம் இயேசென்னை நேசிக்கிறார் - ஆனந்தம்

3. கேட்போருக்குப் பதில் என்ன சொல்வேன்?
இயேசுவுக்கு மகிமை நானறிவேன்
தேவாவி என்னோடு சேர்ந்து சொல்வார்
எப்போதும் இயேசென்னை நேசிக்கிறார் - ஆனந்தம்

4. இயேசு ராஜாவை நான் காணும்போது
நேசமா யிக்கீதம் பாடிடுவேன்
ஆச்சர்யம் இயேசென்னை நேசிக்கிறார்
என்றுபாடி நித்தியம் நான் மகிழ்வேன் - ஆனந்தம்

5. நிச்சய மிதினில் யான் மகிழ்வேன்
அட்சயன் இயேசுவைப் பற்றிக்கொள்வேன்
பாட்டாய் இந் நேசத்தைப் பாடிடுவேன்
கேட்டவுடன் சாத்தான் ஓடிடுவான் - ஆனந்தம்

*Philip P. Bliss*

## பாடல் 401: பரிசுத்த வேதமே

Holy Bible, book divine - 652

(Tune 275 or 301 of ESB)

1. பரிசுத்த வேதமே
விலை பெற்ற செல்வமே
ஜென்மம் எனக்குக் கூறி
என்னை எனக்குப் போதி

2. அலையு மென்னைக் கூட்டி
இரட்சக ரன்பு காட்டி
பாதையி லெனை யோட்டி
பண்பாய் எச்சரிப்பாயே

3. ஆபத்தினி லாறவும்
ஆவியால் நான் தேறவும்
சாவில் ஜெயங் கொள்ளவும்
சத்திய வழிகாட்டி நீ

4. பின் வரும் சந்தோஷமும்
வன் பாவியின் நாசமும்
சொல்லுந் தேவ வேதமே
செல்வமே நீ எனதே

*John Burton, Sen*

## பாடல் 402: நல் சிறு தீபமாயென்னை

### God, make my life a little light - 838

(Tune 95, 132 of ESB)

1. நல் சிறு தீபமா யென்னை
வல்ல தேவா ஆக்கும்
செல்லுமிட மெங்கும் ஒளி
வீசிப் பிரகாசிக்க

2. சிறுவனாம் என் ஜீவனை
நறு மலராக்கும்
சிறப்புடனே சோலையில்
பிறப்பிக் கானந்தம்

3. ஆக்கிடு மென்னைக் கீதமாய்
ஆறுத லளிக்க
பலமாக்கி அயலாரை
ஆனந்தமாக்கிட

4. களைப்புற்றோரை, கர்த்தாவே
இளைப்பாற்ற என்னை
தழைப்புற்ற கோலாக்கிடும்
உழைக்க அவர்க்காய்

*Matilda B Betham Edwards*

## பாடல் 403: அனுசரிக்க தேவா

Saviour, teach me day by day – 84

(Tune 275, 300 of ESB)

1. அனுசரிக்க தேவா
அனுதினம் போதியும்
என்னை நேசித்த நேசா
என்றும் உம்மை நேசிப்பேன்

2. அன்புடனே சேவிப்பேன்
இன்பம் ஈயும் அதுவே
என்னை நேசித்த நேசா
என்றும் உம்மை நேசிப்பேன்

3. நீர் சென்ற பாதை செல்ல
பார்த்திபா போதித்திடும்
என்னை நேசித்த நேசா
என்றும் உம்மை நேசிப்பேன்

4. காட்டுவேன் என் நேசத்தை
சாட்சியால் இப்பாருக்கே
என்னை நேசித்த நேசா
என்றும் உம்மை நேசிப்பேன்

*Jane E Leeson*

## பாடல் 404: அன்பு மிகும் இரட்சகனே

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

1. அன்பு மிகும் இரட்சகனே
இன்பமுடன் சேர்த்தீ ரென்னை;
உன்னதா வுந்தன் முன் எந்தன்
மேன்மை யாது மில்லையே!

2. காருமெனை ஆபத்தினில்
பாரும் பாதை தனில் விழாமல்
தாரும் உந்தன் கிருபை மிக
பாரம் மிகும் சோதனையில்

3. கை விடமாட்டேனென்று
மெய்யாகவே வாக்களித்தீர்!
ஐயா நீர் என்னருகிருக்க
நேயா துன்பம் இன்பமாமே

*K.S. Abraham*

## பாடல் 405: பாலர் கூடி நாம் பாடிப் புகழ்ந்திடுவோம்

பல்லவி

பாலர் கூடி நாம் பாடிப் புகழ்ந்திடுவோம் - சிறுபாலர்

சரணங்கள்

1. பாவியை மீட்கப் பரலோகம் விட்டு இப்
   பாரில் மனுவடிவாய் - சிறு
   பாலகனாய்ப் பசுக் கொட்டில் வந்துதித்த
   பார்த்திபனாம் கிறிஸ்தை - சிறு

2. மன்னனாம் கிறிஸ்துவாகிய இரட்சகர்
   மானிலம் மேலினதால்
   மண்ணுள்ளோர் யாவர்க்கும் மட்டற்ற சந்தோஷம்
   வந்ததிம் மானுவேலால் - சிறு

3. விண்ணவர் காட்சியால் மேய்ப்பர் பிரமித்து
   மேவியே முன்னணையில்
   விழுந்து பணிந்து வியந்து புகழ்ந்த
   உலக இரட்சகனை - சிறு

## பாடல் 406: சேனையில் பாலரே சேர்ந்து ஒன்றாகவே

சரணங்கள்

1. சேனையில் பாலரே சேர்ந்து ஒன்றாகவே
தேவனைத் தொழுது கை தட்டுங்கள் மிகக் கொட்டுங்கள்

2. பெத்லகேம் பாலனைப் புகழ் மனுவேலனை
புண்ணிய சீலனைப் போற்றுவோம் மகிழ் ஏற்றுவோம்

3. பாவிகள் நேசனைப் பாவ விமோசனை
பாவலர் வாசனைப் பண்புடன் துதி பாடுவோம்

4. ஆவின் குடி லவதரித்த அற்புதனை
தேவ குமாரனைத் தீயரின் பிணையாளனை

5. எம்பிரான் தம்பிரான் எம் குலத் தண்ணலாம்
இம்மானு வேலனாம் எல்லாரும் களிகூருவோம்

6. எங்கள் கிறிஸ்துவுக் கிங்கிதமாகவே
மங்கள சோபனம் மகிழ்ந்து கொண்டாடுவோம்

## பாடல் 407: சத்ய வேதமே! இது சத்ய வேதமே!

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

சத்ய வேதமே! இது சத்ய வேதமே!
நித்ய தேவனருளின சத்ய வேதமே!

சரணங்கள்

1. சத்ய வழி காட்டிடும் பக்தி வழிக் கோட்டிடும்
நித்திய வீடேகும் வரை கர்த்தன ருளூற்றிடும் - சத்ய

2. இருள் சூழ்ந்துலகில் நான் இடருறும்போதும் தான்
அருளொளி வீசி என்னை ஆபத்துக்கு நீக்குங்காண் - சத்ய

3. ஆத்ம பசி நீக்கிடும் அல்லல் யாவும் போக்கிடும்
நேர்த்தியாம் ஜீவ ஊற்றண்டை நிதமெனைச் சேர்த்திடும் - சத்ய

4. என்னை எனக்குக் காட்டி என்னிலை தெளிவாக்கி
உன்னதன் சமூக மென்னை ஓட்டும் திவ்ய நூலிது - சத்ய

5. நோயுறு மென் பாயிலும் நோவுறுமிப் பாரிலும்
மாய மறுந் தேறுதலும் மருந்து மிதாகிடும் - சத்ய

6. அன்றன்று அது தரும் ஆத்ம மன்னா தின்பவர்
என்றும் சாகா ஜீவன் பெற்று இன்பமுடன் வாழுவார் - சத்ய

*S. சுபானந்தராஜ்*

## பாடல் 408: சத்திய வேத புத்தகமே

இராகம்: தர்பார் தாளம்: ஆதி

பல்லவி

சத்திய வேத புத்தகமே

அனுபல்லவி

நித்திய திரியேக - கர்த்தன் அருளிச் செய்த

1. மத்தியஸ்தனைக் குற்றவாளிக்குக் காட்டும்
வைத்தியனை நோயாளிக்குப் புகட்டும்
இத்தரையோர்க் கொரு ரட்சிப்பை யூட்டும்
இயேசுகிறிஸ்து நாமத்தைப் பாராட்டும் - சத்திய

2. ஆயிரமாயிரமான பொன் வெள்ளி
அருமையைப் பார்க்கிலு மதிகம் விலையுள்ள
தூய மறை உனக்கு ஒப்பாகச் சொல்ல
தொல்லுலகில் ஒரு நூலுண்டோ? அல்ல! - சத்திய

3. பிள்ளைகள் பெற்றோர்கள் புருஷர் மனைவிகள்
பெலத்தோர் பெலவீனர்; பேதைகள் ஞானிகள்
செல்வ ரெழியோர்கள் தேசிகர் மன்னர்கள்
ஜெகத்தி லனைவர்க்கும் ஜீவ வசனங்கள் - சத்திய

4. புத்தி போதகத்துக்குரிய நன்னூலே
போத ஆத்துமத்தின் போஜனப் பாலே
பக்தி பரிவு நிறை பாச நீர்க்காலே
பாவங்களைப் பிளக்கப் பாய்ந்திடும் வாளே - சத்திய

5. பாதைக்குரிய தீபமும் நீ யாவாய்
பரிதிக்கு மேற்படும் பலனைச் சொரிவாய்
சோதனைகளை வெல்ல திடனைத் தருவாய்
சுவிசேஷ மீந்து நீ தேற்றியே வருவாய் - சத்திய *A.V. ஆபேல்* 

## பாடல் 409: அதோ! மாட்டுத் தொழு பார்!

"Who is He in yonder Stall" - 104 (Tune 319 of ESB)

1. அதோ! மாட்டுத் தொழு பார்!
மேய்ப்பர் போற்றும் பாலன் யார்?

பல்லவி

இவர் தான் மா வல்ல கர்த்தர்
இவர் மகிமையின் ராஜா
திருப்பாதம் பணிவோம்
ராஜ கிரீடம் சூட்டுவோம்

2. கஷ்டமாய் வனத்தில் யார்
உபவாசம் செய்கிறார்? - இவர்

3. அன்பின் வார்த்தை சொல்வதார்
ஜனம் துதிசெய்வோர் யார்? - இவர்

4. துக்க பாரம் நோய் உள்ளார்
குணமாக்குகிறதார்? - இவர்

5. லாசரின் கல்லறை பார்
அங்கு கண்ணீர் விட்டோர் யார்? - இவர்

6. திரள் ஜனக்கூட்டத்தார்
போற்றி வாழ்த்தும் இவர் யார்? - இவர்

7. இரத்த வேர்வை சிந்தி யார்
ஜெபத்தில் போராடினார்? - இவர்

8. சிலுவையின் காட்சி பார்
அரும் ஜீவன் விட்டதார்? - இவர்

9. சாவை வென்றெழுந்ததார்
அதால் நம்மை மீட்டோர் யார்? - இவர்

10. ராஜ கோலம் அணிந்தார்
லோகம் யாவும் ஆள்கிறார் - இவர்

*Benjamin R. Hanby*

## பாடல் 410: நகரத்துக்கு புறம்பே

### There is a green hill - 133

(Tune 95, 107, 132 of ESB)

1. நகரத்துக்கு புறம்பே
தூரத்திலோர் மலை மேல்
சிலுவையில் கர்த்தர் மாண்டார்
நம்மை இரட்சித்திட

பல்லவி

மா அன்பாய் நம்மை நேசித்தார்
நாமும் நேசிப்போமே
நம்பி திவ்ய மீட்பின் அன்பில்
கர்த்தரின் வேலை செய்

2. அவர் நோவு நாம் அறியோம்
நாவால் சொல்லொண்ணாதே
நம்புகிறோம் நமக்காய் தான்
நாதர் தொங்கி மாண்டார் - மா

3. நம் பாவங்களை மன்னித்து
நல்லோராக்கிடவும்
திரு ரத்தத்தால் இரட்சித்து
மோட்சம் சேர்க்க மாண்டார் - மா

4. பாவப் பரிகாரம் செய்த
நல்லோன் வேறாருமில்லை
மோட்சம் திறந்து நம்மைச் சேர்க்க
அவரால் தான் கூடும் - மா

*Cecil Francis Alexander*

## பாடல் 411: இயேசு கற்பித்தார் ஒளி வீசவே

### Jesus bids us shine - 841

(Tune 698 of ESB)

1. இயேசு கற்பித்தார் ஒளி வீசவே
சிறு தீபம் போல இருள் நீங்கவே
அந்தகார லோகில் ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்

2. முதல் அவர்க்காய் ஒளி வீசுவோம்
ஒளி மங்கிடாமல் காத்துக் கொள்ளுவோம்
இயேசு நோக்கிப் பார்க்க ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்

3. பிறர் நன்மைக்கும் ஒளி வீசுவோம்
உலகின் மா இருள் நீக்க முயல்வோம்
பாவம் சாபம் யாவும் பறந்தடிப்போம்
அங்கும் இங்கும் எங்க்கும் பிரகாசிப்போம்

*Susan Warner*

## பாடல் 412: என்னாத்துமாவின் தீபமே

### Sun of my Soul

(Tune 26 Of ESB)

1. என்னாத்துமாவின் தீபமே
என்னருமை இரட்சகனே
நீ ரென் சமீபமிருந்தால்
இருள் பகலாய் மாறுமே

2. கண் மயங்கி நான் நித்திரையில்
களைப்புற்றுக் கிடக்கையில்
உன் மடியிலென் இரட்சகா
ஒதுக்கி வைத்துக் காரையா

3. காலை முதல் மாலை வரை
கர்த்தாவே நீரென்னோடிரும்
உம்மையல்லாம் ஓர் பொழுதும்
உயிர் விடத் துணிவேனே

*John Keble*

## பாடல் 413: நீங்காதிரும் என் நேச கர்த்தரே

### Abide with me - 670

(Tune 517 of ESB)

1. நீங்காதிரும் என் நேச கர்த்தரே
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே
மற்றோர் ஒத்தாசை அற்றுப் போயினும்
நீர் மெய்ச் சகாயரே! நீங்காதிரும்

2. நீர் மேலே குமிழ் போல் என் ஆயுசும்
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்
கண் கண்ட யாவும் மாறிப் போயினும்
மாறாத கர்த்தரே நீங்காதிரும்

3. நீர் கூட நின்று தாங்கி வாருமேன்
அப்போது தீமைக்கு நான் தப்புவேன்
நீர் என் துணை என் பாதை காட்டியும்
என் இன்ப துன்பத்தில் நீங்காதிரும்

4. நான் அஞ்சிடேன் நீர் கூடத் தங்கினால்
என் க்லேசம் மாறும் உம் ப்ரசன்னத்தால்
சாவே எங்கே உன் கூரும் ஜெயமும்?
என்றாரவாரிப்பேன்; நீங்காதிரும்

5. நான் சாகும் அந்தகார நேரமே
நீர் ஒளியாய் விண் காட்சி காட்டுமே
பேரின்ப ஜோதி வீசச் செய்திடும்
வாணாள் சாங்காலிலும் நீங்காதிரும்

*Henry Francis Lyte*

## பாடல் 414: தேவன் தங்குமெந்த வீடும்

Happy the home when God is there – 661

(Tune 59, 86, 96, 117 of ESB)

1. தேவன் தங்கு மெந்த வீடும்
திருப்பதி யாகும்;
பரம ஆறுதல் ஐக்யம்
அன்பும் பெற்று வாழும்!

2. கர்த்தன் நாமம் காதுக்கின்பம்
ஆக்கும் வீடு மோட்சம்;
காலை பாலர் இயேசைப் போற்ற
களித்தென்றும் வாழும்!

3. ஜெபத் தொனி கேட்கும் வீடு
செழித்து வாழுமே;
ஜீவ வேதம் வாசிப்பொரும்
மேல் நோக்கி வாழ்வரே!

4. கர்த்தாவே! எங்கள் வீட்டிலும்
நித்தம் நீர் தங்கிடும்
உத்தம மனதோடும் மேல்
பக்தி தந்தருளும்!

*Henry Wase*

## பாடல் 415: என் தேவனே உம் மா நேசம்

### My God, how endless is Thy love! - 672

(Tune 16, 46 of ESB)

1. என் தேவனே உம் மா நேசம்
அந்த மில்லாத துண்மையே;
காலை தோறும் உம் கிருபையும்
மாலை உம் ஈவும் நவமே!

2. காக்கிறீர் என்னைத் துயில்கையில்
இராக்காலம் எந்நேரத்திலும்
உம் வாக் கெனக்குத் தீபமே
நல் மீட்பரென் மா பெலமே!

3. ஒப்புவித்தேன் என தெல்லாம்
எப்போதும் என்னை நீர் ஆளும்
பெற்றுக்கொள்ளும் நன்மைக்காக
ஏற்றுக் கொள்ளும் என்றும் துதி

*Isaac Watts*

## பாடல் 416: பாவஞ் செய்யாமலின்றைக்கு

He pleased to keep me - 610

(Tune 63 of ESB)

1. பாவஞ் செய்யாம லின்றைக்கு
தேவரீர் காத்திடும்
என்னி லென்றும் உம தாவி
தந்து வசித்திடும்

2. எல்லாப் பாவத்தினின்றும் நீர்
வல்லமையாய் மீட்பீர்;
காத்துக் கொள்வீர் உம் தாசனை
சாத்தான் தொடாமலே

3. ஜீவன் போம் வரையும் காக்கும்
தேவன் நீரல்லவோ!
சக்தியற்ற ஆத்துமாவை
சக்தன் நீர் காத்திடும்!

4. நம்பி இதோ பணிகிறேன்
உம் திருப் பீடத்தில்
தீயனின் வினையினின்று
நாயன் நீர் காத்திடும்!

5. உம் கரம் என் அடைக்கலம்
அம்பரன் என் அரண்
தற்காத்திடும் என் ஆத்துமாவை
தற்பரா நீர் தாமே!

*Charles Wesley*

## பாடல் 417: பாதம் ஒன்றே வேணும்

இராகம்: குறிஞ்சி தாளம்: ஆதி

பாதம் ஒன்றே வேணும் - இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் - உன்

சரணங்கள்

1. நாதனே துங்கமெய் - வேதனே பொங்குதற்
காதலுடன் துய்ய - தூதர் தொழுஞ்செய்ய - பாதம்

2. சீறும் புயலினால் - வாரிதி பொங்கிட
பாரில் நடந்தாற்போல் - நீர்மேல் நடந்த உன் - பாதம்

3. வீசும் கமழ் கொண்ட - வாசத் தயிலத்தை
ஆசையுடன் மரி - பூசிப் பணிந்த பொற் - பாதம்

4. போக்கிட மற்ற எம் - ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரம் - தூக்கி நடந்த நற் - பாதம்

5. நானிலத்தோர் உயர் - வான் நிலத்தேற வல்
ஆணி துளைத்திடத் - தானே கொடுத்த உன் - பாதம்

6. பாதம் அடைந்தவர்க் - காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு - நாதனே என்றும் உன் - பாதம்

## பாடல் 418: காலமே தேவனைத் தேடு

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: திரிபுட

பல்லவி

காலமே தேவனைத் தேடு - ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு

அனுபல்லவி

சீலமுடன் பதம் பாடிக் கொண்டாடு;
சீரான நித்திய ஜீவனை நாடு

1. மன்னுயிர்க்காய் மரித்தாரே - மனு
மைந்தனெனப் பெயர் வைத்திருந்தாரே
உன் சிருஷ்டிகரை நீ உதயத்திலெண்ணு
உள்ளங்கனிந்து தனிஜெபம் பண்ணு - காலமே

2. சிறுவர்க ளென்னிடஞ் சேரத் - தடை
செய்யா திருங்களென்றார் மனதார;
பரலோக செல்வ மவர்க்குப் பலிக்கும்
பாக்கியமெல்லாம் பரந்து ஜொலிக்கும் - காலமே

3. வேலை யுமக்குக் கைகூட - சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாட;
காலை தேடுவோரென்னைக் கண்டடைவாரே
கண்விழித்து ஜெபஞ் செய்யுமென்றாரே - காலமே

## பாடல் 419: இந்த நாள் எனக்கு

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

பல்லவி

இந்த நாள் எனக்குத் தந்த நல் நாதா;
சந்ததமும் நமோ சரணம்

அனுபல்லவி

வந்தென்னை யாளும் - வரந்தா இந்நாளும்
வல்லா இத்தருணம்

சரணங்கள்

1. பானொளி வீசுமுன் வானொளி என்னகம்
தாவ கிருபை ஈவா
பாதை காட்டிப் பல வாதை ஓட்டு மெந்தன்
பாவநாச  தேவா - இந்த

2. பாழுடலின் செய்கை பதினேழினின்று
பண்பாய்ப் பாதுகாரும்
வாழுமாவியின் கனி ஒன்பதும் இன்று
வர்த்தனையாய்த் தாரும் - இந்த

## பாடல் 420: அஞ்சலோடு நெஞ்சுருகி

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

அஞ்சலோடு நெஞ்சுருகி ஆவலாய் வந்தேன் - ஏழை
ஆரென்றடியேனலறும் அபயம் கேள் ஐயா!

சரணங்கள்

1. சஞ்சலம் தவிர்க்க உந்தன் தஞ்சமேயல்லால் - இத்
தரணியில் யாதும் காணேன் தாரகம் நீயே - அஞ்சலோடு

2. நித்திரையில் விக்கினத்துட் புக்கிடாமலே - நின்
சித்தம் வைத்தெனை ரட்சித்த தேவே ஸ்தோத்ரமே - அஞ்சலோடு

3. இன்றடியான் செய்யும் வேலை யாவிலு முந்தன் - நல்
இன்ப ரூபம் தனை என் முன்பில் இயங்கச் செய்யுமேன் - அஞ்சலோடு

4. பார்வை பேச்சு கேள்வி சிந்தை யாவினாலுமே - வரும்
பாவ தோஷங்கட்கு என்னைப் பாதுகாரையா - அஞ்சலோடு

5. ஆயனே அடியானுக்கு நாயன் நீரல்லால் - இம்
மாய வாழ்வில் ஒன்றுமில்லை மாய்கை மாய்கையே - அஞ்சலோடு

## பாடல் 421: அருணோதயம் ஜெபிக்கிறேன்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

அருணோதயம் ஜெபிக்கிறேன்
அருள் பரனே கேளுமேன்
ஆவி வரம் தாருமேன் - என் இயேசுவே

சரணங்கள்

1. கருணையுடன் கடந்தராவில் காப்பாற்றினீர் தெய்வமே
கரங்குவித்து ஸ்தோத்திரிக்கிறேன் - என் இயேசுவே
சிரங்குனிந்து ஸ்தோத்திரிக்கிறேன் - அருணோதயம்

2. கதிரவன் எழும்பிவரும் முறையின்படி என்மேலே,
கர்த்தரே நீர் பிரகாசித்திடும் - என் இயேசுவே
நித்தம் நித்தம் பிரகாசித்திடும் - அருணோதயம்

3. மாமிசமும் கண்ணும் இந்த மாய்கையில் விழாமலே
ஆவிக்குள்ளடங்கச் செய்யுமேன் - என் இயேசுவே
பாவிக்கருள் பெய்யச் செய்யுமேன் - அருணோதயம்

4. செய்யும் வேலை யாவுக்குமென் மா கிருபை வேணுமே
இல்லாவிடில் நான் வெறுமையே - என் இயேசுவே
எல்லாம் உம்மால் கூடும் உண்மையே - அருணோதயம்

5. வருகைக்கேற்ற ஆயத்தமும் மறுபிறப்பின் ஆவியும்
மனமிரங்கித் தாருமேசையா - என் இயேசுவே
தினமுமென்னைக் காருமேசையா - அருணோதயம்

6. அன்பு, பலம், தெளிந்த புத்தி, ஆவி வரந் தாருமேன்
அடியேன் ஜெபம் ஏற்றுக் கொள்ளுமேன் - என் தேவனே
அருமை மீட்பர் மூலம் கேட்கிறேன் - அருணோதயம்

## பாடல் 422: கதிரவன் எழுகின்ற காலையில்

இராகம்: நவ்ரோஜ் தாளம்: திரிபுட

சரணங்கள்

1. கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்
துதி செய்ய மனமே நீ - எழுந்திராய்!

2. வறண்டு தண்ணீரற்ற வனம் இந்தப் புவிதனில்
திரண்ட தயை தேவை - நாடுவேன்

3. கடவுளின் வல்லமை கன மகிமை காணும்
இடமதில் செல்வதே - என் இஷ்டம்

4. ஜீவனைப் பார்க்கிலும் தேவனின் காதலை
ஆவலாய் நாடி நான் - போற்றுவேன்

5. ஆயுள் பரியந்தம் ஆண்டவர் நாமத்தை
நேயமாய்ப் பாடி நான் - உயர்த்துவேன்

6. மெத்தையில் இராச்சாமம் நித்திரை கொள்கையில்
கர்த்தரின் செயல்களைச் சிந்திப்பேன்

7. அல்லும் பகலும் நான் அவர் செட்டைகளின் கீழ்
தொல்லைக்கு நீங்கியே - ஒதுங்குவேன்

8. ஆத்துமம் தேவனை அண்டிக் கொள்ளுதவர்
நேத்திரம் போல் என்னைக் காக்கிறார்

*T. ஜோசப்*

## பாடல் 423: ஆரிடத்தினில் ஏகுவோம் எம் ஆண்டவனே

இராகம்: சாவேரி தாளம்: ஆதி

பல்லவி

ஆரிடத்தினில் ஏகுவோம் எம் ஆண்டவனே
ஆரிடத்தினில் ஏகுவோம்?

அனுபல்லவி

ஆரிடத்தில் ஏகுவோம் சோரா நித்திய ஜீவ
நேரார் வசனங்கள் உமது சாரில் இருக்க இனி

சரணங்கள்

1. பாவிகளாம் எங்களுக்கு - உமை யல்லாது
தாபரமில்லை; நீரே!
ஜீவன் தனையுடைய தேவ குமாரனாக
மேவு கிறிஸ்தென்றுமையே - ஆவலுடன் நம்பினோம் - ஆரிடத்தினில்

2. போனவர் போல நாங்களும் - உமை நெகிழ்ந்து
போவதில்லை பரமனே
ஞானோபதேச குருவான உம்மையண்டின
ஈனர் இனிதுற்ற உமது தானமதைப் பிரிந்து - ஆரிடத்தினில்

3. உற்றார் சிநேகர் யாரையும் - எம் வீடு வாசல்
உள்ள பொருளனைத்தையும்,
முற்றாய் வெறுத்தும்மையே பற்றியிருக்க நாங்கள்
தெற்றாய் இனியும்மை நன்றியற்றோர் போல நெகிழ்ந்து - ஆரிடத்தினில்

4. பொன்னுலகத் திருந்தெம்மைப் - புரக்க வந்த
புண்ய நாதன் நீரல்லவோ?
பின்ன பேத மகற்ற மன்னவனே உமது
நன்னய முகப் பிர-சன்ன மதனை விட்டு - ஆரிடத்தினில்

*ஜான் பால்மர்*

## பாடல் 424: தருணமே, பரம சரீரி

இராகம்: அமிர்தவாகினி தாளம்: ஆதி

பல்லவி

தருணமே, பரம சரீரி - எனைத்
தாங்கியருள் கருணை வாரி

அனுபல்லவி

உரிமை அடியார் அனுசாரி - உயர்
எருசலை நகர் அதிகாரி - அதி

சரணங்கள்

1. வரர் அடி தொழும் வெகு மானி - பரன்
மகிமை ஒளிர் தேவ சமானி
நரர் பிணை ஒரு பிரதானி - இயேசு
நாயகன் எனதெஜமான் நீ - அதி - தருணமே

2. ஆதாரம் உனை அன்றி யாரே? - எனை
அன்பாய்த் திருக்கண் கொண்டு பாரே;
பாதாரவிந்தம் கதிசேரே - இஸ்ரவேல்
பார்த்திபன் தாவீது வம்ச வேரே - அதி - தருணமே

3. நித்த நித்தமாக எந்தன் மேலே - வருவ
தெத்தனை துன்பங்கள் ஒருக்காலே;
அத்தனையும் நீக்குதற்குன் காலே - எனக்
குத்தம துணை தான் மனுவேலே - அதி - தருணமே

4. கங்குல் பகலும் துயரம், கோவே - வரும்
கலக்கம் ஒழித்தெனைத் தற்காகவே;
பங்கெனக்குத் தந்த மெய் மன்னாவே - ஏழைப்
பாவியை இரட்சியும் இயேசு தேவே - அதி - தருணமே

*வே. சா*

## பாடல் 425: ஐயா,உமது சித்தம்

இராகம்: தேசியதோடி தாளம்: ஆதி

பல்லவி

ஐயா,உமது சித்தம் ஆகிடவே வேணும்

அனுபல்லவி

மெய்யாய் எனது சித்தம் வெகு மோசமே காணும்

சரணங்கள்

1. ஆடுபோல் வழி தப்பி அவனவன் வழி யொப்பி,
கேடடைந்தோர் பாவத்தைக் கிறிஸ்துமேல் சுமத்தினீர் - ஐயா

2. ஜீவனோ, மரணமோ, செல்வமோ, வறுமையோ;
யாவிலெனை நிறுத்த தேவரீர் நினைக்கினும் - ஐயா

3. வசை யிசை பகை நேசம் வாழ்வுயர் வதிமோசம்
பசி நிர்வாணம் நாசம் பாடு நோயடைகினும் - ஐயா

4. என்னிஷ்டம் வாயாததால் எத்தனை துயர்கொண்டேன்
பொன்னடிக் கீழடங்கிப் புகழுமக்கென்று வாழ்வேன் - ஐயா

5. குயவன் கைக் களிமண்ணாய் குருவே யுமக்கமைவேன்
நயமிது வென்றறிந்த ஞானமுள்ள பிதாவே - ஐயா

சங் G.S. வேதநாயகம்

## பாடல் 426: காத்துக் கொள்ளும் சுவாமி

சரணங்கள்

1. காத்துக் கொள்ளும் சுவாமி
காத்துக் கொள்ளும் - ஒரு
மாத்திரைப் பொழுதிலும்
மனது பிசகாமல்

2. துன்பம் துக்கம் வராமல்
காத்துக்கொள்ளும் - பாவ
சோதனைக்குட்படாமல்
காத்துக்கொள்ளும்

3. வேலையிலும் ஓய்வினிலும்
காத்துக்கொள்ளும் - நித்திரை
விழிப்பிலும் சலிப்பிலும்
காத்துக்கொள்ளும்

4. முடிவுவரை உண்மையாய்
காத்துக்கொள்ளும் - பிராணன்
முடியும்போதுந்தன் கதி
சேர்த்துக் கொள்ளும்

## பாடல் 427: சித்தம் வைத்துக் காரும் ஐயனே!

பல்லவி

சித்தம் வைத்துக் காரும் ஐயனே!
ஜெயமதனால் - நிச்சயந்தான்

அனுபல்லவி

சித்தம் வைத்துக் காரும் - என்னை
சீருலகுக் குயிர்ப்பியும்

1. மட்டில்லா புகழ் படைத்த
மன்னனே என் இயேசு நாதா!
சித்தம் வைத்துக் காரும் என்னை
சீருலகுக் குயிர்ப்பியும் - சித்தம்

2. அன்னை தந்தையும் நீரே!
ஆதரித்தாள்வோரும் நீரே!
பொன்னுலகத்தின்பம் தந்து
நன்னகரில் சேரும் ஐயா! - சித்தம்

## பாடல் 428: வந்தாளுமே எந்நாளுமே

சரணங்கள்

1. வந்தாளுமே எந்நாளுமே உன் நாமமே என் தாபமே!
இந்நேரமே கண் பாருமே;

2. என் மேசையா உன்னாசையே கொண்டோசையாய நான் பேசவே
உன்னாசி தாநல் நேசமாய்

3. இப்பாரிலே உன் பேரையே தப்பாமலே நான் பாடியே
எப்போதுமே கொண்டாடுவேன்

4. சத்துருக்கள் சதிசெய்ய நித்தமுமே நெருக்குகிறார்
அத்தனே தான் அடைக்கலம்

## பாடல் 429: இயேசு நல்லவர்! என் இயேசு நல்லவர்!

சரணங்கள்

1. இயேசு நல்லவர்! என் இயேசு நல்லவர்! ஆமாம்
இயேசுவைப்போல் நல்லோன் வேறு யாருமில்லையே

2. தம் கருணையோ என்றென்றுமுள்ளதாம் - அவர்
பாதம் எனக் கடைக்கலம் இயேசு நல்லவர்

3. நல்ல மேய்ப்பரே சஞ்சலம் இல்லையே - அவர்
சொல்லெனக்கு இன்பமே தான் இயேசு நல்லவர்

4. இல்லை யவர்க்கு நல் ஒப்பு முயர்வும் பூவில்
வல்ல கர்த்தன் மேசியாவாம்; இயேசு நல்லவர்

5. நேற்று மின்றுமே எக்காலமு மவர் - ஸ்திரம்
சற்றும் மாறாது; ஜீவிக்கும் இயேசு நல்லவர்

6. கஷ்ட துன்பத்தில் ஆறுதலளிப்போன் - எனக்
கிஷ்ட துணைவரா மென்றும் இயேசு நல்லவர்

7. நல்லவர் இயேசு எனக் கண்டறிந்தவர் - தத்தம்
அல்ல லொழிந் தானந்திப்பார் இயேசு நல்லவர்

8. நன்றியோடே நான் எந்நாளுமவரை - அதி
வந்தனஞ் செய்து களிப்பேன் இயேசு நல்லவர்

# பாடல் 430: அன்பே பிரதானம்

பல்லவி

அன்பே பிரதானம் - சகோதர
அன்பே பிரதானம்

சரணங்கள்

1. பண்புறு ஞானம் - பரம நம்பிக்கை
இன்ப விஸ்வாசம் - இவைகளிலெல்லாம் - அன்பே

2. பலபல பாஷை - படித்தறிந்தாலும்
கலகல வென்னும் - கைம்மணியாமே - அன்பே

3. என் பொருள் யாவும் - ஈந்தளித்தாலும்
அன்பிலையானால் - அதிற்பயனில்லை - அன்பே

4. துணிவுடனுடலைச் - சுடக்கொடுத்தாலும்
பணிய வன்பிலாற் - பயனதிலில்லை - அன்பே

5. சாந்தமும் தயவும் - சகல நற்குணமும்
போந்த சத்தியமும் - பொறுமையுமுள்ள - அன்பே

6. புகழிறுமாப்பு - பொழிவு பொறாமை
பகையநியாயப் - பாவமுஞ் செய்யா - அன்பே

7. சினமடையாது - தீங்கு முன்னாது
தினமழியாது தீமை தராது - அன்பே

8. சகலமுந் தாங்கும் - சகலமும் நம்பும்
மிகைப்பட வென்றும் - மேன்மை பெற்றோங்கும் - அன்பே

## பாடல் 431: தொழுகிறோம் எங்கள் பிதாவே

பல்லவி

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

அனுபல்லவி

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

சரணங்கள்

1. வெண்மையும் சிவப்பு மானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம் - தொழுகிறோம்

2. தலை தங்கமய மானவர்
தலை மயிர் சுருள் சுருளானவர்
பதினாயிரம் பேரில் சிறந்தவர்
பதினாயிரமாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

3. கண்கள் புறா கண்கள் போல
கன்னங்கள் பாத்திகள் போல
சின்னங்கள் சிறந்ததாலே
எண்ணில்லாத சரணம் சரணம் - தொழுகிறோம்

4. கரங்கள் பொன் வளையல்கள் போல
நிறங்களும் தந்தத்தைப் போல
கால்களும் கல் தூண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம் - தொழுகிறோம்

5. சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதான எம் மூலைக்கல்லே
ஏராளமாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

6. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக் கெட்டாத விஸ்தாரம்
கூடி வந்த எம்மலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

7. பார்த்திபனே கன ஸ்தோத்திரம்
கீர்த்தனம் மங்களம் ஸ்தோத்திரம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென் ஆமென் - தொழுகிறோம்

## பாடல் 432: உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்

பல்லவி

உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

அனுபல்லவி

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார்

சரணங்கள்

1. தேவன் என் அடைக்கலமே என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையுமவரே - அவர்

2. இரவின் பயங்கரத்திற்கும் பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் - அவர்

3. ஆயிரம் பதினாயிரம் பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒருக்காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே - அவர்

4. தேவன் உன் அடைக்கலமே ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ?
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் - அவர்

5. உன் வழிகளிலெல்லாம் உன்னை தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தன் கரங்களில் ஏந்திடுவார் - அவர்

6. சிங்கத்தின் மேல் நடந்து வலு சர்ப்பத்தையும் மிதிப்பார்
அவர் நாமத்தை நீ முற்றிலும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார் - அவர்

7. ஆபத்தில் அவரை நான் நோக்கி கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் - அவர்




# பாகம் 2

## பாடல் 433: எந்தன் ஜீவன் இயேசுவே!

Take my life, and let it be – 525

(Tune 289, 292 Of ESB)

1. எந்தன் ஜீவன் இயேசுவே!
சொந்தமாக ஆளுமேன்;
எந்தன் காலம் நேரமும்
நீர் கையாடியருளும்

2. எந்தன் கை பேரன்பினல்
ஏவப்படும் எந்தன் கால்
பணிசெய்ய விரையும்
அழகாக விளங்கும்

3. எந்தன் நாவு இன்பமாய்
உம்மைப் பாடவும் என் வாய்
மீட்பின் செய்தி கூறவும்
ஏதுவாக்கியருளும்

4. எந்தன் ஆஸ்தி தேவரீர்
முற்றும் அங்கீகரிப்பீர்
புத்தி கல்வி யாவையும்
சித்தம் போல் பிரயோகியும்

5. எந்தன் சித்தம் இயேசுவே
ஒப்புவித்து விட்டேனே
எந்தன் நெஞ்சில் தங்குவீர்
அதை நித்தம் ஆளுவீர்

6. திருப்பாதம் பற்றினேன்
எந்தன் நேசம் ஊற்றினேன்
என்னையே சமூலமாய்
தத்தம் செய்தேன் நித்தமாய்

*Frances Ridley Havergal*

## பாடல் 434: நீ உயிர் பெறவே

I gave my life for thee

1. நீ உயிர் பெறவே
நான் இரத்தம் சிந்தினேன்;
நீ மீட்கப்படவே
நான் விலையாகினேன்;
என் ஜீவன் நான் தந்தேன்!
நீ என்னத்தைத் தந்தாய்?

2. சதா கால இன்பம்
நீ பெற்று வாழ்ந்திட
இவ்வுலகில் துன்பம்
வந்தேன் சகித்திட;
அநேகாண்டாய் பட்டேன் பாடு!
ஓர் நாள் நீ தந்தாயா?

3. மகத்வ மாளிகை
உனக்காய் நான் விட்டேன்;
உலகின் வாதையை
உனக்காய் சகித்தேன்;
தந்தேனே நானென்னை!
நீ கொணர்ந்தாய் எதை?

4. உன் ஜீவன் தத்தஞ்செய்
உன் நேச மீட்பர்க்காய்;
பூலோக வாழ்வு பொய்!
ஜீவி நித்தியத்திற்காய்;
குப்பையாய் உன்னெல்லாம் தந்து
அவரைப் பின் செல்லு

## பாடல் 435: நான் என் சொந்தமல்ல

Not My Own - 514

(Tune 389 Of ESB)

1. நான் என் சொந்தமல்ல ஆனால்
வான் லோகக் கர்த்தன் சொந்தம்
கோனேசு இரட்சகரே! உம்
தேன் மொழி தூதை ஏற்றேன்

பல்லவி

எந்தன் சொந்தமல்லவே நான்
உந்தன் சொந்தம் இயேசுவே!
எந்தன் ஆஸ்தி ஆசை யாவும்;
உமதே எப்போதுமே

2. ஒப்புவித்தேன் யாவையுமே
இப்போதே என் கர்த்தனே;
நம்பி எந்தன் ஆத்துமத்தை
அம்பரா! அர்ப்பிக்கிறேன் - எந்தன்

3. எந்தன் காலம் தாலந்துகள்
எந்தன் பாதம் வைக்கிறேன்
மன்னன் நாம மகிமைக்காய்
என்றுமே சேவை செய்வேன் - எந்தன்

4. இயேசுவே நீர் என்னையுமே
நேசமாய் ஏற்றிடுமேன்;
பரத்திலவர் மகிமை
நரன் நானும் காணுவேன் - எந்தன்

*Daniel W. Whittle*

## பாடல் 436: இயேசு புகழ்ந்தார் இரண்டுகாசை

இராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

இயேசு புகழ்ந்தார் இரண்டுகாசை - போட்ட
எழும்பி காணிக்கையிட்டோர் இதயம் ஆராய்ந்து

அனுபல்லவி

இயேசு காணிக்கைப்பெட்டிக் கெதிரில் உட்கார்ந்து
எழும்பி காணிக்கையிட்டோர் இதயம் ஆராய்ந்து

சரணங்கள்

1. தனவான்கள் தமக்குள் சம்பத்தில் சிலதட்ட
கனவான்கள் பெரியோர்கள் கனபணங்களைக் கொட்ட
தனக்குள்ள யாவையும் சமூலமா யீந்திட்ட
மனப்பூர்வமான மனதினைக் கூர்ந்திட்ட - இயேசு

2. விசனம் கட்டாயமாய் விரைவதகல் முற்றும்
வசையுற ஒன்றையும் வழங்காதே நீ சற்றும்;
கபடற்ற ஆபேலின் தன்மையைப் பின்பற்றும்
பிசகுறா நண்பர்கள் பேரில் தயையுறும் - இயேசு

3. பொற் பரத்தில் தமக்குப் பொக்கிஷங்களைச் சேர்க்கும்
நற்குணருக்கு வெகு நன்மைகளை யளிக்கும்
கர்த்தருக் கிதயத்தைக் காணிக்கையாய் படைக்கும்
உற்சாகத்தோரிடம் பாசமாக வசிக்கும் - இயேசு

## பாடல் 437: வந்திடும் எம் கிருபாகரா

பல்லவி

வந்திடும் எம் கிருபாகரா ஏற்றிடும் எங்கள்
சொந்தக் காணிக்கைகளை; அன்பாய்

அனுபல்லவி

எங்கள் குறைகள் யாவும் நீர் இரங்கிப் பொறுத்தருள்வீர்
பங்கமில்லா எம் முயற்சி பலன் பெறத் தாரும் மாட்சி!

சரணங்கள்

1. கர்த்தனே எல்லா ஜனத்தையும் - காணிக்கை தர
உத்தமா நீ ஏவியே விட
இத்தருண மிங்கு கூடி இறைவா யுமையே வேண்டி
பக்தியோடெங்களையுமே படைத்து மன்றாடுகிறோம்

2. துட்டரெமை மீட்டவேயெம் - கர்த்தாவே நீரும்
இட்டமுடன் பாடுபட்டீரே
கிட்டியுந்தன் பாதம் வந்து கொடுக்கும் எம் காணிக்கையை
மட்டில்லாக் கிருபையுடன் மன்னா ஏற்றுக் கொள்ளுமையா

*K.S Abraham*

## பாடல் 438: என்ன காணிக்கை படைப்பேன்?

இராகம்: ஹரிகாம்போதி தாளம்: திஸ்ரசாப்பு

மெட்டு: எத்தனை நாவால் துதிப்பேன்

பல்லவி

என்ன காணிக்கை படைப்பேன்? - நான்
இம்மை மறுமைப் பரன் திரு நாமத்தில்

அனுபல்லவி

பண்ணினேன் பரிசுத்தப் பலியாகவென்னை
என்னுயிரைவிட யாதுண்டு வேறே

1. எல்லாஞ் சமூலமாய்த் தந்தேன் - இனி
எனக்கு நீரே போதுமென்றுமைக் கொண்டேன்
தள்ளாதுகாத்தருள் தமியேன் நான் வந்தேன்
தஞ்சமென்றும்மை நான் சார்ந்து பணிந்தேன் - என்ன

2. அழைத்திட்டீர் ஊழியம் செய்ய - திவ்ய
ஆவியின் பட்டயம் அணிந்து நான் வெல்ல
சிலுவையை எடுத்தென்றும் தூயா பின்செல்ல
தேவா துணை புரி சாட்சி நான் சொல்ல - என்ன

3. என்னில் தங்கி அரசாள்வீர் - எந்தன்
இருதயத்தில் மெய்ச் சந்தோஷத்தைத் தருவீர்
மன்னா வாசலைத் திறந்தேன் நீர் வாரீர்
மகத்துவமாக நீர் பிரகாச மீவீர் - என்ன

## பாடல் 439: ஏல ஏலோ ஏல ஏலோ, இயேசையா

இராகம்: சிந்து தாளம்: சாப்பு

பல்லவி

ஏல ஏலோ ஏல ஏலோ, இயேசையா
ஏல ஏலோ இயேசையா

சரணங்கள்

அறுத்து வந்தோம் நெற்பயிரை - இயேசையா
அழைத்து வந்தோம் சேனையாரை;
காலை முதல் மாலை வரை - இயேசையா
கடினமாக வேலை செய்தோம்
மாரியிலும் கோடையிலும் - இயேசையா
மட்டில்லாத வருத்தத்துடன்,
தேவன் தந்த நஞ்சை நிலத்தை,
சமமாக வெட்டி ஏர்களுமுழுது,
கல்லுகள் முள்ளுகள், பூண்டுகள் நீக்கி
இல்லாமல் ஒன்றேனும் பண்படுத்தினோம்,
வெள்ளமும் விட்டு விதையும் விதைத்து,
களையும் பறித்து நெற்பயிராக்கி,
நாலு பக்கமும் வேலியடைத்து,
நாற்கால் மிருகங்கள் வராதபடி,
காவலுங் காத்தோம் ஏழைகள் நாங்கள்
தானியம் முற்றி அறுத்துப் போர் செய்து
கர்த்தருக்குக் காணிக்கை கொண்டுவந்தோமே

## பாடல் 440: சேர்ந்தோமையா ஒற்றுமையாய்

பல்லவி

சேர்ந்தோமையா ஒற்றுமையாய் - இயேசையா
சேனையிலே வீரராக

சரணங்கள்

கட்டையன், நெட்டையன், காடைக்கழுத்தன்,
கருமிளகு, செம்மிளகு, காற்றாடிமுண்டன்;
கட்டுக்கருமின்னான், கருப்புக்காலி விரியன்;
கருங்குருவை, கல்லுண்டான், காடுதாவிகாரி,
தட்டார வெள்ளை, செம்பமார்த்தாண்டன்,
சடையாரி சிறுயீர்க்குச் சம்பா, சீரழகி,
சுட்டி விரியன், சித்திரைக்காலி,
சிறு சுண்டான், மணல்வாரி, சீரகச் சம்பா,
பொட்டல் விளையும் புழுதி புரட்டி,
புனுகு சம்பா, கடும்பாறை பிளப்பான்,
குட்டைக் குறுவை, குளக்குறுவை, தெர்ப்பை,
குற்றாலன் மைக்குறுவை குளவெள்ளை, குனிப்பான்
கட்டிச் சம்பா வெள்ளை கனகமத்து சம்பா
கல்லன்சம்பா, ஆனைக்கொம்பன், குறுவை,
வெட்டையில் முட்டி மொட்டைக் குறுவை,
வீரியடங்கான், வாசிறமிண்டான்;
குட்டநாடுமயில், குலமறியன்சார,
கோடனாரியன் முட்டகன் செந்நெல்,
கட்டி வெள்ளைப் பூதகாளி கருப்பன்,
காடன், வயல் தூவ கண்ணன் ஞாவுரா,
திட்டமுடன் அரிக்கிராவி, முதலான நெல்லுகள்
தென்னிந்தியாவெங்கும் சீராய் விளைந்து
பட்சமுடன் இரட்சணிய சேனையார் வந்து
கூடவும், பாடவும், தேவனைப் போற்றவும் - சேர்

## பாடல் 441: இரட்சணிய சேனை வீரரே

பல்லவி

இரட்சணிய சேனை வீரரே நாம்
எல்லோரும் கூடுவோம்!

அனுபல்லவி

பட்சமுடன் தேவன் தமக்குச் செய்த
நன்மையைக் கொண்டாட

சரணங்கள்

1. பட்சிகள், விலங்கு, ஊர்வன ஜீவன்கள்
பசியாறிப் பிழைக்க,
பசுமையாகப் புற்பூண்டு விருட்சங்கள்,
பார் தழைத் தோங்கியதே - இரட்சணிய

2. விதைத்த விதைகள் முளைக்க மழையை
மிதமாக பொழிந்து,
விந்தையாகப் பயிர் ஏற்ற காலத்தில்
விளையச் செய்தாரே - இரட்சணிய

3. ஒற்றைத் தானியம் ஓங்கி வளர்ந்து,
ஒன்பது நூறாக
வர்த்தனை யாக்கியன வல்லமைத் தேவனை
வாழ்த்திப் புகழ்ந்திடுவோம் - இரட்சணிய

4. அழுகையோடு நாம் நிலத்தை விதைத்து
அநேக நாள் உழைத்து
அறுத்துப் போர்தனை அடித்துப் புசித்து
ஆனந்தம் கொண்டோமே - இரட்சணிய

5. தானியம் பண்டகசாலையிற் சேரும்
தகைமையைப் போல
வானவரறுப்பில் மாளிகை சேரும்
மணிகள் போலிருப்போம் - இரட்சணிய

## பாடல் 442: அன்பின் விதைகளை

Snowing in the morning - ESB - 930

(Tune 624 Of ESB)

1. அன்பின் விதைகளை அந்தி சந்தி வேளை
விதைப்போம் எப்போதும் ஓய்வில்லாமலே;
அறுப்பின் நற்காலம் எதிர்நோக்குவோமே,
சேர்வோம் மகிழ்ச்சியாய் அரிக்கட்டோடே

பல்லவி

அரிக்கட்டோடே அரிக்கட்டோடே
சேர்வோம் மகிழ்ச்சியாய் அரிக்கட்டோடே

2. வெயில் நிழலிலும் விதைப்போமே நாமும்
குளிர் பனி கூதல் பயப்படாமல்
வேலையும் முடிந்து நல்ல பலன் காண்போம்,
சேர்வோம் மகிழ்ச்சியாய் அரிக்கட்டோடே - அரிக்கட்டோடே

3. கவலைகள் கண்ணீர் கஷ்ட நஷ்டமேனும்
தைரியமாய் விதைப்போம் இயேசுவுக்காக;
கண்ணீர் ஓய்ந்த பின்னர் கர்த்தர் நம்மைச் சேர்ப்பார்
சேர்வோம் மகிழ்ச்சியாய் அரிக்கட்டோடே - அரிக்கட்டோடே

*Knowles Shaw*

## பாடல் 443: நித்தியானந்த ஜீவ ஊற்றே!

Tune - And above the rest

1. நித்தியானந்த ஜீவ ஊற்றே!
உந்தன் துதியைப் பாடுவோம்
இவ்வருடப் பிறப்பிலே
இவ் வல்லேலூயா சத்தமே!

பல்லவி

பாடுவேன் நான் இக்கீதத்தை
இக்கீதத்தை இக்கீதத்தை,
பாடுவேன் நான் இக்கீதத்தை
இயேசு செய்வதெல்லாம் நன்மை!

2. சென்ற நாள் நீர் எம் பதவி
இக்கட்டுத் தீங்கில் உதவி
நாம் பெற்ற எல்லா நன்மைக்கே
அடியார் உள்ளம் பாடுதே! - பாடுவேன்

3. யுத்தத்தில் நீரே முன் சென்று
ஜெயித்தீர் எம்மண்டை நின்று;
நன்றியறிதலுடனே,
என் உள்ளம் உம்மைப் போற்றுதே! - பாடுவேன்

4. இப்போ நின் பாதம் பணிந்து
நான் நவ பலியாய்த் தந்து;
வருங்கால யுத்தத்திலே
அருள் தா, கீதம் பாடவே! - பாடுவேன்

## பாடல் 444: ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!

"அற்புதம் பாவி நான்" என்ற மெட்டு தாளம்: ஆதி

பல்லவி

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!
துதிமிகு தேவா ஸ்தோத்திரமே!

அனுபல்லவி

நேத்திரம்போல் கடந்தாண்டிலெமை
காத்தீர் கருணையால் நிதம் உண்மை! - ஸ்தோத்திரம்

சரணங்கள்

1. எத்தனை ஆபத்து சோதனைகள்
எமக்கு நேரிட்ட பல இடர்கள்
அத்தனையும் எமை அணுகாமல்
ஆதரித்தீர் பிழை நினையாமல்! - ஸ்தோத்திரம்

2. ஆனந்தத்துடன் புது வருடம்
ஆரம்பித்தோம் ஆவலுடன்
நானிலம் புரக்க அவதரித்த
நாதனைப் புகழ்வோம் நன்றியுடன் - ஸ்தோத்திரம்

3. இப்புது ஆண்டினில் அடியார்க்கு
இகபர நன்மைகள் அனுக்கிரகித்து;
அப்பனே கிருபையின் செட்டையினுள்
அற்புதமா யணைத் தாதரிப்பாய் - ஸ்தோத்திரம்

4. வெற்றியாய் யுத்தத்தில் முன்செல்ல
வெகுவாய் ஆத்ம ஜெயங்கள் கொள்ள;
பற்றியே நடந்துனின் பாதை செல்ல
பகருவாய் உன்னத வரங்கள் செல்ல - ஸ்தோத்திரம்

5. தேசங்கள் வாழியே தீமையற
தேவனைத் தேடியே தோஷமற,
ஓசன்னா பாடவே ஓகையுற
உய்யவே அருள்வாய் ஊழியற - ஸ்தோத்திரம்

## பாடல் 445: சரணம் சருவேசா!

பல்லவி

சரணம் சருவேசா! தயை கூரும் அதிநேசா!

அனுபல்லவி

கருணை புரிந்தாள் இப்புது வருடமே முழுவதும்
கடையற

1. இன்றளவில் காத்தாய் வெகு இரக்கமுறப் பார்த்தாய்
நன்மை மிகவே தந்தாய் நவ வருடமிது ஈந்தாய் - சரணம்

2. எத்தனை துன்பங்கள் வந்ததனைத்தையும் அணுகா,
சித்தம் வைத்துக் காத்த தேவா திருவடி சரணம் - சரணம்

3. இந்த ஆண்டில் இடர்க்கு எம்மை என்றும் தப்புவிப்பாய்
உந்தனாளுகை நீங்கா தெந்தனை யாண்டிடும் அன்பாய் - சரணம்

4. பாவஞ் சிதைந் தொழிய எங்கும் சாப மகன்றழிய
தேவ கோபம் தீர்த்திட துன்னிய கொள்ளை நோய் நைந்திட - சரணம்

5. தீய சாத்தான் சோதனையில் சிக்கி சீர்கெடாமல்
தூய ஆவியால் புதிய ஜீவியஞ் செய்யவே துணைபுரி - சரணம்

6. இந்த வருடம் செழிக்க எவரும் உனில் களிக்க
தந்தோம் அடியோர் துதிமிக தயவுடனாசீர்வதித்திடும் - சரணம்

## பாடல் 446: தேவ தேவா! திரியேக தேவா!

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

தேவ தேவா! திரியேக தேவா!
தோத்திரம் துதி யுமக்கு ஏற்றிடும் யோவா!

சரணங்கள்

1. ஆவலாக எதிர் பார்த்த அடியார்
ஆசியுறவே இந்நவ ஆண்டையளித்த - தேவ

2. சென்ற ஆண்டினில் வந்த சோதனைகளில்
நின்று காத்தருள் புரிந்த நன்றியுணர்ந்து - தேவ

3. பஞ்சம் படைக்கும் பல கொள்ளை நோய்க்கும்
சஞ்சலங்களின்றி சமாதானமாய்க் காத்த - தேவ

4. இந்த ஆண்டினில் வரும் இடர் யாவுக்கும்
எந்தையே எமக்கிரங்கி என்றும் ஆண்டிடும் - தேவ

5. பாவி மீளவே பிசாசு மாளவே
பாரி லேசு நாம மெங்கும் பரம்பி வாழவே - தேவ

## பாடல் 447: ஜீவிக்கிறோம் இன்னும்

O! God our help ESB -13

(Tune 127 Of ESB)

"சலாம் தோழர் சலாம்" மெட்டு

1. ஜீவிக்கிறோம் இன்னும்
   தம்மில் தம்மில் காண;
   நம்மை மீட்ட கிருபைக்காக
   புகழ் இயேசுவுக்கே

2. பூர்ண இரட்சை ஈந்து
   காத்தார் தம் பலத்தால்;
   கர்த்தர் இயேசுவின் சந்நிதி;
   நின்று துதிப்போம்

3. கடந்தோம் துயர் பல
   ஜெயித்தோம் போர் பல;
   கடந்த ஆண்டின் இடர் யாவும்
   தீர்த்திங்கு சேர்த்திட்டார்

## பாடல் 448: கர்த்தாவே அடியார்க் கென்றும்

O! God our help ESB -13

(Tune 127 Of ESB)

1. கர்த்தாவே அடியார்க் கென்றும்
அடைக்கலம் நீரே;
புசலில் எம் புகலிடம்
நித்ய வீடும் நீரே

2. சிம்மாசன நிழலின் கீழ்
தம் தாசர் வசிப்பார்;
உம் கரம் போதுமானதே
எம் காவல் நிச்சயம்

3. பர்வதங்கள் தோன்றி பூமி
உருவாகு முன்னும்
அநாதியான தேவரீர்
மாறாதிருப்பீரே

4. ஆயிரம் ஆண்டு உமது
அநாதி பார்வைக்கு
நேற்றுக் கழிந்த நாள் போலும்
இராச்சாமம் போலுமாம்

5. காலம் வெள்ளம்போல் மாந்தரை
வாரிக் கொண்டோடுது,
மறந்துபோம் சொப்பனம்போல்
மறைகிறார் மாந்தர்

6. கர்த்தாவே அடியார்க்கென்றும்
அடைக்கலம் நீரே
இம்மையில் நீர் என் காவலர்
நித்திய வீடும் நீரே

## பாடல் 449: இராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்

While shepherds watched their flocks by night - ESB - 93

(Tune - 144 of ESB)

1. இராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
தம் மந்தைக்காத்தனர்;
கர்த்தாவின் தூதன் இறங்க
விண் ஜோதி கண்டனர்

2. அவர்கள் அச்சம் கொள்ளவும்
விண் தூதன் "திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற் செய்தி கூறுவேன்"

3. "தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்;
பூலோகத்தாருக்கு இரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்"

4. "இதுங்கள் அடையாளமாம்
முன்னணை மீது நீர்;
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்"

5. என்றுரைத்தான்; அட்சணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்

6. மா உன்னதத்தில் தேவனே,
நீர் மேன்மை அடைவீர்;
பூமியில் சமாதானமும்
எல்லோர்க்கும் ஈகுவீர்

*Nahum Tate*

## பாடல் 450: விசுவாசிகளே!

Oh! Come all ye faithful - ESB - 85

(Tune - 552 of ESB)

1. விசுவாசிகளே!
ஜெயக் கெம்பீரரே!
வாருமிதோ பெத்லகேமுக்கு;
மேலோக ராஜன்
பிறந்தார் பாருங்கள்!
வாரும் தொழுவோம், கர்த்தன் - கிறிஸ்துவை

2. கூடிப் பாடிடுங்கள்
பாடி மகிழுங்கள்
வான லோகத்தின் வாசிகளே!
உன்னதனுக்கு
மகிமை பாடுங்கள்;
வாரும் தொழுவோம், கர்த்தன் - கிறிஸ்துவை

3. ஆம் எங்கள் நாதனே!
இன்றுதித்த  பாலனே!
இயேசுவே! உமக்கு மகிமை
தேவனின் வாக்கு
தோன்றிற்று மாம்சத்தில்;
வாரும் தொழுவோம், கர்த்தன் - கிறிஸ்துவை

*Trs. Frederick Oakeley*

## பாடல் 451: ராஜன் தாவீதூரிலுள்ள

### Once, in royal David's city - ESB - 87

(Tune 460 Of ESB)

1. ராஜன் தாவீதூரிலுள்ள
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே,
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே;
மாதா மரியம்மாள் தான்,
பாலன் இயேசுகிறிஸ்து தான்

2. வானம் விட்டுப் பூமி வந்தார்
மகா தேவ தேவனே,
அவர் வீடோ மாட்டுக் கொட்டில்
தொட்டிலோ முன்னணையே;
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்

3. ஏழையான மாதாவுக்கு
பாலனாய்க் கீழ்ப்படிந்தார்
பால்ய காலம் எல்லாம் அன்பாய்
பெற்றோர்க்கு அடங்கினார்;
அவர்போல் கீழ்ப்படிவோம்
சாந்தத்தோடு நடப்போம்

4. பாலர்க் கேற்ற பாதை காட்ட
பாலனாக வளர்ந்தார்,
பலவீன மாந்தன் போல
துன்பம் துக்கம் சகித்தார்;
இன்ப துன்ப நாளிலும்
துணை செய்வார் நமக்கும்

5. நம்மை மீட்ட நேசர் தம்மை
கண்ணால் கண்டு களிப்போம்
அவர் தாமே மோட்ச லோக
நாதர் என்று அறிவோம்;
பாலரை அன்பாகவே
நம்மிடத்தில் சேர்ப்பாரே.

*Cecil Francis Alexander*

## பாடல் 452: கேள்! ஜென்மித்த ராயர்க்கே

Hark! The herald angels sing - ESB – 82 (Tune: 322 of ESB)

1. கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே;
அவர் பாவ நாசகர்,
சமாதான காரணர்;
மண்ணோர் யாரும் எழுந்து
விண்ணோர் போல் கெம்பீரித்து;
பெத்லேகேமில் கூடுங்கள்
ஜென்ம செய்தி கூறுங்கள்
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே!

2. வானோர் போற்றும் க்றிஸ்துவே!
லோகம் ஆளும் நாதரே;
ஏற்ற காலம் தோன்றினீர்
கன்னியிடம் பிறந்தீர்;
வாழ்க நல் தேவனே!
அருள் அவதாரமே
நீர் இம்மானுவேல் அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தராய்
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே!

3. வாழ்க சாந்த பிரபுவே!
வாழ்க நீதி சூரியனே,
மீட்பராக வந்தவர்,
ஒளி ஜீவன் தந்தவர்,
மகிமையை வெறுத்து,
ஏழைக்கோலம் எடுத்து,
சாவை வெல்லப் பிறந்தீர்
மறுஜென்மம் அளித்தீர்,
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே!

*Charles Wesley*

## பாடல் 453: தேவன் மனிதனாய் ஆகினார்

Tune: 321 of ESB

சரணங்கள்

1. தேவன் மனிதனாய் ஆகினார்
தீயோர் பிணையாய் பூ மேவினார்;
தேவலோகம் களிகூருதே
தேவ குமாரனைப் போற்றுதே

பல்லவி

போற்றுவோம் போற்றுவோம்
புண்ணிய நாதன் இயேசுவையே

2. காலம் நிறைவேறினபோது
கன்னி கற்பத்தி லுற்பவித்து;
தாலம் புரக்கப் பெத்லகேமில்
இயேசு பிறந்தார் சந்தோஷமே - போற்றுவோம்

3. கூளிச் சிரசை நசுக்கவும்
கூறிய சாப மளிக்கவும்
வேதியர் மா மறை ஓதினார்,
வேதனும் பாலகனாயினார் - போற்றுவோம்

4. மேய்ப்பர்க்கு நற்செய்தி கிட்டுது,
மேலோக சேனைகள் பாடுது;
மாட்டிடை மன்னன் துயில்கிறார்
வானோர் வியந்துற்றுப் பார்க்கிறார் - போற்றுவோம்

5. ஞானிகள் மாளிகை தேடினார்,
நாதன் ஆவின் குடில் நாடினார்;
ஆயர் புல்லணை தரிசித்தார்,
ஆனந்தித்துப் பிரஸ்தாபித்தார் - போற்றுவோம்

## பாடல் 454: ஆர் இவர் ஆராரோ

இராகம்: காம்பேறி தாளம்: ஆதி

பல்லவி

ஆர் இவர் ஆராரோ - இந்த - அவனியோர் மாதிடமே
ஆனடை குடிலிடை மோனமா யுதித்த இவ்வற்புத பாலகனார்

சரணங்கள்

1. மேசியா இவர்தானோ? நம்மை மேய்த்திடும் நரர் கோனோ?
ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் அதி அன்புள்ள
மனசானோர் - ஆர்

2. பட்டத்து துரைமகனோ நம்மைப் பண்புடன் ஆள்பவனோ?
கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக் காட்டிடுந்
தாயகனோ? - ஆர்

3. ஜீவனின் அப்பமோதான் தாகம் தீர்த்திடும் பானமோ தான்?
ஆவலாய் ஏழைகள் அடைந்திடும் அடைக்கலமானவர்
இவர்தானோ? - ஆர்

*V. மாசிலாமணி*

## பாடல் 455: மன்னுயிரை மீட்கப் புவி

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

சரணங்கள்

1. மன்னுயிரை மீட்கப் புவி தன்னிலெழ உன்னியநல்
புண்ணிய பரன் செயலை என்னென்று புகழ்ந்திடுவேன்

2. வானாதி வானங்கொள்ளா மகிமைப் பராபரனார்
மாது மரிவயிற்றினில் மனுவுருவானதென்ன?

3. சராசரம் படைத்த சர்வ வல்ல தேவனுக்கு
தங்குதற்கு இடமில்லையோ? தாபரிக்க வீடில்லையோ?

4. சேனைத் தூதர்கள் கூட சிறப்புடன் கவிபாட
கானகக் கோனார் தேட கர்த்தரானாரோ நீட?

5. தூய படைகள் கோடி சூழ்ந்திலங்கும் பரனே
பாயும் மாடுகளாமோ பக்கத்துணையாவது?

6 . கர்த்தத்துவங்கள் தாங்கும் காருண்ய பாக்கியமே
சுற்றி வைக்கப் பழந்துணியோ! தூங்கிடவும் புல்லணையோ?

7. பண்டு தீர்க்கர்கள் முந்து பகர்ந்தபடியே வந்து
சொந்தஜனம் இஸ்ரவேலின் சூரியனானீரோ?

8. சீனாய்மலை தனிலே ஜொலித்த மகிமை எங்கே?
தானே மாமிசத்துள்ளே தங்கிட மறைந்தீரோ?

9. ஏதேன் வனக் காவினில் எட்டிப் பறித்த பழத்
தீதுவினைகள் தீர ஸ்திரீயின் வித்தானீரோ?

10. பாவியான என்மேலே பட்சம் வைத்தாதரித்து
ஜீவனைக்கொடுக்க இந்தச் சேணுலகம் பிறந்தீரோ?

*A.V. ஆபேல்*

## பாடல் 456: ஆரிவராரோ? இயேசு ஆரிவராரோ?

இராகம்: குறிஞ்சி தாளம்: ஏகம்

பல்லவி

ஆரிவராரோ? இயேசு ஆரிவராரோ?

சரணங்கள்

1. மாட்டகத்தில் பிறந்தவரோ?
மந்தை ஆயர் பணிந்தவரோ!
நாட்டுக்கு நன்மை வர
நாதனா யுதித்தவரோ? - ஆரிவராரோ

2. தீர்க்கத்தரிசிகள் முன்
திடனாயுரைத்தவரோ?
ஆர்க்கும் உரிமையுள்ள
அன்பான தங்கமிவர்! - ஆரிவராரோ

3. வானத்தின் நட்சத்திரம்
வழி நடத்தும் சாஸ்திரிகள்
தானாயெழுந்து வந்து
தாழ் பணிந்த கிறிஸ்திவரோ? - ஆரிவராரோ

4. அலகைத் தலை நசுக்க
அவனிதனில் வந்தவரோ!
உலகை உயிர் கொடுத்து
உன்னதத்துக் கிழுத்தவரோ! - ஆரிவராரோ

*A.V. ஆபேல்*

## பாடல் 457: உதித்ததே பாராய்

இராகம்: தனப்பிரியா தாளம்: ரூபகம்

பல்லவி

உதித்ததே பாராய் - வெளிச்சந்தான்
உலகத்தின் ஒளியாய்

அனுபல்லவி

உதித்ததே உலகினி லோப்பற்ற பேரொளி,
அதிசயப் பிரபையை அற்புதமாய் வீசி

சரணங்கள்

1. இதயத்தி லிருண்டு - குளிர் மிகக்
கதித்துமே மருண்டு,
மதிகெட்டு வழி விட்டு மருளுக்குள்ளகப்பட்டு
கதியற்ற பாவிகட்குக் கதிர்விட்டு சுடர் விட்டு - உதித்ததே

2. பரனடி மறந்து - தமக்குள்
உரிமையைத் துறந்து,
மரண இருளில் மயங்கித் திரிவோர்க்கு
அருணோதயம் போலனாதிச் சுடரொளி - உதித்ததே

3. திரிவினை தீர - இயேசையன்
திருப் பாலனாக
மருள கன்றிருள் மாய மன்னன் தாவீ திறை
வரிசையின் வேர், விடிவெள்ளி நட்சத்திரம் - உதித்ததே

4. அகம் பிணி யுடைய ஆத்துமாக்க
ளாரோக்ய மடைய
தகனிக்கு மக்கினி தகதக வென்று தன்
ததியோடு கதிர் வீசியே நீதிச் சூரியன் - உதித்ததே

5. வெளிச்சத்தில் நடப்பா ரிடறியே,
விழுந்துமே போகார்!
வளரும் பக்தி, விசுவாசம், பரிசுத்தம்,
அளவற்ற கிறிஸ்தேசு அண்ணலா மாதித்தன் - உதித்ததே

## பாடல் 458: தேவத் திருச்சுதன் இயேசு உதித்தார்

இராகம்: குறிஞ்சி

பல்லவி

தேவத் திருச்சுதன் இயேசு உதித்தார்,
சாப சர்ப்பந் தலை சாக மிதித்தார்

சரணங்கள்

1. பேய்த் திரளோடே, வாய்த்திரள் பாட,
பெத்லகேம் என்னும் பெரும்பதி நாட - தேவ

2. தூயர் கொண்டாட, ஆயர்கள் தேட,
தீயன் ஏரோது மனம் மிக வாட - தேவ

3. தின்மைகள் மாற நன்மைகள் ஏற
தொன்மறை வாக்கியமே நிறைவேற - தேவ

4. பாவம் இரத்தாம்பரம் போற் சிவப்பாயினும்
பாலிலும் வெண்மையாக்குவதற்காய் - தேவ

5. இரட்சண்யக் கொடிகள் எங்கெங்கும் பறக்க
இரட்சகர் இராட்சியமெங்கெங்கும்  சிறக்க - தேவ

6. வானவர் புகழ ஈனர்கள் இகழ
மகிலத் தடியவர் அகம் மிக மகிழ - தேவ

## பாடல் 459: அழகிற் சிறந்த கோமானை

இராகம்: நவரோஜி  தாளம்: ஆதி

1. அழகிற் சிறந்த கோமானை நானெப்போ காண்பேனோ?
பழவினை தீர்த்த புண்ணியனைக் கண்டெப்போ மகிழ்வேனோ?

2. பூதலத்தில் நான் வேறொருவரை இப்படிக் கண்டிலேனே;
ஓதவுமறியேன் உன்னத அன்பை ஓயாத்துதி செய்வேன் - அழகிற்

3. இப்படிக்கொத்த பூரணனை இப்பூமியில் கண்டதுண்டோ?
செப்பிடப் பாதம் பொன் மயமாமே ஜோதி வடிவாமே - அழகிற்

4. சுரரும், நரரும், போற்றுதற்குரிய சுந்தரநாயகனாம்;
வரமளித்தே தம் பக்தரைக் காக்கும் வல்ல பரண் சுதனாம் - அழகிற்

5. ஆசைக்கிசைந்த நேசரின் நாமம் இயேசுகிறிஸ்தென்பதாம்;
காசினியெங்கும் கேட்டறியாத கர்த்தன் திருப்பேராம் - அழகிற்

*K.S. Abraham*

## பாடல் 460: அகமகிழ்ந்தடி பணிவோமே நாம்

இராகம்: தால்லி தாளம்: ஆதி

பல்லவி

அகமகிழ்ந்தடி பணிவோமே நாம்
தேவ பாலனை

அனுபல்லவி

தாவீதின் ஊரதில் ஜோதியாய் உதித்த - எம்
மேசியா இயேசுவைப் போற்றி

சரணங்கள்

1. ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தம் பாடி
ஆர்ப்பரிப்போமின்று கூடி,
தீன பந்தா மெம் திவ்விய னேசுவை
தினமதில் துதிப்போம் கொண்டாடி - அக

2. தேவதிருச் சுதன் இயேசு நமக்காய்
ஈன வுருவ மெடுத்தார்
ஏவையின் பாவ வேரையறுத் தெமக்
கினிய இரட்சையுமளித்தார் - அக

3. பூவுலகோருக்குப் புண்ணியனிவரே!
மேலுலகோருக்கும் கோனே!
பாவிகள் மோட்சப் பதவியடைந்திட
தாவியிப் புவியில் வந்தாரே - அக

*P. நல்லதம்பி*

## பாடல் 461: நண்பரே நாம் ஒன்று கூடுவோம்

இராகம்: கல்யாணி தாளம்: ரூபகம்

பல்லவி

நண்பரே நாம் ஒன்று கூடுவோம்
பண்புற நாம் நன்று பாடுவோம்
நண்ணரும் நம் மறை நாதனார்
மண்ணில் நர உருவானதால்

1. மந்தையில் மேய்ப்பர்கள் தூதனால்
விந்தையான மொழி கேட்டதால்
சிந்தை மகிழ்ந்து அந்நேரமே
கந்தை பொதிந்தோனைக் காணவே - நண்பரே

2. வெய்யோன் வருமிட வான்மீனோ?
துய்யோன் தருதுட இசை தானோ?
மெய்யன் திருமிட ஆற்றலோ?
அய்யன் பதமிட போற்றலோ? - நண்பரே

3. கர்த்தத்துவம் நிறை பாலனே!
கங்குல் பகல் காக்கும் சீலனே!
எங்கும் உனதொளி வேதனே!
தங்கும் படியருள் போதனே! - நண்பரே

4. அந்தரமானோர் புகழ் தேவே!
சுந்தரமானோர் மகிழ் கோவே!
தந்திரப் பாந்தத் தலைமேலே
வந்தீரோ மிதிக்கக் காலாலே - நண்பரே

*Y. தேவசுந்தரம்*

## பாடல் 462: ஏகப்பரம ஒளி

இராகம்: பைரவி தாளம்: ரூபகம்

'இயேசுவே செங்கரும்பே' என்ற மெட்டு

பல்லவி

ஏகப்பரம ஒளி - எனும் பாலகனாய்த்
தேவன் பாரினில் பிறந்தார்

அனுபல்லவி

நீச மகாஜன பாவப்பரிகார
நேச மனோகரனான மரிசுதன்

சரணங்கள்

1. பார்தனில் தாவிய பாவந் தொலைக்கவே
பூர்வத்திலே பிதா நேமப்படி தீர்க்கர்
ஓர் அற்புதன் எழும்பிடுவா ரென
சீர் பெறவோதிய செய்தி விளங்கிட - ஏக

2. ஆயர்கள் இராக்காலம் ஆட்டு மந்தை காக்க
அந்தரத்தில் தேவதூதர் மொழி கேட்க
தேவலோகம் களிகூர்ந்து பாடல் பாட
தேவன் பெத்லேம் ஆவின் கூடத்தேழையாக - ஏக

3. விண்ணினில் ஜோதிகள் எண்ணிலா சேனைகள்
மண்ணினில் ஜாதி உயிர்த்திரள் போற்றிட
கண்ணினில் கண்ணொளியாகும் குமாரனாய்
அண்ணலாம் இயேசு அருணோதயமான - ஏக

4. அந்தரத்தில் தேவசுந்தர பாலகன்
எந்தவுலகுக்கும் ஏற்ற நல் இரட்சகன்
வந்தவதரித்த வானவராம் நேசன்
சொந்தம் நம்மோடினின்றும் என்றும் சகவாசன் - ஏக

## பாடல் 463: பரலோக தூதர்களே!

Angels from the realms of Glory - 75

(Tune 693, 413 Of ESB)

1. பரலோக தூதர்களே!
சிருஷ்டிப்பில் பாடினீர்
மேசியாவின் ஜென்மம் கூறும்
பறந்து உலகெல்லாம்
வாரும் தொழும் (2)
தொழும் கிறிஸ்து ராஜனை!

2. மந்தை காக்கும் மேய்ப்பர்களே!
மாந்தனானாரே தேவன்,
பாலனேசு வெளிச்சமாய்
பாரில் பிரகாசிக்கிறார்
வாரும் தொழும் (2)
தொழும் கிறிஸ்து ராஜனை!

3. நம்பிக்கை பயத்துடனே,
பணியும் சுத்தர்களே!
சடுதியாய் கர்த்தர் தோன்றி
காட்சியளித்திடுவார்
வாரும் தொழும் (2)
தொழும் கிறிஸ்து ராஜனை!

4. நித்ய ஆக்கினைக்காளான
துக்கமுறும் பாவிகாள்!
நீதி சாபம் மாற்றிடுது,
க்ருபை பாவம் போக்குது
வாரும் தொழும் (2)
தொழும் கிறிஸ்து ராஜனை!

*James Montgomery*

## பாடல் 464: களிப்புடன் சாஸ்திரிகள்

As with Gladness - ESB - 76 (Tune 306 of ESB)

1. களிப்புடன் சாஸ்திரிகள்,
மின் வெள்ளியை கண்டனர்;
அதன் ஒளி வழியாய்
பின்சென்றா ரானந்தமாய்
அதைப் போல கர்த்தரே,
எங்களை நடத்துமே

2. வானம் புவி வணங்கும்,
நாதரை பணியவும்;
தாழ்ந்த முன்னணையண்டை
வந்தனர் சந்தோஷமாய்;
அதைப் போல நாங்களும்
உம்மைத் தேட செய்திடும்

3. தாழ்ந்த முன்னணியிலே
தங்கள் காணிக்கைகளை;
படைத்தார்கள் முற்றுமாய்;
பாவமற்ற பொக்கிஷம்;
வான ராஜா கிறிஸ்துவே
உமக்கே படைக்கிறோம்

4. தூய இயேசுவே நீரே,
குறுகிய வழியில்;
எங்களை நடத்திடும்
நாங்கள் மோட்சம் சேரவும்;
உமது மகிமையை,
காணச் செய்யும் என்றுமே

5. ஜோதியான நாட்டுக்கே
வேறோர் ஒளி வேண்டாமே;
நீரே அதன் ஒளியும்,
அதன் கிரீடம் களிப்பும்;
அங்கே நம் ராஜனுக்கே
அல்லேலூயா பாடுவோம்

## பாடல் 465: ஓ! சிறு நகர் பெத்லகேம்

O! Little Town of Bethlehem - ESB - 86 (Tune 146, 149, 156 of ESB)

1. ஓ! சிறு நகர் பெத்லகேம்
உன் அமைதி என்னே!
ஆழ்ந்து நித்திரை நீ செய்கையில்
விண்மீன்கள் மறையும்;
நின் இருண்ட வீதிகளில்
நித்திய ஒளி வீசும்;
பல்லாண்டின் பயம் நம்பிக்கை,
பூர்த்தி நின்னிலின்று

2. ஓ! காலை வெள்ளிகள் கூறீர்
விசுத்த ஜென்மத்தை;
துதிகள் பாடீர் தேவர்க்கே;
பாரில் சமாதானம்!
மரியாளிடம் பிறந்தார்
கிறிஸ்து இரட்சகர்!
மக்களுறங்க தூதர்கள்
தேவன்பை வியந்தார்

3. இவ்வற்புத ஈவை யீந்தார்
அமைதியாகவே!
தேவன் மனிதருள்ளத்தில்
வானாசி பகர்ந்தார்
அவர் வருகை அறியார்
சாந்த மற்றோர் யாரும்;
பணி வுள்ளோரிடம் கிறிஸ்து
வந்து வசிப்பாரே!

4. ஓ! பெத்லகேமின் பாலனே!
இறங்கும் எம்மண்டை,
பாவம் போக்கி எம்மில் வந்து,
ஜென்மித்திடும் இன்றே;
தூதர் இம்மா நற்செய்தியை,
கூறயாம் கேட்கிறோம்;
ஓ! எம்மிடம் தங்க வாரும்
கர்த்தா, இம்மானுவேல்!

## பாடல் 466: பாலன் ஜெனனமானார்

('பூலோக ஜாதனாயி' என்ற மலையாள மெட்டு)

இராகம்: இந்துமந்தாரி தாளம்: ஆதி

பல்லவி

பாலன் ஜெனனமானார் பெத்லகேம் என்னும் ஊரிலே
ஆச்சர்ய தெய்வ ஜெனனம்! அனைவரும் போற்றும் ஜெனனம்!

சரணங்கள்

1. கன்னி மேரி மடியினில் கன்னம் குழியச் சிரிக்கிறார்
சின்ன இயேசு தம்பிரான்!
சின்னப்பாலர் யாவருமே சீராய் நேராய் நடத்துமே
மன்னன் இயேசுவைத் தொழுது மகிழ வாரீர்! - பாலன்

2. வானில் பாடல் தொனிக்குது; வீணை கானம் இசையுது
வையகம் முழங்குது!
சின்னப்பாலர் யாவருமே சீராய் நேராய் நடத்துமே
மன்னன் இயேசுவைத் தொழுது மகிழ வாரீர்! - பாலன்

3. உன்னதத்தில் மகிமையே! பூமியில் சமாதானமே!
மனுஷர் மேலே பிரியமே!
சின்னப்பாலர் யாவருமே சீராய் நேராய் நடத்துமே
மன்னன் இயேசுவைத் தொழுது மகிழ வாரீர்! - பாலன்

4. மேய்ப்பர் பாடல் கேட்கிறார்; முன்னணையைக் கிட்டுறார்
உண்மை செய்தி அறிகிறார்!
சின்னப்பாலர் யாவருமே சீராய் நேராய் நடத்துமே
மன்னன் இயேசுவைத் தொழுது மகிழ வாரீர்! - பாலன்

5. கிழக்கு ராஜநட்சத்திரம் கணித்துப்பார்த்த சாஸ்திரிகள்
துணிந்து வந்து பணிகிறார்!
சின்னப்பாலர் யாவருமே சீராய் நேராய் நடத்துமே
மன்னன் இயேசுவைத் தொழுது மகிழ வாரீர்! - பாலன்

6. செய்தி விரைவில் பரவுது! சர்வலோகம் வியக்குது!
சத்தியம்! இது சத்தியம்!!!
சின்னப்பாலர் யாவருமே சீராய் நேராய் நடத்துமே
மன்னன் இயேசுவைத் தொழுது மகிழ வாரீர்! - பாலன்

7. இயேசுநாதர் பிறப்பினால் பிசாசின் சிரசு நசுங்கவே
மோட்ச வாசல் திறந்தது!
சின்னப்பாலர் யாவருமே சீராய் நேராய் நடத்துமே
மன்னன் இயேசுவைத் தொழுது மகிழ வாரீர்! - பாலன்

*Suviseshamuthu A. Paul*

## பாடல் 467: மெய் பக்தரே நீர் விழித்தெழும்பும்

Christians awake, Salute the happy morn - ESB - 78

1. மெய் பக்தரே நீர் விழித்தெழும்பும்
சந்தோஷமாய் இந்நாளை வாழ்த்திடும்
இன்றைக்கு லோக மீட்பர் ஜென்மித்தார்
விண்ணோர் இவ்விந்தையைக் காட்டினார்
கர்த்தாதி கர்த்தர் மானிடனானார்
இரட்சண்யக் கர்த்தாவாகத் தோன்றினார்

2. இதோ! நற்செய்தி கேளும் இன்றைக்கே
இம்மானுவேல் தாவீதின் ஊரிலே
பூலோக மீட்பராகப் பிறந்தார்
எல்லோருக்கும் சந்தோஷம் நல்குவார்
என்றே ஓர் தூதன் பெத்லேம் மேய்ப்பர்க்கே
இராவில் தோன்றி மொழிந்திட்டானே

3. அந்நேரம் வானோர் கூட்டம் மகிழ்ந்து
ஆனந்தப் பாட்டைப் பாடி இசைந்து
விண்ணில் கர்த்தாவுக்கு மா துதியும்
மண்ணில் நல்லோர்க்கு சமாதானமும்
என்றல்லேலூயா பாடி வாழ்த்தினார்
தெய்வீக அன்பின் மாண்பைப் போற்றினார்

4. இச்செய்தி கேட்ட மேய்ப்பர் ஊருக்கு
அற்புதக் காட்சி காண விரைந்து
யோசேப்புடன் தாய் மரியாளையும்
முன்னணை மீது தேவ சேயையும்
கண்டே தெய்வன்பே எண்ணிப் போற்றினார்
ஆனந்தமாய் தம் மந்தைக் கேகினார்

5. கெட்டுப் போனோரை மீட்ட நேசமாம்
உன்னத அன்பைச் சிந்தை செய்குவோம்
தம் ஜென்ம முதல் சாவு மட்டுக்கும்
அப்பாலன் செய்த தெய்வ வாழ்க்கையை
அன்போடு தியானம் செய்து வருவோம்
நம் மீட்பர் பின்னே செல்ல நாடுவோம்

6. அப்போது வானசேனை போல் நாமும்
சங்கீதம் பாடலாம் எக்காலமும்
இந்தக் கெம்பீர நாள் பிறந்தவர்
அந்நாள் நம்மேல் தம் ஜோதி வீசுவார்
நம் நாயன் அன்பால் இரட்சிப்படைந்தோம்
அவரின் நித்திய துதி பாடுவோம்

*John Byrom*

## பாடல் 468: பண்டோர் நாளிலே தூதர் பாடின

Do you know the song - ESB - 80

(Tune - 653)

1. பண்டோர் நாளிலே தூதர் பாடின
பாடல் என்னென்று அறிவாயா?
வானில் இன்ப கீதம் முழங்கிற்று
அதன் ஓசை பூவில் எட்டிற்று

பல்லவி

ஆம், உன்னதத்தில் மேன்மை
பூமியில் சமாதானம்
மண்ணுலகில் மானிடர் மேல் பிரியம்
உன்னதத்தில் மேன்மை (2)
இன்னிலத்தில் சமாதானம்
மனுஷர் மேல் பிரியம்

2. அன்று ராத்திரியில் ஆயர்கள் கேட்ட
பாடல் என்னென்று அறிவாயா?
தூதர் இன்னோசையுடனே பாடினார்
ஆயர் உள்ளம் பூரிப்படைந்தார் - ஆம்

3. கீழ்தேசத்து, சாஸ்திரிகள் சொல்லிக் கொண்ட
கதை என்னென்று அறிவாயா?
பாதை காட்டிடவே ஓர் நட்சத்திரம்
மகா ஆச்சரியமாய்த் தோன்றிற்றாம் - ஆம்

*A.P. Cobb*

## பாடல் 469: ஒப்பில்லா - திரு இரா

Silent night, holy night - ESB 89

(Tune 800)

1. ஒப்பில்லா - திரு இரா
இதில் தான் - மாபிதா
ஏகமைந்தனை - லோகத்துக்கு
மீட்பராக அனுப்பினது
அன்பின் அதிசயமாம்

2. ஒப்பில்லா - திரு இரா
யாவையும் - ஆளும் மா
தெய்வமைந்தனார் பாவிகளை
மீட்டு விண்ணுலகுயர்த்த தம்மை
எத்தனை தாழ்த்துகிறார்

3. ஒப்பில்லா - திரு இரா
ஜென்மித்தார் - மேசியா
தெய்வ தூதரின் சேனைகளை
நாமும் சேர்ந்து - பராபரனை
பூரிப்பாய் ஸ்தோத்தரிப்போம்

*Joseph Mohr*

## பாடல் 470: இன்று கிறிஸ்து எழுந்தார்

Christ the Lord is risen today - 143

Tune - 281, 271)

1. இன்று கிறிஸ்து எழுந்தார்
அல்லேலூயா!
மாந்தர் தூதர் சொல்கிறார்
அல்லேலூயா!
வெற்றி மகிழ் எழுப்பும்
அல்லேலூயா!
வான் புவியே பாடிடு
அல்லேலூயா!

2. மீட்பின் கிரியை தீர்ந்தது
அல்லேலூயா!
போரில் வெற்றி சிறந்தார்
அல்லேலூயா!
அந்தகாரம் நீங்கிற்று
அல்லேலூயா!
சாவின் கூர் ஒடிந்தது
அல்லேலூயா!

3. முத்திரை காவல் வீணாச்சே
அல்லேலூயா!
பாதாளத்தை வென்றாரே
அல்லேலூயா!
மரணம் ஜெயிக்கலை
அல்லேலூயா!
திறந்தார் பரதீஸை
அல்லேலூயா!

4. மகிமை ராஜன் வாழ்கிறார்
அல்லேலூயா!
சாவே உந்தன் கூரெங்கே?
அல்லேலூயா!
நம்மை மீட்க மாண்டாரே
அல்லேலூயா!
பாதாளமே ஜெயமெங்கே?
அல்லேலூயா!

5. கிறிஸ்து விண்ணிற் சென்றாற்போல்
அல்லேலூயா!
நாமும் அவர் பின் செல்வோம்
அல்லேலூயா!
அவர் போல் எழும்புவோம்
அல்லேலூயா!
க்ருசு மோட்சம் நம் பங்கே
அல்லேலூயா!

*Charles Wesley*

## பாடல் 471: யூத ராஜ சிங்கம்

இராகம்: கேதாரம் தாளம்: ஆதி

சரணங்கள்

1. யூத ராஜ சிங்கம் உயிர்த் தெழுந்தார்!
உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்!

2. வேதாளக் கணங்கள் ஓடிடவே
ஓடிடவே உருகி வாடிடவே - யூத

3. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பரனை துதித்திடவே - யூத

4. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன - யூத

5. எழுந்தார் என்ற தொனி எங்குங் கேட்குதே
எங்குங் கேட்குதே பயத்தை என்றும் நீக்குதே - யூத

6. மாதர் தூதரைக் கண்டக மகிழ்ந்தார்
அக மகிழ்ந்தார் பரனை அவர் புகழ்ந்தார் - யூத

7. உயிர்த்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை இனி மரிப்பதில்லை - யூத

8. கிறிஸ்தோரே நாம் அவர் பாதம் பணிவோம்
பாதம் பணிவோம் பதத்தைச் சிரமணிவோம் - யூத

## பாடல் 472: கல்லறையில் வைத்தார்

Low in the grave He lay - 148

(Tune - 839)

1. கல்லறையில் வைத்தார்
இரட்சகர் இயேசை
பத்திரமாய்க் காத்தார்
கர்த்தர் இயேசை

பல்லவி

கல்லறை விட்டெழுந்தார்
தம் பகைஞரை ஜெயித்திட்டார்
அந்தகார சக்தியையும் தொலைத்தார்
அவர் ஜீவித்தாள்கிறார் என்னுள்ளிலே
எழுந்தார் - கிறிஸ்து
அல்லேலூயா! எழுந்தார்

2. வீணாய் காத்தனரே
இரட்சகரே இயேசை;
வீணாய் முத்திரையிட்டார்
கர்த்தர் இயேசை - கல்லறை

3. சாவு ஜெயிக்கலை
இரட்சகர் இயேசை,
முறித்தார் சங்கிலி
கர்த்தர் இயேசு - கல்லறை

*Robert Lowry*

## பாடல் 473: மரணத்தின் கூர் ஒடித் துயிர்த்தனர்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

பல்லவி

மரணத்தின் கூர் ஒடித் துயிர்த்தனர்
மன்னன் கிறிஸ்தேசு

அனுபல்லவி

மரித்த மூன்றாம் தினத்திலே - முன்
மொழிந்தபடி எழுந்து

சரணங்கள்

1. மூர்க்கமாய் சமாதி காத்ததை
மூடர் முத்ரை சூட;
தீர்க்கமா யோர் தூதனைக் கல்
திறக்க மறை சிறக்க - மரணத்தின்

2. நாரியர் அதி காலைக் கல்லறை
நாட வந்து தேட
வீரியமாய் வேதாளத்தை
வென்று ஜெயங்கொண்டு - மரணத்தின்

3. சீமானோடு யோவானும் ஓடியே
சேர்ந்து உள்ளே புகுந்து
சீலை தவிர சடத்தை காணா
திரும்ப மரி புலம்ப - மரணத்தின்

4. எக்காளம் கடை தொனிக்கவே உல
கெல்லோரும் உடன் உயிர்க்கவே
எக்காலத்திலும் ஏற்ற சாட்சியாய்
இருக்க ஜீவன் அளிக்க - மரணத்தின்

## பாடல் 474: என்ன காட்சி! என்ன சாட்சி!

இராகம்: தன்யாசி தாளம்: ஆதி

பல்லவி

என்ன காட்சி! என்ன சாட்சி!
இயேசு கல்லறையை விட்டெழுந்த மாட்சி!

சரணங்கள்

1. வாரத்தின் முதல் நாள் மரி காலையிலெழுந்தனள்
நேரே கல்லறைக்குச் சென்று நின்றுமே கலங்கினள் - என்ன

2. கல்லறை மூடிய கல்லைப் புரட்டியிருந்ததும்
கர்த்தனாரின் தூதனங்கு காட்சி ஈந்திருந்தும் - என்ன

3. மரித்தோரிடையில் இயேசு மன்னனில்லை என்றதும்
உயிர்த் தெழுந்திட்டாரிது உண்மை என்று சொன்னதும் - என்ன

4. நம்பாமல் மரியா ளங்கு நாணி நின்றழுததும்
பின்பாக இயேசுவே நின்று பேர் சொல்லி யழைத்ததும் - என்ன

5. தொனியறிந்து மரியாள் தொழுது விழுந்ததும்
கனிந்த வாக்கோடே இயேசு காட்சி யவட்கீந்ததும் - என்ன

6. நானுயிர்த்தே னென்ற இந்த நல்ல தூதைக் கொண்டு நீ
தானே சகோதரர்க்கு சாற்று என்று சொன்னதும் - என்ன

7. உயிர்த்தெழுந்த இயேசுவிடம் ஒதுங்கு மெப் பாவிக்கும்
தவித்து நிற்கும் அந்நாதன் தாங்கி ரட்சை ஈவாரே - என்ன

## பாடல் 475: கொல்கதா மலையில்

சரணங்கள்

1. கொல்கதா மலையில்
கொலையாட்கள் மத்தியில்
தொய்ந்துயிர் தந்து
ஓய்ந்தெழுந்தனர்!
இயேசு நாயகர்

பல்லவி

ஆமென், ஆமென், ஆமென்
அல்லேலூயா பாடுவோம்;
ஆம் இயேசு சாவின் கூரொடித்து
உயிர்த்தெழுந்தனர்!

2. கொலைஞர் யூதரும்
பகைஞர் ரோமரும்
பதித்த முத்திரை
சிதைத் தெழுந்தனர்!
இயேசு நாயகர் - ஆமென்

3. சாத்தானின் சேனைகள்
பாதாளத்தில் நடுங்க
வேத வாக்குப்
போலெழுந்தனர்!
இயேசு நாயகர் - ஆமென்

4. விண்ணே நீ பாடிடு
மண்ணே நீ செவிகொடு
நித்திய மரணம்
சத்யன் ஜெயித்து
உயிர்த்தெழுந்தனர்! - ஆமென்

பல்லவி

தேவ தாசர் யாவருங் கூடி
கீதம் பாடுவோம்!
பாவநாசர் இயேசுவின் நாமம்
போற்றிப் பாடுவோம்!

## பாடல் 476: ஓசன்னா பாடுவோம்

இராகம்: இந்துமாரி தாளம்: ஆதி

பல்லவி

ஓசன்னா பாடுவோம், இயேசுவின் தாசரே
தாவீதின் குமாரனுக்கு உன்னதத்தில் ஓசன்னா!

சரணங்கள்

1. சின்னமறி மேலே ஏறி அன்பர் பவனி போனார்
இன்னுமவர் என்னகத்தில் வந்து அரசாளுவார் - ஓசன்னா

2. முன்னும் பின்னும் சாலேம் பாலர் இன்பமாய் பாடினார்,
அன்றுபோல இன்று நாமும் அவர் துதி பாடுவோம் - ஓசன்னா

3. குருத்தோலை ஞாயிறில் நாம் குருபாதம் பணிவோம்
திரு அருள் ஆவிபெற்று திரியேகரைப் போற்றுவோம் - ஓசன்னா

## பாடல் 477: மங்கள சோபனம்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

மங்கள சோபனம்! வந்து தா! இம்மணம்

அனுபல்லவி

தங்கிடச் சந்ததமும்
சாற்றுமிவர்க்காசி எருசலேம் மணாளா!

சரணங்கள்

1. முந்து கானா மணத்தில் மேவியாசி யளித்த
விந்தைபோ லிம் மணர்க்கும்;
வேண்டும் வரமீய யிதுவேளை எழுவாய் - மங்கள

2. சுத்த மறை தழுவ தூய நடையெழுக
பக்தி புனைந்திலங்க;
கற்பு சிறந் தின்பி லிவர் பார் துலங்கவே - மங்கள

3. புத்திர பாக்கியங்கள் புனித பொற்பூஷணங்கள்,
நித்திய சிலாக்கியங்கள்;
நீட பரிபூரணராய் நேமி தழைக்க - மங்கள

4. சோதனைகள் ஜெயிக்க சாதனைகள் ஜொலிக்க
நாதனுக்காய் உழைக்க;
நாட்டமுடனே இசைந்து நாட் களிக்கவே - மங்கள

## பாடல் 478: ஞானக் குரு பரனே

'இயேசுவே செங்கரும்பே' என்ற மெட்டு

தாளம்: ஆதி

பல்லவி

ஞானக் குரு பரனே - இந்த
நானிலத்தில் கலியாணம் வகுத்த மெய் - ஞான

அனுசரணங்கள்

1. கானாவிலே யிது போன்ற மணத்தில்
கர்த்த னெழுந்ததுபோல இத்தினத்தில்;
வானா! நீர் வாரு மிவ் வானந்தக் கூட்டத்தில்
வந்துன் கிருபையைத் தந்து முடிசூட்டும் - ஞான

2. இரஷகனே யிப்போ கண்ட நல் ஐக்யம்
எந்நாளு மோங்கக் கிருபை செய் ஸ்லாக்யம்;
உச்சரிக்கைப்படி வாழ்ந்திடும் பாக்கியம்
முத்தரித்தே யிதைச் சுத்திகரித்திடும் - ஞான

3. இந்நிமிஷந் தொட்டு இந்த நல் நண்பரின்
இல்லற நாட்கள் எவ்வளவாயினும்;
அந்நாட்களிலிவர் அருமைப் பிதாவின்
விண்ணுலகத்தையே கண்ணோக்கி வாழ - ஞான

## பாடல் 479: கர்த்தாவே உன்னடியார்

தாளம்: ஆதி

சரணங்கள்

1. கர்த்தாவே உன்னடியார் காத்திருந்து
கண்ணுயர்த்திடும் வேளை;
உன்னருள் உன்னத ஆசீர்வாதத்தை
இம்மணர்க் கீந்தருள்வாய்;

2. ஞான மணவாளனே இன்றிவர்க்குன்
தானமளித்திடுவாய்;
வானுலகின் நன்மையால் திருப்தியாக்கி;
மானில நண்பனாவாய்,

3. பாரதில் செல்லும்போது தாசரிவர்
சோர்பின்றியே உமக்காய்,
சீறிடும் சாத்தானை ஜெயித்து ஜீவிக்க,
பார்த்திபா! பலமீவாய்

4. என்னென்ன நேரிட்டாலும் அன்பரிவர்
தன்னய மற்றவராய்;
மன்னவா! உம்மில் தம் வாக்குகள் காத்திட
உன்னரு வீந்திடுவாய்

*S. பாக்கியநாதன்*

## பாடல் 480: கானாவூர் விவாகத்திற்கு

(Tune 289 or 296 of ESB)

1. கானாவூர் விவாகத்திற்கு
கிருபையாய் சென்றவா!
இந்த மணக் கூட்டத்திற்கு
அன்பதாய் வாருமையா
மாப்பிள்ளை பெண்(ணை)
வாழ்த்த வாரும் இயேசுவே!

2. முந்தன் உந்தன் ராஜ்ய சித்தி
தேட யிவர்க் கோதுமேன்;
ஜெபம் நேர் ஜீவியம் பக்தி
என்ற வரம் ஈயுமேன்
மாப்பிள்ளை பெண்(ணை)
வாழ்த்த வாரும் இயேசுவே!

3. சோர்வடையா ஆவி பெற்று
போரில் வெல்ல அருளும்;
மாய்கை மெய்யாய் விட்டுவிட்டு
உம்மில் வாழ அருளும்
மாப்பிள்ளை பெண்(ணை)
வாழ்த்த வாரும் இயேசுவே!

4. சேனையிலே உண்மையாக
போர் செய்ய அருள் தாரும்;
பாவாத்மாக்கள் அன்பதாக
உம்மைச் சேர அருளும்
மாப்பிள்ளை பெண்(ணை)
வாழ்த்த வாரும் இயேசுவே!

## பாடல் 481: குணம் இங்கித வடிவாய்

'வரு பாவியை ஒருபோதிலும்' என்ற மெட்டு

பல்லவி

குணம் இங்கித வடிவாய் உயர் கோவே, இயேசு தேவே
மணம் இங்கதி வளமாய் உற வருவீர் மேசியாவே

சரணங்கள்

1. மன்றல் செய்து மனை புது மண
வாளனோ டவ னேரும்
தன் துணையான மங்கையும் இங்கே
தழைக்க அருள் தாரும் - குணம்

2. ஆதி மானிடர்க்கான ஓர் துணை
அன்றமைத்த நற்போதனை
தீதற இணையாம் இவர்க் கருள்
செய்குவீர் எங்கள் நாதனே - குணம்

3. தொன்று கானாவின் மன்றல் ஓங்கிடத்
தோன்றிய தயாபரனே,
இன்று மன்றல் சிறந்திட அருள்
ஈந்திடும் க்ருபா கரனே - குணம்

4. பண்பதில் லவலேசமும் குறை
பாடில்லாத தெய்வீகனே
நண்பதில் இருபேரும் வாழ்ந்திட
நண்ணும் மா திரி யேகனே - குணம்

5. உற்ற நல் உறவோடும் எங்கள்
உரிமை ஆனவர் யாரும்
பற்றதாய் உறு பக்தி யோடும்மைப்
பாட நல் மனம் தாரும் - குணம்

## பாடல் 482: புத்திக் கெட்டாத

Oh, perfect love all human thought transcended - 948

(Tune 680 EB)

1. புத்திக் கெட்டாத அன்பின் வாரிபாரும்
உம்பாதம் அண்டினோம் தேவரீர்
விவாகத்தால் இணைக்கும் இருபேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்

2. ஆ ஜீவ ஊற்றே, இவரில் உம் நேசம்
நல் நம்பிக்கையும் நோவு சாவிலும்
உம் பேரில் சாரும், ஊக்க விசுவாசமும்
குன்றாத தீரமும் தந்தருளும்

3. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்
வாழ்நாளின் ஈற்றில் மோட்சக் கரையேற்றி
நிறைந்த ஜீவன் அன்பும் நல்குவீர்

*Dorothy Frances Gurney*

## பாடல் 483: ஏதெனில் ஆதி மணம்

The Voice that breathed O'er Eden - 949

(Tune 243)

1. ஏதெனில் ஆதி மணம்
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே

2. இப்போதும் பக்தியுள்ளோர்
விவாகம் தூய்மையாம்
மூவர் பிரசன்னமாவார்
மும்முறை வாழ்த்துண்டாம்

3. ஆதாமுக்கு ஏவாளை
கொடுத்த பிதாவே
இம்மாப்பிள்ளைக்குப் பெண்ணைக்
கொடுக்க வாருமே

4. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே
இவர்கள் இருகையும்
இணைக்க வாருமே

5. மெய் மணவாளனான
தேவ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே

6. நீரும் இந்நாளில் வந்து
இவ்விரு பேரையும்
இணைந்து அன்பாய் வாழ்த்தி
மெய்ப் பாக்கியம் ஈந்திடும்

*John Keble*

## பாடல் 484: மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு

"ஆத்துமமே" என்ற மெட்டு

பல்லவி

மண வாழ்வு - புவி - வாழ்வினில் வாழ்வு
மங்கள வாழ்வு - வாழ்வினில் வாழ்வு
மண வாழ்வு - புவி - வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுபவாழ்வு

1. துணைபிரியாது - தோகை இம்மாது
மணவாளன் மணவாட்டி இதுபோது
மறைமுறையோது வசனம் விடாது
வந்தனரு மதருள் பெறலேது - (நல்ல) மண வாழ்வு

2. ஜீவ தயாபரா - சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாவணமலங்காரா
தேவகுமாரா திருவெல்லையூரா
சேர்ந்தவர்க்கருள் தராதிருப்பீரோ - (நல்ல) மண வாழ்வு

3. குடித்தன வீரம் - குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டால் அது சமுசாரம்
அடக்க மாசாரம், அன்பு உதாரம்
அம்புவிதனில், மனைக்கலங்காரம் - (நல்ல) மண வாழ்வு

*S.S. Jeremiah*

## பாடல் 485: ஆசீர்வதியும் கர்த்தரே

பல்லவி

ஆசீர்வதியும் கர்த்தரே
ஆனந்த மிகவே
நேசா உதியும் - சுத்தரே
நித்தம் மகிமைக்கே

அனுபல்லவி

வீசிரோ வான் ஜோதி கதிரிங்கே
மேசியா எம் மணவாளனே
ஆசாரியராம் வான் ராஜனே
ஆசீர்வதித்திடும்

சரணங்கள்

1. இம்மண வீட்டில் வாரீரோ - இயேசு ராயனே
உம்மணம் வீசச் செய்வீரோ, ஓங்கும் நேசமதுவே
இம்மணமக்கள் மீதிறங்கிடவே
இவ்விருபேரையும் காக்கவே
விண்மக்களாய் நடக்கவே
வேந்தா நடத்திடும் - வீசிரோ

2. இம்மண மக்களோடென்றும் என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டு பின் சென்றும் ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோடென் பாக்கிச் சூட்சமே
உம்மிலே தங்கி தரிக்கவே ஊக்கம் அருளுமே - வீசிரோ

3. மணமகன் ________ மங்கை _________
இன்றென்றும் ஒன்றாய் வாழ்ந்திட ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
போற்றித் துதித்தும்மை வாழ்த்திட
ஆ! தேவ கிருபை தீர்மானம் ஆம் போல அருளும் - வீசிரோ

## பாடல் 486: ஞான மணவாளனே

இராகம்: "கேள் ஜென்மித்த ராயர்க்கே"

1. ஞான மணவாளனே
இன்றிங்கே நீர் வாருமே
ஞான மணவாட்டியை
உந்தன் கரமேந்துமே
மேசியா இயேசரசே
ஆசீர் ஈயும் மீட்பரே
இம்மண நல் நாளிலே
இன்பம் ஈயும் கர்த்தரே

2. கானாவூர் மணவீட்டில்
வானாகரம் ஈந்தவா
இம்மண மக்கள் மீதும்
வானாசீர் ஈந்திடும்
சங்கீதம் முழங்கிட
மங்கள முண்டாக்கிட
இம்மண நல் நாளிலே
இன்பம் ஈயும் கர்த்தரே

3. ஆதாம் ஏவாள் போலிவர்
ஆனந்தமாய் வாழ்ந்திட
சாந்தம், தயை, பொறுமை
தானதர்மம் அன்புடன்
மக்கள் செல்வமுடனே
நீடூழியாய் வாழவே
இம்மண நல் நாளிலே
இன்பம் ஈயும் கர்த்தரே

*J.Immanuel*

## பாடல் 487: தம் பாலர்களோடு

When mothers of Salem - 797 (Tune - 737)

1. தம் பாலர்களோடு,
மா நகர் சாலேம் தாய்மார்
சேர்ந்தொன்றாய் வர சீஷர்கள்
போய்விடச் சொன்னாரே;
நல் மீட்பர் அதைப் பார்த்தனர்
தயாளத்தோடு கூறினர்,
'சிறியோரை என்னண்டையே சேரவிடும்'

2. இப்பாலரை ஏந்தி
மார்போடணைத்துச் சேர்த்து
என் ஆட்டுக்குட்டி யாக்குவேன்
நீர் தடுக்க வேண்டாம்
தம் நெஞ்சை எனக் கொப்பித்தார்,
என்னோடு மகிழ்ந்திருப்பார்;
'சிறியோரை என்னண்டையே சேரவிடும்'

3. அச்சிறுவர் மீதில்
மா பாசம் காட்டினாரே,
அவ்வன்பை இன்னும் அறியார்
மா திரள் பாலர்கள்;
வேதோபதேசம் உணரார்,
இவ்வருள் வாக்கை அறியார்
'சிறியோரை என்னண்டையே சேரவிடும்'

4. இத்தேசத்துப் பாலர்
பேரன்பைக் கேட்பாராக
நீர் சொன்னப்படி யாவரும்
மெய்யொளி காணட்டும்
உம் அருள் ஜோதி வீசிடும்
தெய்வன்பை நன்றாய்க் காட்டிடும்
'சிறியோரை என்னண்டையே சேரவிடும்'

*William Medlen Hutchings*

## பாடல் 488: சாந்தமுள்ள இயேசுவே

Gentle Jesus meek and mild - 793

(Tune - 283)

1. சாந்தமுள்ள இயேசுவே
பாலர் முகம் பாருமேன்;
என்னில் தயை கூருமேன்
என் உள்ளத்தில் தங்குமேன்

2. உம்மை நாடிப் பற்றுவேன்
என்னை ஏற்றுக் கொள்ளுமேன்;
மோட்ச ராஜியத்திலே
எனக்கிடம் தாருமேன்

3. இன்ப முகம் காட்டுவீர்
என்னைக் கையில் ஏந்துவீர்;
உமக்கேற்றோன் ஆகவே
சுத்தம் பண்ணும் இயேசுவே

4. தீயோர் செய்கை யொன்றுமே,
நான் செய்யா திருக்கவே
என்னை ஆண்டு நடத்தும்,
என்னில் வாசமாயிரும்

5. ஆ அன்புள்ள இயேசுவே
அடியேனைப் பாருமே;
என்னை அன்பாய் ரட்சியும்
மோட்ச பாக்யம் அருளும்

*Charles Wesley*

## பாடல் 489: எந்தையே கெஞ்சுகின்றோம்

"This child we dedicate to Thee" (Tune - 147)

இராகம்: சாந்தமுள்ள இயேசுவே தாளம்: திரிசடை

1. எந்தையே கெஞ்சுகின்றோம்
இந்த சிறு பிள்ளைக்காய்
உந்த னருளால் இதை
எந்த நாளும் காருமேன்

2. இந்தப் பிள்ளை என்றுமே
உந்தன் சித்தஞ் செய்துமே;
சந்ததம் நற்சீலமே
சாலப் பெறச் செய்யுமேன்

3. நாங்களு மெம் நாதனே,
பாங்கா யுமைப் பின்செல்ல;
நீங்கா தெம்மோடிருந்து,
நித்தம் காரும் தேவனே

*K.S. Abraham*

## பாடல் 490: இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் கர்த்தாவே!

அனுபல்லவி

உந்தனுக் கிந்தருணம் சொந்தமாய் ஒப்புவிக்கும்

சரணங்கள்

1. சேனை வீரனாய் வந்து ஈன சாத்தானை வென்று
ஞான புதல்வனாய் எந்நாளும் உமைத் துதிக்க - இந்த

2. பொய், வஞ்சம், வன்மம், பகை பொல்லாக் குண மனுகா
மெய்யன்பு சத்யம் நேசம் விளங்கி என்றுமொழுக - இந்த

3. இரட்சிப்பின் சத்தியத்தை எத்திசையிலுங் கூறும்
சுத்த நல் வீரனாக இத்தரையில் விளங்க - இந்த

4. சஞ்சலம், துயர், துக்கம் மிஞ்சும் தருணத்திலும்
நெஞ்சிலும் நின் பஞ்ச காயம் தஞ்ச மென்றுன்னைச் சார - இந்த

## பாடல் 491: கர்த்தர் எக்காளம் கடைசிக் காலத்தில்

When the trumpet of the Lord shall sound - 907

(Tune 853)

1. கர்த்தர் எக்காளம் கடைசிக் காலத்தில் தொனிக்கையில்
நித்யமாய் பகல் வெளிச்சம் வீசிட;
பாரில் இரட்சை பெற்றோர் இன்பக்கானானின் கரைதாண்ட;
பேரழைக்கும் நேரம் நானும் அங்குண்டு

பல்லவி

பேரழைக்கும் நேரம் நானும் (3)
பேரழைக்கும் நேரம் நானும் அங்குண்டு!

2. கிறிஸ்துவில் நித்திரையுற்றோர் அப்பிரகாசக் காலையில்
கிறிஸ்தின் மகிமை பெற உயிர்த்திட
பக்தர் தம் நித்திய மோட்ச வீடு தனைச் சேரையில்
பேரழைக்கும் நேரம் நானும் அங்குண்டு! - பேரழைக்கும்

3. கர்த்தர் பேர்க்காய் இராப்பகல் கடினமாயுழைப்போமே
இத்தரையோர்க் கவர் அன்பைச் சொல்வோமே;
பாரதில் என் வேலை தீர்ந்து ஜீவன் விட்டு நீங்கையில்
பேரழைக்கும் நேரம் நானும் அங்குண்டு! - பேரழைக்கும்

*James M Black*

## பாடல் 492: நம் நேசரை அங்கே சந்திப்போம்

We shall meet our loved ones there

1. நம் நேசரை அங்கே சந்திப்போம்
அங்கே கண்ணீர் சிந்தப்படாதே;
மெய் இரட்சகர் எங்கள் வழிகாட்டி!
பள்ளத்தாக்கை நாம் கடக்கும்போது

பல்லவி

மரண இருளின் பள்ளத்தாக்கிலே நாம்
சமாதானத்தோடு நடப்போம்;
மெய் இரட்சகர் எங்கள் வழிகாட்டி!
பள்ளத்தாக்கை நாம் கடக்கும்போது

2. நம் மீட்பரை அங்கு காணுவோம்
துன்பம் துக்கம் ஒன்றும் அங்கில்லை
மெய் இரட்சகர் எங்கள் வழிகாட்டி!
பள்ளத்தாக்கை நாம் கடக்கும்போது - மரண

3. அவர் பாடல் நாம் அங்கே பாடுவோம்
அவரால் நாம் இரட்சிப் படைந்தோம்;
மெய் இரட்சகர் எங்கள் வழிகாட்டி!
பள்ளத்தாக்கை நாம் கடக்கும்போது - மரண

4. ஜெய வீரராய் அங்கு ஆளுவோம்,
யுத்தம் செய்து வெற்றி பெறுவோம்;
மெய் இரட்சகர் எங்கள் வழிகாட்டி!
பள்ளத்தாக்கை நாம் கடக்கும்போது - மரண

5. நாம் இயேசுவின் பாதம் சேர்த்திட்ட
பாவிகளை அங்கே சந்திப்போம்;
மெய் இரட்சகர் எங்கள் வழிகாட்டி!
பள்ளத்தாக்கை நாம் கடக்கும்போது - மரண

*Freed W Fry*

## பாடல் 493: பூலோக வாழ்வு முடிந்து

Happy soul, thy days are ended

1. பூலோக வாழ்வு முடிந்து
மேலோகம் போ! ஆத்மாவே!
தேவ தூதர் படை சூழ
தேவ குமாரன் முன்னே

பல்லவி

சந்திப்போம் சந்திப்போம்,
சந்திப்போம் சந்திப்போம்
சந்திப்போம் ஆற்றின் கரையிலே
அங் கலைகள் புரளா

2. உன் ஆவியை ஏற்றிடவே,
உன் இரட்சகர் நிற்கிறார்;
அன்பின் கிரீடம் உனக்காக
அன்பர் வைத்திருக்கிறார்

3. இரட்சகரின் மார்பில் சேர்ந்து
இரட்சிப்பை நீ பெற்றிடு;
நித்திய இளைப்பாறல் ஈவார்
நித்தம் சந்தோஷிப்பார்

4. வேதனையை சகித்திட்டால்
நாதனோடரசாள்வாய்;
மரித்தும் நீ ஜீவிப்பாயே,
பரிசுத்தன் பலத்தால்

## பாடல் 494: இரட்சை இயேசுவின் கையில்

Safe in the arms of Jesus - 889 (Tune 261)

1. இரட்சை இயேசுவின் கையில்
இரட்சையவர் மார்பில்,
நிச்சயமா யென் னாத்மா
பெற்று என்றுந் தங்கும்
கேளிது தூதர் சப்தம்!
கீதமாய்ப் பாடுகிறார்
மேலோக மாட்சிமையில்
மகிழ்ந்து சாற்றுகிறார்

பல்லவி

இரட்சை இயேசுவின் கையில்
இரட்சையர் மார்பில்
நிச்சயமா யென் னாத்மா
பெற்று என்றுந் தங்கும்

2. இரட்சை இயேசுவின் கையில்
அச்சம் எனக்கில்லை,
பரீட்சை யாவும் ஜெயம்
பாவ மணுகாதே,
பயம், சந்தேகம், துக்கம்,
யாவுமே நீங்கிவிடும்;
பாடு இன்னம் சொற்பமே
பார் கண்ணீர் அற்பமே

3. இயேசு என்னடைக்கலம்,
இயேசெனக்காய் மாண்டார்.
பிளவுண்ட மலையை
பற்றினேன் பலமாய் நீங்கி
இருள் முற்றுமாய் நீக்கி
அருள் மோட்சத்தண்டை
அருணோயதயங் காண
காத்திருப்பேனே நான்

*Fanny Crosby*

## பாடல் 495: ஆனந்தமே இது ஆனந்தமே

சரணங்கள்

1. ஆனந்தமே இது ஆனந்தமே - தோழர்
ஆனந்த நாட்டிற்கு ஏகினாரே;
நம்மைப் பிரிந்தது நஷ்டமென்றாயினும்
அன்னவர் லாபம் அளவற்றதே

2. லோகப் பிரயாசம் நீங்கினது - அவர்
ஆத்ம கிலேசங்கள் மாறினது,
மேலோக ஏதேனில் வாழ்ந்திடச் சென்றிட்ட
ஆவியை நாமும் பின் சென்றிடுவோம்

3. சென்றடைந்தார் அவர் ஆக்கியோன் சந்நிதி,
ஆகாய வாகனம் ஏறிச் சென்றார்;
தோழரை விட்டுப் பிரிந்து சென்றார் - அவர்
காற்றும் புயலுங் கடந்து சென்றார்

4. இளைப்பாறுதல் தேசம் தீவிரமாய்ச் சேர்ந்தார்,
தொல்லைகள் சூழ்ந்த இந்நாட்டை விட்டு;
நம்பிக்கையும் சமாதானமும் அங்குண்டு,
துக்கமும் பாவமும் அங்கேயில்லை

5. இரட்சகரோடிங்கு சஞ்சரித்தவர்கள்,
எல்லாவரும் அங்கு கூடிடுவர்;
மாறி மாறி அவர் வாழ்த்துதல் கூறிப்பின்
ஆர்ப்பரிப்போ டவர் ஆனந்திப்பார்

6. கஷ்டத்தின் மேலும் மரணத்தின் மேலும் - பேர்
வெற்றி பெற்ற பெருங் கூட்டரவர்;
லோக ஆசை முற்றும் தீர்ந்து அவர் அங்கு
நித்திய காலம் சுகித் திருப்பார்

## பாடல் 496: பேரழைக்கும் வேளை வான சேனை கூடுமே

சரணங்கள்

1. பேரழைக்கும் வேளை வான சேனை கூடுமே - அங்கே
பே ரொலி கீதத்தில் நானும் பங்கடைவேனே

2. தூதர்கள் மேலோகந்தனில் பேரழைக்கவே - நானும்
வேதனை யில்லாவுலகில் போ யடைவேனே

3. மேலுலகில் பேரழைக்க நானும் நின்றங்கே - தேவா
மேன்மைப் பங்கடைய "இதோ வந்தேன்" என்பேனே

4. விண்ணுலகில் பேரழைக்க முன்னணி சென்று - எந்தன்
புண்ய நாதனோடு வாழ்ந்து கண்யமடைவேன்

## பாடல் 497: இன்பலோக யாத்திரையோர் நாம்

Shall we meet beyond the river!

(Tune 271)

1. இன்பலோக யாத்திரையோர் நாம்
அங்கே பாவ மில்லையாம்;
அங்கே வீரர் ஆர்ப்பரிப்பார்
அங்கே கண்ணீ ரில்லையாம்

பல்லவி

ஜீவ ஆற்றின் கரையில்
சந்திப்போம் சந்திப்போம்;
ஜீவ ஆற்றின் கரை யோரம்,
போர் முடிந்ததின் பின்பு

2. நண்பர் நாம் இங்கே பிரிவோம்,
அன்பரும் சாகுவாரே;
ஆனால் திரும்பக் கூடுவோம்
ஜீவ ஆற்றின் கரை யோரம்

3. இங்கே யுத்தத்தில் நிலைப்போர்
அங்கே கிரீடம் பெறுவார்;
இங்கே துன்பங்கள் சகிப்போர்,
இன்பக் கீதம் பாடுவார்

*Horace Lorenzo Hastings*

## பாடல் 498: சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்

God be with you, till we meet again - 954

(Tune 292, 506)

1. சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்,
நிலைத்திரு நீ அவரில்;
யுத்தம் முடிந்து மேல் வீட்டில்,
சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்,

பல்லவி

சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்,
மீட்பர் பாதம் சந்திக்கும் மட்டும்,
சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்,
கர்த்தர் காப்பார் சந்திக்கும் மட்டும்

2. சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்,
ஞானமாய் உனை நடத்தி,
மோசத்திற் குன்னை விலக்கி
சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்

3. சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்,
சிறகின் கீழ் உன்னைக் கூட்டி;
மன்னாவாலே உன்னை ஊட்டி,
சந்திக்கும் மட்டும் கர்த்தர் காப்பார்

*Jeremiah Eames Rankin*

## பாடல் 499: சலாம் தோழர் சலாம்

பல்லவி

சலாம் தோழர் சலாம்
சலாம் போறேன் சலாம்
சந்திப்பீரா மோட்சத்திலே?
சலாம் சலாம் சலாம்!

சரணங்கள்

1. யுத்தம் வேறே யிடம்
நித்தம் மீட்பருக்காய்;
சித்தத்துடன் செய்யப்போறேன்
கர்த்தன் பலத்தினால் - சலாம்

2. பாவி மீட்பர் பாதம்
தாவியே வந்திட;
சுத்தமாய் ஜீவிப்போம் முற்றும்
இத்தரையிலே நாம் - சலாம்

3. யுத்தம் முடிந்த பின்,
நித்தமும் வாழுவோம்;
கர்த்தன் இயேசுவின் பலத்தால்,
நித்யானந்தத்திலே - சலாம்

## பாடல் 500: மூலைக்கல் நம் கிறிஸ்து

ஆலய பிரதிஷ்டை

(Christ is our Corner Stone - 940)

(Tune 221 or 231)

1. மூலைக் கல் நம் கிறிஸ்து
அவரில் கட்டுவோம்
பரலோக சபை
பரிசுத்தர் கூட்டம்
அவர் அன்பில் விஸ்வாசிப்போம்
மேலோக ஆனந்தம் ஈவார்

2. ஸ்துதித்துப் பாடுவோம்
திரியேகர் நாமத்தை;
அவர் புகழ்ச்சியை
வானம் பூமி கேட்க
ஆனந்தக் களிப்புடனே,
அவரை வாழ்த்திப் பாடுவோம்

3. கருணைக் கடலே
கடாட்சித் தருளும்;
எம் பொருத்தனைகள்,
எல்லாம் ஏற்றுக் கொள்ளும்.
மாரிபோல் உம் கிருபைகள்
தாரும் உம் அடியார்க்கு

*John Chandler*

## பாடல் 501: ஆசி தா வேதா!

இராகம்: கல்யாணி தாளம்: ரூபகம்

பல்லவி

ஆசி தா வேதா! - சந்தத

அனுபல்லவி

பிரகாச நேச வாசப் பிரதிஷ்டை

சரணங்கள்

1. ஐயனே! அடியாரெம்மாத்ரம் ஆலயம் செய்ய அபாத்ரம்!
மெய்யனே! தயை செய்தீர் ஸ்தோத்ரம்! மேன்மைக்காக
வாய்மை கீர்த்தனம் - ஆசி

2. அந்தி சந்தி வேளை வந்து ஆராதனை செய்வோர் நன்று;
வந்தித் துந்த னன்பு கொண்டு மாஷி தோன்ற சாஷி விளம்ப - ஆசி

3. இரத்தந் தீயின் நேசம் விளங்க சத்துரு பிசாசு கலங்க,
வெற்றி அல்லேலூயா முழங்க வீரங்காட்டும் தீரரிலங்க - ஆசி

4. பஞ்ச நோய் துயர்கள் நீத்து பாரில் பாவம் நீக்கிக் காத்து;
நெஞ்சங்கோவிலாகத் தீர்த்து நேயரே அதில் வசித்து - ஆசி

5. போதகர்க்கும் மாவியூற்றி புண்யபதேசங்காட்டி;
மா தயாளன் வாஞ்சையூட்டி மகிமையா யுன் வீட்டை
நாட்டி - ஆசி

*K.S Abraham*

## பாடல் 502: ஆரணா திபா தேவா மூவா

இராகம்: சரஸ்வதி மனோகரி தாளம்: ஆதி

பல்லவி

ஆரணா திபா தேவா மூவா - அன்பர்க்கருள் தா
ஆசியருள்வாய் அன்பர்க்கருள் தா

அனுபல்லவி

பூரணா உந்தன் பொற் பாதந் தொழ
ஆலயம் அமைத்தோம் ஐயனே நீ வா வா

சரணங்கள்

1. பாவிகள் உமக்கு ஆலயம் செய்ய
பாத்திரர்களாமோ பாவநாசரே
பரிகரித்தே எங்கள் பாவங்கள்
பார்த்திபா வருவாய் தேவ ஆலயத்தில் - ஆரணா

2. அல்லும் பகல் எல்லாம் ஐயனே உன் கண்கள்
இந்த ஆலயத்தை நோக்கியே இருக்க
நொந்த பாவிகள் வந்து ஜெபிக்க
எந்தையே நீர் கேட்டு இரங்கியருள்வீர் - ஆரணா

3. ஸ்தோத்திரம் ஜெபமும் தியானம் நல் பிரசங்கம்
பார்த்திபா இந்த ஆலயந் தனில்
கீர்த்தியுடனே கீதம் பாடவே
நேர்த்தியாம் உன் நாமம் நிலைத்தென்றும் ஓங்க - ஆரணா

4. பாவியினிதயம் உந்தன் ஆலயம்
பாவம் போக்கி நல்ல பக்தியோடுமே
அன்பு சாந்தம் அதில் விளங்க
ஆராதிப்போர் நெஞ்சை ஆலயமதாக்கும் - ஆரணா

## பாடல் 503: துலங்கிடவே தூயன் திரு நாமமே

'ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே' என்ற மெட்டு

பல்லவி

துலங்கிடவே தூயன் திரு நாமமே
இலங்கிடுதே சேனை ஆலயமே
இனிதுடன் திகழுமித் தினமிதிலே
கனிவுடன் எழுந்திடுவீர்!

அனுபல்லவி

ஆலயமே! நம் ஆனந்தமே - வல்ல
அற்புத தேவனின் மாளிகையே
பாவிகளின் நல் புகலிடமே
பரிசுத்த அலங்காரமே

சரணங்கள்

1. சாலொமோன் ஆலயம் சிறந்திடவே
சகல மகிமையும் நிறைந்திடவே
மேகம் போல் வந்தவா! வல்லமையாய்
இவ்வாலயம் சிறந்திட வா! - ஆலயமே

2. துதித்திடுவோம் நம்மில் வசித்திடுவார்
பசிதாகம் இனியில்லை மேய்த்திடுவார்
ஜீவத் தண்ணீரண்டை நடத்திடுவார்
கண்ணீரைத் துடைத்திடுவார் - ஆலயமே

3. ஆலயத்தை பாதுகாத்திடுவோம்
அளவிலா நன்மைகளடைந்திடுவோம்
உறுதியான தூணாய் நிலைத்திடுவோம்
பயத்துடன் பணிந்திடுவோம் – ஆலயமே

4. வானாதி வானங் கொள்ளாத தேவா! இவ்
வாலயம் உமக்கொரு தாபரமே
வாசங் கொள்வீர் எம துள்ளத்திலே
வந்திடுவீர் இயேசுவே! - ஆலயமே



(சங் 122:1) (I இரா 6:3, 17) (2 நாளா 6:33-53) (சங் 93:5) (I இரா 8:10-11) (2 நாளா 7:1-2) (எசே 43:5) (ஆகா 2:7) (வெளி 7:15,16,17) (நெகே 10:39) (சங் 122:9) (வெளி 8:12) (சங் 5:7) (2 நாள் 6:19) (2 கொரி 6:16,19)

## பாடல் 504: ஆலயம் அமைத்திட அருளீந்த தேவா

இராகம்: தன்யாசி தாளம்: ஆதி

'எத்தனை திரள் என் பாவம்' என்ற மெட்டு

பல்லவி

ஆலயம் அமைத்திட அருளீந்த தேவா
ஆசியளித்திட வா

அனுபல்லவி

அன்பன் சாலொமோன் அன்று அமைத்திட்ட ஆலயம்
பொங்கும் நின் கிருபையால் தங்கி வழிந்தது போல்

1. பாவிகள் உந்தனின் பதமலர் பணிந்துமே
பாவமதை போக்கிட
நாதனே என்றும் உன் நாம மகிமையால்
நாடி வருவோர்க்கு நலமே புரிந்திட - ஆலயம்

2. வேண்டுதல் செய்வோரின் வேதனை துடைத்திட
வேண்டும் வரம் அருள்வாய்;
வேத முதல்வனே விண்ணவர் நன் கோனே
வேதியர் நின்மறை பேதையர்க்(கு) ஓதிட - ஆலயம்

3. உன்னத தேவனே உயர்மறை நாதனே
உள்ளம் உன் ஆலயமாய்,
நன்னயமுடன் நாளும் நாடிப்படைத்தே ஜீவ
நன்மையின் பாதையில் நலமுடன் ஏகிட - ஆலயம்

4. பக்தியோடுந்தன் பதம் பணிந்துமே போற்றிட
உத்தம மனம் அருள்வாய்;
சித்தம் சிதறாமலே சிந்தையடக்கி உந்தன்
முக்தி பெறும் நெறியில் நித்தமும் நிலைத்திட - ஆலயம்

## பாடல் 505: எங்கள் ஆத்ம நேசரே

'தொழுகிறோம் எங்கள் பிதாவே' என்ற மெட்டு

பல்லவி

எங்கள் ஆத்ம நேசரே நீர்
எழுந்தருளும் இந்த வீட்டில்

அனுபல்லவி

எந்தையே நீர் இன்றும் என்றும்
எம்மிடையே தங்கும் தங்கும்

சரணங்கள்

1. இங்கு வசிக்கும் நாட்களெல்லாம்
இன்ப வாழ்க்கை அமைந்திடவே
அன்பர் எங்கள் ஆதி துங்கா
அன்பின் ஆசி அருளும் அருளும் - எங்கள்

2. சோதனையும் வேதனையும்
சோர்புறச் செய்யும் வேளையில்
நாதனே உம்மில் நிலைக்க
நல்லாசியால் நிரப்பும் நிரப்பும் - எங்கள்

3. அத்தனே உம்மோடுறவாய்,
நித்தமும் நிலைத்து ஒழுக
சத்திய வசன ஞான,
சத்துணவால் நிறைக்க நிறைக்க - எங்கள்

4. அம்பரா மேல் வீட்டின் நாட்டம்,
ஆத்துமாவின் அனுதின தேட்டம்,
பூர்த்தி செய்யும் பொற்பதியாய்
ஆக்கிடவே இரங்கும் இரங்கும் - எங்கள்

## பாடல் 506: எங்கும் நிறை தூயனே

இராகம்: காம்போதி தாளம்: சாப்பு

பல்லவி

எங்கும் நிறை தூயனே இவ்வீட்டினில்
தங்கும் கிருபை சீலனே - எம் இறைவனே

அனுபல்லவி

அண்டமெல்லாம் மகிழ அவதாரம் ஆனவனே
ஆசி இவ்வீட்டிற்கு அளித்திடுவாய் பரனே

சரணங்கள்

1. கங்குல் பகல் ஜெபத்தூபம் விண் ஏறவும்
மங்கா மறையோதல் செவிகளில் கேட்கவும்
சங்கை மிகும் ஞானப் பாடல்கள் பாடவும்
துங்கா நின் தலைமையில் தூய வீடாக்கிடும் - எங்கும்

2. உத்தமராய் தேவ புத்திரராய் வாழ
பக்தியுடன் பண்பும் பரிவும் மிகக்கொண்டு
பெத்தானியா ஊரின் குடும்பம் தனைப்போன்று
நித்தம் நல்விருந்தாக ஏற்றிட இயேசுவை - எங்கும்

3. குன்றின் மேலேயுள்ள மனையே போல் விளங்கிட
குவலயத்தோர்க்கு நல் மாதிரியாய் நிற்க
கலை உடை கல்வி கனிவு முயற்சியில்
கர்த்தருக்கேற்ற பரிசுத்தக் குடும்பமாக - எங்கும்

4. இங்குறை காலம்வரை துங்கன் மொழிக்கிசைந்து
பங்கமில்லாமல் பரன் சித்தப்படி நடந்து
அங்கம் மனது யாவும் ஆண்டவனுக்கே படைத்து
புங்கமுடன் நிதமும் தங்க இயேசு பரனில் – எங்கும்

## பாடல் 507: தேவா! இவ்வீட்டில் இப்போ

'இயேசு என் அஸ்திபாரம்' என்ற மெட்டு

தாளம்: சாப்பு

1. தேவா! இவ்வீட்டில் இப்போ மேவி எழுந்து வாரும்
கோவே இரங்கி இங்கே தங்கி தயை செய்திடும்

2. பூவில் எமக்குதவி யாருமில்லை புண்யரே;
மேவி உமதருளை ஈந்திடும் கண்ணியரே

3. அநித்தியமான வீட்டில் நித்தியரே நீர் வாரும்
பக்தி புனைந்தொழுக பத்தி மிகத் தந்தாளும்

4. உந்தன் மொழிக் கிசைந்து சந்ததமும் ஒழுக,
எந்தை பரனே ஜெபசிந்தை மிக இலங்க

5. இங்கு வசிக்கும்வரை உந்தன் முகப்பிரசன்னம்
அங்கம் மனது யாவும் பங்கமின்றி காக்கவே

6. அம்பரா! வீட்டில் வந்து கெம்பீரமாய் வாழ்ந்திட
பங்கமின்றி உனில் நான் தங்கக் கிருபை செய்யும்

## பாடல் 508: ஓ! கர்த்தா எமைப் பாரும்

"நின்றிடும் இயேசுவுக்காய்" என்ற மெட்டு

Oh! Lord regard Thy people - 944 (Tune 246, 262)

1. ஓ! கர்த்தா எமைப் பாரும்
அன்பினால் நிர்மித்த
ஞாபகச் சின்னமிதில்
பதியும் உம் நாமம்.
திட அஸ்தி பாரமே,
உம் சாட்சி கூறவும்,
இச்சுவர் இரட்சை சொல்லி
வாசல் துதிக்கட்டும்

2. ஒப்பற்ற உரிமைக்கே
துதி உமக்கென்றும்!
அசட்டை செய்யோமதை
அனுஷ்டிப்போம் தியாகம்!
சேவித்தும் பாதை செல்ல
ஏவி எழுப்பிடும்,
பக்தரின் பாதை செல்ல
பலமும் ஈந்திடும்

*Albert Orsborn*

## பாடல் 509: எல்லாம் படைத்த சர்வ

சரணங்கள்

1. எல்லாம் படைத்த சர்வ
வல்லவ னொன்றே - அல்லா
தில்லை மரம் கல்லைத் தெய்வ
மென்று தொழாதே

2. நல்லான் அவரைத் தொழு
செல்வந் தழைக்கும் - பொல்லா
நாசப் பேய் வணக்கம் நித்ய
மோசம் விளைக்கும்

3. வீணாகத் தெய்வ நாமம்
வீண் டிகழாதே - நன்கு
வேதம் படி ஓய்வுநாளில்
வேலை செய்யாதே

4. கோணாமல் தந்தை தாயைப்
பேணிக் கனஞ்செய் - பொங்கு
கோபம் கொலை வேசித்தனம்
பாவ மிவை மெய்

5. களவை யகற்று கள்ளச்
சாட்சி சொல்லாதே - மனங்
காய்ந்து பிறன் பொருள் மேலே
காதல் கொள்ளாதே

6. எந்தவாறுனக்குப் பிறன்
செய்யவேண்டுமோ - முற்றும்
அந்தவாறு தவறா
தவனுக்கும் நீ செய்

7. துய்ய நீதிக்குத் திருப்தி
செய்து மரித்த - கிறிஸ்
தையர் பாதம் அண்டு வேற
டைக்கலமில்லை

## பாடல் 510: நீர் தந்த நாளும் ஓய்ந்ததே

அகில உலக ஜெபநாள்

The Day Thou gavest Lord is ended - 677 (Tune 44)

1. நீர் தந்த நாளும் ஓய்ந்ததே
கர்த்தாவே இராவும் வந்ததே
பகலில் உம்மைப் போற்றினோம்,
துதித்து இளைப்பாறுவோம்

2. பகலோன் ஜோதி தோன்றவே,
உம் சபை ஓய்வில்லாமலே;
பூவெங்கும் பகல் ராவிலும்,
தூங்காமல் உம்மைப் போற்றிடும்

3. நாற்றிசையும் பூகோளத்தில்
ஓர் நாளின் அதிகாலையில்;
தொடங்கும் ஜெபம் ஸ்தோத்திரமே
ஓர் நேரம் ஓய்வில்லாததே

*John Ellerton*

## பாடல் 511: ஆர்ப்பரித்திடுவோமே

"ஆனந்தம் ஆனந்தமே" என்ற மெட்டு

பல்லவி

ஆர்ப்பரித்திடுவோமே, நம் ஆண்டவர் இயேசுவையே
இந்தியா இரட்சணிய சேனையின்
நூற்றாண்டு விழா இதனில்

அனுபல்லவி

பரமன் தயவால், ஊழியம் பெருகி
பரம்பிடக் கிருபை கூர்ந்தார்

1. ஆயிரத்தெண்ணூற்றி எண்பத்தி இரண்டிலே
செப்டம்பர் பத்தொன்பதில் - சேனை யூழியர் நாலுபேரால்

2. பாரதப் பூமியிலே, பம்பாய்க் கப்பல் துறையில் வந்த
தேவ பக்தன் பக்கீர் சிங்குமாய் பம்பாயில் வேலை யாரம்பித்ததே

3. சென்ற நூற்றாண்டுகளாய், நம் சேனை இந்தியாவிலே - தூய
சேவை பெருகிடவே, செய்த தேவனுக்கே மகிமை

4. சேனைக் கொடி பிடித்தே, வந்த தேவ தூதுவர்களால்
செய்த சேவையை ஊக்கமுடன் செய்து இயேசுவைப் பின் தொடர்வோம்

*Major K. Solomon*

## பாடல் 512: புகழ்வோம் புகழ்வோம்

இராகம்: மகிழ்வோம், மகிழ்வோம்

1. புகழ்வோம் புகழ்வோம் - தினம் புகழ்ந்திடுவோம்
புண்ய நாதராம் இயேசுவையே - இந்த
பாரதத்தில் இரட்சண்ய சேனையார் - செய்த
பார் புகழ் சேவைகட்காய்

பல்லவி

அல்லேலூயா பாடி, சேனைக் கொடியுயர்த்தி
அன்பர் இயேசுவின் வீரர்களாய்
அவனியெங்கிலும் பவனி வருவோம்
அவர் செய்தியை உரைத்திடுவோம்

2. பாவத்திற்கடிமை ஆயிருந்த நாமும்
பரலோகினில் சேர்ந்திடவே
பரிசுத்தாவியால் எழுந்த சேனையார் - தம்மை
பலியாய் படைத்தனரே - அல்லேலூயா

3. தீண்டாமை நோயால், நாம் திண்டாடிய நேரம்
தீயோர் மத்தியில் நீதிக்கேட்டார்
தீச்சுடர் வீசிடும், மெழுகுவர்த்திப்போல்
தீய இருள் நீங்க தியாகமானார் - அல்லேலூயா

4. ஆன்ம சரீரக்கண்களைத் திறந்திட
ஆண்டுகள் நூறாய்ப் பணிபுரிந்த
ஆண்டவர் சேனைக்கு இரட்சண்ய சேனைக்கு
ஆனந்தமாக நன்றி சொல்வோம் - அல்லேலூயா

*Immanuel J David*

## பாடல் 513: இரட்சண்ய வீரரே

"சந்தோஷம் பொங்குதே" என்ற மெட்டு

பல்லவி

இரட்சண்ய வீரரே - இரட்சண்ய வீரரே
இரட்சண்ய சேனை வீரரே - அல்லேலூயா
இரட்சகரைப் போற்றுவோம்
இன்பக் கீதம் பாடுவோம்
நூற்றாண்டு கொண்டாடுவோம்

சரணங்கள்

1. மேய்ப்பனில்லா ஆடுப்போல் - முன்னோர்
வழிதப்பிக் கெட்டலைந்தார்
அன்பின் குரலாலே - அந்த நாளிலழைத்து
அன்பு காட்டி - அன்னமூட்டி
ஆதரித்தாரே - இரட்சண்ய

2. நூற்றாண்டுகளுக்கு முன்னே - நம்
முன்னோர்களனுபவித்த
பொல்லாக் கொடுமையை - போராடிப் போக்கிட
சேனை தளகர்த்தனாக
பூத் டக்கர் வந்தார் - இரட்சண்ய

3. பேய் பிசாசை தெய்வமென்று - நம்பி
ஆடு கோழி பலி செலுத்தி
மதியைக் கெடுத்திடும் மதுபானமருந்தி
சேற்றிலே புரண்டவரை
தூக்கி இரட்சித்தார் - இரட்சண்ய

4. எண்ணெழுத் தறியாதோர்களின்
கண்களைத் திறக்க வந்தார்
ஆடையனைவர்க்கும், அன்புடனுடுத்தி
ஊணுடை, உறைவிடம்
தந்திட வந்தார் - இரட்சண்ய

## பாடல் 514: என் ஆண்டவா, உம் வானம் பூமி ஆழி

HOW GREAT THOU ART O Lord My God ESB: 37

(Tune 544 of ESB)

1. என் ஆண்டவா, உம் வானம் பூமி ஆழி
எங்கெங்கிலும் உம் சிருஷ்டிப்பைக் காண்பேன்
குமுறும் மேகம், மின் இடி, வான் வெள்ளம்
உம் மகிமை, உம் வல்லமையாமே

பல்லவி

என் உள்ளம் பொங்கிப் பொங்கிப் பாடுவேன்
நீர் வல்லவர்! மாவல்லவர்

2. வான் எட்டும் மாமலை, மீதேறி நின்று
நற்சோலைக் காடு பள்ளத்தாக்குகள்
நீரோடைகள், மாநதிகள் எங்கிலும்
காண்போமே பட்சிகள் நற்கன்றுகள் - என் உள்ளம்

3. மாவல்ல தந்தையே, உம் ஏக மைந்தன்,
தந்தீரே நாங்கள் மீட்பைப் பெறவே
என் பாவப்பாரம் தாங்கினவரே
சிலுவையில் தன் ஜீவன் விட்டாரே - என் உள்ளம்

4. ஆர்ப்பரிப்போடு மீட்பர் வருவாரே
சேர்ப்பார் இவ்வடியேனை மோட்சத்தில்
ஆர்ப்பரிப்போமே, நாங்களும் தாழ்மையாய்
மா வல்லவர் என்று பிரஸ்தாபிப்போம் - என் உள்ளம்

## பாடல் 515 : விசுவாசப் பிரமாணப் பாட்டு

DOCTRINAL SONG

பல்லவி

விசுவாசமே, வேத பிரமாணமே - நம்
இரட்சண்ய சேனையின் விசுவாசமே - இது
பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும்
அடங்கிய சத்திய வேதாகமமே

சரணங்கள்

1. தேவ ஏவுதலால், அருளப்பட்டதென்றும்
கிறிஸ்தவ விசுவாச கிரியையுமான
தெய்வீகச் சட்டம் அடங்கினதென்றும்
மெய்யாகவே விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

2. எல்லாவற்றிற்கும் சிருஷ்டிகராயும்
பாதுகாவலரும், ஆள்பவருமான
வணக்கத்திற்குரிய பூரண தேவன்
ஒருவரே என விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

3. தத்துவம் தன்னில் பிரியாதவரும்
வல்லமை மகிமை சமமான
பிதா, குமாரன் பரிசுத்த ஆவி
திரித்துவரென விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

4. கர்த்தராம், கிறிஸ்துவின் மனுஷீக தெய்வீக
தன்மைகள் அடங்கி இருப்பதனால்
மெய்யாக தேவனாய், மெய்யாக மனிதனாய்
இருக்கிறார் என விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

5. ஆதிப்பெற்றோர்கள் நிர்மலராக
சிருஷ்டிக்கப்பட்டு கீழ்ப்படியாது
பரிசுத்தம் இழந்து பரமனின் கோப
ஆக்கினையடைந்தார் விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

6. விருப்பமுள்ளோ ரெவராயினும் அவர்கள்
இரட்சிப்படைய கர்த்தர் கிறிஸ்தேசு
பாடு மரணத்தால் - பாரிதை மீட்க
பலியானார் என விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

7. தேவனுக்கு முன் மனஸ்தாபமுடன்
இயேசு கிறிஸ்துவில் விசுவாசமும்
பரிசுத்த ஆவியால் வரும் மறுபிறப்பும்
இரட்சைக்குத் தேவை விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

8. கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தால்
கிருபையால் நீதிமான் ஆகின்றோம்
அவரில் விசுவாசித்தால் தன்னிலே அந்த
சாட்சி உண்டென்று விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

9. இரட்சிப்பில் நிலைத்தல் கிறிஸ்துவிலுள்ள
இடைவிடா விசுவாசம் கீழ்ப்படிதல்
இவைகளில் சார்ந்து இருக்கிறதென்று
இதயமதில் விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

10. பூரண சுத்தி, விஸ்வாசியின் சிலாக்கியம்
கர்த்தராம் கிறிஸ்து வருமளவும்
ஆவி, ஆத்மா, சரீரம் அழுக்கற
காக்கப்படும் விசுவாசிக்கின்றோம் - விசுவாசமே

11. அழியாது ஆத்மா உயிர்த்தெழும் சரீரம்
அகிலம் முடிவில் நியாய விதி உண்டு
நீதிமானின் ஆனந்தம் துன்மார்க்கரின் ஆக்கினை
நித்தியம் என விசுவாசிக்கின்றோம் – விசுவாசமே